இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 56+4

சுடர் 32 | கதிர் 183 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 14 ஞாயிற்றுக்கிழமை 28.05.2017

## பௌத்த மத அவமதிப்பே வெள்ள இடருக்குக் காரணம்

இப்படிக் கூறுகிறார் ஞானசார தேரர்

கொழும்பு, மே 28
நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள இடருக்கு பௌத்த மதத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பதே காரணமாகும் என்று பொதுபல சேனா அமைப்பின் >> 53

## அமைச்சர் சாகலவுக்கு ஞானசாரர் மிரட்டல்

இணையத்தில் வைரலாகும் காணொலிப் பதிவு

கொழும்பு, மே 28
சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்கவுக்கு பொதுபல சேனா >> 53



## அமைச்சர் ரவிக்கு இந்தியத் தூதுவர் நேரில் வாழ்த்து

கொழும்பு, மே 28
அயலுறவு அமைச்சராகப் பொறுப்பேற்ற ரவி >> 52

## சின்னக்கடை விபத்தில் குடும்பத்தலைவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 28
யாழ்ப்பாணம், சின்னக் கடைப் பகுதியில் பேருந்தும் மோட்டார் சைக்கி >> 53

## மோ.சைக்கிள்கள் கிடந்த கிணற்றில் பெருமளவு வெடிபொருள்களும் மீட்பு

யாழ்ப்பாணம் மே 28
காங்கேசன்துறைப் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் கண்டெடுக்கப்பட்ட தனியாருக்குச் சொந்தமான கிணற்றிலிருந்து ஆயுதங்களின் >> 53

போர் பாதித்த மக்களுக்கு

## பொருத்து வீடுகள் பொருத்தமற்றவை

வல்லுநர்கள் குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 28
பொருத்து வீடுகளில் பல சிக்கல்கள் உள்ளன. பொருத்தமற்ற தன்மைகள் காணப்படுகின்றன. அதனை ஏற்றுக் கொள்ளமுடியாது. போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த வீடுகளை வழங்க அரசு ஏன் மீண்டும் வலியுறுத்துகிறது? 65 ஆயிரம் பொருத்து வீடுகளுக்கு செலவாகும் அதே தொகைப் பணத்தில் ஒரு இலட்சத்து 2 ஆயிரம் கல் வீடுகளைக் கட்டலாம்"
இவ்வாறு பொறியியல், கட்டடக் >> 53



மயானப் பிரச்சினை மோதலாக உருமாறியது

## சிறுப்பிட்டியில் நேற்றுப் பதற்றம்

சிறப்பு அதிரடிப் படையினர் குவிப்பு





யாழ்ப்பாணம், மே 28
புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டியில் உள்ள கிந்துப்பிட்டி மயானப் பிரச்சினை இரு தரப்புகளுக்கு இடையிலான மோத >> 06

## விசாரணைக்குள் பொதுபல சேனாவின் நிறைவேற்று அதிகாரி

கொழும்பு, மே 28
பொதுபல சேனா அமைப்பின் தலைமை நிறைவேற்று அதிகாரி டிலாந்த விதானகே சிறப்புப் பொலிஸ் பிரிவால் விசாரணைக்கு உட்படுத்தப் >> 06

நாவற்குழி விகாரைப் பணி தடுக்கப்பட்ட நிலையில்

# 300 பிக்குகள் யாழ். வருகை

குழப்பங்கள் நேருமோ என அச்சம்;
பொலிஸார் தீவிர பாதுகாப்பு

யாழ்ப்பாணம், மே 28



தெற்கிலிருந்து சுமார் 300 பிக்குகள் நேற்று திடீரென யாழ்ப்பாணம் வந்தனர். குடாநாட்டில் உள்ள விகாரைகளில் அவர்கள் வழிபாடுகளில் ஈடுபட்டனர். நாவற்குழியில் பலவந்தமாக உருவாக்கப்பட்ட சிங்களக் குடியிருப்பில் விகாரை ஒன்றை அமைப்பதற்காக அடிக்கல் நடப்பட்டதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையில் பிக்குகளின் வருகை பல சந்தேகங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

பிக்குகளின் வருகையால் குழப்பங்கள் ஏதும் ஏற்படலாம் என்கிற எதிர்பார்ப்புக் காரணமாக அவர்களைச் சுற்றி ஏராளமான பொலிஸார் சிவில் உடையில் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நாகவிகாரை மற்றும் நாவற்குழியில் அமைக்கப்பட இருக்கும் விகாரைக்கும் கடந்த 25ஆம் திகதி 300 பௌத்த பிக்குகள் வருவதாகக் கூறப்பட்டது. அது பற்றிய செய்திகள் வெளியான >> 06

## உதவ வந்தது இந்தியக் கப்பல்




>> 53

## அவசர உதவிகளுக்கு ரூ. 15 மில்லியனை வழங்குகிறது அமெ.

>> 06

## மீட்புப் பணிகளில் இந்தியக் கடற்படை



>> 53

## வெள்ளப் பெருக்கு நேற்றுத் தணிந்தது

- 5 லட்சம் பேர் இடப்பெயர்வு
- 122 பேர் சாவு
- 97 பேரைக் காணவில்லை



>> 06

## குடாநாட்டிலிருந்தும் தெற்குக்கு உதவிக்கரம்

>> 52

## சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் தையிட்டிக் கிணற்றிலிருந்து நேற்றும் மீட்கப்பட்டன



யாழ்ப்பாணம் மே 28
யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு, தையிட்டிப்பகுதியில் நேற்றைய தினமும் கிணற்றில் இருந்து 60க்கும் >> 52

## ஒற்றையாட்சியா சமஷ்டியா? சொல் குறித்து முடிவில்லை

உள்ளடக்கத்தை மட்டுமே இடைக்கால அறிக்கையில் உள்வாங்கத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 28
புதிய அரசமைப்புத் தொடர்பான வழிகாட்டல் குழுவின் இடைக் கால அறிக்கையை இறுதி செய்யும் நோக்கோடு இந்த வாரம் மூன்று நாள் >> 06

## வடக்கு, கிழக்கில் காற்றின் வேகம் அதிகரிக்கும்

மீனவர்கள் அவதானம்

யாழ்ப்பாணம், மே 28
நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதியில், கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு சுமார் 80 கிலோமீற்றர் வரை அதிகரிக்கும் என்று யாழ்ப்பாணம் >> 52



SDB சீதனம்

நேசமிகு அர்ப்பணிப்பு பாதுகாப்பான எதிர்காலம்

ஒப்பந்த தொகை அவ்வாறே

| [illegible] | [illegible] | | |
|---|---|---|---|
| 18 வயதில் பிள்ளைக்கு [illegible] உத்தரவாத் தொகை (ரூ) | புதிதாக பிறந்த குழந்தைக்கு | 5 வயது குழந்தைக்கு | 10 வயது குழந்தைக்கு |
| 5,000 | 995 | 1,559 | 2,440 |
| 10,000 | 1,991 | 3,117 | 4,881 |
| 25,000 | 4,977 | 7,793 | 12,202 |
| 50,000 | 9,955 | 15,586 | 24,403 |
| 75,000 | 14,932 | 23,379 | 36,605 |
| 100,000 | 19,909 | 31,172 | 48,806 |
| 500,000 | 99,549 | 155,862 | 244,031 |
| 1,000,000 | 199,099 | 311,725 | 488,062 |

011 5 411 411

மேலதிக தகவல்கள் அருகிலுள்ள SDB வங்கியில் அல்லது அழையுங்கள் 0115 411 411

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

SDB வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளவேண்டுமே தவிர பஞ்சாயத்து நடத்தக்கூடாது

## வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யழ்ப்பாணம்.மே 28
"உண்மைகளை மறைத்துத் தவறான செய்திகளை வழங்குவதன் மூலம் தாம் நினைத்தவற்றை சாதித்துவிடலாம் எனச் சிலர் எண்ணியுள்ளார்கள். அவர்களுக்கு சகாயம் வழங்க பத்திரிகைகளும் இணையத்தளங்களும் முன்னிற்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் தவறானவை. அவை ஒருவித பலாத்காரமே. கருத்துக்களுக்குக் கருத்துக்களே முன்வைக்கப்பட வேண்டுமே தவிர, கட்டைப் பஞ்சாயத்து முறைகள் அல்ல"

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

இயக்கங்கள் இயங்கிய போது பலாத்காரமே கருவியாகப் பாவிக்கப்பட்டது. இராணுவமும் அதே வழியையே பின்பற்றியது. இனியும் அந்த வழிமுறை தொடர முடியாது. ஜனநாயகத்தில் கருத்துப் பரிமாற்றங்களே உரிய வழிமுறை என்றும் அவர் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தலைமையகக் கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் கோரிக்கை நியாயமானதாக இருப்பின் அவை நிச்சயம் பரிசீலிக்கப்படும். பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை தனது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உகந்த்ததான தலைமை அலுவலகக் கட்டடம் ஒன்று இல்லை என்ற நீண்டநாள் கோரிக்கையும் எதிர்பார்ப்பும் இன்று நிறைவேறியுள்ளது. சுமார் 14.7 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் ஏனைய கலந்துரையாடல்கள் புதிய பிரதேச சபைக்கான அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படும் போது அவர்களால் நடத்தப்படப்போகின்ற கூட்டங்கள் என்பவற்றை சிரமமின்றி நடத்தவும் ஏற்ற வகையில் இந்தக் கட்டடம் அமைந்திருப்பது வரவேற்புக்குரியது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை சுமார் 63 உத்தியோக்தர்களைக் கொண்டிருக்க வேண்டிய சபை. எனினும் 3 உப அலுவலகங்கள் 3 சந்தைகள் என உங்களின் செயற்பாடுகள் விரிவடைந்துள்ள நிலையில் இங்கு கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாக அறிகின்றேன். அனுமதிக்கப்பட்ட ஆளணி 63ஆக இருக்கும் போது. தற்சமயம் 53 பேரே கடமை புரிவதாகவும் இதில் குறிப்பிட்ட ஒரு தொகையினர் மாறி மாறி தவிர்க்க முடியாத விடுமுறைகளில் நிற்பதாகவும் அறியந்துள்ளேன்.

மருத்துவக் காரணங்களுக்கான விடுமுறைகள் தவிர்க்க முடியாதவை. ஆனாலும் இருக்கக் கூடிய ஆளணியை முறையாகப் பயன்படுத்தி வேலைகளைத் துரிதமாக நிறைவேற்றக்கூடிய ஆளுமையையும் நிர்வாகத் திறனையும் செயலாளர்கள் தம்மகத்தே கொண்டிருக்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. எனினும் ஆளணிக் குறைபாடுகளை நிரப்ப உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இன்று பட்டதாரிகள் மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் கணித மற்றும் விஞ்ஞான பாடங்களில் மிகச் சிறப்பான சித்திகளைப் பெற்ற சிலர் அமைச்சுக் காரியாலய உதவியாளர்களாகக் கடமையாற்றுவதை நான் அறிந்திருக்கின்றேன். அவர்கள் உத்தியோகத்தர்களாக நியமனம் பெறுவதற்குத் தேவையான கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் இருந்தும் அதற்கு ஒப்பான ஒரு பதவியை நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காத தால், குறைந்த தகைமையை எதிர்பார்க்கும் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்து பெற்று வருகின்றார்கள். இதனால் குறைந்த தகைமையுடைய பலர் வேலையில்லாமல் அலைகின்றார்கள்.

மேற்படி தகைமைகள் கூடிய ஊழியர்கள் போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைந்து உத்தியோகத்தர் தர நியமனங்களைப் பெற்றுக் கொள்வதையும் நாம் கண்டுள்ளோம் என்றார்.

(வ-12)

# தொடருந்து மீது நாவற்குழியில் கல் வீச்சு

## படைச் சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம், மே 28
யாழ்ப்பாணம், நாவற்குழியில் தொடருந்து மீது இனந்தெரியாதோரால் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதில் பயணித்த இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்று சனிக்கிழமை காலை பயணித்த தொடருந்தின் மீதே கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அதில் பயணித்த இராணுவ சிப்பாயின் தலை மீது கல் விழுந்ததில் அவர் படுகாயமடைந்தார். சிப்பாய் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கல்வீச்சுத் தாக்குதல் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (வ-106)

# உலக சுகாதார நிறுவனத்தால் அவசர நிதியுதவி

கொழும்பு, மே 28
வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியுதவியை உலக சுகாதார நிறுவனம் வழங்குவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

வெள்ள இடரால் பதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவிகளை வழங்க இலங்கை அரசால் விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்தே இந்த நிதியுதவியை உலக சுகாதார நிறுவனம் வழங்குகிறது. (வ)

# நாய்க்கு எங்க அடிச்சாலும் பின்னங்காலைத்தான் தூக்கும்!



அம்பலத்தாடி அப்புச்சி

அயல் கோயிலில தேர். கனகாலம் கோயில் பக்கமே போகேல்லை. இந்த முறை போகப் பலன் கிடைச்சுது. நல்ல சனம். வெளிநாட்டுக்காரரும் வந்திருந்திச்சினம். சுவாமி தேரில ஏறுறதுக்கு முன்னம் போய்; வடிவா வசந்த மண்டபப் பூசையைப் பார்த்தன். பிறகு சுவாமிக்குப் பின்னாலயே வந்தன். சுவாமி தேரேறிற காட்சியைக் கண் குளிரப் பார்த்தன். வெய்யில்ல வெளி வீதி சுற்றிவர ஏலாதென்றுபோட்டு கச்சான்காரியிட்ட ஒரு சரையை வாங்கிக்கொண்டு கோயில் வேப்பமரத்தடியில சரீரத்தை மரத்தோட சாய்ச்சுக்கொண்டன்.

அப்பிடிய இருந்தபடிக்கு விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தன். பக்கத்தில பெஞ்சனியர் இரண்டு பேர் நிண்டிருந்தினம். ஒருத்தர் பட்டுவேட்டி சரிகையோட நின்றார். மற்றவர் கதர்வேட்டி உடுத்தினபடி நின்றார். ஆற அமர இருந்து தங்களுக்க கதைச்சுக் கொண்டிருந்தினம்.

"நாய்க்கு எங்கயடிச்சாலும் பின்னாங்காலைத் தூக்கிற மாதிரி எங்கட அரசியல்வாதிகளென்று சொல்லிக்கொள்ளுற சிலருக்கு சம்பந்தர் ஐயாவையும் சுமந்திரனையும் இழுத்து திட்டாட்டி அரசியல் சக்கரம் சுழலாது. அந்தளவுக்கு வங்குரோத்து அரசியல் தான் அவையளின்ர நிலை. அரசியல் நாகரிகம் துண்டாக் கிடையாது பாருங்கோ" எண்டிறார் கதர் வேட்டிக்காரர். அதுக்குப் பட்டு வேட்டிக்காரர் சொல்லுறார். வடக்கு மாகாண சபையை சிங்களவன் எதிர் பார்ப்போட பார்த்துக் கொண்டிருந்தவனாம். நீதியரசர் ஒருத்தரின்ர தலைமையில நிறைய விசயங்கள் செய்யப்போறாங்கள், அதுகளப் பார்த்துப்போட்டு தெற்கில இருக்கிற சபையளும் அப்பிடி ஏதும் செய்யப்போக தங்களுக்குத் தலையிடி கூடப் போகுதெண்டு பயத்தில இருந்தவனாம். இஞ்ச எல்லாம் வெத்துவேட்டாப் போனதில அவங்களுக்கு வலு சந்தோசமாம்.

கதர் வேட்டிக்காரர் கடும் பரிதாபமா முகத்தையும் வச்சுக்கொண்டு சொல்லுறார், "நாங்கள் நல்லாத் தேய்ஞ்சு போனம். ஒண்டுக்கும் இலாயக்கில்லாத சமூகமா இருக்கிறம். ஒரு மாகாண சபையால நினைவேந்தல் நிகழ்வை சீரா ஒழுங்குபடுத்த முடியேல்லையென்றாப் பாருங்கோவன். யார் யார் என்னென்ன செய்யவேணும் என்று பொறுப்புக்களை பிரிச்சுக் கொடுத்து ஒரு நிகழ்வை வடிவாச்செய்யிற திறமையில்லாததால எவ்வளவு குழப்பங்கள். எத்தின ஆயிரம் பேர் செத்து மடிஞ்ச இடம் அது. எவ்வளவு புனிதமா பக்குவமா நடக்கவேணும் அங்க. அவனவனின்ர அரசியல் வெப்பியாரத்தை ஆத்துறத்துக்கான இடமா எல்லே அதை பாவிச்சிருக்கிறாங்கள். இதிலகூட ஒன்றாக முடியல எதிலதான் ஒன்றாகப் போறாங்களோ!"

இந்த கதையப் பார்த்துப்போட்டு அங்கால நின்ற வெளிநாட்டுக்காரர் ஒருத்தர் இந்தக் குட்டி அரசியல் மீட்டிங்கில வந்து சேர்ந்திட்டார். "நாங்கள் வெளிநாட்டிலயிருந்து நிறைய எதிர்பார்த்தம். நிறைய நடக்கும், புதுசு புதுசாத் திட்டங்கள் வருமென்று பார்த்தம். ஒன்றையும் காணேல்லை. மாகாண சபை உறுப்பினர்மாருக்கும் அரசில்வாதிகளுக்கும் காசு காசாச் சேர்த்துக் குடுத்தம். இப்ப இங்கவந்தா ஒன்றையும்காணேல்லை. அந்தக் காசுகளுக்குக் கணக்கையும் காணேல்ல. தமிழாக்கள் படிச்சாக்கள் எண்டுறம். ஆனால் அடிப்படையில செய்ய வேண்டிய திட்டமிடலை செய்யமுடியாமல் இருக்கிறம்." அந்தாளும் தன் பங்குக்கு பொங்கிச் சரிச்சுது.

"நினைவேந்தலுக்கு எதிர்க்கட்சித் தலைவரா இருந்துகொண்டே முள்ளிவாய்க்காலுக்கு சம்பந்தர் வந்தது ஒரு பெரிய விசயம். கிடைக்கிற சந்தர்ப்பங்களை பாவிக்கவேணும் காலங்காலமா குழப்பியடிச்சு என்னத்தைக் கண்டனாங்கள். சம்பந்தர் வரக்கூடாதென்று நேர்ந்து கொண்டிருந்தவையள். வராட்டி அதை வைச்சு அரசியல் செய்யலாமென்று கனவு கண்டிச்சினம். அந்தாள் வந்ததும் புண்ணில புளிப்பத்தின மாதிரி எரிவு தாங்கேலாமல் ஏவல் பேயள ஏவி விட்டு புனிதமா நடக்க வேண்டிய நினைவேந்தலை குழப்பிக்கத்துப் போட்டாங்கள். என்ன கேவலமப்பா." என்று பட்டுவேட்டிக்காரர் வேட்டியையும் மடிச்சுக் கட்டிக்கொண்டு கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டிட்டார்.

அப்ப வெளி நாட்டுக்காரர் சொன்னார், "எங்கட சமூகத்தில எல்லா மட்டத்திலையும் நாங்கள் சரியா கீழை போயிருக்கிறம். அதைச் சீர் செய்யிறதென்றா நல்ல தலைமைவேணும். அதுக்கென்று நிறுவனங்கள் இருக்கவேணும். பல்லைக்கழகத்தில அதுக்கான வழிகள் வரவேணும். நான் 2014 ஆம் ஆண்டு நோர்வேயில ஒரு தமிழ் நாட்டுத் தமிழ்ப் பேராசிரியரைச் சந்திச்சனான். அவர் அடிக்கடி தமிழ் வளர்ச்சி தொடர்பான வேலைகளுக்கு வாரவர். அவர் சொன்னார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்ர கல்விநிலையில எவ்வளவு கீழ்நிலைக்கு வந்தது என்றதுக்கு தமிழ்துறைதான் நல்ல உதாரணமாம். பேராசிரியர் கைலாசபதி போன்ற பெரிய பெரிய தமிழ்ப் புலமையாளர்கள், தமிழ் நாட்டிலேயே போற்றப்படுகிறவர்கள் இருந்த தமிழ் துறையின்ர தலைமைக் கதிரையப் பிடிச்சுக கொண்டிருக்கிறவை இன்றைக்கு என்ன செய்திருக்கினம் என்று பாருங்கோ! எல்லாம் கேவலமாப் போச்சென்ன!" என்று அந்த மனுசனும் பொரிஞ்சு தள்ளிப்போட்டுது.

கச்சான் கொட்டையைச் சப்பிக்கொண்டு இவையளின்ர அரசியலை ரசிச்சுக்கொண்டிருந்த எனக்கு மேற்கு மூலையால தேர் திரும்பிறது தெரிய வேட்டியில மண்ணைத் தட்டிக்கொண்டு எழும்பினன். பக்கதில நின்று அரசியல் மீட்டிங் வச்சவையள வடிவாக் கிட்ட நின்று ஒரு நோட்டம் விட்டன். ஆக்கள் அள்ளுகொள்ளையா நல்ல வாட்டசாட்டமா இருந்திச்சினம். அப்பத்தான் நினைச்சன், வெளிநாட்டில இருக்கிற நீங்கள் கொஞ் சப்பேர் இப்பிடிக் கதைக்கிறியள். ஆனா, அங்க இருக்கிற இன்னும் கொஞ்சப்பேர்தான் இஞ்ச இருக்கிற கொஞ்சப் பேரத் தூண்டிவிட்டுக் காசுக் குடுத்தும் இப்பிடி அரசியல் குழப்பங்கள் எல்லாத்தையும் சொல்லினம். அங்க இருக்கிற நீங்கள் நல்லா பிள்ளையையும் கிள்ளி தொட்டிலயும் ஆட்டுறீங்கள் என்று மன சுக்க சிரிச்சுக் கொண்டே தேர் இருப்பிடம் வந்து சேர்ந்ததும் நான் வீட்டை வெளிக்கிட்டிட்டன்.

பிறகுதான் நானும் விசாரிச்சன். தமிழ் துறை அவர் சொன்னபடிதான் இருந்தது. பந்தம் பிடிக்கிற தகுதியை வளர்த்தாக்காணும் என்ற நிலமைதான் இருந்திருக்கும் போல. இப்ப அங்க தமிழ் படிக்க பிள்ளையள் வாறதில்லையாம். ரெண்டு வருசத்துக்கு முன்னமே அதுதான் நிலமையாம். "இப்ப பிள்ளையள் அந்தப் பக்கம் எட்டியாவது பார்க்குதுகளோ, நிலமை தெரியாது" என்று சொல்லிச்சினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றவாளிகளை பாதுகாக்க மைத்திரி முயற்சிக்கக் கூடாது

## உண்மைக்கும், நீதிக்குமான பன்னாட்டு செயற்றிட்டம் வலியுறுத்து

கொழும்பு, மே 28

போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். அவர்களைப் பாதுகாக்கும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது.

இவ்வாறு உண்மைக்கும் நீதிக்குமான பன்னாட்டுச் செயற்றிட்டம் வலியுறுத்தியுள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் வெளியிட்ட செய்தியில் உள்ளதாவது:

இறுதிப் போர் நடைபெற்ற 2008-2009 காலப்பகுதியில் வைத்திய சாலை மற்றும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பாக மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கெய்ட்டியில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைப் படையினர் பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவிசாரணை செய்யும் பொறுப்பை போர்க்குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஜகத் டயஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

ஜகத் டயஸ் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் முதலில் விசாரணை நடத்தப்பட வேண்டும். கெய்ட்டியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்படும் வரை ஐ.நா அமைதி காக்கும் பணிகளில் இலங்கைப் படையினரை நிலைநிறுத்தக்கூடாது.

57ஆம் படைப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்த ஜகத் டயஸ் மீது பல்வேறு போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அவைகள் நிரூபிக்கப்பட்டால் அது போர்க்குற்றச்சாட்டுக்கானபதிவுகளாகும். போர் சூனிய வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த வள்ளிபுனம் பிரதேசத்தில் அமைந்திருந்த தற்காலிக வைத்திய சாலைகள் மீது கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆட்லரி தாக்குதல் நடத்தப்பட்டது. அதற்கு 57 ஆவது படைப்பிரிவே காரணம் என்று ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு பாரதூரமான ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்தத் தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானது. கடந்த எட்டு வருடங்களாக போர்க்குற்றங்கள் தொடர்பில் பல்வேறு ஆதாரங்கள் வெளியாகியிருந்த போதிலும் இதுவரை எந்தவித ஆக்கபூர்வமான நட வடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் யஸ்மின் சூக்கா சுட்டிக்காட்டி யுள்ளார். 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அரசு பாதுகாப்பு பிரதேசமாக அறிவித்த புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் கொடி மற்றும் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்த போதிலும் இலங்கை பாதுகாப்பு படையினர் தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது - என்றுள்ளது. (ற-10)

## சாரதி தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல தனியார் நிறுவனத்துக்கு சாரதி தேவை. 30 வயதுக்கு மேற்பட்டவராகவும், கொழும்பு சென்று வரக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். நிறுவனங்களில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை நேரில் சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம் - 2017



**தேர்த்திருவிழா**

இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.15 சுவாமி புறப்பாடு முற்பகல் 10.00 மணி தேர்த்திருவிழா பஞ்சமுகவிநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர் தேரேறி வீதியுலா மாலை 4.00 மணி தேரால் சுவாமி இறங்குதல் பச்சை சாத்துதல்

## சுற்றறிக்கைகளுக்குக் கட்டுப்படாது நிவாரணங்களை வழங்க பணிப்பு

கொழும்பு, மே 28

சுற்றறிக்கைகளுக்கு மட்டுப்பட்டிருக்காது வெள்ள இடருக்குள் சிக்குண்டுள்ள மக்களுக்கு நிவாரணங் களை வழங்க நடவடிக்கைகளை எடுக்குமாறு அரச தலைவர் பணித்துள்ளார்.

>> 53

**Mobile Phone Technician Course**
கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி

**Software, Hardware Unlocking**

- பெறுமதியான Certificate
- Free Hand books



Duration 1 Month

Smart Phone உட்பட அனைத்து Phone களிலும் மிகச் சிறந்த வல்லுநரால் பயிற்சி அளிக்கப்படும்

Next Batch:03.06.2017

உங்கள் அனுமதிகளைப் பெற

iCS EDUCATION
No 77, Colck Tower Road, Jaffna.
021 7306000,076 7013060

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**ஆயிரம் பிறைகண்ட அன்னை கோவளம் பூத்த குலமங்கை**

**திருமதி**

## இராசலட்சுமி அம்மையார் சதாசிவம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21. 05. 1931 | 28. 04. 2017 |

28.04.2017 இல் அத்துவித முத்தியில் சிவனாருடன் சேர்ந்த எங்கள் குடும்பவிளக்கு குலதெய்வத்தின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்னையாரின் ஆகமநெறிப் பூசனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைப்பதுடன். அன்னையின் இறுதிச் சடங்கில் பங்குபற்றியோர்க்கும். அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்வளையம் சாத்தியோர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**8, மாவடி வீதி,**
**ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.**
**28.05.2017**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேவை**
யாழ்ப்பாணத்தில் உங்கள் வீடுகளைப் புனரமைத்துக் கொள்ளவும் புதிய வீடுகளைக் கட்டிக் கொள்ளவும் தொடர்பு கொள்க. உத்தரவாதத்துடன் வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
**077 045 4140**

**கார் விற்பனைக்கு**
நல்ல நிலையில் உள்ள 8 Sri மொறிஸ் மைனர் 1000 கார் விற்பனைக்கு உண்டு.
**077 841 1895**

**காணி விற்பனைக்கு**
சண்டிலிப்பாய், காரைநகர் வீதியில் 5½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
**077 532 2947**

**காணி விற்பனைக்கு**
கோண்டாவில் சந்திக்கும் இராஜவீதிச் சந்திக்கும் இடையில் 1¼பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**076 697 2287**

**தேவை**
பழுதடைந்த அல்லது பதியப்படாத பாவனையில் இல்லாத, உருவம் குலைக்கப்படாத, T.V.S CHAMP மோட்டார் சைக்கிள்கள் பல தேவை
**077 134 1974, 077 624 2425**

**பணிப்பெண் தேவை**
சிறிய வைத்தியர் குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்குப் பணிப்பெண் தேவை.
**076 636 7091, 077 262 6944**

**விற்பனைக்குண்டு**
GERMAN SHEPERD அல்ஷேசன் பெண் நாய் விற்பனைக்குண்டு.
சேர்ச் ஒழுங்கை, அராலி வடக்கு.
**078 301 4280, 021 205 1514**

**யாழ்நகரில் காணி விற்பனை**
வேம்படி மகளீர் கல்லூரியிலிருந்து 600 மீற்றர் தூரத்தில் சப்பல் வீதியில் 4பரப்புக் காணி (அகலம் 40 அடி நீளம் 250 அடி) விற்பனைக்குண்டு STORE அமைக்க பொருத்தமானது.
**076 697 2287**

**TV கள் மலிவு விற்பனை**
Sony Wega TV கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 21" - 10000/= முதல்.
25" - 15000/=
**077 044 0570**
சோனிரேற் சென்ரர்(கொமர்ஷல் வங்கி எதிரில்)
56,கே.கே.எஸ். (K.K.S) வீதி, சுன்னாகம்
(Open 8am - 3 pm)

**வீடு, காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதியில் 2½ பரப்பில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு தரகர்கள் தேவையில்லை.
**077 255 0807**

**விஷேட பல் வைத்திய சேவை**
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**Room வாடகைக்கு**
பலாலி வீதி, கோண்டாவில் டிப்போக்கு முன்பாக பொதுவான சமையலறை, சகல வசதிகளுடனும் கூடிய குளியல் அறையுடன் அறை வாடகைக்குண்டு.
**077 711 0838**

**காணி/வீடு தேவை**
நல்லூர், கந்தர்மடம், திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் நல்ல சூழலில் காணி/வீடு தேவை.
**077 217 4038**

**தேவை**
பண்ணை ஒன்றிற்கு நல்ல இன காளை மாடு, பசுக்கன்று, கிடாய் ஆடு தேவை.
**078 301 7508**

**வீடு வாடகைக்கு**
கோப்பாய் வடக்கில் சிறிய குடும்பத்துக்கு 2 அறை வீடு மாத வாடகை 3000/= இற்கு உண்டு.
**072 346 5864**

**வேலையாள் தேவை**
நீர்வேலி வில்லு மதவடி பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள ஸ்ரார் ஹோட்டலுக்கு சமையல் உதவியாளர் (ஆண்/பெண்) ரீமேக்கர், உணவு பரிமாறுபவர், அப்பம் தயாரிப்பவர் தேவை.
**077 789 0398**

**பணிப்பெண் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
**077 187 7754**

**விற்பனைக்கு**
தேர்வு செய்து உருவாக்கப்பட்ட தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. தாய் மரங்களை நேரடியாக பார்த்தும் பெற்றுக் கொள்ளலாம். மொத்தக் கொள்முதலுக்கு விலைக்கழிவு உண்டு.
மிகுதி நேரில்
**077 330 1798**

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**
இலங்கையின் பிரபல தொலைத் தொடர்பு நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து சிம் அட்டை விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. மாதாந்தம் 35000/= அதிகம் சம்பாதிக்கும் வாய்ப்பு.O/L தகைமையுடன் விண்ணப்பிக்கலாம்.
**078 500 0580, 078 500 5796**

**மணமகள் தேவை**
பிரான்சில் வதிவிடம் பெற்ற யாழ். இந்து கௌரவ குலத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு நன்கு படித்த, இந்து சமய, அதே குலத்தைச் சேர்ந்த 35-40 வயதுடைய மணமகள் தேவை. உள்நாட்டிலோ/ வெளிநாட்டிலே விரும்பத்தக்கது.
தொடர்புக்கு மயில்வாகனம்: 003 375 106 9416
தொடர்பு கொள்ளவேண்டிய நேரம்: இலங்கை நேரப்படி கிழமை நாளில் மாலை 7.30 மணிக்குப் பின்பும் சனி, ஞாயிறு எந்தநேரமும்
No.01, Souare De Toulon, 95380, Loures, France

**மணமகள் தேவை**
*1986 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 30 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
*1983 இல் பிறந்த 8இல் செவ்வாய் 25 பாவமுடைய பெல்சியம் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
*1982இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 21¼. பாவமுடைய நோர்வே பிரஜா உரிமை பெற்ற மண மகனுக்குப் படித்த மணமகள் தேவை.
*1987இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற PhD இஞ்சினியர் மணமகனுக்கு இஞ்சினியர் மணமகள் தேவை.
*1990இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 14½ பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
*1986 இல் பிறந்த 8இல் செவ்வாய் 46 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
*1985 இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும், 14 பாவமுடைய பிரான்ஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
**கமலக்கண்ணன் திருமண சேவை**
இல.62, [illegible] வீதி,
பூங்கனிச் [illegible]
**077 607 0862**

**தேவை**
யாழ்.நகரில் உள்ள பலசரக்குக் கடைக்கு முன் அனுபவமுள்ள.
1. கணினி மூலம் சிட்டை எழுதுநர் ஆண்/பெண்
2. விற்பனையாளர்
3. வான் விற்பனை உதவியாளர்.
**077 392 1662**

**பெண் வரவேற்பாளர்**
நல்லூரில் இயங்கும் கல்விசார் நிறுவனத்தில் பணியாற்ற பெண் வரவேற்பாளர் தேவை. நல்ல தொடர்பாடல் திறன் உள்ள 24 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும்.
(பயிலுனரும் விண்ணப்பிக்கலாம்)
உடனே அழையுங்கள்.
**077 201 7004**

**விற்பனைக்கு**
பாவித்த நிலை, யன்னல், கதவுகள் விற்பனக்குண்டு.
**077 808 9995**

**விற்பனைக்கு**
அடம்பன் பண்ணையில் பன்றிக் குட்டிகள் விற்பனைக்குண்டு.
**077 075 7875**

**கடை வாடகைக்கு**
பலாலி வீதி, இலுப்பையடி சந்திக்கு அருகில் அமைந்துள்ள கடை ஒன்று வாடகைக்கு விடப்படும்.
**077 722 2602**

**வேலையாள்கள் தேவை**
1. சமையல் உதவியாளர் (றொட்டி வீசத்தெரிந்தவர்)
2. முகாமையாளர்
3. சப்ளேயர்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிப்படும்.
**078 632 6111, 021 224 1555**

**வீடு அறைகள் வாடகைக்கு**
வண்ணார் பண்ணை நாச்சிமார் கோயிலுக்கு அருகாமையில் அறைகளாகவும் வீடாகவும் வாடகைக்கு உண்டு. தொழில்புரியும் பெண்கள் விரும்பத்தக்கது.
**077 408 0882, 077 204 1311**

**கணினிகள் விற்பனைக்கு**
பாவித்த நல்ல நிலையிலுள்ள INTEL, L3SSD Hard dise கணினிகள் விற்பனைக்குண்டு.
**077 171 9371, 077 952 2162**

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1974 ஆம் ஆண்டு அனுசம் 2ஆம் பாதம் மூன்று சுற்று கிரக பாவம் 37½, செவ்வாய்க் குற்ற மற்ற அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அழகிய, அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
மணமகன் சைவ போசனம் மணமகள் எதுவானாலும் பரவாயில்லை.
**076 554 3724**

**வீடும் கடையும் வாடகைக்கு**
திக்கம், நெல்லியடி பிரதான வீதியில் வீடும் கடையும் தனித்தனியாக உடனடியாக வாடகைக்கு. பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை நகரங்களில் இருந்து 3KM பிரதான வீதியில் எந்தத் தொழிலுக்குமான இடம். பார்வை 29/30/31 ஆம் திகதிகளில்.
**சேகர் / மது - 077 327 7491**

**வேலையாள்கள் தேவை**
யாழ் நகரில் உள்ள பண்ணைக்கு கோழிகளை பராமரிப்பதற்கு வேலையாள்கள் தேவை.
வயது 45 இற்கு மேல் விரும்பத்தக்கது.
உணவு, தங்குமிடம் இலவசம்.
விவரங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விள.இல :- 5537, மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தீய பழக்கமற்ற லண்டன் வீசாவுள்ள குறுகிய காலத்துக்குள்ளேயே விவாகரத்துப் பெற்ற 37 வயது மணமகனுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணமகள் தேவை.
**0044 7466 487026**

## வெள்ள இடர் மீட்புப்பணிகளில் கவசவாகனங்களும் களத்தில்


மீட்புப் பணியில் கவச வாகனங்கள்

கொழும்பு, மே 28
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு ப் பணிகளில் இலங்கை இராணுவத்தினரின் பி.ரி.ஆர் துருப்புக்காவி கவசவாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனிவிரத்ன தெரிவித்தார்.
இலங்கை இராணுவத்தினரிடம் உள்ள பி.ரி.ஆர்80 ரக துருப்புக்காவி கவச வாகனங்கள் ஆழமற்ற நீர்ப்பரப்பிலும் பயணிக்கக் கூடியவை. இந்த வகையான கவச வாகனங்களை மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றுவதற்குச் செல்லவுள்ள இலங்கைப் படையினரின் பயன்பாட்டுக்காக, இலங்கை இராணுவம் தயார்படுத்தி வைத்திருந்தது.
இலங்கையின் தெற்கு, மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் கடந்த வியாழக்கிழமை பெய்த கடும் மழையை அடுத்து, நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், இலங்கை இராணுவத்தின் மீட்புக் குழுக்கள் களம் இறக்கப்பட்டுள்ளன.
800 இலங்கை இராணுவத்தினர் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனிவிரத்ன தெரிவித்தார். வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகளில் இராணுவத்தினரின் ஆறு பி.ரி.ஆர் கவச வாகனங்களும், UN என பெயர் பொறிக்கப்பட்ட வெள்ளை நிற கவச வாகனங்களும் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

## வருடாந்தத் திருவிழா

வடஅல்வை, குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் , அடுத்த மாதம் 8ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலயபரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

## கட்டடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், மே 28
அரச தலைவரால் மீளக் கையளிக்கப்பட்டு புனர்நிர்மாணம் செய்யபட்ட காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியின் இரண்டு கட்டடங்கள், நாளை திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு, அமைச்சர் சுவாமிநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளன என்று கல்லூரியின் அதிபர் விமலன் தெரிவித்தார் . (ஐ-ரி)

## இந்திய அரசால் யாழ். நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 28
இந்திய அரசால் யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன என்று யாழ்ப்பாணப் பொதுநூலக முதன்மை நூலகர் சுகந்தி சதாசிவமூர்த்தி தெரிவித்தார்.
இந்த நூல்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ரறன்ஜித் சிங்கால் நூலகத்துக்குக் கையளிக்கப்படும். தமிழ், சமயம், சமூகவியல் என பலதுறை சார்ந்த நூல்கள் உள்ளடங்கலாக 16 ஆயிரம் நூல்கள் அன்பளிப்புச்செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சிப் பிரதேசத்தில் உலக சுற்றாடல் வார நிகழ்வுகள்

தென்மராட்சி, மே 28

உலக சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உள்ள திணைக்கள அலுவலகங்களில் நாளை மறுதினம் தொடக்கம் ஜூன் ஐந்தாம் திகதி வரை சுற்றாடல் வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

உலக சுற்றாடல் வாரத்தின் முதல் நாளான நாளை மறுதினம், முற்பகல் 9 மணிக்கு சுற்றாடல் விழிப்புணர்வு தொடர்பான வீதி நாடகங்கள், மந்துவில் கிழக்கு சின்னச் சந்தையடி, சந்திரபுரம் அம்பாள் சனசமூக நிலைய முன்றில், கரம்பைக்குறிச்சி ஆகிய இடங்களில் நடத்தப்படும். பிரதேச அலுவலகங்களின் அலுவலர்களுக்கான சுற்றாடல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்படவுள்ளன.

இரண்டாம் நாள் சுற்றுப்புறச் சூழல் சுத்தப்படுத்தும் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலகம், கிராம அலுவலர் அலுவலகங்கள், சாவகச்சேரி நகரம், வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களில் துப்புரவுப் பணிகளும், மூன்றாம் நாள் திண்மக் கழிவு முகாமைத்துவ தினத்தை முன்னிட்டு இலத்திரனியல்கழிவகற்றலும், நான்காம் நாள் மரம் நடுகைத் தினத்தை முன்னிட்டு கொடிகாமம் சமுர்த்தி வங்கி வரணி கலாசார நிலைய சுற்றாடல் ஆகியவற்றிலும் ஏனைய பொது இடங்களில் மரநடுகையும் இடம்பெறும்.

ஐந்தாம் நாள் நீர் மற்றும் நீர்வள பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில் காணப்படும் பிளாஸ்ரிக் பொருள்கள் அப்புறப்படுத்தலும்,

ஆறாம் நாள் உயிர் பல்வகைமை பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு கைதடிப் பிரதேசத்தில் பாதீனியம் அழித்தல் மற்றும் சரசாலை குருவிவெளிப் பகுதியில் திண்மக் கழிவகற்றலும்,

ஏழாம் நாள் பேண்தகு நில முகாமைத்துவ தினத்தை முன்னிட்டு கச்சாய் கெற்பேலிப் பகுதிகளில் மணல் அகழ்வு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் மாணவர்களுக்கான விநாடிவினாப் போட்டிகளும், நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வுகளும் இடம்பெறும் என்று பிரதேச செயலர் திருமதி பே.பாபு அறிவித்தள்ளார்.

(ஐ -9)

---

### வேலையாள்கள் தேவை

பொருள்களை வாகனத்தில் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு வேலையாள்கள் தேவை.

**077 724 0612**

---

### வேலை வாய்ப்பு

பிரபல அழகுப் பொருள்கள் உற்பத்தி நிறுவனத்திற்கு வடமாகாணம் முழுவதும் உடடியாக 25 Promotion Girls (மேம்பாட்டு பெண்கள்) தேவை.

**அடிப்படை தகைமைகள்:**

- G.C.E O/L சித்தி
- அடிப்படை ஆங்கில அறிவு
- வயதெல்லை 18 - 30

கவர்ச்சிகரமான வேதனத்துடன் இதர ஊக்குவிப்புக்களும் வழங்கப்படும். விரும்புவோர் சுயவிவரக் கோவையுடன் 29.05.2017 மற்றும் 30.05.2017 தினங்களில் எமது தொழில் வங்கியில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம். நேரம் 10.30am - 4pm

**Winstar Job Bank**

இல 122, தபாற்பெட்டி சந்தி, பலாலிவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

---

### உப ஒப்பந்தகாரர் தேவை

கிளிநொச்சியில் கட்டடம் ஒன்றுக்கு மாபிள் வேலை (Tile Work) செய்வதற்கு உப ஒப்பந்தகாரர்கள் தேவை.

**076 826 4857**

---

### சொர்க்கம் திருமணசேவை

கனடாவில் வசிக்கும் 33 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகிறோம். கனடாவில் இன்ஜினியராக பணிபுரியும் 30 வயது றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மணமகனுக்கு படித்த அழகான மணமகளை தேடுகின்றோம் லண்டனில் 35 வயது டொக்ரராக பணிபுரியும் மணமகளுக்கு படித்த பட்டதாரி மணமகனை தேடுகின்றோம்.

T.P & Viber:
**001 416 666 1855, 001 647 504 3336**

---

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.**www.ambafrance-lk.org**

**ஆரம்பம் - 28.05.2017 உடன் அழைக்கவும்.** நேரம்:- 8.30AM

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

---

### மணமகன் தேவை

வடமராட்சிப் பிரிவு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 02.08.1973 இல் பிறந்த உத்தர நட்சத்திரம் முதலாம் பாதம், சிங்கராசி, செவ்வாய் குற்றம் இல்லாத பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. தேவைப்படும் மணமகன் அரச, தனியார், நிறுவனத்தில் வேலை செய்பவர் இ.போ.ச. நடத்துநர், கடைமுதலாளி.

**குறிப்பு:- தாரம் இழந்தவர், விவாகரத்துப் பெற்றவர் வேண்டாம்.**

**076 627 5362**

---

உ
சிவமயம்

## சிவாச்சாரிய அபிஷேக வைபவம்

### [குருப்பட்டம் வழங்கல்]



ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருஷம் வைகாசித் திங்கள் 15 ஆம் நாள் (29.05.2017) திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள புநர்பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கடக லக்கினமும் கூடிய சுப முகூர்த்தத்தில்

பாரத்வாஜ கோத்திரம் வேலணை
**சிவஸ்ரீ நா.யோகேஸ்வரக் குருக்கள் சுபதாம்பிகையம்மா** தம்பதிகளின்
புத்திரன்
**ஜெகதீஸ்வரசர்மா** அவர்களுக்கு
**சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் ஆச்சாரிய அபிஷேகம்** நடைபெறும் மேற்படி வைபவத்தில் கலந்து விப்ர சிரேஸ்டர்கள் ஆசீர் வதிப்பதோடு குருவின் ஆசியையும் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தீட்ஷா குரு**
**முத்தமிழ் கருமணி**
**நா.சர்வேஸ்வரக் குருக்கள்.**

**யோக. ஜெகதீஸ்வரசர்மா** தம்பதிகள்
**ஆனைப்பந்தி**

---

### IMMEDIATE VACANCY

IN A FIRM OF CHARTERED ACCOUNTANTS
IN JAFFNA

01) Audit / Accounts Executive
Chartered inter / CAB II completed with 3 years experience in audit / accounting field.

02) Audit Trainess
Students of CAS Sri Lanka, CMA, ACCA, CIMA AAT or any University.

**Ideal candidates should possess**

* Fluent in written and Spoken English
* Knowledge of MS Office and QB package.

Please forward your CV including name and contacts details of two non -related reference to wskiru@yahoo.com within 7 days of this advertisement.

---

## மணிவிழா வாழ்த்து



**திருமதி இசபெல்லா பிறேமினி ஆனந்தராஜா**

**சேவை விவரம்**

முதல் நியமனம்: 26.12.1985

1. 26.12.1985 - 01.08.1991 மன்/முருகன் ம.வித்
2. 02.08.1991 - 17.03.1995 யா/சென் சாள்ஸ் ம.வித்
3. 18.03.1995 - 28.05.2017 யா/சென் மேரிஸ் வித்தி

மணிவிழா நாயகியை பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துவதோடு இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடும் நம் நாயகிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் யா/சென் மேரீஸ் வித்தியாலயம். யாழ்ப்பாணம்.**

---

**drivegreen**
so we can all breathe easier
AUTHORISED VEHICLE EMISSION TESTING CENTERS

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனம் நாடு பூராகவும் அரச அதிகாரம் பெற்ற வாகன புகை பரிசோதனை மத்திய நிலையங்களை அமைத்துள்ள நிறுவனமாகும். எமது மத்திய நிலையங்களில் (விசேடமாக வடமாகாணம், கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம்) உள்ள வெற்றிடங்களுக்காக நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் நிலையான சேவைக்காக

**மத்திய நிலைய முகாமையாளர் (பயிற்சிபெற்ற / பயிற்சி பெறாத) (Station Manager)**

- ★ மோட்டார் தொழில்நுட்பம் அல்லது மோட்டார் வாகனம் தொடர்பான முழு நேர டிப்ளோமா கற்கைநெறி (NDT/HNDE/NDES/C&G) மற்றும் மேற்பார்வை திறன் என்பன இருத்தல்.
- ★ கணினி அறிவுமற்றும் ஆங்கில மொழியில் தொடர்புகொள்ளும் ஆற்றல்.

**புகை பரிசோதகர் / இளநிலை புகை பரிசோதகர் (Emission Inspector / Junior Emission Inspector)**

- ★ மோட்டார் தொழில்நுட்பம் அல்லது மோட்டார் வாகனம் தொடர்பான கற்கைநெறி ஒன்றினை தொடர்ந்திருத்தல்.
- ★ இயந்திர தொழில்நுட்ப துறையில் அனுபவம் இருத்தல்.

**அனுபவமற்ற புகை பரிசோதகர் (Novice Emission Inspector)**

- ★ மோட்டார் வாகனம் தொடர்பான கற்கைநெறி ஒன்றினை தொடர்ந்திருத்தல் அல்லது இயந்திர தொழில்நுட்ப துறையில் அனுபவம் இருத்தல்.

**பயிலுனர் புகை பரிசோதகர் (Trainee)**

- ★ க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றியிருத்தல்.
- ★ மோட்டார் தொழில்நுட்ப அறிவு மேலதிக தகைமையாகும்.

**வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் மற்றும் சிங்களம், ஆங்கிலம் தெரிந்திருத்தல் மேற்படி பதவிகளுக்கான மேலதிக தகைமையாகும்.**

இவ்வணைத்து பதவிகளுக்கும் மனங்கவரும் ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள். உங்களது விண்ணப்பங்களை கீழ்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்புங்கள்.

(10)

**மனிதவள பிரிவு**
**கிளீன்கோ லங்கா நிறுவனம்**
**இல. 334, டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.**
**தொலைபேசி : 011-7444440, 0117444444**
மின்னஞ்சல் : careers@cleanco.lk இணையம் : www.drivegreen.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியமனத்துக்காக நாம் போராடுகையில் பணம் வாங்கி வேலை வழங்க முயற்சி

## வவுனியாவில் போராட்டம் நடத்தும் சுகாதாரத் தொண்டர்கள் குற்றச்சாட்டு

வவுனியா, மே 28

நியமனம் வழங்கக் கோரி 24 நாள்களாகப் போராட்டம் நடத்துகின்றோம். அதேநேரம் வவுனியாவில் பணம் பெற்று வேலை வழங்கும் நடவடிக்கை ஒன்று நடந்துள்ளது. நிரந்தர நியமனம் கோரி வவுனியாவில் தொடர் போராட்டம் நடத்தும் சுகாதாரத் தொண்டர்கள் இவ்வாறு குற்றஞ்சாட்டினர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

வவுனியாவில் இன்று (நேற்று) மு.ப. 10 மணியளவில் விருந்தினர் விடுதி ஒன்றில் அரச சேவையில் சுகாதாரத் தொழில் பெற்றுத் தரப்படும் என்று தெரிவித்து ஒரு கும்பல் இரண்டு லட்சம் ரூபா பெற்று அரச தொழில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுத் துள்ளது.

இன்று 40 இலிருந்து 45வரையானவர்கள் தமது ஆவணங்களுடன் சென்று அந்த நேர்முகத் தேர்வில் பங்குபற்றியுள்ளனர். நேர்முகத் தேர்வில் பங்குபற்றியவர்களிடம் 2 லட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது. போராட்டத்தில் இணைந்துள்ள ஒருவருக்கு பிற்பகல் தொலைபேசி அழைப்பு மூலம் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த விருந்தினர் விடுதிக்குச் சென்று விசாரித்தபோது அங்கு நேர்முகத் தேர்வு இடம்பெற்று அந்தக் குழுவினர் மதியம் கிளம்பிச் சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேர்முகத் தேர்வில் பெருமளவு பெரும்பான்மைஇனத்தவர்கள்கலந்துகொண் டனர் என்றும் குழுவில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இருவரும் மொழி பெயர்ப்பாளர் ஒருவரும் கலந்துகொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. மொழி பெயர்ப்பாளரின் தொலைபேசிக்கு அழைப்பு ஏற்படுத்தப்பட்ட போதும் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது - என்றனர். (ந-21)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### அவசர...

யாழ்ப்பாணம், மே 28

இலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உடனடி உதவிகளுக்கென அமெரிக்கா 15 மில்லியன் ரூபா நிதி வழங்குகிறது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அதுல் ஹெசாப், மற்றும் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி ஆகியோர் இலங்கையில் ஏற்பட்டுள்ள இடருக்கு உதவுவதாக தங்கள் கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அதுல் ஹெசாப், " யூ.எஸ் எயிட் மற்றும் அமெரிக்க வெளிநாட்டு இடர் நிதி என்பனவற்றின் மூலமாக இலங்கையில் இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க 15 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

"எங்கள் சகோதர சகோதரிகள் அவசர நிலையை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கு உதவ இந்திய உதவிக் குழு சென்றுள்ளது " என்று இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தனது கீச்சகத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானும் இலங்கையில் ஏற்பட்ட வெள்ள இடருக்கு உதவுவதாக அறிவித்துள்ளது. (வ-4)

### வெள்ளப்...

கொழும்பு, மே 28

நாட்டின் 14 மாவட்டங்களில் ஏற்பட்டிருந்த வெள்ளப்பெருக்கு நேற்றுக் குறைவடைந்தது. எனினும் முற்றாக வெள்ளம் வடிந்து செல்லவில்லை என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

இடரினால் 14 மாவட்டங்களில் சுமார் ஒரு லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 5 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 122 பேர் உயிரிழந்துள்ளனர். 97 பேர் காணாமற்போயுள்ளனர். 49 பேர் காயமடைந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்திருக்கிறது. இடம்பெயர்ந்தவர்கள் 290 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாவட்டங்களில் நேற்று மழை இல்லாததால் வெள்ளப் பெருக்கு அதிகரிக்க வாய்ப்பிருக்கவில்லை. எனினும் பொதுமக்கள் இன்னும் கடும் நெருக்கடிக்குள் உள்ளனர். மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. முப்படையினரும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுவாக பெரும்பாலான பிரதேசங்களில் வெள்ள நிலமை குறைவடைந்திருப்பதாக மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்தனர். மழை குறைவடைந்திருப்பதால் நதிகளுக்கு அருகாமையில் ஏற்பட்டுள்ள வெள்ளம் குறைவடைந்துள்ளது.

ஜின்கங்கை, களுகங்கை மற்றும் நில்வள கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இந்த பகுதிகளில் உள்ள மக்கள் வெளியேற வேண்டுமென்று இடர் முகாமைத்துவ மைய நிலையம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளதாக தகவல் திணைக்களம் ஊடகங்களுக்கு தகவல் அனுப்பியுள்ளது.

வெள்ளப் பெருக்குக் காரணமாக மாத்தறை பண்டாத்தார பகுதியில் இருந்து மக்களை உடனடியாக வெளியேறுமாறு இடர் முகாமைத்துவ மைய நிலையம் அவசர வேண்டுகோள் விடுத்தது.

நில்வள கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் வெள்ளப் பாதுகாப்புக்கு அமைக்கப்பட்டுள்ள அணைகள் உடையும் அபாயத்தில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (வ-4)

### சிறுப்பிட்டியில்...

லாக உருமாறியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்தச் சென்ற பொலிஸாருடன் அந்தப் பகுதியைச் சேர்ந்த சிலர் முரண்பட்டதை அடுத்து பொலிஸார் வான் நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. சிறப்பு அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

கிந்துப்பிட்டி மயானத்தைச் சுற்றி மதில் அமைக்க நீதிமன்றம் விடுத்த உத்தரவை மதிக்காமல் சிலர் தீவிரப் போக்கோடு நடந்துகொண்டமையே பிரச்சினைக்கும் பதற்றத்துக்கும் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. நீதிமன்ற உத்தரவுப்படி அமைக்கப்பட்டுவந்த சுற்றுமதில் சிலரால் இடித்து வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்தே நேற்றைய பதற்றம் ஆரம்பமானது. இரவு 9 மணி வரையில் அது தொடர்ந்தது.

கிந்துப்பிட்டி மாயனத்தில் சடலங்களைத் தகனம் செய்யக்கூடாது என்று அதன் அருகில் இருப்பவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், பல தலைமுறைகளாகத் தமது மயானமாக இருந்த அதனை விட்டுக்கொடுக்க முடியாது என்று மறு தரப்பினரும் பிடிவாதமாக நிற்கின்றனர். இரு சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு இடையிலான இந்தப் பிரச்சினை அடிப்படையில் சமூக வேறுபாட்டை அடியொட்டியே கிளம்புகிறது என்று சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தீர்க்கப்படாது நீண்ட இந்தப் பிரச்சினை சடலம் ஒன்றை தகனம் செய்வதற்கு அனுமதி மறுத்து சிலர் நடத்திய போராட்டத்தைத் தொடர்ந்து நீதிமன்றத்திற்குச் சென்றது. வழக்கை விசாரித்த நீதிமன்றம், மயானத்தைச் சுற்றி உடனடியாகச் சுற்று மதில் அமைக்க வேண்டும் என்றும் இன்னும் சில வருடங்களுக்குள் அந்த இடத்தில் மின்சார தகன நிலையம் அமைக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டது.

அந்த உத்தரவுக்கு அமைய கிந்துப்பிட்டி மயானத்தின் அபிவிருத்திச் சங்கம் சுற்று மதில் அமைக்கும் பணியை ஆரம்பித்தது. மதில் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டதும் இரு தடவைகளுக்கு மேல் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. மேலும், கிந்துப்பிட்டி மயானத்தின் அபிவிருத்திச் சங்கச் செயலாளருக்குச் சொந்தமானதும் அவரது உறவினருக்குச் சொந்தமானதுமான 2 வாழைத் தோட்டங்களில் நின்ற 400க்கும் மேற்பட்ட வாழைகள் நேற்றுமுன்தினமிரவு வெட்டிச் சரிக்கப்பட்டன. இந்தச் சம்பவம் சிறுப்பிட்டி கலட்டி என்ற பகுதியில் இடம்பெற்றது.

சுற்று மதில் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞன் மீது கடந்த 16ஆம் திகதி சிலரால் தாக்குதல் நடத்தப்பட்டது. இளைஞன் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அத்துடன், மயானத்துக்கு சுற்று மதில்அமைக்க மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் அனுமதியைக் கோரிய இருவர் மீது கடந்த 18ஆம் திகதி சிலர் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது.

இதற்கிடையில் மயானத்தைச் சுற்றி அமைக்கப்பட்டு வந்த மதிலையும் சிலர் இடித்துள்ளனர். இது பற்றியும் பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. அது தொடர்பான விசாரணையைப் பொலிஸார் நேற்று நடத்தினர். சந்தேகநபர்கள் 4 பேரிடம் அவர்கள் விசாரணை நடத்த முற்பட்டபோது குழப்பம் ஏற்பட்டது. பொலிஸாருக்கு எதிரான போக்கு அதிகரித்ததைத் தொடர்ந்து அவர்கள் வான் நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதன் பிறகே அங்கிருந்து பொலிஸாரால் வெளியேறிச் செல்ல முடிந்தது. பொலிஸார் வெளியேறிய பின்னர் மயானத்தின் சுற்று மதிலுக்காக அமைக்கப்பட்டிருந்த அத்திபாரத்தின் ஒரு பகுதியும் சிலரால் அடித்து நொறுக்கப்பட்டது.

நிலமையைக் கட்டுப்படுத்துவதற்காக நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களிலிருந்து மேலதிகமாக 40 பொலிஸார் அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பப்பட்டு பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். மயானத்துக்கு அண்மையான பகுதியில் குழப்பங்களைத் தடுக்கவென சிறப்பு அதிரடிப்படையினரும் களமிறக்கப்பட்டனர்.

இதனால் பதற்றம் மேலும் அதிகரித்தது. கிராமத்தைச் சேர்ந்த சிலர் அங்கிருந்த வெளியில் கூடியிருந்தனர். அவர்கள் வன்முறை எதிலும் ஈடுபடாத வகையில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்ததால் நேற்றிரவு அங்கு பதற்றம் நிலவியது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் சம்பவ இடத்துக்குச் சென்று அங்கு கூடியிருந்தோருடன் கலந்துரையாடினார். எனினும் அவரின் முயற்சியும் பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ - வ-4-11-26-37)

### 300 பிக்குகள்...

நிலையில் அந்தப் பயணம் இடம்பெறவில்லை. இந்த நிலையில் 6 பேருந்துகளில் 300 பிக்குகள் ஏ9 பாதையூடாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வருகை தந்தனர்.

ஆனையிறவைத் தாண்டி மீசாலை புத்தூர்ச் சந்தி வழியாக நிலாவரைக் கிணற்றடிக்கு வந்த அவர்கள் அங்கிருந்து யாழ்ப்பாணம் ஊடாக காங்கேசன்துறைக்கு சென்று அங்கிருந்து மாதகல் வழியாக குறிகட்டுவான் ஊடாக நயினாதீவு விகாரைக்குச் சென்று இரவு அங்கேயே தங்கி சிறப்புப் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர். (உ-4-101)

### விசாரணைக்குள்...

பட்டுள்ளார். அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தகவல்கள் வெளிவரும் நிலையில் இந்த விசாரணை நடந்துள்ளது.

பொதுபல சேனா அமைப்பு முஸ்லிம் மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்படுவது தொடர்பாக முஸ்லிம் அமைச்சர்களும், அமைப்புகளும் தாக்கல் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே விதானகே நேற்றுக் காலை விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளில் முஸ்லிம் மக்களின் வழிபாட்டுத் தலங்கள், வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டமை, பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன் அச்சுறுத்தியமை, இனங்களுக்கு இடையே மோதலை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்கள் வெளியிட்டமை உள்ளடங்கலாக சில குற்றச்சாட்டுக்கள் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் மீது சுமத்தப்பட்டுள்ளன. முஸ்லிம் அமைச்சர்களும், அமைப்புகளும் பொலிஸாரிடம் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஞானசார தேரரைக் கைது செய்வதற்குப் பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, ஞானசார தேரர் யாழ்ப்பாணம் வந்திறங்கியுள்ளார் என்று நேற்று பரபரப்புத் தகவல் கிளம்பியது. கண்டி தெற்கிலிருந்து வாகனம் ஒன்றில் அவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார் என்றும், அவரை சிலர் கண்டனர் என்றும் கூறப்பட்டது. எனினும் இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை. (ந-4)

### ஒற்றையாட்சியா...

கள் தொடர்ச்சியாக நடந்த அமர்விலும் அரசின் தன்மை குறித்து தெளிவான ஓர் இணக்கம் எட்டப்படவில்லை.

புதிய அரசமைப்பிலும் அரசின் தன்மை ஒற்றையாட்சி என்பதாகவே இருக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வலியுறுத்தியதைத் தொடர்ந்து இந்த விடயத்தில் இணக்கம் எதுவும் எட்டப்படவில்லை. முன்னதாக அரசின் தன்மை ஒற்றையாட்சி என்றே குறிப்பிடப்படவேண்டும் என்று ஜாதிக கெல உறுமயவும் வலியுறுத்தியிருந்தது.

ஏற்கனவே தயாரிக்கப்பட்டு தற்போது வழிகாட்டல் குழுவில் விவாதிக்கப்பட்டுவரும் இடைக்கால அறிக்கையில் அரசின் தன்மை ஒருமித்த நாடு என்று தமிழிலும் ஏக்கிய ராஜ்ஜிய என்று சிங்களத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்திலும் அது ஏக்கிய என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை நடைபெற்ற வழிகாட்டல் குழுக் கூட்டத்தில் இதனைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஆங்கிலத்தில் யுனிட்டரி (ஒற்றையாட்சி) என்ற பதத்திற்குப் பதிலாக ஏக்கிய என்ற சொல்லைப் பயன்படுத்துவது பொருத்தமற்றது என்று தெரிவித்தார். யுனிட்டறி என்று குறிப்பிடுவதே பொருத்தமானது என்று தெரிவித்தார். கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அதனை எதிர்த்தார். ஒற்றையாட்சி என்று அதனைக் குறிப்பிடுவது யதார்த்தமற்றது என்று நிராகரித்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் நிமல், வார்த்தைகளில் தொங்கிக் கொண்டிருக்காமல் புதிய அரசமைப்பை முன்கொண்டு செல்வது பற்றியே சிந்திக்கவேண்டும் என்றார். இந்த விவாதத்தின் ஒரு கட்டத்தில் இடைக்கால அறிக்கையில் ஏற்கனவே ஏக்கிய ராஜ்ஜிய ஒருமித்த நாடு என்று கொடுக்கப்பட்டிருக்கும் தெரிவுகளைப் போன்றே தற்போதைய அரசமைப்பில் கூறப்பட்டுள்ளதைப் போன்றே ஒற்றையாட்சி என்பதையும் கூட்டமைப்புக் கூறுவதைப் போன்று கூட்டாட்சி (சமஷ்டி) என்பதையும் குறிப்பிடலாம் என்று சுதந்திரக் கட்சி தெரிவித்தது.

ஆனால், அந்த யோசனையை கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் நிராகரித்துவிட்டன. அந்த இரு சொற்களுமே இருவேறு அந்தங்களைக் குறிப்பவை என்பதால் அதனை இடைக்கால அறிக்கையில் சேர்த்துக்கொள்வது இணக்கம் ஒன்று எட்டப்படாதமையைக் குறிக்கும் என்று காரணம் கூறின.

இந்த விவாதத்தை அடுத்து, இறுதி செய்யப்பட உள்ள இடைக்கால அறிக்கையில் அரசின் தன்மை குறித்த உள்ளடக்கத்தை மட்டுமே முன்வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அரசின் தன்மை ஒற்றையாட்சியா கூட்டாட்சியா என்பதைக் குறிப்பிடுவதில்லை என்று இணங்கப்பட்டது. எதுவாக இருந்தாலும் காணி, பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட அதிகூடிய அதிகாரப் பகிர்வை ஏற்படுத்துவது என்பதை அனைத்துத் தரப்புகளும் ஏற்றுக் கொண்டன. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வயல்களுக்கு இபாட் திட்டத்தில் வேலிகள்

கிளிநொச்சி, மே 28
கிளிநொச்சி மாவட்டத்தில் இபாட் திட்டத்தின் கீழ் வயல் நிலங்களுக்குள் கட்டாக்காலிக் கால்நடைகள் நுழைவதைத் தடுக்கும் வகையில் வேலிகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விவசாய அமைப்புக்கள் தெரிவித்தன.
"இந்தத் திட்டத்தின் கீழ் 4ஆம் வாய்க்கால் மற்றும் மருத நகரின் கிழக்குப் பகுதிக்கு பாதுகாப்பு வேலி அமைக்கப்படுகிறது. வேலி அமைப்பதற்கான முழுமையான நிதியும் இபாட் திட்டத்தின் ஊடாகவே வழங்கப்படுகிறது.
தற்போது வேலி அமைப்பதற்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உடனடியாக 5 கிலோ மீற்றர் வேலி அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று விவசாய அமைப்புக்கள் மேலும் தெரிவித்தன. (வ-101)

# கிளினிக்குக்குச் சென்ற கர்ப்பவதிகள் சிகிச்சை வழங்காது திருப்பப்பட்டனர்

## குற்றச்சாட்டை மறுக்கிறது கிளி. வைத்தியசாலை நிர்வாகம்

கிளிநொச்சி, மே 28
கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கர்ப்பவதிகளுக்கான கிளினிக்குக்கு வருகை தந்தோரில் சுமார் 90 கர்ப்பிணித் தாய்மார்கள் சிகிச்சையளிக்கப்படாது திருப்பி அனுப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.
இந்தக் குற்றச்சாட்டை மறுக்கும் கிளிநொச்சிப் பொது வைத்தியசாலை நிர்வாகத்தினர், அது தொடர்பில் எவரும் முறைப்பாடு செய்யவில்லை என்று தெரிவித்தனர்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள கர்ப்பவதிகளுக்கான சகல சிகிச்சைகளும் கிளிநொச்சி மாவட்டபொது வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் வழங்கப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில் நேற்று முன்தினம் மகப்பேற்று விடுதியில் போதிய மருத்துவர்கள் இன்மையால் 90 வரையான கர்ப்பவதிகள் சிகிச்சை வழங்கப்படாது திருப்பியனுப்பப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.
"கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, பளை, கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச சங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார்கட்டு, மூங்கிலாறு, துணுக்காய், மல்லாவி, பாண்டியன் குளம் ஆகிய பகுதிகளிலும் உள்ள கர்ப்பவதிகளுக்கான சிகிச்சைகள் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வழங்கப்பட்டு வருகின்றன. பின்தங்கிய பிரதேசங்களிலி ருந்து பல் வேறுபோக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் பிரதேச குடும்ப நல உத்தியோகத்தர்களின் ஆலோசனைக்கு அமைவாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு 140இற்கும் மேற்பட்ட கர்ப்பவதிகள் சிகிச் சைக்காகச் சென்றிருந்தனர்.
அவர்களில் 50 வரையான கர்ப்பவதிகளுக்கு மாத்திரமே சிகிச்சையளிக்கப்பட்டது. சுமார் 90 கர்ப்பவதிகளுக்கு சிகிச்சை வழங்கப்படாது திரும்பியனுப்பப்பட்டனர்.
கிளிநொச்சிப் பொது வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் மருத்துவர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது.
அங்கு கடமையாற்றிய மருத்துவர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். அவரின் இடத்துக்கு வேறு மருத்துவர் நியமிக்கப்படவில்லை. மருத்துவர்கள் பற்றாக்குறை காரணமாகவே சுமார் 90 கர்ப்பவதிகளும் திருப்பியனுப்பப்பட்டனர்" என்று தெரிவிக்கப்பட்டது.
"குறித்த தினத்தில் மருத்துவர்கள் விடுதிகளைப் பார்வையிட்டுத் திரும்புவதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் கர்ப்பவதிகளுக்கான மாதாந்த கிளினிக் வழமையைவிட தாமதமாகவே ஆரம்பமானது. எனினும் நாம் தாமதத்தை கருத்திற் கொண்டு வாகனமொன்றை ஏற்பாடு செய்து கர்ப்பிணித் தாய்மார்களை அவரவர் இடங்களில் கொண்டுபோய் இறக்கிவிட்டு வந்தோம்" என்று வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (வ-21-6)

# கரைச்சிப் பிரதேசத்தில் நேற்று குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 28
வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதி ரூபா 4.5 மில்லியன் செலவில் கரைச்சிப் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இந்தத் திட்டத்தால் கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள சுமார் 150 குடும்பங்கள் பயனடைவர் என்று தெரிவிக்கப்பட்டது.
ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (வ)



# சுற்றுலா மையம் வன்னேரியில் திறப்பு

கிளிநொச்சி, மே 28
வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதி ரூபா 6 மில்லியன் செலவில் கரைச்சி, வன்னேரியில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
வெளிநாட்டுப் பறவைகள் அதிகமாக வந்து செல்லும்வன்னேரிக்குளத்தை அண்டிய பகுதியிலேயே இந்தசுற்றுலா மையம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (வ-35)



# கூட்டம்

அராலி, மே 28
அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு, பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் எஸ். திவாகரன் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில், பாடசாலை அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் கல்வி நிலை தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளன. எனவே, அனைத்துப் பழைய மாணவர்களையும் கூட்டத்துக்குத் தவறாது சமுகமளிக்குமாறு கூட்ட ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ)

# ஆசிரியர்களிடம் பணமோசடி: சந்தேகநபர் தந்திரமாகக் கைது

கிளிநொச்சி, மே 28
கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் கடமையாற்றி வரும் ஆசிரியர்கள் மூவருக்கு, வடமாகாண கல்வி அமைச்சினூடாக, குறைந்த விலையில் மோட்டார் சைக்கிள்களை வழங்குவதாகத் தெரிவித்து, ஒவ்வொரு ஆசியர்களிடமிருந்தும் தலா 51 ஆயிரம் ரூபா மோசடிசெய்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்குக் குறித்த பணத்தொகை பெற்றுக்கொடுக்கப்பட்டது.
கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் அதிபரின் தொலைபேசிக்கு 0768689726 என்ற இலக்கத்தில் இருந்து தொடர்புகொண்டு, தான் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் பணியாற்றுவதாகவும், தூர இடங்களில் இருந்து வருகின்ற ஆசிரியர்களுக்கு வரி நீக்கம் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொடுப்பதாகவும், அதற்காக மூன்று ஆசிரியர்களை குறித்த பாடசாலையில் இருந்து தெரிவுசெய்து தருமாறும் தெரிவித்துள்ளார்.
அதையடுத்து, மூன்று ஆசிரியர்களும் தொலைபேசியில் தொடர்புகொண்டனர். 09301278857 6101 என்ற செலான் வங்கிக் கணக்கில் கத்துக்கு பணத்தை வைப்பிலிடுமாறு குறித்த நபர் தெரிவித்துள்ளார். அதனால் குறித்த வங்கியின் கணக்கிலக்கத்துக்கு ஆசிரியர்கள் பணத்தை வைப்பிலிட்டிருந்தனர். அதனையடுத்து, குறித்த நபர் தொடர்பில் ஓர் ஆசிரியருக்கு சந்தேகம் எழுந்தது. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதனையடுத்து வங்கியில் இருந்து பணத்தை மீளப்பெறுவதற்கு, இடைநிறுத்தி வைக்கப்பட்டது. குறித்த நபரைத் தந்திரமாக இரு ஆசிரியர்கள் நேற்று முன்தினம் வங்கிக்கு அழைத்து, பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அதையடுத்து, குறித்த நபரைக் கைது செய்த பொலிஸார், வங்கியில் இருந்த பணத்தைப் பெற்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கியிருந்தனர். அதேவேளை, குறித்த நபரைப் பொலிஸார் உரிய நடவடிக்கைகள் இன்றி விடுவித்தனர். இதுதொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது, "பணத்தைப் பெற்றுக்கொண்ட ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட நபருடன் சமாதானமாகப் போய்விட்டனர். அதனால் அந்த நபர்மீது எம்மால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கமுடியவில்லை" என்றார். (ஐ-21-ய)

# கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கு ஜூன் முதல் வாரத்தில் நியமனம்

யாழ்ப்பாணம், மே 28
"வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் தகைமைகளை உறுதி செய்தோருக்கு அடுத்த மாதம் முதல் வாரத்தில் நியமனம் வழங்கப்படும்"
இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் காணப்படும் கணித, விஞ்ஞானப் பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் 418 காணப்பட்டன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு கொழும்புக் கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பெப்ரவரி மாதம் ஒரு மாத கால அவகாசத்துக்குள் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரியிருந்தோம்.
மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களையும்விடக் குறைவான எண்ணிக்கையானோரே விண்ணப்பித்த காரணத்தால் அவர்களுக்கு போட்டிப் பரீட்சையின்றி நேரடியாகவே நேர்முகத் தேர்வை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. நேர்முகத் தேர்வு கடந்த 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் இடம்பெற்று முடிவடைந்தது. நேர்முகத் தேர்வுக்கு 352 பட்டதாரிகள் அழைக்கப்பட்டனர். அவர்களில் 321 பேர் மட்டுமே பங்கேற்றனர்.
நேர்முகப்பரீட்சையில் தமது தகைமைகளை உறுதிப்படுத்தியோருக்கு அடுத்த மாதம் முதல் வாரத்தில் நியமனம் வழங்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.
அத்துடன், நேர்முகத் தேர்வைத் தவறவிட்ட பட்டதாரிகளுக்கும் ஓர் மாற்று திகதியில் சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பிலும் ஆராயப்படுகின்றது - என்றார். (வ-101)

# தொழிற் பயிற்சிக்கு விண்ணப்பங்கோரல்

தீவகக் கல்வி வலயத்தால் யாழ்ப்பாணம் சிக்கிரியம் பள்ளம் அ.த.க பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையத் தில் கணினி மற்றும் மனை முகாமைத்துவம் ஆகிய பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.
பயிற்சி நெறிகளில் பாடசாலைக்கல்வியை நிறைவு செய்த தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்பவர்கள் நிலையத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு தீவக வலயக்கல்வி பணிப்பாளர் கேட்டுள்ளார். (வ-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ். நகரில் அதிகாலையில் பெண்ணிடம் சங்கிலி பறிப்பு

யாழ்ப்பாணம், மே 28
யாழ்ப்பாணம் நகர் மாட்டீன் வீதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பிலிருந்து பேருந்தில் வந்து வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணிடம் 2 பவுண் சங்கிலி கொள்ளையிடப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

"பணியின் நிமிர்த்தம் கொழும்பு சென்று தனியார் பேருந்தில் யாழ்ப்பாணம் வந்து இறங்கிய பெண், யாழ்ப்பாணம் முதன்மை வீதியிலிருந்து மாட்டீன் ஒழுங்கையில் 100 மீற்றர் தூரத்திலிருந்த தனது வீட்டுக்கு கால்நடையாகச் சென்றுள்ளார். வீட்டுக்கு அண்மையாகச் சென்ற நிலையில் அவரைத் துவிச்சக்கர வண்டியில் வந்த ஒருவர் திடீரெனக் கீழே தள்ளி வீழ்த்தியுள்ளார். பெண் நிலை குலைந்து கீழே வீழ்ந்த போது, அவர் அணிந்திருந்த 2 பவுண் தங்கச் சங்கிலியை துவிச்சக்கர வண்டியில் வந்தவர்கள் அறுத்துக் கொண்டு தப்பியோடிவிட்டார்" என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளை இடம்பெற்ற பகுதியில் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் ஒளிரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் உரியவர்களுக்கு அறிவித்தும் மாதக் கணக்கில் மின்விளக்குகள் சீரமைக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (வ -101)

# கிளிநொச்சியில் செவ்வாயன்று அனைத்து மதவழிபாடுகள்

### அனைவரையும் பங்கேற்குமாறு காணாமற்போனோரின் உறவுகள் அழைப்பு



யாழ்ப்பாணம், மே 28
"வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டத்தின் நூறாவது நாளான நாளை மறுதினம் கிளிநொச்சி கந்தசுாவமி ஆலய முன்றலில் அனைத்துமத வழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வழிபாடுகளில் அனைத்து மாவட்டங்களின் உறவுகளும் கலந்து கொள்ள வேண்டும்"

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமக்கான நீதியைக் கோரி தொடர்சியான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இதுவரை அரசிடம் இருந்து உரிய பதில் வழங்கப்படவில்லை. அவர்களின் தொடர் போராட்டம் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை 100 ஆவது நாளை எட்டவுள்ளது. அந்தத் தினத்தில் அனைத்து மத வழிபாடுகளை கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் மேற்கொள்ள அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

"இந்த வழிபாடுகளின் பன்னாட்டுச் சமூகத்துக்கு எமது பிரச்சனையை மீண்டுமொரு முறை எடுத்துக்கூறி எமக்கான தீர்வைப் பெற்றுத்தருமாறு அவர்களிடம் கோரவுள்ளோம். வழிபாடுகளில் பொதுமக்கள், அரசியல் தலைவர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள், மாணவர்கள் அனைவரும் பங்கேற்குமாறு அழைப்பு விடுகின்றோம் என்று கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கேட்டுள்ளனர். (வ-21-106)

## மனித உரிமைகளை இலங்கை 30 வருடங்களாகப் பேணவில்லை

### பேராசிரியர் பாலசுந்திரம்பிள்ளை குற்றச்சாட்டு

வவுனியா, மே 28
இலங்கையில் கடந்த 30 வருடங்களாக மனித உரிமைகள் உரியவாறு பேணப்படவில்லை என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை குற்றஞ்சாட்டினார்.

வடக்கு கிழக்கு மகாணங்களுக்கு இடையேயான அடிப்படை உரிமைகளின் சுதந்திரம் தொடர்பான வலுவூட்டல் விழிப்புணர்வு செயலமர்வு கிளிநொச்சியில் விடுதி ஒன்றில் நேற்று காலை 9மணியளவில் நடைபெற்றது. இந்தச் செயலமர்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மற்றும் செயல் சுதந்திரம் ஆகியன எமக்கு வேண்டும். ஊடக சுதந்திரம் இருக்க வேண்டும். சிறுவர் துர்நடத்தை மற்றும் அடக்குமுறைகள் உருவாகுவதை நாம் தடுக்கவேண்டும். அவை தொடர்பான செய்திகள் ஊடகத்தில் வெளிவர வேண்டும். பாடசாலையில் மாணவர்களுக்கு அடிக்கும் நடைமுறை உள்ளது. காரணமின்றி அடிப்பது நியாமின்றி தாக்குவது ஏற்றுக்கொள்ளமுடியாதவை.

ஊடகவியலாளர்கள் பொறுப்புடன் மக்கள் பிரச்சினைகளை மக்களுக்கு அநீதி வரும் போது எழுதுவார்கள். அவர்கள் எமது காவல் தெய்வங்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையை விரிபடுத்தும் பாடம் உள்ளது. இன்று வடக்கு மாகாணத்தில் ஊடகத்துறை வளர்ந்துள்ளது. ஆனால் ஊடக அடக்குமுறை இன்னமும் உள்ளது.

மறைந்த ஊடகவியலாளர் கதிர்காமத்தம்பி மக்கள் பிரச்சினையை வெளிப்படுத்திய ஒரு ஊடகவியலாளர். அவர் போன்ற பல ஊடகவியலாளர்கள் நம்மத்தியில் உள்ளனர். அவர்களை மதிப்போம். கருத்துச் சுதந்திரம் நிலவவேண்டுமாயின் ஊடகசுதந்திரமும் வளரவேண்டும். ஊடக சுதந்திரத்தை அரசு பேணவேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர், அரச உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ- 402)

## புலோலி விவசாயிகளுக்கு ரூபா 50,000 கடன் வசதி

வடமராட்சி, மே 28
புலோலி மேற்குப் பகுதி விவசாயிகள் அறுவடைசெய்த வெங்காயத்தைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வசதியாக அவர்கள் கொட்டகை அமைக்க 50 ஆயிரம் ரூபா கடன் வசதி வழங்கப்படுகிறது. புலோலி மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தால் இந்தக் கடன் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

புலோலி மேற்கு விவசாயிகள் பெரும் நிலப்பரப்பில் வெங்காயப் பயிர்ச் செய்கையை வருடந்தோறும் மேற்கொண்டுவருகின்றனர். இவர்களுக்கு பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை வருடந்தோறும் தேவையான கடன் வசதிகளை வழங்கி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## போத்தலில் கள் அடைக்கும் பணி கிளிநொச்சியில் பாதிப்பு

### வங்கிக் கடன் பெறுவதற்கு அனுமதி கிடைக்காததால் என்று குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மே 28
"கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் போத்தல் கள் அடைப்புப் பணிக்கான வரிப் பணத்தை செலுத்துவதற்காக வங்கியில் கடனைப் பெறுவதற்கு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அனுமதி வழங்கவில்லை. இதனால் கள் அடைக்கும் பணிகள் பாதிப்படையும் நிலை ஏற்படும்"

இவ்வாறு கிளிநொச்சி ப.தெ.வ.அ. கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் கி.துரைசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி ப.தெ.வ.அ. கூட்டுறவுச் சங்கத்தின் கள் அடைப்பு பணிக்கான வரிப் பணத்தை செலுத்துவதற்காக வங்கியில் கடனைப்பெறுவதற்கு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அனுமதி வழங்கவில்லை. இதனால் அதன் பணிகள் பாதிப்படையும் நிலையில் உள்ளது.

கிளிநொச்சி ப.தெ.வ. கூட்டுறவுச் சங்கத்தில் 650 அங்கத்தவர்கள் உள்ளனர். 120 பணியாளர்கள் பணி புரிகின்றனர். தற்போது வரும் கள் அனைத்தும் போத்தலில் அடைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு கள் தட்டுப்பாடு ஏற்படும் ஒக்டோபர் மாத காலப்பகுதியில் சந்தைப்படுத்தப்படும். இவ்வாறு போத்தலில் அடைக்கப்படும் கள்ளுக்கு போத்தல் ஒன்றுக்காக 31 ரூபா விதம் 15 நாட்களுக்கு ஒரு தடவை மதுவரித் திணைக்களத்துக்கு வரிப் பணம் செலுத்தப்பட்டே ஆக வேண்டும். அல்லது பணியைத் தொடர மதுவரித் திணைக்களம் அனுமதி வழங்காது.

இந்த நிலையில் இதுவரையில் சங்கத்தால் 30 ஆயிரம் போத்தல்களில் கள் அடைக்கப்பட்டுள்ளது. அதற்காக 90 லட்சம் ரூபா வரியாக செலுத்தப்பட்டுவிட்டது. இதே போன்று மேலும் 30 ஆயிரம் போத்தல்களில் கள் அடைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கான வரியை செலுத்துவதற்காக வங்கியில் கடனை பெறவேண்டும். அதற்கு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அனுமதி வழங்க வேண்டும். அந்த அனுமதியை நாம் எழுத்தில் கோரியுள்ளோம். எனினும் அனுமதி மறுக்கப்படுகின்றது.

எமது சங்கத்தின் ஊழியர்களுக்கான சேமிப்பு பணம் 8 கோடி ரூபா வங்கியில் நிரந்தர வைப்பில் உள்ளதனால் எமக்கு வங்கியில் கடனைப் பெறுவதில் எந்த தடையோ தாமதமோ இருக்க முடியாது.

போருக்குப் பின்னர் எமது சங்கம் இலாபகரமாகச் செயற்பட்டமையால் கடந்த ஆறு வருடத்தில் சம்பளத்துக்கும் மேலாக 120 ஊழியர்களுக்கும் 90 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளதோடு, அங்கத்தவர்களுக்கான இலாபப் பங்கீட்டுப் பணமாக 3 கோடி ரூபாவை வழங்கியுள்ளோம். பணி தடைப்படுமானால் அங்கத்தவரும் நட்டமடைவார்கள். சங்கமும் நட்டமடையும்என்றார்.

"இந்த விடயம் தொடர்பில் தற்போதே எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இன்னமும் முழுமையாக ஆராயப்படவில்லை. ஆராய்ந்து உரிய முறையில் பதிலளிக்கப்படும்" என்று கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்தார். (வ-101)

## கனரக வாகனங்களின் சாரதிகளுக்கு வடக்கு மாகாணத்தில் செயலமர்வு

யாழ்ப்பாணம்,மே 28
வடக்கு மாகாணத்தில் கனரக வாகனச் சாரதிகளுக்கான வீதி ஒழுங்குகள் குறித்த பயிற்சிச் செயலமர்வு பிரதேச ரீதியாக நடத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு மற்றும் வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடன் பிரதேச செலாளர்களின் ஒழுங்குபடுத்தலுடன் இந்தச் செயலமர்வு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்ததாவது:

பாரவூர்திகள், ரிப்பர் வகையான வாகனங்கள், நான்கு சில்லு உழவு இயந்திரம் மற்றும் லாண்ட் மாஸ்டர் என்பவற்றின் சாரதிரிகளுக்கான வீதி ஒழுங்கு விதிகள், விபத்துக்களை தடுத்தல் மற்றும் வாகனப் பராமரிப்பு தொடர்பான பயிற்சிகள் செயலமர்வில் வழங்கப்படும்.

கருத்தரங்கில் யாழ்ப்பாண மாவட்ட ஓய்வுநிலை மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் மற்றும் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் இயந்திரப் பொறியியலாளர் ம.ரவீந்திரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து இந்தப் பயிற்சியை வழங்குகின்றனர். போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் போக்குவரத்தின் போது கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் உள்ளடங்கிய நூல்களும் பயிற்சியாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதுடன், பயிற்சியின் முடிவில் பங்குபற்றியதற்கான சான்றிதழும் வழங்கப்படும்.

பயிற்சியில் பங்குபற்றுபவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் பிரதேச செயலாளர்களினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படும். இந்தப் பயனுள்ள கருத்தரங்கில் உரிய வாகன சாரதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறது என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 பேரிடம் ரூ.3,000 தண்டம் அறவீடு

தென்மராட்சி, மே 28
டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு காரணமாக இருந்த குடியிருப்பா ளர்கள் 4 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து சாவகச்சேரி நீதிவான் மன்றம் உத்தர விட்டது.

கொழும்பு சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினரின் அறிவுறுத்தலில் வடக்கு மாகாணத்தில் கடந்த 22 மற்றும் 23ஆம் திகதிகளில் சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவால் கடந்த 22ஆம் திகதி மீசாலைப் பிரிவிலும் 23ஆம் திகதி சாவகச்சேரி நகரம், கோயிற் குடியிருப்பு, கல்வயல் மற்றும் சங்கத்தானை ஆகிய பிரிவுகளிலும் சிறப்பு டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடுகள் இடம்பெற்றன.

மீசாலை பிரிவில் 954 குடியிருப்புக்களில் நடத்திய பரிசோதனைகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடியவகையில் பூச்சாடிகளில் மற்றும் கால்நடைகளின் நீர்ப் பாத்திரங்கள் போன்றவற்றில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட நான்கு குடியிருப்பாளர்களுக்கு எதிராக சாவகச்சேரிப் பொலிஸார் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. குடியிருப்பாளர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையையடுத்து அவர்கள் 4 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து மன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை மற்றும் கல்வயல் ஆகிய பிரிவுகளில் கடந்த 23 ஆம் திகதி 863 குடியிருப்புக்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் ஒரு குடியிருப்பாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மே மாதம் 24ஆம் திகதி வரை 45 பேர் டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் தென்பகுதிக்குப் பல்வேறு தேவைகளுக்காகச் சென்று திரும்பியவர்கள் என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

(வ-9)

வடக்கு மாகாணக் களஞ்சியங்களில்

# போதியளவு நெல் இருப்பிலுள்ள போது அரிசி இறக்குமதி ஏன்?

## நிதியமைச்சர் மங்களவிடம் சார்ள்ஸ் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், மே 28
"வடக்கு மாகாண நெற் களஞ்சியங்களில் போதியளவு நெல் இருப்பிலுள்ள நிலையில் வெளிநாடுகளிலிருந்து அரிசி வகைகள் இறக்குமதி செய்யப்படுவது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது"

இவ்வாறு நிதி அமைச்சர் மங்கள சமவீரவிடம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவித்ததாவது:


வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் கடந்த காலபோக நெல்லை நெற் சந்தைப்படுத்தல் சபையினர் கொள்வனவுசெய்யவில்லை. சில இடங்களில் மட்டுமே குறிப்பிட்ட அளவு நெல் கொள்வனவு இடம்பெற்றது. களஞ்சியங்கள் அனைத்திலும் நெல் இருப்பில் இருப்பதாலேயே இந்த வருடம் நெல் கொள்வனவு செய்யப் படவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது. அதுவே உண்மையும் கூட. இவ்வாறு நெற் களஞ்சியங்களில் போதியளவு நெல் இருப்பிலுள்ளபோது இந்த ஆண்டிலும் வெளிநாட்டில் இருந்து அரிசி வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இவ்வாறான நடவடிக்கைகள் எமக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே அமைகின்றது. ச.தொ.சவுக்குத் தற்போதும் அரிசி இறக்குமதி செய்யவேண்டிய தேவை என்ன என்பதை நிதியமைச்சர் பரிசீலிக்க வேண்டும். ஏனெனில் வடக்கு மாகாண களஞ்சியங்களிலுள்ள நெல்லை ஆலைகளுக்கு விட்டாலே 6 மாத காலத்துக்குப் போதுமான அரிசியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதியைச் செய்து உள்ளூர் விவசாயிகளைப் பாதிப்படையச் செய்கின்றனர்.

அரசின் இந்த நடவடிக்கையால் களஞ்சியங்களிலிருக்கும் நெல் பழுதடைவதோடு விவசாயிகள் தமது நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது. ஒரு அமைச்சரின் தேவைக்காக அரிசி இறக்குமதி இடம்பெறக்கூடாது. இதனை உடனடியாக நிதி அமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

(வ-101)

## பாலைப்பழ வியாபாரம் கிளிநொச்சியில் ஆரம்பம்



கிளிநொச்சி, மே 28
கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பாலைப்பழ வியாபாரம் சூடு பிடித்துள்ளது.

கிளிநொச்சி, பூநகரி, அக்கரையான், முக்கொம்பன், ஜெயபுரம், முழங்காவில் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது பாலைப் பழம் அதிகளவில் பழுத்துள்ளதாக அறிய முடிகின்றது. எனினும் தற்போது ஒரு சுண்டு பாலைப்பழம் 80 தொடக்கம் 120 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பாலைப் பழ வியாபாரிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

(வ-21)

## குடாநாட்டு விவசாய விருத்திக்கு ரூபா 24 .8 மில்லியன் நிதி ஒதுக்கீடு

அச்சுவேலி, மே 28
"யாழ்ப்பாண மாவட்ட விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு இந்த வருடம் 24 .8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இந்த நிதியில் 18 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன".

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

"விவசாய அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் சில முழுமையான மானிய உதவியுடனும் சில 50 வீத மானிய உதவியுடனும் மேற்கொள்ளப்படவுள்ளன. 50 வீத மானிய உதவியுடன் கூடிய வேலைத்திட்டங்களில் 50 வீதத்தை விவசாயப் பயனாளிகள் செலுத்த வேண்டும்.

விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் பயிர்ச் செய்கை மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களில், உவர்நில நெற்பயிச்செய்கை மேம்பாடு, விதை நெல் உற்பத்தி, பப்பாசி, தேசிசெய்கை, காளான் செய்கை அடர்ந்த மாமரச் செய்கை, விவசாய வளவியல் பயிர்ச்செய்கை போன்ற 18 வகையான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன" என்று யாழ்ப்பாண மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(வ-11)

## ஊறணி கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகம் கடந்த வாரம் ஆரம்பம்

அச்சுவேலி, மே 28
புத்தூர் கிழக்கு, ஊறணி கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் வலி. கிழக்கு பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கை கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டதாக வலி. கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் யு.ஜெலீபன் தெரிவித்தார்.

புத்தூர் கிழக்கு ஊறணிக் கிராமத்தில் நிலக்கீழ் நீர் உவர்ப்பாக இருந்தமையால் அங்கு வாழும் பொது மக்கள் குடிதண்ணீர் எடுப்பதற்கு சிறுப்பிட்டி துர்க்கை அம்மன் கோயில் கிணறு மற்றும் ஆவரங்கால் பகுதிக் கோயில் கிணறுகளை நோக்கி அலைந்து திரிந்தனர். அதற்காக அவர்கள் 5 கிலோ மீற்றர் தூரம் வரையில் சென்று வந்தனர்.

ஊறணி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாக அறிந்து கொண்ட வலி. கிழக்கு பிரதேச சபை செயலாளர் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து கிராமத்தில் அமைந்துள்ள தொட்டிகளுக்கு பௌசர் மூலம் குடிதண்ணீர் நிரப்பப்பட்டு பொது மக்கள் பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்யப் பட்டுள்ளது என்று தெரிவிக் கப்பட்டது.

(வ-11)

## பருத்தித்துறை பேருந்து நிலையத்துக்குள் வேறு வாகனங்களை நிறுத்தத் தடை

வடமராட்சி, மே 28
பருத்தித்துறை நகரில் பேருந்து நிலையம் அமைந்துள்ள இடத்தில் பேருந்துகள் தவிர்ந்த வேறு வாகனங்களை நிறுத்தக் கூடாது என்று பருத்தித்துறை நகர சபைச் செயலாளரும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் கூட்டாக அறிவித்தனர்.

"பருத்தித்துறை நகரப் பகுதியில் ஏற்பட்டுள்ள வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைத்துக் கொள்ளும் முகமாகவும் பேருந்துகளின் பயணங்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாமலும் இருக்க வசதியாகவே பேருந்து நிலையத்துக்குள் வேறு வாகனங்கள் நிறுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(வ-173)

# பாடசாலையில் கைவிரல் பதிவிடும் இயந்திரம் வடக்கில் தென்மராட்சி கல்வி வலயம் முதலிடம்

யாழ்ப்பாணம், மே 28
வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆசிரியர்களின் தின வரவுப் பதிவேட்டுக்கான கைவிரல் பதிவிடும் இயந்திரங்களை அதிக பாடசாலைகளில் பொருத்தியது தென்மராட்சி கல்வி வலயம் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் இரண்டாம் தவணையிலிருந்து ஆசிரியர்களின் வரவை உறுதிசெய்வதற்காக கைவிரல் அடையாளமிடும் முறைமையை அறிமுகம் செய்யுமாறு மாகாணக் கல்வி அமைச்சால் அறிவுறுத்தப்பட்டது.

இதனையடுத்து வலயக் கல்வி அலுவலகங்களினால் பாடசாலைகளில் கைவிரல் அடையாள இயந்திரங்களைப் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வசதி வாய்ப்புக்கள் உடைய பாடசாலைகளும் போக்குவரத்து தடையற்ற நகர்ப் புற பாடசாலைகளும் இதுவரையில் இந்த இயந்திரங்களை பொருத்தாத போதிலும் கிராம்ப் புறப் பாடசாலைகள் பல தாமாகவே இதனைப் பொருத்தியுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது.

வடக்கு மாகாணத்தில் 12 கல்வி வலயங்கள் உள்ளன. அவற்றில் 7 கல்வி வலயங்களின் தரவுகளின் அடிப்படையில் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் உள்ள மொத்தம் 59 பாடசாலைகளில் 51 பாடசாலைகளில் தின வரவு கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அதிக பாடசாலைகளில் கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பொருத்தப்பட்டது தென்மராட்சி கல்வி வலயத்தில் என்று வடக்கு கல்வி அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன. மேலும் மடுக் கல்வி வலயத்தில் உள்ள 53 பாடசாலைகளில் 16 பாடசாலைகளிலும், தீவகக் கல்வி வலயத்திலுள்ள 63 பாடசாலைகளில் 24 பாடசாலைகளிலும் கைவிரல் இடும் இயந்திரம் பொருத் தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள 104 பாடசாலைகளில் 51 பாடசாலைகளிலும், வவுனியா தெற்கு கல்வி வலயத்திலுள்ள 111 பாடசாலைகளில் 31 பாடசாலைகளிலும் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள 57 பாடசாலைகளில் 24 பாடசாலைகளிலும் வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள 81 பாடசாலைகளில் 21 பாடசாலைகளிலும் கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு கயட்டையில் நினைவுத்தூபி

## அபிவிருத்திப் பணிகளுக்குத் தற்காலிக அனுமதி

முல்லைத்தீவு. மே 28
முள்ளியவளை கயட்டைப் பகுதியில் சுனாமியில் உயிரிழந்தவர்கள் புதைக்கப்பட்ட இடத்தில் நினைவுத் தூபி அமைப்பதற்கான, அடுத்த கட்டப் பணிகளைத் தொடர்வதற்கு தற்காலிக அனுமதி கிடைத்துள்ளது என்று கரைத்துறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் உயிரிழந்தவர்கள் புதைக்கப்பட்ட இடங்களில் முள்ளியவளை கயட்டைப் பகுதியும் ஒன்று. சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் அவ்விடத்தில் உறவினர்களால் நினைவஞ்சலி செய்யப்பட்டு வருகின்றது. குறித்த காணி வனவளத் திணைகளத்தின்ஆளுகையில் இருப்பதால், அவ்விடத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக நினைவாலயம் கட்டப்படாது இருந்து வந்தது. இந்த நிலையில் அவ்விடத்தில் உயிரிழந்தவர்கள் நினைவாக நினைவாலயம் அமைக்கப்பட வேண்டும் என்றுஉறவினர்கள்கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த விடயம் தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர்களும் குரல் கொடுத்திருந்தனர். 'கயட்டைப் பகுதியில் சுனாமியில் உயிரிழந்தவர்கள் புதைக்கப்பட்ட இடத்தை விடுவித்துத் தரும்படி வேண்டுகோள் ஒன்று விடுத்திரு கின்றோம். தற்போது முழுமையான அனுமதிகள் எமக்குக் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும் அவ்விடத்தை அபிவிருத்தி செய்வதற்கான தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது'. என்று கரைத்துறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஐ -7)




# ஜப்பானில் ஜீப் திருடிய இலங்கையர் கைது

கொழும்பு, மே 28
ஜப்பான் டோக்கியோ நகரில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, ஜீப் ரக வாகனத்தைத் திருடிய இலங்கை இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஜப்பான் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
குறித்த இளைஞர் திருடச் சென்ற காட்சி, அந்த இடத்தில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது. அடையாளம் காணப்பட்ட சந்தேகநபர் 22 வயதுடைய இலங்கையர் என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ -10)

# ஹெரோயினுடன் பாகிஸ்தான் குடிமகன் கைது

கொழும்பு, மே 28
ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் பாகிஸ்தான் குடிமகன் ஒருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுங்க ஊடகப் பேச்சாளர் தர்மசேன ககதவ தெரிவித்தார்.
ஒருகிலோ 26 கிராம் ஹெரோயினுடன், 53 வயதான சந்தேக நபர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார். மாலே நகருக்குக் கொண்டு செல்வதற்காக ஹெரோயின் கொண்டு வரப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. பயணப்பொதியில் மிகச் சூட்சுமமாக வைத்து ஹெரோயின் கொண்டு வரப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ -10)

# கடுவல, பியகம சாலைகளுக்கு தடை

கொழும்பு, மே 28
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கடுவல மற்றும் பியகம நுழைவாயில்களில் இருந்து வாகனங்கள் வெளியேறுவது இடைநிறுத்தப் பட்டுள்ளது.
அதனால் கொட்டாவ அத்துறுகிரிய ஆகிய மாற்று நுழை வாயில்களைப் பயன்படுத்துமாறு தெற்கு நெடுஞ்சாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வையாளர் அறிவித்துள்ளார்.
களனி கங்கை பெருக்கெடுத்துள்ளது. அதனால் கடுவல மற்றும் பியகம சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ -10)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1Kg) மொத்மாகவும் (ரூபா. 100), சில்லறையாக வும் (ரூபா.110) பெற்றுக்கொள்ளலாம்.

**சிவா நறுமணப் பூங்கா**
**இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
(சத்திரச் சந்திக்கு அருகில்)

## பணிப்பெண் தேவை

நல்லூர் ஆலயத்திற்குச் சமீபமாக கோயில் வீதியில் வசிக்கும் வயது முதிர்ந்த பெண் ஒருவருடன் முழு நேரம் தங்கி துணையாக இருப்பதற்கு ஐம்பது வயதிற்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சமையல் வேலை செய்யத் தேவையில்லை. உணவு வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் கிராம அலுவலரின் நற்சான்று கடிதத்துடன் முழு அளவிலான புகைப்படத்தினையும் இணைத்து (05.06.2017) இற்கு முன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

**விளம்பர இல .5536,**
**C/o உதயன் 361,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.**

## காணி, வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நீளம் 120 அடி, அகலம் 120 அடிகளைக் கொண்டது. ஒன்பது அறைகளையும் நான்கு குளியல் அறைகளையும் கொண்ட பெரிய நாற்சதுர வீடு இக்காணிக்குள் உண்டு. இக்காணியின் முன்பக்கமாக கிழக்கு முகம் பார்க்கக் கூடிய திருமண மண்டபம், Shoping Complex 10 கடைகள் கட்டக்கூடிய இட வசதியும் உண்டு. அரைவாசியாகப் பிரித்தும் கொடுக்கப்படும்.

**077 361 1282**

# நாகபூஷணி

## திருமண சேவை

**மணமகள்மாருக்கு பதிவுக் கட்டணங்கள் யாவும் இலவசம்.**
**(21.05.2017 முதல் 31.05.2017 வரை)**

நீங்கள் விரும்பும், டாக்டர், எஞ்சினியர், எக்கௌண்டன், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமகன்கள் / மணமகள்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமாக உடன் மணமக்கள் ஜாதகங்கள் தரப்படும்.

**ஏழு நாள்களும் திறந்திருக்கும்**
383/14B, **கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(நல்லூர் கோவில் வடக்குப் பக்கம்)**
**T.P: 077 138 7596 / 021 222 9306**


(003960)(10)

## மீன் தீவன (Fish Meal) ஆலை குத்தகைக்கு

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் உள்ள மீன் தீவன ஆலை (கட்டடம் இயந்திரங் களுடன்) குத்தகைக்கு வழங்க உள்ளதால் செயற்படுத்த விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு :- கிருபாகரன்**
**077 465 9877,**
**077 463 1200**

**பூநகரி**
**க.தொ.ச.சங்கம்,**
**ஜெயபுரம்.**



**குரும்பசிட்டி அரசடி உறை**
## துர்க்கா காளி அம்மன் ஆலய
**புனருத்தாரண சம்ப்ரோச்ஷன**
**மகா கும்பாபிஷேகம்**

காளி அம்பாள் அடியார்களே !

எங்கள் குலதெய்வமாக என்றும் விளங்கி அருள்பாலிக்கும் அகிலலோக நாயகியான துர்க்கா காளி அம்மன் ஆலய சம்ப்ரோச்ஷன மகாகும்பாபிசேக வைபவம் நிகழும் ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 15ஆம் நாள் 29.05.2017 திங்கட்கிழமை சதுர்த்தித் திதியும் புநர்பூச நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் அன்று அதிகாலை 5.30 மணிக்கு மேல் 7.00 மணிக்குள் அமையும் இடப லக்கின வேளையில் நடைபெறும்.

மேலும் 28.05.2017 அன்று இரவு 9.00 மணிக்கு மேல் மகா கணபதி ஹோமம் முதலான நிகழ்வுகள் ஆரம்பமாகி 29.05.2017 திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு வைபவம் இடம்பெறும்.

**கும்பாபிஷேக பிரதிஷ்ட பிரதமகுரு**
**கிரியாக் கிரமஜோதி - சிவாகம கிரியா வித்தகர் - தேவி உபாசகர்**
**சிவஸ்ரீ.சிவ.குஞ்சிதபாதக் குருக்கள்**

**துர்க்கா காளி அம்பாளின் பூரண அருளைப் பெற்றுய்யுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**ஆலய பிரதம குருவும் நிர்வாகத்தினரும்**
**துர்க்கா காளி அம்பாள் தேவஸ்தானம்.**

## கேள்வி அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி
### 2017/2018 ஆம் வருடத்திற்கு தேவையான வழங்கல்கள்/சேவைகள்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுட்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 2017/2018 ஆம் ஆண்டிற்கான பின்வரும் வழங்கல்கள்/ சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

அ. உலர்உணவு வழங்கல்கள்
ஆ. சமைத்த உணவு வழங்கல்கள்
இ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
ஈ. குடிநீர் விநியோகம்
உ. வாகன சுத்திகரிப்பு செய்தல்

1) 2017 யூலை 01ஆம் திகதி முதல் 2018 யூன் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு இவ் வழங்கல் சேவைகளுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விலைக் கேள்விதாரர்கள் உணவு, சேவை விநியோகத்திற்குகேற்ற வகையிலான வியாபார பதிவுடையவராக இருத்தல் வேண்டும்.

2) விண்ணப்பிக்கத்தகுதியானோர் கீழ் குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள்/ சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்கள் 29/05/2017 தொடக்கம் 16/06/2017 திகதி வரையும் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் 15.30 மணி வரை கிளிநொச்சியில் இயங்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

3) ஒரு வைத்தியசாலைக்கு அல்லது தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் சேவைக்கான ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

4) அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகப்படமாட்டாது.

5) கேள்விப்பத்திரங்கள் 19/06/2017 திகதி மு.ப 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு தலைவர் கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அலுவலக கேள்விப் பெட்டியிலோ இட முடியும். தாமதமாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் **"வழங்கல்கள்/ சேவைகள் விபரம், விண்ணப்பிக்கும் வைத்தியசாலை"** போன்ற விபரங்கள் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6) கேள்விகள் யாவும் 19.06.2017 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு திறக்கப்படும்.

7) வைப்புத்தொகைகளும் ஆவணங்களும்

அ.உலர்உணவு.

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை(ரூபா) |
|---|---|---|
| ஆதார வைத்தியசாலை முழங்காவில் | 1,000.00 | 60,000.00 |
| பிரதேச வைத்தியசாலை அக்கராயன் | 1,000.00 | 60,000.00 |

ஆ. சமைத்த உணவு.

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை(ரூபா) |
|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | 1,000.00 | 30,000.00 |
| பிரதேச வைத்தியசாலை பூநகரி | 1,000.00 | 30,000.00 |
| பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம் | 1,000.00 | 30,000.00 |
| பிரதேச வைத்தியசாலை பளை | 1,000.00 | 30,000.00 |
| பிரதேச வைத்தியசாலை வேரவில் | 1,000.00 | 30,000.00 |
| பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | 1,000.00 | 30,000.00 |

இ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| ஆதார வைத்தியசாலை முழங்காவில் | 500.00 | 10,000.00 |
| பிரதேச வைத்தியசாலை அக்கராயன் | 500.00 | 10,000.00 |
| பிரதேச வைத்தியசாலை பூநகரி | 500.00 | 5,000.00 |
| பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம் | 500.00 | 5,000.00 |
| பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | 500.00 | 5,000.00 |
| பிரதேச வைத்தியசாலை பளை | 500.00 | 5,000.00 |
| பிரதேச வைத்தியசாலை வேரவில் | 500.00 | 5,000.00 |
| பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | 500.00 | 5,000.00 |

ஈ. குடிநீர் விநியோகம்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை வேரவில் | 500.00 | 5000.00 |

உ. வாகன சுத்திகரிப்பு

| இடம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை(ரூபா) |
|---|---|---|
| பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,கிளிநொச்சி | 1000.00 | 30,000.00 |

1. 31/01/2017ஆம் திகதிக்குப்பின் அந்தந்தப் பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் (பி.எஸ்.எம்.201, பொது 170 படிவம்) அத்துடன் வங்கி உத்தரவாதக்கடிதமும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
3. கேள்வி நேரம் முடிவடைந்ததுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும் போது சமூகமளிக்கலாம்.
4. கேள்வி தொடர்பான கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
5. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மல்லாகம் திருமஞ்சோலை
# அருள்மிகு பெரியநாயகி தாயார் சமேத
# பெரிய தம்பிரான் திருக்கோயில்
# வருடாந்த வைகாசிப்பொங்கல்
# சிறப்பிதழ் 28.05.2017

நேற்றைய தினம் 27.05.2017 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு மல்லாகம் கோயில் வீதி, சாடி மனையிலிருந்து பொங்கல் வழிபாட்டுக்குரிய வளந்து பானை மடைப் பண்டங்கள் பெரிய தம்பிரான் ஆலயத்துக்கு எடுத்துவரப்பட்டது.

இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக நிகழ்வுகள் ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணிக்கு பொங்கல் வழிபாடும் முற்பகல் 11.00 மணிக்கு தீமிதிப்பு வைபவமும் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும்.

**ஓம் T.V யில் வைகாசிப் பொங்கல் வழிபாடுகள் முற்பகல் 10.00 மணிமுதல் நேரடியாக ஒளிபரப்பாகவுள்ளன.**
**நேரலை ஒளிப்பரப்பு நேர்முக வர்ணனையை நிகழ்த்துபவர்**
**சர்வதேச ஒளிபரப்பாளர். வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்**



### பிரதம பூசகரின் பிரார்த்தனை

பழம் பெரும் ஆலயங்களுக்குள் எமது ஆலயமும் ஒன்றாகும். நீண்டகாலமாக எமது முன்னோர்களால் பேணப்பட்டுவரும் சடங்கு முறையிலான வழிபாடுகளை நிறைவேற்று வதற்கு பெரிய தம்பிரானின் திருவருள் பெருகிவருகின்றது.

சிவபூஜாதுரந்தரர்
வை.அப்புத்துரை (பெரியதம்பி)



### மதுரகவியின் வழிபாட்டம்சம்

யாழ்ப்பாணத்தில் பெரிய தம்பிரான் வழிபாடு நினைத்த மாத்திரத்திலோ செய்யப் படுவதில்லை ஒரு நியதிக்கு அமைவாக சடங்கு முறைகளால் ஒழுங்குபடுத்தப் பட்டனவாகவே அமைகின்றன. பெரிய தம்பிரான் வழிபாட்டாளர்களால் ஒரு பத்ததி முறையினை கடைப் பிடித்து ஆண்டுதோறும் பொங்கல் பெருவிழா நடைபெற்று வருவது சிறப்பம்சமாகும்.

வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

ஆலய பரிபாலன சபையினர்

**வைகாசிப் பொங்கல் பெருவிழா சிறப்புற வாழ்த்துவோர்**



**தீபன்**
**பந்தல் சேவை**
புகையிரத வீதி, மல்லாகம்.
T.P- 0779773513



**சீலன் பேணிச்சர்**
கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.
T.P- 0776617501



**இலட்சுமணன்**
**காட்வெயார்**
K.K.S வீதி, மல்லாகம்.
T.P- 0773922317



**KEERTHIKA Textiles**
Palaly Road, Urumpirai Junction
Urumpirai, Jaffna.
T.P- 0212231107, 0772288245

**யாழ் நகரில் மாபெரும் ஜவுளி சாம்ராஜ்யம்**



**ரொப் சில்க்**
17-A கே.கே.எஸ் வீதி,
நவீன சந்தை, மருதனார்மடம்.
தொ.பே- 0212243332



**மகா சில்க்ஸ்**
32,40A நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே- 0212227359



**பியூட்டி சில்க்ஸ்**
69, 69A நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
தொ.பே- 0212227359



**ஹவுஸ் ஒவ்**
**செலக்ஷன்**
221, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 0212227675

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## திருமதி யோகராணி சச்சிதானந்தராசா

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி சச்சிதானந்தராசா 25.05.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அருமை மருமகளும், சச்சிதானந்தராசா (ஓய்வுபெற்ற ஊழியர் இ.மி.ச) அவர்களின் அன்பு மனைவியும், தயானந்தி, பிரசாத் (யாழ்.ஒளி மின் நிலையம் - இ.மி.ச. சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெய்ராணி, காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் யோகநாதன், சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுகந்தன்மா, நிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், டர்வின், ஷர்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோயில் வீதி,**
**சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 28

மானிப்பாய் மரக்கறிச் சந்தை மற்றும், கடைத்தொகுதிக்குக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, நாளை திங் கட்கிழமை இடம்பெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் அந்த நிகழ்வு பிற் போடப்பட்டுள்ளது என்ற வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (ஜ-10)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03.04.1931




மறைவு
07.06.2016

## அமரர் கந்தையா மாணிக்கவாசகர்

ஆண்டொன்று ஆனதுவோ ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மனம் நொந்து மாய்கின்றோம் அழகிய உங்கள் சிரித்த முகம்
என்றும் எம் நெஞ்சங்களில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் உங்கள் நினைவில்**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# ஓராண்டு நினைவு



## அமரர் தம்பு பாலசிங்கம்

(முன்னாள் ஆசிரிய ஆலோசகர்)

**மண்மகள் மடியில்** 08.02.1943

**விண்ணிற அடியில்** 08.06.2016


திதி : வைகாசி வளர்பிறைச் சதுர்த்தி

" பற்றுடன் பற்றும் முற்றும் பற்றினால் பற்றி உற்றே
கற்றுடன் பெற்ற வெற்றி கற்பக தருவாய்க் காண
சற்றுடன் மாற்ற மற்ற சாதனைச் சால்புக் காக்கி
மற்றுடன் மாற்றிச் சென்றே மறைந்து மோ ராண்டதாச்சோ "

**கல்வயல்,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

பிறப்பு
20.03.1941



இறப்பு
26.05.2017

## திருமதி நாகபூசணி கோபாலபிள்ளை

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், இல.337, திருநகர் மல்லாவியை நிரந்தர வதிவிடமாகவும், மகாறம்பைக் குளம் வீதி, பூந்தோட்டம், வவு னியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாக பூசணி கோபாலபிள்ளை 26.05.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், தம்பு - பொன்னம்மா தம்பதி களின் பாசமிகு மருமகளும், கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும், சிவபாலன், பேரின்பநாயகி, செல்வநாயகி(லண்டன்), சிவனேசன் (பிரான்ஸ்), மகேஸ்வரி (பிரான்ஸ்), மகேஸ்வரன், செல்வராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிற்றம்பலம், கிருஸ் ணபிள்ளை மற்றும் நீலாம்பிகை, குணபூவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற லலிதாம் பிகை, நாகேந்திரராசா, ஞானேஸ்வரன் (லண்டன்), ராதை (பிரான்ஸ்), கமலநாதன் (பிரான்ஸ்), திருஞான சம்பந்தர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சரஸ்வதி, சொருபராணி, கனகலிங் கம், துரைராசா, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜீவரூபன், சாரங்கன், பவித்திரா, சுபாஸ்கரன், விபூசன், சாஜினி, திசாயினி, சதுசா (லண்டன்), றோசன் (பிரான்ஸ்), பார்கவி (பிரான்ஸ்), கிருத்திகா (பிரான்ஸ்), சந்தோஸ் (பிரான்ஸ்), சதுசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மகாறம்பைக் குள வீதி,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**076 680 8772**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரணஅறிவித்தல்



### விசுவலிங்கம் சத்தியலிங்கம் (சத்தி மாமா)

(பிரபல இருப்பு முதலாளி, கல்வியங்காடு)

சட்டநாதர் வீதி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் கெனடிலேன் இராமலிங்கம் றோட் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட "சத்திமாமா" என அன்பாக அழைக்கப்படும் விசுவலிங்கம் சத்தியலிங்கம் 26.05.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் மற்றும் அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் ராதாராணி, இராசலிங்கம் (லிங்கோ நுண்பட்டறை சட்டநாதர் வீதி), சோதிலிங்கம், பாலசுப்ரமணியம், விஜயராணி, பஞ்சலிங்கம், ஜெயராணி ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் இராஜேஸ்வரி, சுஜித்திரா காலஞ்சென்ற கெங்காதரன் (முருகா) மற்றும் ஜெயரதி, ரவிச்சந்திரன் (ரவி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஜெயசுதன், சங்கீதா, கபிலன், மிதிலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகிராஜ், சிந்துஜா, சுஜித்தா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஸ்ரேவாணி, றொகான், சஞ்சீவன், கீர்த்திகா, அபிலேஸ், சியான், சியானி, பிசான், தம்சன், உமேசா, அஸ்மி ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.10, கெனடி லேன்,**
**திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# வாகன சுத்திகரிப்பு நிலையம் தீக்கிரை

### குற்றச்சாட்டில் 7 பேர் கைது

முல்லைத்தீவு, மே28

முல்லைத்தீவு மூங்கிலாறுப்பகுதியில் வாகனச்சுத்திகரிப்புநிலையம் ஒன்று விசமிகளால் எரியூட்டப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

இதன்போது அங்கிருந்த மோட்டர்கள் உட்பட்ட பெறுமதி வாய்ந்த பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகின.


சம்பவதினத்தன்று உரிமையாளர் வேலைகளை முடித்து விட்டு வீட்டுக்குச் சென்ற பின்னரே குறித்தவாகனச்சுத்திகரிப்புநிலையம் எரியூட்டப்பட்டுள்ளது. இந்தச்சம்பவத்துக்குத் தனிப்பட்ட தகராறே காரணம் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாகப் புதுக்குடியிருப்புப்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, சந்தேகத்தின்பேரில் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தேகநபர்களில் இருவரை எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பொலிஸார் மேலதி விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-ய)

## மரண அறிவித்தல்

### திருமதி சோதிப்பிள்ளை மயில்வாகனம்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14.08.1940 | 26.05.2017 |

உடுவில்கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிப்பிள்ளை மயில்வாகனம் 26.05.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், தவயோகராசா (ஜேர்மனி), பகீரதி (ஆசிரியர் - யா/ இணுவில் மத்திய கல்லூரி), காலஞ்சென்ற தயாவதி, வசந்தி (பிரான்ஸ்), சுமதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தரஞ்சினி (ஜேர்மனி), கேசவன் (ஓமான்), ரவி (பிரான்ஸ்), பத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மிதிலா, திவ்யா, யசோதா, கோவர்த்தனன், கோபிகா, நிர்மலா, குருநிலவன், இன்மொழி, அமிர்தா, யனுசா மற்றும் கரிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரியமதவடி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
**13.10.1948**



**மறைவு**
**11.06.2013**

## திருமதி ஸ்ரீ ரஞ்ஜினி செல்வராஜா

**(இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்)**

**(நீதிமன்ற வீதி, மல்லாகம்)**

**திதி: திருதியை (28.05.2017)**

அம்மா எங்கள் உயிர் அம்மா
ஒருமுறை அழைத்தாலும் ஓடோடி வருவீர்கள் வேலையில் இருந்து
எத்தனை முறை அழைத்தும் ஏன் வரவில்லை இன்னும்
நிரந்தரமற்ற மனித வாழ்க்கையில் எது வேண்டுமானாலும்
நிகழலாம் என்பதை புரிந்து கொண்டோம் நாம் அன்று
ஆனால் நம் மேல் நீங்கள் கொண்ட அளவு கடந்த பாசத்தை
அளவிடவில்லை ஓர் அளவுகோல்
எங்களில் ஒருவராய் எப்போதும் எங்களுடனேயே
வாழ்ந்திருப்பீர் எங்கள் அன்புத் தாயே........

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள்.**

(861) (13.)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் மகோற்சவ
பெருவிழாவின் தேர்த்திருவிழா
உபயகாரரும், ஆலய உபதலைவரின்

**திரு சி.சிவலிங்கநாதனின்**

அன்பு மாமியாரும் ஆகிய புங்குடுதீவு கிழக்கு
12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

**திருமதி மகேஸ்வரி**
**சிவசுப்பிரமணியம்**

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின்
குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
புங்குடுதீவு தல்லையத்து சங்கரமூர்த்தி முருகமூர்த்தி வேல்
பெருமானை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !**

**புங்குடுதீவு - 12**

**ஆலய தர்மகர்த்தாவும், நிர்வாக சபையினரும்**
**புங்குடுதீவு தல்லையபற்று சங்கரமூர்த்தி**
**முருகமூர்த்தி தேவஸ்தானம்.**

# 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மண்ணில்**
**12 . 02 . 1925**



**விண்ணில்**
**10 . 06 . 1986**

## அமரர் தம்பு கதிரவேலு

ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் - யாழ் கம்பர் மலை த.க.பா

திதி: 28.05.2017

கண்ணிமைக்கும் கணப்பொழுதினை விட
கடுகதியாய் கரைந்ததுவோ
31 ஆண்டுகள் ஐயா !
கண்ணீர் சொரிய
இறைஞ்சுகிறோம் இறைவனை
உங்கள் ஆத்மசாந்திக்காய் !!!!



**நிருவத்தம்பை ஊரிக்காடு,**
**வல்வெட்டித்துறை.**

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீழ்காணும் நகரங்களிலுள்ள வர்த்தகக் கட்டிடங்களில் வங்கியொன்றிற்கான இடம் தேவை

- பொரளை
- கிருளப்பனை
- யூனியன் பிளேஸ்
- மெரைன் டிரைவ்
- வோட் பிளேஸ்
- மார்க்கஸ் பெர்னான்டோ மாவத்தை
- நாராஹேன்பிட்டி
- அம்பலாங்கொடை
- குளியாப்பிட்டிய
- யாழ்ப்பாணம்

அடிப்படை தேவைகள்: ஏறத்தாழ 2000 சதுர அடிகள் கொண்ட நிலப்பரப்பு, வீதியை முன் நோக்கிய வாகன தரிப்பிட வசதி, 60 amp மின் விநியோக வசதி, 20-25 அடி தூர வீதி முகப்பு.

குறித்த தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய அமைவிடங்கள் உள்ளோர், பெயர், தொடர்பிலக்கம், அமைவிட முகவரி, எதிர்பார்க்கும் வாடகை ஆகிய விபரங்களை கீழ்காணும் முகவரிக்கு 09.06.2017 இற்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.


த.பெ. இல. 400, இல. 90, காலி வீதி, கொழும்பு 03

VISION CARE
OPTICAL SERVICES

## விழிக்கு ஒளி கொடுப்போம்

25

விஷன் கெயார் நிறுவனத்தின் 25 வருடப்பூர்த்திக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நாம் 25,000 மூக்குக்கண்ணாடிகளை இலவசமாக இலங்கை முழுவதிலும் தேவையுள்ள மக்களுக்கு விநியோகிக்கவுள்ளோம்.




இரண்டாம் கட்டம் - வடக்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்கள்

## யாழ்ப்பாணம்

இல. 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**077 342 6515**

விண்ணப்ப முடிவுத்திகதி 3 ஜூன் 2017


கட்டாயமாக நீங்கள் கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்:

- ☑ கிராமசேவகர், உங்கள் பிரதேச மதகுரு அல்லது அதிபரின் பரிந்துரைக்கடிதம்
- ☑ உங்களது அடையாள அட்டைப்பிரதி

"முதலில் வருபவருக்கே முன்னுரிமை" என்பதன் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரி ஒருவரிடமிருந்து ஒரு விண்ணப்பம் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

25 YEARS

## சிறந்த வாழ்க்கைக்கு சிறந்த ஆரம்பம்




ரு.950/-

உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த ஆரம்பம். இயற்கையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிப்பதற்கும், நலமான வாழ்விற்கும் அவசியமான விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட புறோபயோட்டிக்ஸ் மற்றும் போஷாக்கு நிறைந்தது.



Nestlé
NAN GROW

2-5 வயதிற்கிடைப்பட்ட குழந்தைகளுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டது.

Nestlé
Good Food, Good Life

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொசன் தினத்துக்கு ஒதுக்கும் நிதியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குங்கள்

## அஸ்கிரிய மாநாயக்க தேரர் கோரிக்கை

புனித பொசன் பௌர்ணமி (ஜூன் 8) தினத்தை முன்னிட்டு, அன்னதான சாலைகளுக்கும், தோரண அலங்காரங்களுக்கும் என ஒதுக்கப்பட்டுள்ள நிதியை, இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளுக்குச் செலவிடுங்கள். இவ்வாறு அஸ்கிரிய மாநாயக்கர் வறகாகொட ஞானரத்ன தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். பொசன் தினத்தை முன்னிட்டு, அதற்காகப் பௌத்தர்கள் ஒதுக்கி வைத்துள்ள நிதியை பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு வழங்க வேண்டும். அதேநேரம், நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைமைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் அப்பாவி மக்களுக்குச் சகல பௌத்த மக்களும் உதவி உபகாரங்களை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (ஐ-ய)





# சிறந்த வியாபாரியாகுங்கள்!
# உங்கள் இலாபத்தை இரட்டிப்பாக்குங்கள்!
# டிமாக் உடன் இணைந்து கொள்ளுங்கள்!




## DEMAK SPARK 90cc

**மோட்டார் சைக்கிள்களுக்கு விற்பனை முகவர்கள் தேவைப்படுகிறார்கள்**

இலங்கையில் கூடுதலாக விற்பனை செய்யப்படும் மலேசியத் தயாரிப்புகளை உற்பத்தி செய்து மக்கள் மத்தியில் நிலைத்து விட்ட நிறுவனமான டிமாக் மோட்டார் சைக்கிள் நிறுவனம் பல்வேறு வகைகளில் மோட்டார் சைக்கிள்களை அறிமுகப்படுத்தினாலும் வியாபாரிகளுக்காகவே உருவாக்கப்பட்ட DEMAK SPARK 90cc மோட்டார் சைக்கிள்கள் இப்பொழுது சந்தையில் பரபரப்பாக விற்பனை செய்யப்படுகின்றது. இந்த **DEMAK SPARK 90 cc** மோட்டார் சைக்கிள்களுக்கு விற்பனை முகவர்கள் தேவை.

### DEMAK SPARK 90cc மோட்டார் சைக்கிளின் விஷேட அம்சங்கள்

- வியாபாரிகள் எந்தப் பொருட்களையும் இலகுவாக ஏற்றிச் செல்ல வசதியான முறையில் பின்புறம் பொருத்தப்பட்டுள்ள விஷேட உறுதியான லக்கேஜ் கெரியர்
- எரிபொருள் சிக்கனத்தை சேமிக்கும் வகையில் **90cc** என்ஜின் வலு
- சக்கரங்கள் நீண்டகாலம் பாவிக்க உகந்ததாக எலொய் வீல்கள் மற்றும் சூழலைப் பாதுகாக்கும் விதத்தில் அழகிய சைலன்சர் பொருத்தப்பட்டுள்ளது
- பிரகாசமான வெளிச்சத்தை ஒளிரக் கூடியவகையில் முன்புறமும் பின்புறமும் பொருத்தப்பட்டிருக்கும் ஒளி விளக்குகள்
- வியாபாரத்துக்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது
  (உதாரணமாக – மரக்கறி வியாபாரம், பழ வியாபாரம், மீன் வியாபாரம், மற்றும் பல)

இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்கள் வியாபாரத்தை ஆரம்பித்து வாழ்வை வளப்படுத்திக் கொள்ளுங்கள். பலரின் வியாபாரத்துக்கு தோள் கொடுக்கும் **SPARK 90CC** மோட்டார் சைக்கிள்களை உங்கள் பிரதேசத்தில் விற்பனை செய்து வாடிக்கையாளர்களின் பெருமதிப்பைப் பெற வேண்டுமாயின் அதனை விற்பனை செய்ய உகந்த இடத்தை தெரிவு செய்து எங்களுக்கு அறியத்தாருங்கள்.



### SPARK 90CC முகவர்கள் தேவைப்படும் இடங்கள்

திருநெல்வேலி/ மானிப்பாய்/ சங்கானை/ மல்லாகம்/ தெல்லிப்பளை/ உரும்பிராய் நீர்வேலி/ அச்சுவேலி/ ஆவரங்கால் பருத்தித்துறை வல்வெட்டித்துறை/ பளை/ பூநகரி/ முழங்காவில்/ மல்லாவி/ ஒட்டிசுட்டான்/ முல்லைத்தீவு/ புதுக்குடியிருப்பு/ விசுவமடு நெடுங்கேணி/ முருங்கன்/ பரந்தன்/ சிலாவத்துறை/ மன்னார்/ நான்தாட்டான்/ செட்டிக்குளம்



### விற்பனை மூலம் கிடைக்கும் பிரதிலாபங்கள்

- வியப்பூட்டும் வகையில் கிடைக்கும் தரகுப்பணம் (Attractive Commission)
- எமது உத்தியோகத்தர்களால் அமைக்கப் பெற்ற காட்சியறை வடிவமைப்பு
- எமது விற்பனை அதிகாரிகள் வழங்கும் ஆலோசனைகளும் விளக்கங்களும்

### இதற்கான அடிப்படைத் தகைமைகள்

- உங்கள் காட்சியறைகள் பிரதான பாதையை நோக்கியதாக அமைந்திருத்தல்
- வங்கி உத்தரவாதம் அல்லது காசுவைப்பு 500,000 ரூபாவாக இருத்தல் அவசியம்
- கீழே தரப்பட்டுள்ள விற்பனை முகவர்களின் விண்ணப்பங்களுக்கு விஷேட முன்னுரிமை வழங்கப்படும்

மோட்டார் வாகன விற்பனையாளர்கள், டயர் விற்பனையாளர்கள், பற்றரி விற்பனையாளர்கள், வாகன உதிரிப்பாக விற்பனையாளர்கள், மோட்டார் சைக்கிள் விற்பனையாளர்கள், முச்சக்கரவண்டி உதிரிப்பாக விற்பனையாளர்கள், விவசாய உபகரண மற்றும் உர விற்பனை முகவர்கள்.

### SPARK மற்றும் ஏனைய மோட்டார் சைக்கிள்களுக்கான பிரதான முகவர் நிலையங்கள் அமையும் இடங்கள்

யாழ்ப்பாணம்/ நெல்லியடி/ சுன்னாகம்/ கிளிநொச்சி/ புதுக்குடியிருப்பு/ சங்கானை/ சாவகச்சேரி/ பருத்தித்துறை/ பாலாவி/ மன்னார்

### விற்பனை மூலம் கிடைக்கும் பிரதிலாபங்கள்

- வியப்பூட்டும் வகையில் கிடைக்கும் தரகுப்பணம் (Attractive Commission)
- எமது உத்தியோகத்தர்களால் அமைக்கப் பெற்ற காட்சியறை வடிவமைப்பு
- எமது விற்பனை அதிகாரிகள் வழங்கும் ஆலோசனைகளும் விளக்கங்களும்

### இதற்கான அடிப்படைத் தகைமைகள்

- மேற்குறிப்பிட்ட தகைமைகளுடன் வங்கி உத்தரவாதம் அல்லது காசு வைப்பு ஆகக் குறைந்தது 1,000,000 ரூபாவாக இருத்தல் அவசியம்

**மேலதிக விபரங்களைப் பெற அழையுங்கள் 0769762695, 0777557846** உங்கள் விண்ணப்பங்களை 7 நாட்களுள் கீழே உள்ள முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
*அஞ்சல் உறையின் வலது பக்க மேல் மூலையில் SPARK முகவர் விண்ணப்பம்/ பிரதான முகவர் விண்ணப்பம் என்று குறிப்பிடவும்.

**உதவி முகாமையாளர் - விற்பனைப் பிரிவு**
டிமாக் சேல்ஸ் எண்ட் சேர்விஸ் லங்கா (தனியார்) நிறுவனம்
199 வொக்ஷோல் வீதி-கொழும்பு 02. தொலைபேசி- 0117711211
(மலேசியாவின் அங்கீகரிக்கப்பட்ட டிமாக் நிறுவனத்தின் ஒரே விற்பனை முகவர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச மாதவிடாய் சுகாதார தினம்

# மே 28

குடும்ப நலனைப் பற்றி
சிந்திப்பதுடன்
உங்களைப் பற்றியும்
சற்று சிந்தியுங்கள்
சுவர் இருந்தால்தான்
சித்திரம் வரையலாம்

தினசரி எவ்வளவு வேலைபளுவாக இருந்தாலும் உங்களைப் பற்றியும் சற்று சிந்திக்க மறக்க வேண்டாம். சிறப்பாக மாதவிடாய் காலங்களில் சத்தான உணவுகளை உட்கொள்ளுங்கள். அதேபோல் உங்கள் நலன் கருதி சுகாதார நப்கின்களை பயன்படுத்த மறக்க வேண்டாம்.

மாதாந்தம் சுகாதார நப்கின்களை வாங்குவதற்கு செலவழிக்கும் சிறியளவு தொகையானது உங்களுக்கு சௌகரியத்தையும் சுகாதாரத்தையும் வழங்கும் அதேசமயம் வழமையாக ஏற்படக்கூடிய தொற்று நோய்களிலிருந்தும் கர்ப்பப்பை நோய் போன்ற பல கொடிய நோய்களிலிருந்தும் உங்களுக்கு பாதுகாப்பை பெற்றுத்தரும்.

சர்வதேச மாதவிடாய் சுகாதார தினத்தில்

Eva
மலரும் மங்கை
தரும் நலம் காக்கும் தகவலிது

பங்காளர்கள்:
කාන්තා හා ළමා කටයුතු අමාත්‍යාංශය
பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு
MINISTRY OF WOMEN AND CHILD AFFAIRS
NATIONAL CHILD PROTECTION AUTHORITY SRI LANKA

LG
Life's Good

# அடுத்த தலைமுறைக்கு ஆரோக்கியமான உலகத்தை படைப்போம்!



உங்கள் இல்லத்திற்கு புதிதாக ஏதேனும் ஒரு மின்னணு பொருளை வாங்கும் போது சூழல் நட்புறவு தொடர்பாக அதிக கவனம் செலுத்துவீர்களா?

சூழல் நட்புறவுமிக்க பாதுகாப்பானதொரு உலகத்தை உங்களுக்கும், உங்கள் எதிர்கால சந்ததியினருக்கும் உருவாக்கிடும் நோக்கில் அர்ப்பணிப்போடு செயலாற்றும் அபான்ஸ் நிறுவனம், சூழல் நட்புறவுமிக்க R600a குளிர்விப்பு வாயுவை மாத்திரம் பயன்படுத்தி LG குளிர்சாதனப்பெட்டிகளை அறிமுகம் செய்து வருகிறது. LG குளிர்சாதனப்பெட்டிகள் குறைந்த மின்நுகர்வை கொண்டுள்ளதனால் மின்சாரம் அதிகளவில் சேமிக்கப்படுகிறது.

மின்சார சேமிப்பு – சூழல் நட்புறவுமிக்க நாளை – பாதுகாப்பான உலகம்
LG குளிரூட்டிகள் அபான்ஸ் இடமிருந்து

36% வரை
Door Cooling Green Ion Technology
R600a
SMART INVERTER COMPRESSOR 10 YEAR WARRANTY



GL-211ALL ரூ.56,900
- விரைவாக ஐஸ் படிதல்
- இன் - பில்ட் ஸ்டெபிலைஸர்
- மொய்ஸ்ட் பிளன்ஸ் கிறிஸ்பர்
- ஈரப்பதம் கட்டுப்பாடு

GL-221APE ரூ.59,900 EverCool
- விரைவாக ஐஸ் படிதல்
- இன் - பில்ட் ஸ்டெபிலைஸர்
- மொய்ஸ்ட் பிளன்ஸ் கிறிஸ்பர்
- ஈரப்பதம் கட்டுப்பாடு

GL-B282SLHGE ரூ.81,900
- கிரீன் அயன் டோ கூலிங்
- டுவிஸ்ட் ஐஸ் ட்ரே
- கன்வர்டபல் பொக்ஸ்

GL-M282RPHG ரூ.89,900 ரூ.89,900
- கிரீன் அயன் டோ கூலிங்
- டுவிஸ்ட் ஐஸ் ட்ரே
- கன்வர்டபல் பொக்ஸ்

GL-M292RLTL ரூ.97,900
- கிரீன் அயன் டோ கூலிங்
- டுவிஸ்ட் ஐஸ் ட்ரே
- கன்வர்டபல் பொக்ஸ்

GL-M302RLML ரூ.105,900
- கிரீன் அயன் டோ கூலிங்
- டுவிஸ்ட் ஐஸ் ட்ரே
- கன்வர்டபல் பொக்ஸ்

* நிபந்தனைகளுக்குட்பட்டது

HOTLINE 0714020799
நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தெற்குக்கு உதவுவோம்!

கட்டுக்கடங்காமல்பெய்யும்கடும்மழையால்பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது இலங்கையின் தென்பகுதி. வெள்ளக்காடாகியிருக்கும் பகுதிகளைப் பார்க்கையில் அதற்குள் சிக்கிக்கொண்டுள்ள மக்களின் நிலையை எண்ணி அச்சம் கொள்கிறது மனம். கனமழையால் பல்வேறு இடங்களிலும் ஏற்பட்டிருக்கக்கூடிய மண் சரிவுகள், உயிரிழப்பு எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஏற்கனவே உயிரிழந்திருக்கின்றனர். அது இன்னமும் உயரலாம் என்ற அச்சம் நிலவு கின்றது.

ஏற்பட்டிருக்கக்கூடிய பேரிடரைச் சமாளிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையிடமிருந்தும் அயல் நாடுகளிடம் இருந்தும் கொழும்பு அரசு உதவிகளைக் கேட்டிருக்கிறது. வழக்கம்போலவே முதல் ஆளாக இந்தியா உதவிக் கரம் நீட்டியிருக்கிறது. உதவிப் பொருள்களுடன் முதலாவது கப்பல் இன்று அல்லது நாளை வந்து சேர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டும் இடம்பெயர்ந்தும் உள்ள மக்களுக்குத் தேவையான உதவிப் பொருள்கள் என்ன என்பதை இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் பட்டியலிட்டுள்ளது. நீண்ட பெரும் பட்டியலாக உள்ள அந்தப் பொருள்களைப் பெற்று வழங்குவதற்கு வடக்கில் இருக்கக்கூடியபொதுஅமைப்புகளும்வர்த்தகர்சங்கங்களும் முன்வரவேண்டும்.

ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு உதவிக் கரம் நீட்டுவதே மனிதாபிமானம், மனிதக் குணம். மனிதப் பேரிடரால் இறுதிப் போரின் போது மிகப் பெரும் மனித அவலத்தைச் சுமந்தவர்களான தமிழர்களால் இயற்கைப் பேரிடரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வதும்,உணர்ந்துகொள்வதும்சிரமமானதல்ல. அந்தப் புரிதலோடும், உணர்வோடும் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி மக்களுக்குத் தமிழர்களாகிய நாமும் உதவிக் கரம் நீட்டவேண்டும். இது ஒன்றும் தமிழர்களுக்குப் புதிய விடயமும் அல்ல. கடந்த காலங்களிலும் இதுபோன்று தெற்கில் மக்கள் அந்தரித்து நின்றபோது வடக்கு கிழக்கில் இருந்து பெருமளவு உதவிகள் வழங்கப்பட்டன. உதவிப் பொருள்கள்பலசேகரித்துஅனுப்பப்பட்டன.யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் முன்னின்று அப்போது சிறப்பாகப்பணியாற்றியிருந்தார்கள். வேறுபலதரப்புகளும் தனித்தனியாக உதவிகளைத் திரட்டி அனுப்பியிருந்தன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி மற்றும் நீண்ட கால உதவிகள் தேவை. அந்தத் தேவைகளைக் கவனித்துவரும் அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு ஏற்ப உடனடி மற்றும் நீண்ட கால உதவிகளை வடக்கு கிழக்கில் இருந்து திரட்டி வழங்குவதற்கு அவசரமான நடவடிக்கையும் ஒருங்கிணைப்பும் தேவை. பல பிரிவுகளாகப் பிரிந்து நின்று இந்த விடயத்தை அணுகாமல் எல்லோரும் கட்சி, மத வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றிணைந்து செயற்பட்டு ஒரு வழியின் ஊடாக உதவிகளை வழங்குவது உசிதமானது. ஆனால், அதுவே கட்டாயமானதும் அல்ல.

இந்தத்தருணத்தில்மற்றொருமுக்கியமானவிடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.சமூகவலைத்தளங்களிலும் வட்ஸ்அப்,வைப்பர்போன்றவற்றிலும்சிலவெறுப்பூட்டும், பொருளற்றகதைகளும்சிலரால்பரப்பப்பட்டுவருகின்றன. இவைஉடனடியாகநிறுத்தப்படவேண்டும்.பாதிக்கப்பட்டவர்கள்அப்பாவிப் பொது மக்கள் என்ற ரீதியில் அவர்களின் பிரச்சினைகள், தேவைகள் மனிதாபிமானத்துடன் அணுகப்படவேண்டும். பெரும் மானிடத் துயரங்களைச் சந்தித்த தமிழ் மக்கள் அடுத்தவர்களின் துன்பத்தில், துயரத்தில் வெறுப்பை உமிழ்ந்து நடந்துகொள்வது ஏற்புடையதல்ல.

எல்லோரும் ஒருங்கிணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் உடனடியாக வழங்க வேண்டும். அதுவே இன்றைய தேவை.



# வடக்கின் கல்வி வீழ்ச்சியில் தாக்கம் செலுத்தும் நிர்வாக சீர்கேடுகள்

பத்மன்

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய கல்வி அதிகாரி இளைப்பாறி மூன்று மாதங்கள் கடந்து விட்டன. ஆனாலும் அந்த வெற்றிடத்துக்கு ஒரு வலயக் கல்விப் பணிப்பாளரை வடமாகாணக் கல்வி அமைச்சு இதுவரை நியமிக்கவில்லை.

ஒன்றும் ஒன்றும் மூன்று என்று சொன்னால் 'ஆம்' என்று தலையாட்டக் கூடிய, அதாவது ஆதிக்க அரசியல் தரப்புக்கு சாமரம் வீசக் கூடிய ஒருவரை வடமாகாணக் கல்வியமைச்சு தேடிக் கொண்டிருக்கிறதா? என ஒரு சிலர் விமர்சிக்கின்றனர். இதேபோன்ற கருத்தையே நிகழ்வொன்றில் வைத்துத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளரும் தெரிவித்திருந்ததாகக் கூறப்பட்டது.

ஒரு வலயக் கல்விப் பணிப்பாளராக, இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தரத்தில் உள்ள அதிகாரியே கடமையாற்ற வேண்டும். அது போலவே பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக ஒவ்வொரு வலயத்திலும் நான்கு பேர் கடமையாற்ற வேண்டும். கல்வி நிர்வாகம், கல்வி அபிவிருத்தி, கல்வி முகாமைத்துவம் ஆகிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பொது ஆளணி-தரம் இரண்டைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் விசேட ஆளணியினராக இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு வடமாகாணத்தில் கடமையாற்றிய மற்றும் கடமையாற்றுபவர்களை விரல் விட்டு எண்ணலாம். வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் மட்டுமே முதலாம் தரத்தைச் சேர்ந்த அதிகாரியாக உள்ளார். பெரும்பாலான (90 வீதமான) பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் தரம் மூன்றைச் சேர்ந்த அதிகாரிகளாகவே உள்ளனர்.

தற்போது வடக்கின் 11 கல்வி வலயங்களிலும் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் இரண்டு மற்றும் மூன்றில் உள்ள பொது மற்றும் விசேட ஆளணியினரே. தற்போது இரு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடத்துறை சார்ந்த விசேட ஆளணியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். ஆயினும், அண்மையில் இளைப்பாறிய கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களும் விசேட ஆளணியைச் சேர்ந்தவர்களே. ஆக, ஒரு கல்விப் பணிப்பாளரை நியமிப்பதில் எந்த ஒழுங்கு முறையும் இதுவரை பேணப்பட்டதில்லை. எனவே, உயரிய நோக்கங்கள் கருதி புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் தாமதமாகிறது என்று கூறுவதற்கில்லை. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியவர் தாம் இளைப்பாறப் போகிறோம் என்பதற்கான ஆவணங்களை ஆறு மாதங்களுக்கு முன்னரே கையளித்திருந்தார்.

சட்டப்படி அவர் இளைப்பாறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே புதிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கான விண்ணப்பம் கோரப்பட்டு, நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு, முன்னையவர் இளைப்பாறும் திகதியில் புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று மூத்த கல்வி நிர்வாக சேவை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். அவ்வாறு நடைபெறாதது மோசடிக்கான முன்னாயத்தம் என்றும் அவர் சாடினார்.

### வடக்கில் கல்விப் பணிப்பாளர் நியமனம் முறைப்படி இடம்பெறுவதில்லை

கிளிநொச்சியில் மட்டுமல்ல, வடக்கு கல்வியமைச்சர் பொறுப்பேற்ற பின்னர் சரியான முறையில் வலயக் கல்விப் பணிப்பாளர்நியமனம்இடம்பெறவில்லை. பல சந்தர்ப்பங்களிலும் நியமன நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. வவுனியா வடக்கு, துணுக்காய் வலயங்களுக்கு விண்ணப்பம் கோரும்போது விசேட ஆளணியினரும் விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டது. துணுக்காய் வலயத்துக்கு மீள விண்ணப்பம் கோரப்பட்டது. பின்னர் எல்லாவற்றையும் நிறுத்தி விட்டு விண்ணப்பம் கோரப்படாமலேயே தரம் 3இல் உள்ள பொது ஆளணி சிரேஷ்ட அதிகாரியொருவர் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அது போலவே முல்லைத்தீவு வலயத்துக்கு விண்ணப்பம் எதுவும் கோரப்படவில்லை. பதிலாக வடமாகாண கல்வித் திணைக்களத்தில் விசேட ஆளணியினராகக் கடமையாற்றியவரின் பெயர் குறிப்பிடப்பட்டு, கல்விக் குழுவிடம் அனுமதி கோரப்பட்டது. அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கிளிநொச்சி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த பொது ஆளணி தரம் 3ஐச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையென்பது பல பத்தாயிரம் பேர் தோற்றும் போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு வீதத்துக்கும் குறைவானோரைக் கொண்ட நிறைவேற்றுத் தர சேவையாகும். இங்கு பொது ஆளணி, விசேட ஆளணி என்ற இரு வகுதிகள் உள்ளன. இதனை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பு நெறிப்படுத்துகிறது. பழைய பிரமாணக் குறிப்பும், அண்மையில் கொண்டு வரப்பட்ட புதிய பிரமாணக் குறிப்பும் பதவி நியமனத்தில் பொது மற்றும் விசேட ஆளணி தொடர்பில் வெளிப்படுத்துவது ஒரே விடயத்தைத்தான்.

ஆயினும் புதிய பிரமாணக் குறிப்பு தெளிவான ஒரு வரையறையை முன்வைக்கிறது.

### கல்வி நிர்வாகசேவை பிரமாணக் குறிப்பு முறைப்படி கடைப்பிடிக்கப்படுவதில்லை

'இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II மற்றும் தரம் III விசேட ஆளணிக்குரிய உத்தியோகத்தர்களுக்கு பொது ஆளணிக்குரிய பதவிகளை வகிக்க முடியாது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II மற்றும் III பொது ஆளணிக்குரிய உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட ஆளணியினருக்குரிய பதவிகளை வகிக்க முடியாது' என்பதே அந்த வரையறையாகும். பிரமாணக் குறிப்பு இவ்வாறு வரையறுத்தாலும், இலங்கை முழுவதும் இந்த விதிமுறை பின்பற்றப்படுவதில்லை. வட மாகாணத்துக்கு அப்பால் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாகவும், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களாகவும் ஏன் வலயக் கல்விப் பணிப்பாளர்களாகவும் விசேட ஆளணியினர் நியமிக்கப்பட்டு பணி புரிகின்றனர். வட மாகாணத்தில் மட்டும் பொது, விசேட என்ற இந்த 'தீட்டுத்துடக்கு' ஒரு சிலர் விடயத்தில் பார்க்கப்படுகிறது என்று மனம் புழுங்கினார் ஒரு மூத்த விசேட ஆளணி கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர். அப்படியல்ல, தமக்கு வேண்டியவர்களை முன்னிலைப்படுத்தவும், ஏனையவர்களை ஒதுக்கவும் ஒரு உபாயமாகவே இது பார்க்கப்படுகிறது என்றார் இன்னொரு அதிகாரி.

அப்படியானால் வட மாகாணத்தில் விசேட ஆளணியைச் சேர்ந்த எவரும் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களாக இல்லையா? என்று கேள்விக்கு, ஏன் இல்லை? வவுனியா வடக்கு கல்வி நிர்வாகம் மற்றும் கல்வி முகாமைத்துவம், வவுனியா தெற்கு கல்வி அபிவிருத்தி, துணுக்காய் கல்வி அபிவிருத்தி, முல்லைத்தீவு திட்டமிடல், தென்மராட்சி திட்டமிடல் என பொது ஆளணியல்லாத விசேட ஆளணி மற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களே பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகப் பதிலளிக்கப்பட்டது. ஒருவருக்கு ஒரு நீதி. இன்னொருவருக்கு ஒரு நீதி. இதுவே வடக்கின் கல்வி நிர்வாகம் என்று சொன்னார் அவர்.

அது மட்டுமல்ல புதிய பிரமாணக் குறிப்பின் பிரகாரம் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக பொது ஆளணியினர் இருக்க முடியாது. ஆனால் பெரும்பாலான வலயங்களில் பொது ஆளணியினரே நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர்களாக கல்வி நிர்வாக சேவையைச்சேர்ந்தவர்களே நியமிக்கப்பட வேண்டுமாயினும், வடமாகாண கல்வி அமைச்சால் அதிபர் சேவையைச் சேர்ந்த, தமக்கு வேண்டியவர்களுக்கே கடமை நிறைவேற்று அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்படுகிறது.

'இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குரிய நிரல்படுத்தப்பட்ட பதவி வெற்றிடங்களில் கடமையைக் கவனித்தல் அடிப்படையில் பொருத்தமான அதிபர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், ஆசிரியர்களை நியமனம் செய்தல்' என்பதே வடமாகாண கல்வி அமைச்சின் சுற்ற றிக்கையின் தலைப்பாகும். கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள் இல்லாதவிடத்தே இத்தகைய நியமனங்களை வழங்க முடியும்.

ஆனால் கடந்த சில வருடங்களில் பல கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும், அவர்கள் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டு, அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு அந்தப் பதவி வழங்கப்பட்ட துரதிஷ்டங்களும் நேர்ந்துள்ளன. வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில்கூட பாடங்களுக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர்களாக ஆசிரிய சேவையைச் சேர்ந்தவர்கள் பணியாற்ற, கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் தூர வலயங்களில் இவர்களின் கீழ் கடமையாற்றும் துயரமும் வேறு மாகாணங்களில் நிகழாத புதுமையாகும்.

> ஒரு வலயக் கல்விப் பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தரத்தில் உள்ள அதிகாரியே கடமையாற்ற வேண்டும். அது போலவே பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக ஒவ்வொரு வலயத்திலும் நான்கு பேர் கடமையாற்ற வேண்டும்.

### வடக்கில் கல்விப் பணிப்பாளர் தரங்களுக்கு நிறையவே வெற்றிடங்கள்

வடக்கில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மட்டுமல்ல பல பிரதிக் கல்விப்பணிப்பாளர்களும் நியமிக்கப்படாமல் அந்த இடங்கள் வெற்றிடமாக உள்ளன. அந்த வகையில் மடு வலயத்தில் நான்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் இருந்தனர். இன்றோ வலயக் கல்விப் பணிப்பாளரும், கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளரும் தவிர ஏனைய மூன்று பதவிகளும் வெற்றிடமாக உள்ளன.

கிளிநொச்சியில் கல்வி அபிவிருத்தி, கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. தீவக வலயத்தில் கல்வி நிர்வாகம் மற்றும் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் இல்லை. வலிகாமத்தில் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் இல்லை. வடமராட்சியிலும் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடம் காணப்படுகிறது. அந்த இடத்தை துணுக்காயில் நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த மகப்பேற்று இணைப்பில் உள்ள அதிகாரி பதிலாக பார்க்கிறார். எனினும் சாராம்சத்தில் இரு இடங்களிலும் வெற்றிடங்களே உள்ளன.

அதேவேளை நிறைவேற்றுத் தர அதிகாரிகள் குறிப்பிட்ட வருட சேவைக்காலத்தின் பின் (சுமாராக 5 வருடங்கள்) இன்னொரு சேவை நிலையத்துக்கு மாற்றப்படுவது வழக்கமாகும்.

இது பொதுவான நிர்வாக நடைமுறை. அதிகாரத் துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கவும், குறித்த அதிகாரியினது சேவை வேறு பிரதேசங்கள் அல்லது நிலையங்களுக்குக் கிடைக்க வைக்கும் நோக்கிலும் இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

கல்வி நிர்வாகத்தைப் பொறுத்தவரை வட மாகாணத்தில் அதுவும் நடைபெறுவதில்லை. வடமாகாண கல்வித் திணைக்களத்திலும், வலயக் கல்வி அலுவலகங்களிலும் பல வருடங்களாக ஒரே இடத்தில் அதிகாரிகள் கடமையாற்றும் நிலையும் உள்ளது. வருடக் கணக்கைச் சீர் செய்வ தற்காக அவர்கள் அந்த நிலையத்தி லேயே கடமைகளை மாற்றிக் கொண்டு பணியாற்றும் நிலை உள்ளது.


வினைத்திறனற்ற செயற்பாட்டுக்கும், அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கும் இது வழி கோலும் என்று மூத்த கல்வி அதிகாரி ஒருவர் சுட்டிக் காட்டினார். ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த அதிகாரிகளை வேறு நிலையங்களுக்கு இடமாற்றம்செய்து அந்த நிலையங்களின் மேம்பாட்டுக்கு உதவலாமே?

ஒட்டு மொத்தத்தில் வடக்கின் கல்வி நிர்வாகத்தை வலுவூட்டுவதற்குப் பதிலாக அதைச் சீரழிக்கும் செயற்பாடுகளே அரங்கேறுகின்றன. இது சிறப்பாகச் செயற்படும் அதிகாரிகளை வெறுப்புக்கும், நம்பிக்கையிழப்புக்கும் ஆளாக்குவதுடன், அவர்களை ஏனோதானோவென்று செயற்பட வைக்கிறது. இதன் ஒட்டுமொத்த விளைவு வடக்கின் கல்விச் சரிவுக்கு வித்திடுகிறது.

வடக்கின் கல்வி நிலையை உயர்த்த வேண்டுமானால், கல்வி நிர்வாகம் வலுப்படுத்தப்பட்டு, சரியான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவச் செயலொழுங்குகளின் ஊடாக வழிகாட்டலும் மதிப்பீடும் இடம்பெறவேண்டும். அதனைச் செய்வதற்கென்றே இலங்கை கல்வி நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, வடக்கு மாகாணத்துக்கென மத்திய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களைச் சரிவரப் பயன்படுத்தி, வினைத்திறன் மிக்க பணியை வடக்கு கல்வி அமைச்சு முன்னெடுக்க வேண்டும் என சமூகம் எதிர்பார்க்கிறது.

தொடர்ந்தும் ஒன்பதாவது மாகாணமாக வடக்கு ஏன் இருக்கிறது? என்பதற்கான காரணங்கள் துலக்கமானவை. அதை மாற்றுவதும் மாற்றாமல் விடுவதும் வடக்கு கல்வியமைச்சின் கைகளிலேயே உள்ளது.





## ஆசிரியருக்கான கடிதம்

### நியாயம் தானா? சொல்லுமையா!

நிரந்தர தொழில் வாய்ப்பு எதுவும் இல்லாமல் அப்பப்போ கிடைக்கும் சிறு சிறு ஒப்பந்த வேலைகளைச் செய்து வரும் 28 வயதான எனது ஒரே மகன், எம்முடனேயே வாழ்ந்து வருகிறான்.. அவனுக்கென்றொரு நிரந்தரத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் ஒரு முச்சக்கர வண்டியை வாங்கிக் கொடுக்கப் பெற்றோராகிய நாம் தீர்மானித்தோம். சோலி சுறட்டு எதுவும் இல்லாதவன். ஏதோ ஒரு மாதிரி பிழைத்துக் கொள்வான் என்று நம்பினோம். இந்த நிலையில் தான் போக்குவரத்து அமைச்சரது அதிரடி அறிவிப்பு எமது எதிர்பார்ப்பில் மண் அள்ளிப் போட்டுள்ளது. இனிவரும் காலத்தில் 35 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு முச்சக்கர வண்டிச் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதில்லையென முடிவு செய்திருக்கிறார்களாம். அந்த வகையில் எமது மகனுக்கு முச்சக்கர வண்டிச் சாரதி அனுமதிப் பத்திரம் கிடைக்க வாய்ப்பற்றுப் போய்விடுகிறது. அதே நேரம் அமைச்சரது மேற்குறித்த முடிவுக்காக முன்வைக்கப்பட்டுள்ள காரணம் நகைப்புக்கு இடமானதொன்று. வயதில் குறைந்த இளைஞர்களுக்கு குறித்த சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதால் விபத்துக்கள் அதிகரிக்கின்றனவாம். ஆகவே பொது மக்களது பாதுகாப்பை உத்தேசித்து மேற்குறித்த விதத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாம். இது ஒரு விதத்தில் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் வகையிலான முடிவாகத் தோன்றவில்லையா?


பட்டதாரிகளே வேலை வாய்ப்பின்றித் திண்டாடிவரும் இன்றைய நிலையில், வெறும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் மட்டும் சித்திபெற்றுள்ள எனது மகனைப் போன்ற கல்வித் தராதரம் கொண்டுள்ள இளைஞர்களில் ஒரு தரப்பினர், முச்சக்கரவண்டிகளை வாடகைக்கு ஓட்டிப் பிழைக்க முயலும் முயற்சிக்கும் இப்படியொரு முட்டுக்கட்டை போடுவது அநியாயமாக உங்களுக்குப் படவில்லையா?

'கவனம் மிக்க சாரத்தியம்' என்பது வெறும் வயதின் அடிப்படையில் அமையும் ஒன்றல்ல; அது பயிற்சி மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் அமைவதொன்று என்ற யதார்த்த உண்மை கூட இந்தக் கொள்கை வகுப்பாளர்களுக்குப் புரியமாட்டாதா? மொத்தத்தில் கஷ்டப்பட்டாவது, நியாயமான விதத்தில், நாலுபணம் சம்பாதிக்க எண்ணும், முயலும், விரும்பும் எமது இளம் சமுதாயத்தினரது முயற்சிகளுக்கு இத்தகைய முட்டுக்கட்டைகள் போடப்பட்டால்,அவர்களால் வேறு என்னதான் செய்ய இயலும்?

இந்த விடயத்தில் உள்ள அடிப்படை நியாயத்தை பொறுப்பு வாய்ந்த அச்சு ஊடகத்தின் ஆசிரியர் என்ற விதத்தில் பத்திரிகையில் சுட்டிக்காட்டி நியாயம் கேட்க நீங்கள் முன் வருவீர்களா?

ப.உருத்திரலிங்கம்
நாவற்குழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்ணும் நீரிழிவும்

## நீரிழிவு நோயாளிகளின் கவனத்துக்கு

மருத்துவர் எஸ்.ரி.எஸ்.சந்திரகுமார்

உடலின் தசையி சுரப்பியால் (Pancreas B cell) சுரக்கப்படும் ஹோமோன் இன்சுலின் (Insulin) ஆகும். இது உடலின் உயிர்க் கலங்களுக்குத் தேவையான குருதியிலுள்ள குளுக்கோசினை உயிர்க் கலத்தினுள் உட்செலுத்த உதவுகின்றது. இன்சுலின் தொழிற்பாடு குறைவதனாலோ (Insulin resistant) அல்லது தசையி சுரப்பி குறைவாகச் சுரப்பதனாலோ அல்லது சுரக்கப்படும் இன்சுலின் தரம் குறைவதனாலோ குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு அதிகரித்து இறுதியில் சிறுநீருடன் வெளியேற்றப்படுகின்றது. இந்தச் செயல் வழிமுறையே நீரிழிவு எனப் பொருள் கூறப்படுகிறது. இதனை டயபிற்றீஸ் மெலிற்ரஸ் என மருத்துவத்துறையினர் வரையறுத்துக் கொள்கின்றனர்.

நீரிழிவு என்றால் (Diabetes) சலம் கழித்தல் (topass) அல்லது நீர்ம ஓட்டம் (Flow Through) அதாவது அத்த சிறுநீர் வெளியேற்றம் என்றும் மெலிற்றஸ் (Mellitus) என்றால் இனிப்பு (Sweet) என்னும் பொருள் கொள்கின்றார்.

இந்த நோயானது சகல வயதினருக்கும், சகல வகுப்பினருக்கும் ஏற்படுவதுடன் கண், மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகம் போன்ற சகல உடற்பாகங்களைப் பாதிப்பதனாலும் இந்த நோய் ஏற்பட்டால் ஏனைய சகல நோய்களும் (ரோகங்கள்) சேர்ந்தே வந்து விடுகின்றன. ஆக, இந்த நோயை “சலரோகம்” என்று சொல்வதிலும் பார்க்க “சகலரோகம் என்று சொல்வது தான் மிகப் பொருத்தமாக இருக்கும்.

**கண்பார்வையைப் பாதிக்கும் நீரிழிவு**

நீரிழிவு நோய் கண், மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகத்தைப் பாதிக்கும்.

இந்த நோய் உள்ளவர்களுக்கு மற்றவர்களை விடவும் பார்வைக் கோளாறு ஏற்படும் வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகம்.

கண்ணில் முக்கியமாக பின்புறமுள்ள விழித்திரையின் குருதி நாளங்களைப் பாதிக்கும்.

விழித்திரையில் ஏற்படும் மாறுதல்களை கண் மருத்துவர்களால் மட்டுமே பரிசோதித்து கண்டறிய முடியும். மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகங்களிலும் இதே மாறுதல்கள் ஏற்படுவதால் இந்தப் பரிசோதனை மூலம் இவற்றின் தன்மைகளையும் அறிய முடியும்.

நீரிழிவு நோயால் ஏற்படும் விழித்திரைப் பாதிப்பு நோயின் தீவிரம் என்பது எவ்வளவு காலம் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதைப் பொறுத்தே கணிப்பிடப்படுகிறது.

பல வருடங்கள் நோய் உள்ளவர்களில் 70 முதல் 80 சதவீதமானோருக்கு விழித்திரைப் பாதிப்பு ஏற்படும்.

நீரிழிவு நோயாளிகளுக்குப் பார்வையிழக்கும் வாய்ப்புகள் ஏனையவர்களை விடவும் 25 மடங்கு அதிகம் உள்ளது.

குறைந்த பார்வை அல்லது பார்வையிழப்பு ஏற்படும் வரை எந்தவித அறிகுறிகளும் தெரியாது.

விழித்திரைப் பாதிப்பை ஆரம்பநிலையிலேயே கண்டுபிடித்து லேசர் சிகிச்சையளித்தால் கணிசமான அளவில் பார்வையிழப்பைத் தடுக்கலாம்.

லேசர் சிகிச்சையால் இருக்கும் பார்வையைப் பாதுகாக்க முடியுமே தவிர இழந்த பார்வையைத் திரும்பப் பெற முடியாது.

விழித்திரைப் பாதிப்பால் ஏற்படும் பார்வையிழப்பைத் தடுக்க நீரிழிவு நோயாளிகள் அனைவரும் 12 மாதத்துக்கு ஒரு முறையேனும் தங்கள் கண்களை கண் மருத்துவரிடம் அவசியம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். விழித்திரை பாதிக்கப்பட்டிருந்தால் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கண் பார்வையை முற்றிலும் இழக்காமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# ஆரம்ப கர்ப்ப காலமும் சில அறிவுரைகளும்




மருத்துவர் கந்தையா குருபரன்

கர்ப்பம் தரித்தல் எல்லோராலும் மிகவும் எதிர்பார்க்கப்படுவதாகும். இது அந்தத் தாயின் முதலாவது பிள்ளையாக இருக்கலாம் அல்லது நான்காவது பிள்ளையாக இருக்கலாம். எத்தனையாவது கர்ப்பம் என்றாலும் சில சந்தேகங்கள் எல்லோரிடமும் இருக்கும். இது போலவே திருமணமான புதுமணத் தம்பதிகளும் விரும்பியோ விரும்பாமலோ எதிர்நோக்கும் ஒரு கேள்வி நிலைப் பிரச்சினையின் எழுகையாக இருப்பது இன்னும் வயிற்றில் ஒன்றும் உருவாகவில்லையா என்பதாகும்.

கர்ப்பம் தரித்த முதல் மூன்று மாத காலப் பகுதியும் மிகவும் முக்கியமானது. இந்த ஆரம்பகர்ப்ப காலத்தில் ஏற்படும் சில பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் அறிந்து கொள்ளுதல் நன்று.

பெரும்பாலானவர்களுக்கு அவர்களின் ஆரம்ப கர்ப்ப காலத்தில் பெரியளவில் எந்தப் பிரச்சினைகளும் வருவதில்லை. ஏனெனில் கர்ப்பம் தரித்தல் ஒரு சாதாரண நிகழ்வாகவே கருதப்படுகிறது. ஒரு சுகதேகியான பெண் இலகுவில் கர்ப்பம் தரிக்கும் சாத்தியங்கள் அதிகம். ஏதாவது நோய்கள் (வலிப்புநோய், இதய நோய்) இருப்பின் தாயாக முதல் உரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதல் சிறந்தது. (Pre pregnancy counseling)

தாயாகுதலை எதிர்பார்த்து இருக்கும் பெண்களுக்கு அவர்களுடைய மாதச் சுகவீனம் தள்ளிப்போகும் போது கர்ப்பம் தரித்துள்ளதா என்பதை மிக இலகுவில் ஒரு சிறுநீர்ப் பரிசோதனை (urine pregnacy test) மூலம் சோதித்து அறிந்து கொள்ளலாம்.

பின்னர் அவர் தனது பகுதியிலுள்ள கிளினிக்கில் பதிந்து மேலதிக கவனிப்புகளைப் பெறலாம். இவ்வாறு செய்யும் போது சில அடிப்படைப் பரிசோதனைகளையும் மேலதிக சோதனைகளையும் செய்ய வேண்டியதே தேவைப்பாடு ஏற்படும்.

**இந்த நாள்களில் ஏற்படும் மாற்றங்கள்?**

பெரும்பாலானவர்களுக்கு அவர்களின் ஆரம்ப கர்ப்ப காலத்தில்

1. உடலில் காய்ச்சல் வருவது போல் இருக்கும்
2. உடலில் உள்ள மூட்டுக்களில் நோ உண்டாகும்.
3. இலகுவில் களைப்படையும் தன்மை வெளிதோன்றும்.
4. உணவு சமிபாடடையும் தன்மை குறையலாம்.
5. சிலருக்கு புளிப்புச் சுவை வாயில் ஊறுவது போன்ற உணர்வு இருக்கும்.
6. அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்வுகளும் இருக்கலாம்.



இப்படியான உடல் அறிகுறிகள் பிள்ளை கருவில் வளரும் போது ஏற்படும். ஆயினும் சிலருக்கு மட்டும் வைத்திய உதவியை நாடவேண்டிய தேவைகள் வரலாம். அவ்வாறான விடயங்களை நாம் பார்ப்போம்.

1. ஆரம்ப நாள்களில் குருதிப் போக்கு (Bleeding) சிறிதளவில் இருக்கலாம்.
2. சிலருக்கு உதிரப்போக்குடன் அடி வயிற்று நோவும் (Bleeding With lower abdominal pain) இருக்கலாம்.
3. சிலருக்கு எந்த உணவிலும் நாட்டமின்மையும், கூடியளவில் சத்தியும், வயிற்றுப் பிரட்டும் இருக்கலாம். (Nausea& Vomiting)

இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் வைத்திய ஆலோசனையை நாடுதல் நல்லது.

**குருதிப் போக்கு** (Bleeding)

நோவுடன் கூடியதா அல்லது நோ இல்லாத குருதிப் போக்கா என்பதே நாம் முதலில் கவனிக்க வேண்டியது. அத்துடன் குருதிப் போக்கு எத்தனையாவது கிழமையில் நிகழ்ந்தது என்பதும் முக்கியமானது.

எவ்வகையான குருதிப் போக்கென்றாலும் உடனடியாக ஒரு வைத்தியரின் ஆலோசனையைப் பெறவும்.

ஸ்கேன் (scan) பரிசோதனை இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசியமாகிறது.

இதற்கான காரணங்களை முக்கியமாக இரண்டு வகைப்படுத்தலாம்.

1. ஆரம்பகாலக் கருச்சிதைவு (early miscarriage)
2. கர்ப்பப்பைக்கு வெளியே தங்கிய கர்ப்பம் (ectopic pregnancy)

நோ அதிகளவில் இருந்தால் எந்தவித தாமதமும் இன்றி மருத்துவ சேவையை நாட வேண்டும். இதன் மூலம் தேவையற்ற ஆபத்தான பின் விளைவுகளைத் தவிர்க்கலாம்.

இந்தக் குருதிப் போக்கு சில வேளைகளில் தானாக நின்று போய்விடும். சிலரில் நீண்டகாலம் (2தொடக்கம் 3 கிழமைகள் ) தொடரலாம். இன்னும் சிலருக்கு மேலதிக சிகிச்சைகள் தேவைப்படலாம்.

எதுவெனிலும் உரிய மருத்துவ சோதனைகளின் (குருதிச் சோதனை, ஸ்கேன் பரிசோதனை) பின்பே சரியான காரணத்தைக் கண்டு பிடிக்கலாம்.

**வயிற்றுப் பிரட்டும் சத்தியும்** (Nausea& Vomiting)

அடுத்ததாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு விடயம் சத்தியும் வயிற்று பிரட்டும் ஆகும். சாதாரணமாக ஆறு கிழமையளவில் ஆரம்பித்து பன்னி ரண்டு கிழமையள வில் முடிவுக்கு வரும் ஒரு அசௌகரியம் இதுவாகும். பொதுவாக மருந்துகள் எதுவுமின்றி தாணாகவே சத்தி நிற்கும். சிலரில் மட்டும் உணவோ அல்லது நீராகாரமோ எடுக்க முடியாமல் உடலில் நீரிழப்பையும், இயலாமையையும் ஏற்படுத்தும். இவர்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டியது அவசியம். வைத்தியசாலையில் நின்று தேவையான சிகிச்சையைப் பெற வேண்டும். சிலருக்குக் குருதிப் பரிசோதனைகள் செய்ய வேண்டிய தேவையும் ஏற்படலாம்.

சத்தியை நிறுத்தும் மருந்துகளையும் சில வேளைகளில் செலைன் திரவ உள்ளீட்டினையும் வைத்தியர்கள் பரிந்துரை செய்வார்கள். நோயின் தீவிரத்துக்கு ஏற்பவே மருத்துவம் செய்ய வேண்டிய தேவை ஏற்படும்.

இலகுவில் சமிபாடடையக் கூடிய உணவுகளையே இந்த நாள்களில் ஆகாரமாக எடுக்க வேண்டும்.

பெண் நோயியல் மகப்பேற்றியல் நிபுணர்,
மூத்த விரிவுரையாளர் மருத்துவ பீடம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரசத்தின் உச்சத்தில்...

பக். 26





பனிச்சமரம் பழுத்திருக்கு

பக். 25

விரைந்து தகவல் பெற 'விக்கிபீடியா'

பக். 23



சூரியகாந்தி
உதயன் 28.05.2017

# யாழ்ப்பாண வடகங்களில் பற்பல ரகங்கள்...!






அல்லிதேவி

"அறுவத்தெட்டு வருத்தங்களும் ஆளுக்கொரு வியாதிகளும் என்ன கலி காலமோ...?

என்ர பேத்திக்கு இது... என்னென்டும் தெரியாது. ஏன்... பேத்தீன்ர மனுசனுக்கும் இதைக் கண்டால் அருவருப்பு. வயசுபோன நேரத்தில ஏனிந்த வேண்டாத வேலையெண்டெல்லாம் என்னைத் திட்டியிருக்குதுகள். இப்ப என்னடா என்டால் வெளிநாட்டில இருந்து ஆரோ வருகினமாம் வடகம் கொஞ்சம் தட்டித் தருவியோணை குஞ்சியம்மா எண்டு கேட்கினம்..."

றியோ ஐஸ்கிறீம்...!, பருத்தித்துறை வடை...!, ஓடக்கரை அப்பம்...! இவை போன்ற யாழ்ப்பாணத்துப் 'பேமஸ்'களில் ஒன்றல்ல இந்த வடகம். ஆகையால் இதை இன்றைய தலைமுறையினருக்கு அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இன்றைய 'பேமஸ்'களுக்கு மத்தியில் மங்கி, மறைந்து கொண்டிருக்கும் அரும் பொன் இது. அருமருந்தும்கூட. ஆனால் பழமைபூண்ட பழ(ல)ம்பெரும் பண்டமான அந்த வடகம் வழக்கொழிந்து வருவதையே மேலே காரைநகரைச்சேர்ந்த ஒரு மூதாட்டி ஆதங்கங்களாக்கியிருக்கின்றார். அத்துடன் அதற்கிருக்கும் மவுசையும் அவரே உணர்த்தியும் விடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரும்பாலும் காரைநகரிலிருந்து யாழ்.நகரச் சந்தைகளுக்கு வந்து குவிந்திருக்கும் வடகங்கள். வெளிநாட்டு வாசிகளையும் உள்ளூர்ச் சுற்றுலாவாசிகளையும் வளங்கள் இருந்தும் எப்படித் தாயரிப்பது என்பது பற்றி அறிந்திருக்காமல் ஆர்வத்துடன் அதை நாடும் சிலரையும் ஈர்த்திருப்பதுபோலவே அது பற்றிய சிறிய தேடலில் இறங்க என்னையும் ஈர்த்திருந்தது. இதன்படி காரைநகர், வடமராட்சி (கொடிகாமம்), வலிகாமம் (இருபாலை) ஆகிய இடங்களில் தமது உணவுத்தேவை கருதி வடகம் செய்துகொண்டிருந்த ஒருசில பெண்மணிகளிடம் அதன் செய்முறை பற்றியும் அதன் தேவை(பயன்கள்), சுவை பற்றியும் ஆய்ந்து அறிந்துகொண்டேன்.





"எங்கட வீட்டுத்தேவைக்கு அந்தக்காலத்திலேயே ஐயா, ஆச்சிமார் வடகம் தட்டுறது வழமை. வேப்பம்பூக்கள் கிடைக்கிற காலத்தில இதைச் செய்வினம். அதைப் பத்திரப்படுத்திவைச்சு, அதுக்குப் பிறகும் நீண்ட காலத்துக்கு, அடுத்த வருசம், மறுபடியும் வேப்பம்பூ கிடைக்கிற வரைக்கும் நல்லாக் காய வைச்சுப் பதப்படுத்தி நாளுக்கு நாள் சாப்பாட்டோட பெரிச்சுச் சாப்பிட்டவ. நாங்க சின்ன ஆட்கள், இது கசக்கும் என்டுறதால சாப்பிடப் பஞ்சிப்படுவம். ஆச்சி எப்பிடியென்டாலும் தென்டிச்சுச் சாப்பிட வைச்சுப்போடுவா. வடகம் சாப்பிட்டால்தான் வயித்துக்க நிற்கிற பூச்சி வெளியால வருமடி புள்ள எண்டு சொல்லி ஐயாவும் அப்ப வில்லங்கப் படுத்துவார்" இவர் காரைநகரைச் சேர்ந்த குஞ்சியம்மா.

"நான் எங்கட வீட்டுத் தேவைக்கு மாத்திரம் வடகம் செய்யிறனான். நிறையச் செய்யிறதில்லை. என்னைத் தவிர இஞ்ச ஒருத்தரும் அதை விரும்பிச் சாப்பிடவும் மாட்டினம். பேத்திக்குக் குழந்தை கிடைக்கப்போகுது என்டுறதால நான் இப்ப பேத்தியோட வந்து இருக்கிறன். பேத்திக்கோ அவளின்ர மனுசன் பொடியனுக்கோ வடகத்தைக் கண்ணிலயும் காட்டக் கூடாது. சரியான கைச்சலா இருக்குது, எப்பிடிச் சாப்பிடுறது? என்பினம். நான் பிறந்து வளர்ந்ததில இருந்து எந்த வருத்தம் துன்பத்துக்கும் இந்தக் கண்டெறியாத மருந்துகள் ஒன்டையும் குடிச்சதே இல்ல. வருத்தம் வரைக்கு முதல் இப்பிடியான சாப்பாடுகளைச் சாப்பிடப் பழக வேணும் என்டு சொன்னால் கேட்க மாட்டுதுகள். வருத்தம் வந்தால் மருந்து குடிக்காமல் மாறுமோ சொல்லு மோனே...?" என்றார் என்னைப் பார்த்து.

"இது கைக்குது எண்டால் எங்கட ஆச்சி செய்யுற வடகத்தை எப்பிடி இவை வாயில வைப்பினம்...? அந்தக் காலத்தில உழுந்து சேர்க்கிறதில்லை. பூவோட வெங்காயம், பச்சமிளகாய் மாத்திரம் போட்டுத்தான் பொரிப்பினம். இப்பத்தேய வடகம் மாதிரிச் சுவையாவும் ஒழுங்காவும் இருக்காது. அதையும் நாங்கள் சாப்பிட்டனாங்கள்தானே... நேற்றைக்கு மருமகன் கேட்டார் ஆரே தனக்குத் தெரிஞ்சவ வெளிநாட்டில இருந்து வருகினமாம். வடகம் எடுக்கலாமோ...? என்டு விசாரிச்சவையாம். இஞ்ச இருக்கிற ஆட்களுக்குத் தெரியாத இதின்ர அருமை அவங்களுக்குத் தெரிஞ்சிருக்குப் பாருங்கோ..." என்றார் அவர்.



வடகம் என்பது வாழைப்பூ, வேப்பம்பூ போன்றவற்றில் செய்யப்படும் ஒன்றாயினும் வேப்பம்பூவில் செய்யப்படும் வடகம் வேம்பின் கயர்ப்புத் தன்மையிலேயே இருக்கும். பிற்காலங்களில் அதன் கயர்ப்புச் சுவையைத் தணிக்கும் உத்திகள் சில அந்த உணவு தயாரிப்பு முறைக்குள் புகுத்தப்பட்டன. அதில் ஒன்றே இந்த உழுந்து சேர்ப்புமுறையும். அத்துடன் வடகத்தைப் பொரித்து எடுக்கும்போது சிதைந்துவிடாமல் பூக்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டிவைத்துக்கொள்ளும் பசைத் தன்மையையும் அந்த உழுந்தே அளிக்கின்றது. இதனால் இன்றைய யாழ்ப்பாண வடகங்களில் இந்த உழுந்து என்பது வேப்பம் பூவுக்கு அடுத்தபடியாக வடகத்துடன் சேர்க்கப்படுகின்றது. ஆனாலும் உழுந்தைவிட வேறுபல பொருள்களும் வடகத்தில் இடம்பிடித்திருக்கின்றன. சீரகம், கருவேப்பம் இலை, அரைக்கப்பட்ட செத்தல் மிளகாய், எள்ளு, உப்பு, நெய் போன்றனவே அவை. யாழ்ப்பாணத்தில் இவை இடத்துக்கிடம் மாறுபடவும் செய்கின்றன.

"வேப்பம் மரத்துக்குக் கீழ படங்குகளைக் கட்டி, வீட்டுக் கூரைகளிலயும் விழுந்து கிடக்கிற வேப்பம் பூக்களையும் எடுத்து மழை, தண்ணி படாமல் மூன்று, நாலு நாள்களுக்குக் காய வைச்சு, பிறகு காக்கிலோ உழுந்தம் பருப்பை வடைக்கு அரைக்கிற மாதிரி அரைச்சு, அரைக்கிலோ அளவில வேப்பம் பூவை எடுத்து இரண்டு தடவைகள் தண்ணியில கழுவி, உழுந்தோட போட்டுப் பிசைஞ்சு அளவான உப்பும் போடுவம். தண்ணியில கழுவும்போது நல்ல பூக்கள் மேலாக மிதக்கும் கீழ தண்டுதடிகள், மண் கிடக்கும். கவனமாகக் கலக்கிவிடாமல் மேல மிதக்கிற பூக்களை மாத்திரம் எடுக்கவேணும். பிறகு வாசத்துக்கு ஏற்ற அளவில சீரகம், கருவேப்பிலை, சிறிதளவு எள்ளும் கலந்து பிசைவம். 25கிராம் அளவான செத்தல் மிளகாயைக் கரடுமுரடாக அரைச்செடுத்து அதோட கலந்து விடுவம், எல்லாத்தையும் சேர்த்துக் குழைச்சாப் பிறகு இப்பிடிச்(தான் செய்து காய வைத்திருந்த வடகங்களைக் காட்டுகின்றார்) சின்னஞ் சின்னனாக உள்ளங்கையில வைச்சுத் தட்டி நாலு, ஐஞ்சு நாள்வரைக்கும் வெயிலில காய விடுவம். இந்த அளவில செய்தால் கிட்டத்தட்ட 100 வடகங்கள் வரைக்கும் செய்யலாம்" இவர் இருபாலையைச் சேர்ந்த மங்களம்.

"என்ர நாலைஞ்சு பழயை சீலைகளைத் தோய்ச்சுக்காய விட்டு, ஒன்டாய்ச் சேர்த்துத் தைச்சு வைச்சிருக்கிறன். வேப்பம்பூப் பருவம் வந்ததும். மரத்துக்குக் கீழ, கொஞ்சம் உயரமாகக் கட்டிவிடுவன். கல், மண் இல்லாமல், நிலத்தில கொட்டுண்ட விடாமல், நல்ல பூக்களைச் சேர்க்கலாம். மூன்டு சுண்டு பூவுக்கு 100,150 கிராம் உழுந்து சேர்ப்பன். கருவேப்பம் இலைகளை நல்லாய் அரைச்சும், கொஞ்சச் சீரகமும் மிளகாய்த்தூளும் சேர்த்து, உள்ளங்கையளவில தட்டிக் காய வைப்பன். நான் உப்புச் சேர்க்கிறதில்லை"


கொடிகாமத்தைச் சேர்ந்த லலிதாதேவி உப்புச் சேர்க்காமல் தான் தனது வீட்டுத்தேவைக்கான வடகங்களைச் செய்து கொள்கின்றார். உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்றுதானே சொல்வார்கள். ஆனால் ஏன் இவருடைய வடகங்கள் அப்படியில்லை!

"உப்புச் சேர்த்தால் வடகம் காயப் பஞ்சிப்படும். நல்லாய்க் காய்ஞ்சால்தான் பழுதாகாமல் அடுத்த வருசம் வரைக்கும் கிடக்கும். அதால நான் உப்புச் சேர்க்கிறது இல்லை. வடகத்தைப் பொரிக்கேக்க சாதுவான உப்புத் தண்ணியில நனைத்துப் பொரிப்பன்" இப்போது அவருடைய வடகத்திலும் உப்புச் சேர்ந்துதான் விட்டதே! ஆனால் லலிதாதேவி தனது வடகங்களுக்கு எள்ளுச் சேர்ப்பதில்லை. கவனித்தீர்களா?

"உழுந்தைக் கூடப் போட்டாலே வடை மாதிரி வந்திரும் புள்ள. பூவின்ர கைப்புத் தெரியாமலிருக்கத்தானே இதுகள் எல்லாம் சேர்க்கிறது. சுவையக் கூட்டக் கூட்ட வடகத்தின்ர தன்மை இல்லாமல் போயிரும் புள்ள" என்றும் அதற்கும் காரணம் கூறிக்கொள்கின்றார் அவர்.

இது வடகம் உற்பத்தியாகும் பருவம். இளவேனிற்காலம். வேப்பம் பூக்களை முக்கிய மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற வடகம் வேம்பு பூக்கும் சித்திரையில் தொடங்கி ஒன்றிரண்டு மாதங்கள் வரை நீடிக்கின்றது. வேம்ப மரமானது பலதரப்பட்ட மருத்துவ உணவுகளைத் தன்னிலிருந்து உதிர்த்து விடுகின்றது. அதற்கு ஓர் உதாரணமாகவே அதிலிருந்து உருவெடுக்கும் இந்த வடகத்தையும் குறிப்பிடலாம். வடகம்போன்ற மருத்துவ உணவைத் தவிரவும் நமது மூதாதையர்கள் வேம்பின் பல வளங்களையும் தாம் நுகர்ந்திருந்தனர். வேப்பிலை, வேப்பம் பட்டைக் குளியல், வேப்பம் பாணி குடித்தல், வேப்பம் குச்சி கொண்டு பல் துலக்குதல், வேப்பம் துளிர்களைக் கொய்து உண்ணுதல், இவையனைத்திலும் தயாரித்த மூலிகைகளை மருந்தாக்குதல் என இயற்கையோடு ஒன்றித்து அவர்கள் தமது உடலுக்கு வலுச் சேர்த்திருந்தனர். அதற்கும் முந்தையோர் வேப்பம் பூவைத் தலையில் சூடியிருக்கின்றனர். மாலை செய்து அணிந்து மகிழ்ந்திருக்கின்றார்கள்.

'கருங்கால் வேம்பின் ஒண்பூ யானர்
என் னை இன்றியும் கழிவது கொல்லோ...' இது குறுந்தொகைப் பாடல். இளவெனிற்காலத்தையும் தாண்டியதாகத் தலைவனின் வருகை தாமதப்படத் அது குறித்துத் தலைவி ஆதங்கப்பட்டுக் கொள்கிறாள். தலையில் சூட்டிவிடுவதற்கு தலைவன் இல்லாத காரணத்தால் வேப்பம்பூக்கள் தரையில் வீழ்ந்துபோகின்றன என்கிறாள். ஏன் பாண்டிய மன்னர்கள் அணியும் மாலைகளை அலங்கரித்தது எது? வேப்பம் பூக்களில் மாலை செய்து அணியும் வழமை அவர்களிடம் உள்ளதாகத்தானே நெடுநல் வாடையும் குறிக்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றமும் தண்டனையும்



குணசேகரன் சக்தீனா

மன்றுக்குள் ஒரு இருக்கைகூட வெறுமையாக இல்லை. வெளியிலும் பலர் நின்று கொண்டிருந்தார்கள். சில வழக்குகளுக்கு இது வழமையான ஒன்றுதான். இவர்களுள் பெருந்தொகையானோர் இளைஞர்களாக இருந்தார்கள். பாதுகாப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிசாரும் தம்மால் முடிந்தளவுதமது பணிகளைச் செய்து கொண்டி ருந்தார்கள். வெளியே நின்று கொண்டிருக்கும் இன்னும் பல இளைஞர்களும் அந்த வழக்கு இலக்கம் எப்போது அழைக்கப்படும் என்பதைக் கூர்ந்து கவனித்தபடி காணப்பட்டார்கள். அவர்கள் அனைவருக்கும் நிச்சயமாக அந்த வழக்கு இலக்கம் மறந்துபோகதவாறு மனனமாகியிருக்க வேண்டும். இவ்வளவும் நடந்து கொண்டிருப்பது யாழ்ப்பாணம் நீதவான் மன்றில்.

● ● ●

மன்றுக்குள் அமைதி எப்பொழுதும் போலவே நிலவியது. மன்றின் செயற்பாடுகள் ஆரம்பமாகின. அப்பொழுது தான் அந்த அமைதியைக் குலைத்து மன்றுக்குள் மிடுக்குடன் ஒலிக்கும் அந்தக்குரல். வழக்கு இலக்கம் கூப்பிடப்பட்டதும் வரிசையாகவும் வரிசையின்றியும் நின்ற இளைஞர்களுக்குள் குசுகுசுப்பு எழுந்தது.

எட்டு இளைஞர்களின் பெயர்களுடன் அந்த அழைப்பு நிறைவுபெற குற்றவாளிக்கூண்டுக்குள் அவர்கள் அனைவரும் வந்து வரிசையாக நின்றார்கள். அவர்களுக்கு மிஞ்சி மிஞ்சிப்போனால் 24வயதுகள் தானிருக்கும். அப்படி என்ன தவறு செய்து விட்டார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கையில்தான் அவர்களுடைய குற்றச்சாட்டுக்களும் வாசிக்கப்பட்டன.

“யாழ்ப்பாணம் – மடத்தடியில் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக இனங்காணப்பட்டிருக்கின்ற இவர்கள் வாளால் வெட்டி எட்டு வரையிலான காயங்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டுக்கு உரியவர்களாக இனங்காணப்பட்டிருக்கிறார்கள். பின்னர் 14நாள்கள் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்கள். சரியாகப் 14நாள்கள் கழிந்த நிலையில் நேற்று அந்த வழக்குக்கான தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் குற்றஞ்சாட்டப்பட்வர்களின் கைவிரல் அடையாளங்கள் மன்றுக்கு வரவில்லை என்ற காரணத்தால் தீர்ப்புக்கான நாள் இன்று என அறிவிக்கப்பட்டு அவர்களுக்கான விளக்கமறியலும் இன்று வரை நீடிக்கப்பட்டிருந்தது.

“இன்டைக்குத் தீர்ப்புக்கான நாள் குற்றஞ்சாட்டப்பட்ட எங்கட பிள்ளைகளுக்கும் எங்களுக்கும் அன்றைக்குக் கடவுளாகத் தெரிந்தவர்கள் நீதிபதியும் சட்டத்தரணிகளுமே” தன்னுடைய பிள்ளைக்காக மன்றுப்படியில் மெதுவாக ஏறி சட்டத்தரணியிடம் பலவற்றை மன்றாட்டமாக முன்வைத்த தாயின் ஆதங்கங்கள் தான் இவை.

தீர்ப்பைக்காணப் பலர் வந்திருந்தார்கள். குற்றஞ்சாட்டப்பட்ட எட்டு இளைஞர்களில் இரண்டுபேர் பாடசாலை மாணவர்கள். அந்த மாணவர்கள் சார்பில் அனைவரும் அறிந்த பொறுப்பில் உள்ளவர் சட்டத்தரணியாக மன்றில் முன்னிலையானார். அவருக்காகவும் மன்றின் வளாகத்தைச் சுற்றிப் பாதுகாப்புப் பிரிவினர் கடமையில் இருந்தனர்.

இன்று தீர்ப்புக்கான நாள் என்பதை முதல் நாளே அறிவித்திருந்ததால் குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞர்களின் முகத்தில் இன்று ஒரு மாற்றம் தெரிந்தது. வெளியில் இருக்கும் தமது உறவுகளிடம் பலவற்றை மன ஆறுதலுக்காய் வேண்டிக் கொண்டார்கள். சிலர் அழுதார்கள். சிலர் அழுவதற்கு திராணியற்று தலைகுனிந்து நின்று கொண்டி ருந்தார்கள்.

சட்டத்தரணிகள் பரபரப்பாகினர். ஒவ்வொரு சட்டத்தரணிகளும் தமது தரப்புக்காரர்கள் சார்பில் பலவற்றை முன்வைத்தார்கள். இதைத் தொகுப்புரை என்றும் கூறுவார்கள். சட்டத்தரணிகளின் தொகுப்புரைகள் நிறைவு பெற்றன. தீர்ப்புக்கான நேரம் வந்தது. தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.



## எதிர்காலம் எங்கே?

● ● ●

எட்டு இளைஞர்களுமே குற்றவாளிகள் என்பது உறுதிப்படுத்தப்பட்டதால் தண்டனை கிடைத்தது. அந்த எட்டுப் பேர்களில் மூன்று பேருக்கு மூன்று வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் ஏனைய ஐந்து பேருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

இதையே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்போல் அருகில் இருந்த ஒருவர் “வாள்வெட்டு கும்பல் கூண்டுக்குள் போகிறது பாருங்கள்...” என்றார். அந்தக் குரல் நிச்சயமாக மன்று நிறைந்த அனைவருக்கும் கேட்பதாக அமைந்தது.

இதுவரை வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை விட இப்பொழுது அந்த எட்டு இளைஞர்களுக்கும் சற்றே கடுமையான பாதுகாப்பு கொடுத்தனர் சிறைச்சாலைப் பொலிசார். கைவிலங்குகள் தயாராக இருந்தன. ஒவ்வொரு பொலிசாரின் இடுப்புப்பட்டியிலும் தொங்கிய வண்ணமிருந்த அவை இப்போது குற்றவாளிகளின் கைகளுக்கு உடனடியாகத் தாவிக் கொண்டன.

● ● ●

மன்றை மதிக்க வேண்டும். மன்றுக்குள் அமைதிபேண வேண்டும் என்ற ஒவ்வொரு பொதுமகனுக்குமுரிய கடப்பாட்டையும், நடத்தையையும் மதித்து இருந்திருப்பார்போல. ஒரு குற்றவாளியின் தந்தை அவர். அந்த மன்றின் பொலிசாரையும் தாண்டி வெளியில் வந்தார். அவருக்கு 50வயதுகள் தானிருக்கும்.

“ஏனடா இவனுக்கு இந்தத் தேவையில்லாத வேலை...? கத்தியெடுத்து வெங்காயம் வெட்டத் தெரியாதவனுக்கு ஏனிந்த வாள்...? வாள் எடுத்து வெட்டுற அளவுக்கு வளத்துவிட அவருக்கு ஒரு கூட்டம். இனி நாங்கள் நடுறோட்டில தான் நிக்கவேணும். உழைச்சுக் குடும்பத்தப் பார்ப்பான் என்று வளர்த்துவிட, இப்பிடிச் சிறைக்குள்ள போவான் என்று யாருக்கு தெரியும்...” கூறிக்கொண்டே வெளியேறினார்.

“இவங்கட எதிர்காலம் என்னவாகிறது...? எல்லாரும் சின்னப்பெடியள். பழுதாப்போட்டுதுகள். பெத்ததுகள் இவங்களுக்காக என்னவெல்லாம் செய்திருக்குங்கள்...?” மெதுவாகக் கூறினாலும் தனது நிலையைக் கூறியது போலவே மேலும் பேசிக்கொண்டார் அவர்.

● ● ●

அழுகையை அடக்க முடியாமலே மன்றுக்குள் கண்ணீர்த் துளிகளைச் சிந்திக்கொண்டார். இன்னொருவர் அதிலுள்ள ஒரு குற்றவாளியின் தாயாகத் தான் இருப்பார்போலும்! வார்த்தைகள் ஏதுவுமற்று அழுகையும் விசும்பலும் தான்வெளிவந்தன.

“இந்தப்பெடியனுக்குப் பேசிவைச்சிருக்கிற புள்ளை இனி என்ன சொல்லுதோ தெரியேல்லயே கடவுளே... அநியாயமாக வாழ்க்கை போச்சுதே...” தந்தைமாரின் அழுகைகள் எளிதில் வெளிவராமாட்டாதவை என்று பலர் கூறத்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இங்கு ஒரு தந்தை வாய்விட்டு அழுதார். தனது மகனின் எதிர்காலத்தை எண்ணி. தனது மகனுக்குப் பிடித்தமான உணவு, பழங்களுடன் மன்றுக்குள் வந்து சிறைப்பாதுகாவலர்களுடன் கதைத்து அவற்றைத் தனது மகனிடம் கொடுத்துவிட்டு வெளியில் வந்தவ இன்னொருவரும் கூறினார். “கடவுளே இனி எங்களை யார்தான் கரைசேர்ப்பார்கள்...?” மன்றை ஆட்கொண்டிருந்த அமைதியும் இப்போது அமைதி கொண்டது.

---

## அலைவுறு வார்த்தைகள் தொடங்கியவாறே முடிவுற்றிருக்கின்றன

முடிவு
என்பது எவ்வளவு
தூரத்திலிருக்கிறதென
ஒருபோதுமே
யாருமே
யோசித்ததில்லை.

யோசித்தல்
என்பது கூட
முடிவற்றதாக முடியாமல்
இருக்கிறது.
இருக்கிற
எதுவுமே போதுமாக
இல்லை
என்பது
முடிவை
எட்டிப்போகச்
செய்கிறது.

செய்வது
செய்யாதது
எல்லாமே மனத்தின்
அடிக்கிடங்கிலிருந்து
ஊறியூறி மேலெழுகிறது.

மேலெழுவன
எல்லாம் தெரிகிறது.

மீந்தவை
யாருமறியாவண்ணமே
ஆகிறது.
ஆகின்ற
ஒவ்வொன்றும்
உன் செயலே என்றால்
முயற்சி என்பதற்கான
அர்த்தத்தை
மறுதலிக்கப்
போகிறாயா?

மறுதலிக்கப்பட்ட
நம்பிக்கைகளைப்
புதுக்கி எடுக்க
புறப்பட்ட போதுதான்
உனது
வார்த்தைகள் தடுத்தன.

வார்த்தைகள்
எப்போதுமே
சடங்கள்தான்.
சடங்களுக்குத்தான்
சடங்குகள் செய்ய
விளைகிறது மனது.

மனது ஒருபோதும்
ஒரேயிடத்தில்
இருந்தது கிடையாது

உன்னைப் போலவே.



வானவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விசாரிக்கப்படவுள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்



பிரகாஸ்

சென்றவாரம்தான் மதிமயங்கியிருப்பதாக ட்ரம்ப்பை விமர்சித்திருந்தோம் அதற்கேற்றால்போல் அடுத்தடுத்து சம்பவங்கள் சிலவும் அமெரிக்காவில் அரங்கேறித்தானிருக்கின்றன. அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்று வெறும் நான்கு மாதங்களேயான நிலையில் ஆட்சி மாற்றமொன்று ஏற்படக்கூடிய எதிர்ப்பலை தற்போது அங்கு ட்ரம்புக்கு எதிராக ஏற்பட்டுள்ளது. 'ட்ரம்ப் ரஷ்யாவின் கைக்கூலி', 'ட்ரம்ப் ரஷ்யாவின் வேலையாள்', 'ட்ரம்ப் புடினின் நாய்க்குட்டி' இவ்வாறான பதாகைகளே தற்போது வெள்ளைமாளிக்கைக்கு முன்பாக முளைத்து நிற்கின்றன. கவனிக்கப்படவேண்டிய இந்த எதிர்ப்பலையை அடுத்து ட்ரம்பின் கடந்தகால மற்றும் தற்கால நகர்வுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராக நேரடியாகவும் மறைமுகமாகவும் விசாரணைகள் நடத்த உத்தரவிட்டுள்ளார் அந்தநாட்டின் துணைச் சட்டமா அதிபர்.

**திடீர் எதிர்ப்பலைக்கான காரணம்...?**

ட்ரம்ப் - ரஷ்யா அயலுறவுத் துறை அமைச்சர் சேர் கெய் இருவருக்கும் இடையில் சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றிருந்தது. இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து. ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுதக் குழுவுக்கு எதிரான அமெரிக்காவின் வியூகங்களை ட்ரம்ப், ரஷ்யாவுக்கு வழங்கினார் என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. முறையான ஆதாரங்கள் இல்லாமல் இவ்வாறான செய்திகள் வெளிவருவதற்கு வாய்ப்பில்லை. எனவே ட்ரம்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர் அமெரிக்க மக்கள். இதனால் நியூயோர்க், நியூஜெர்சி, பென்சில்வேனியா, மெச்சிக்கன், வொஷிங்டன் உள்ளிட்ட பல நகரங்களில் மக்கள் போராட்டங்கள் உருவெடுத்துக்கொண்டன.

முக்கிய நகரங்கள் மட்டுமல்லாமல் அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளைமாளிகைக்கு முன்பாகவும் பல போராட்டங்கள் நடந்தன. அங்கு போராட்டக்காரர்கள் அதிகம் பயன்படுத்தும் வாசகங்கள் ட்ரம்ப் - ரஷ்ய இகழ்ச்சியைப் பறை சாற்றும் வகையில் உள்ளன.

**கோமேயின் நீக்கம் உணர்த்துவது...?**

அமெரிக்காவின் நடுவகப் புலனாய்வுத்துறைத் தலைவராக ஜேம்ஸ் கோமே பணியாற்றி வந்தார். இவர் நடு நிலை தவறாதவர் என்ற கருத்தும் அங்கு உண்டு. அந்த நாட்டு அதிபர் தேர்தல் காலத்தில் ஹிலாரி மீது ட்ரம்ப் மின்னஞ்சல் மோசடிக் குற்றச்சாட்டை முன்வைத்தபோது நெருக்கடி நிலையில் துணிந்து பணியாற்றியவர் கோமே. தற்போது ட்ரம்ப்புக்கு ரஷ்யாவுடன் தொடர்புண்டு என்று எழுந்த குற்றச்சாட்டுத் தொடர்பிலும் விசாரணை நடத்தத் திட்டமிட்டவர். இதனால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி கோமேயைப் பதவி நீக்கினார் ட்ரம்ப். இந்தப் பதவி நீக்கத்தின் மூலம் ட்ரம்ப் குற்றவாளி என்பது மேலும் நிரூபண மானது.

**தோண்டப்பட்டது பழைய பகை...!**

ட்ரம்புக்கு எதிராகத் தற்போது எழுந்த எதிர்ப்லைகளை மேலும் வலுவாக்கும் விதமாக அவருக்கு எதிராகக் கடந்த காலங்களில் முன் வைக்கப் பட்ட குற்றச்சாட்டுக்களும் தற்போது உயிர்ப்பிக்கப்படுகின்றன. அதிபர் தேர்தலில் ஆரம்பத்தில் ஹிலாரியே முன்னிலையில் இருந்தார். பின்னர் திடீர் எழுச்சி கண்டு ட்ரம்ப் வெற்றிபெற்றார். இந்த வெற்றியின் பின்னணியில் ரஷ்யா உள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டும் தற்போது புத்துயிர் பெற்று எழுந்துள்ளது.

**ட்ரம்புக்குத் தெரியாமல் அதிரடி நகர்வுகள்**

ட்ரம்பின் வெற்றியில் ரஷ்யாவுக்குத் தொடர்பு, ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான வியூகங்களை ட்ரம்ப், ரஷ்யாவுக்கு வழங்கினார் என்ற இந்த இரண்டுகுற்றச்சாட்டுக்களுடன் சேர்த்து நடுவகப் புலனாய்வுத் துறை அதிபர் கோமேயின் திடீர்ப் பதவிநீக்கம் தொடர்பிலும் விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளார் அந்த நாட்டின் துணைச் சட்டமா அதிபர். இந்த உத்தரவும் அது தொடர்பான நகர்வுகளும் துணைச் சட்டமா அதிபர் கையொப்பமிட்ட பின்னர் ட்ரம்புக்கும் வெள்ளை மாளிகையின் வட்டாரங்களுக்கும் அது தொடர்பான தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அறியவருகிறது.

கச்சிதமாகத் திட்டமிட்டு அரங்கேறிக் கொண்டிருக்கும் இந்த நகர்வு ட்ரம்பை விரட்டி அடிக்கும் முயற்சி என்று கோடிட்டுக் காட்டுகின்றன அமெரிக்க ஊடகங்கள்.

**ட்ரம்ப் வேதனை**

தனக்கு எழுந்துள்ள எதிர்ப்பலை மற்றும் நகர்வுகளுக்கு எதிராகக் கடும் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் வெளிப்படுத்தியுள்ளார் ட்ரம்ப். “சமீபகாலமாக என்னை ஊடகங்கள் நடத்தும் முறையைப் பாருங்கள். வரலாற்றில் என்னைவிட மோசமாக நடத்தப்பட்ட அரசியல் தலைவர் எவரும் இல்லை. ஆனால் இதனால்தான் நான் வெற்றியும் பெற்றிருக்கிறேன் என்று நினைக்கிறேன். ஏனெனில் நெருக்கடிகள்தான் நம்மை வலுவடையச் செய்கின்றன. நீங்கள் எடுத்த முயற்சியிலிருந்து பின் வாங்காதீர்கள். நீங்கள் சரி என்று நினைப்பதை எவர் தடுத்தாலும் நிறுத்தாதீர்கள். ஒரு அரசியல் தலைவருக்கு எதிராக நடத்தப்படும் திட்டமிட்ட சூனிய வேட்டை இது” இவ்வாறு நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாறியுள்ளார் ட்ரம்ப்.

**அழைக்கப்படாத விருந்தாளியாக ரஷ்ய அதிபர் புடின்**

ஒரு நாட்டின் உள்வீட்டுப் பிரச்சினையில் அவ்வளவு இலகுவில் தலையிட்டுவிடாத (சமீப காலமாக) ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், இந்த விவகாரத்தில் சட்டென்று தலையிட்டுள்ளார். ட்ரம்ப் தம்மிடம் எதுவும் வழங்கவில்லை என்று தனது பங்குக்கு நியாயம் சொல்கிறார் அவர். அமெரிக்க மக்களிடையே திட்டமிட்டு ரஷ்ய வெறுப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது என்பதும் புடினின் வாதமாக அமைந்துள்ளது. ட்ரம்ப் - சேர் கெய் இடையில் நடந்த உரையாடல் தொடர்பில் அமெரிக்க நாடாளுமன்றிலும் நிரூபிக்க புடினின் தரப்புத் தயாராகவே இருந்தது. ட்ரம்புக்கு தான் கொடுக்கும் ஆதரவு அமெரிக்காவில் தானாகவே பிரிவினையை ஏற்படுத்தும் என்ற கோணத்திலும் புடின் வியூகம் வகுத்திருக்கலாம் என்றும் எண்ணுகிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

**ஒபாமா- ஹிலாரி மௌனம்**

இந்த விவகாரத்தில் அதிகம் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டியவர்கள் முன்னாள் அதிபர் ஒபாமா மற்றும் ட்ரம்புடன் அதிபர் பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வியைச் சந்தித்த ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஹிலாரி கிளிங்டன். எனினும் இவர்கள் இருவரும் இந்த விவகாரத்தில் மௌனித்துள்ளனர். இதனால் இந்த எதிர்ப்பலையின் பின்னணியில் ஜனநாயகக் கட்சி உள்ளதோ என்ற சந்தேகமும் வராமலில்லை. எம்மூர்ப் பழமொழியின்படி பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டு வி டுவதைப் போல...

> ட்ரம்புக்கு எதிராகத் தற்போது எழுந்த எதிர்ப்பலைகளை மேலும் வலுவாக்கும் விதமாக அவருக்கு எதிராக கடந்த காலங்களில் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களும் தற்போது உயிர்பிக்கப்படுகின்றன. அதிபர் தேர்தலில் ஆரம்பத்தில் ஹிலாரியே முன்னிலையில் இருந்தார். பின்னர் திடீர் எழுச்சி கண்டு ட்ரம்ப் வெற்றிபெற்றார். இந்த வெற்றியின் பின்னணியில் ரஷ்யா உள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டும் தற்போது புத்துயிர் பெற்று எழுந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பனிச்சமரம் பழுத்திருக்கு



## காலத்தின் சாட்சிப் பதிவு

இலங்கையில் நடத்தி முடிக்கப்பட்டிருக்கும் போரில் அரசதரப்பு கையாண்டிருந்த போர்நெறி பற்றிய கேவலத்தனம் இன்றுவரை மக்கள் சகலருடைய மனங்களிலும் பதிவுச் சாட்சிகளாகவுள்ளன. அதைப்போலவே இந்தப் படத்தின் சித்திரிப்புக்கள் அவற்றில் ஒரு பகுதியை உணர்த்தும் சாட்சியாகக் காலம் காலமாக நீடிக்கும் என்பது வெளிப்படை.

சி.ப.வேந்தன்

"வறுமைக்கு எதிரான போர் உயர்வானது, கல்வியின்மைக்கு எதிரான போர் உயர்வானது, அடிமைமுறைக்கு எதிரானபோர்உயர்வானதுஆனால்சுதந்திரம்கேட்டுக்குரலெழுப்பும்மக்களுக்கு எதிராகத்தொடுக்கப்படும்போர்கேவலமானது, கொடூரமானது, மன்னிக்க முடியாதது இப்படிப்பட்ட போர் மனித குலத்தால் வெறுக்கப்படுவது உலகிலிருந்து ஒழிக்கப்படவேண்டியது" என்ற வாசகங்கள் திரையில் தோன்றுவதுடன் படம் ஆரம்பமாகின்றது. போர் நிகழ்ந்துகொண்டிருந்த காலப்பகுதியில் போரை மையப்படுத்தாமல் போரின்விளைவுகளைப்பேசுகின்றது படம்.

**கதைப் பார்வை...**

போர்க்கால வழமைகள்போன்றே அன்றும்விமானங்கள்குண்டுகளைப் பொழிந்து செல்கின்றன. சத்தம் வானதிர அன்றைய பொழுது புலர்கின்றது. முதல்நாளிரவு சாப்பிடாமல் பட்டினியாகத் தூங்கிவிட்ட பிள்ளைகளை நினைத்து வேதனைப்படும் மீனாட்சி அவர்களை எழுப்பி இருக்கும் ஒரு கரண்டிச் சீனியில், தொட்டுக்குடிக்கச் சொல்லி தேநீர் கொடுக்கிறாள். அப்போது அவளுடைய நினைவுகள் பின்னோக்கிச்செல்கின்றன.

கோவிலில் பூஜை முடிந்து கணவனுடனும் தன்னுடைய இரண்டுபிள்ளைகளுடனும் வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றாள். அப்பொதுதான் கோவிலில் மறந்துபோய் அர்ச்சனைத்தட்டைவிட்டுவிட்டது ஞாபகத்துக்கு வருகின்றது. அந்தஅர்ச்சனைத்தட்டத்தைக்கணவர் எடுக்கப்போகின்றார். அவர் கண்ணுக்கெட்டியதூரம்வரைதிரும்பிவந்துவிட்ட சமயத்தில் தன்னுடையதும் பிள்ளைகளதும்கண்முன்னேவிமானக்குண்டில் சிதறிய நினைவுகள் அவளைத் தின்கின்றன. மெல்ல மெல்ல நினைவிலிருந்து மீள்கிறாள். அப்போது நெல்லுக்குத்தும்வேலைக்குக்கூட்டிக்கொண்டு போவதற்காகப் பக்கத்துவீட்டுப் பெண் வருகின்றார். பிள்ளைகளுக்கு இன்றைக்குச்சாப்பாடுகொடுக்கவழிகிடைத்துவிட்டது எனும் சந்தோசத்தோடு வயதான தனது மாமியாரிடம் பிள்ளைகளைப் பார்த்திருக்கச் சொல்லிவிட்டு வேலைக்குச் செல்கிறாள் மீனாட்சி. அங்கு கிடைக்கும் பாண்துண்டில் அரைவாசியைப் பிள்ளைகளுக்கென மடியில் சுற்றிவைத்துவிட்டு வேலை செய்கிறாள். வீட்டில் பசியால் வெறும் தண்ணீரைக்குடித்துக்கொண்டிருக்கும்பிள்ளைகள்பசிக்குஏதாவதுசாப்பிட வேண்டும் எனும்நிலையில் பக்கத்து வீட்டுப்பிள்ளைகளோடு சேர்ந்து பனிச்சம்பழம் பிடுங்கச் செல்கின்றார்கள். அப்போது இராணுவத்தின் உலங்குவானூர்தியும் விமானங்களுமாக வந்து சரமாரியாகக் குண்டுகளைப் பொழிகின்றன.

வேலைமுடித்துவீடுதிரும்பியமீனாட்சி பிள்ளைகளைக் காணாது திகைக்கிறாள். அழுதுகொண்டே அவர்களைத் தேடிக்கொண்டுஎல்லாஇடமும்அலைகிறாள். விமானங்களின்குண்டுகளுக்குத் தப்பி ஓடியவாறே பிள்ளைகளைத் தேடி கத்திக்கத்தித் திரிகிறாள். பசி மயக்கத்தால் மரத்தடியில் நித்திரையில் கிடந்தபிள்ளைகள்தாயின்குரல்கேட்டு எழுந்து தாயை நோக்கி வரும்போது அவர்களின் கண்முன்னே குண்டடிபட்டுத்தாயும்சிதறுகிறாள். தாயின்எரிந்துபோன சேலை துண்டை எடுத்து வைத்துக்கொண்டு பிள்ளைகள் அழுகின்றார்கள்.

அப்போது வானில் வரும் விமானத்தைக் கண்ட மகன் கோபத்தில் ஓடிச் சென்று கீழே கிடக்கும் கற்களைப்பொறுக்கிவிமானத்தைநோக்கிஎறிகிறான். இவனுடைய ஆவேசம் அர்த்தமுள்ளது. தனதுமக்களுடையபிரதிநிதியாக அவன் தோற்றம் பெறுகிறான். உண்மைதான்எதிர்காலத்தில்தனதுதாயைக் கொன்ற கொலையாளிகளுக்கெதிராக புரட்சியாளனாய் உருவெடுக்கப்போகும் இவன் தனது தாய்மண்ணின் சுதந்திரத்துக்காகத் தன்னையும் அர்ப்பணித்துக்கொள்வான் என்பது நிச்சயம். அப்போது இவனை நீங்கள் தீவிரவாதி என்றா சொல்வீர்கள்? எனும் கேள்வியோடு படம் நிறைவடைகின்றது.

**கண்மூடித்தனமான போர்நெறியின் வடுக்கள்**

இன, மதவாதத்துக்காகவும் ஆட்சியதிகாரங்களுக்காகவும்நடத்தப்பட்டிருந்த போர், அதுபற்றி எதுவுமே புரிந்துகொள்ளக்கூடிய நிலையில் இல்லாதிருக்கின்ற குழந்தைகளை நோக்கித் திருப்பப்பட்டநெறியற்றஒன்றாயும், சிறுபருவத்திலேயே அவர்களுடைய மனதிலும் சுதந்திர தாகத்தை விதைத்துப் போருக்குள் அவர்களையும் இழுத்து வருகின்ற ஜீரணிக்க முடியாத மாபெரும்வரலாற்றுத்தவறுகளையும்நிகழ்த்திக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெளிவாக்குகின்றது கதை. அதை இயலுமான வரையில் போர் புரிபவர்களுக்குக் கற்றுக்கொடுக்க முயற்சி செய்கின்றது இந்தக் குறும்படம்.

இலங்கையில்நடத்திமுடிக்கப்பட்டிருக்கும் போரில் அரச தரப்புக் கையாண்டிருந்தபோர்நெறிபற்றியகேவலத்தனம் இன்றுவரை மக்கள் சகலருடைய மனங்களிலும்பதிவுச்சாட்சிகளாகவுள்ளன. அதைப்போலவேஇந்தப்படத்தின் சித்திரிப்புக்கள்அவற்றில்ஒருபகுதியை உணர்த்தும் சாட்சியாகக் காலம் காலமாக நீடிக்கும் என்பது வெளிப்படை. போரைமையப்படுத்திப்பேசியிருக்கும் படத்தில் அந்தப் போர் யாரை நோக்கிப் புரியப்பட்டதுஎன்பதையும்அதுயாரையெல்லாம்வெகுவாகப்பாதித்ததுஎன்பதையும் வாழ்வியல் ஆதாரங்களாக நிறுவுகின்றது படம். ஒரு இனத்தின் விருட்சத்தோடுமட்டும்போரைநிறுத்திவிடாது அதன் விதையிலும் போர் நீட்டிப்பை விதைத்துவிட்ட மேலாதிக்கத்தின் பொறுப்பற்ற நயவஞ்சகத்தை முகத்திலறைவதாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன காட்சிகள்.

**பாத்திர வார்ப்புக்கள்**

நிதர்சனத்தின் வெளியீடாக ஆதவன் திரைப்படக்கல்லூரிமாணவர்கள்உருவாக்கியிருக்கும் குறும்படம் பனிச்சமரம் பழுத்திருக்கு. 16 நிமிடங்களைக் கொண்ட இந்தப் படத்தில் ஜெஸ்மின், நீதன், சாதுரியன், மது, நாகம்மா, கவி, ராணி, திரேசம்மாஎனப்பலர்நடித்திருக்கின்றார்கள். தகப்பன் குண்டுவீச்சில் சிதறுவதையும் தாய் குண்டுவீச்சில் சிதறுவதையும் கண்முன்னே பார்க்கும்போது மகனுடைய கண்களில் தெரியும் இழப்பு பார்வையாளனிலும் தொற்றிவிடுகிறது. ஆங்கங்கே குறிப்பிட்டு சொல்லக்கூடிய இடங்களில் சிறுவனின் நடிப்பு அழகாயிருக்கின்றது. படத்தில்தோன்றும்மற்றையபாத்திரங்களின் நடிப்பு சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. உணர்வுகளோடான கதையைத் தூக்கிச்செல்வதில் அத்தனை பாத்திரங்களும் தவறிவிட்டன என்றே சொல்லலாம்.

அப்பம்மாவிடம் பனிச்சம்பழம் பிடுங்கப்போவதற்குஅனுமதிகேட்கும்சிறுவனுக்கு முதலில் மறுக்கும் அப்பம்மா அடுத்து அவனுடைய பசியெனும் காரணத்தைக் கேட்டவுடன் அவரது முகத்தில்தோன்றும்இல்லாமையும்இயலாமையும் பார்ப்பவர்களுக்கும் பசியின் கனத்தை உண்டுபண்ணிவிடுகிறது.

**இசை, ஒளிப்பதிவு, இதர அம்சங்கள்**

இசைத்தென்றலின்இசை, கதையோடு சேர்ந்து மனதைக் குழைய வைக்கிறது. ஒளிப்பதிவு செய்திருக்கிறார் நிலவன். தாயின் இழப்புக்குப்பின்னர் வருகின்றஎரிந்தபுடவையைநோக்கிச் சிறுவன் ஓடிவருகின்ற காட்சி, குண்டுகள் வீசிப்படுகின்ற காட்சிகள் எனக் குறிப்பிட்ட காட்சிகளே ஒளிப்பதிவில் கவனத்தை ஈர்க்கின்றன. தேவைக்கேற்றாற்போல் நிதானமாகவும் பரபரப்பாகவும் காட்சிகளுக்கேற்ற படத்தொகுப்பை நேர்த்தியாகச்செய்திருக்கிறார்கள் சி.வினோ மற்றும் க.ரமேஸ் ஆகியோர். ஆவணத்தொகுப்பிருந்து இணைக்கப்பட்ட விமானக்காட்சிகள் உறுத்தலின்றி படத்துடன் இணைந்திருப்பதற்கு படத்தொகுப்பு பெரிதும் உதவியிருக்கிறது. செம்பருத்தியின் மூலக்கதைக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருக்கிறார்கள் ஆதவன் திரைப்படக்கல்லூரி மாணவர்கள். ஆலோசனையும்வழிகாட்டலும்வழங்கியிருக்கிறார் தென்னிந்திய திரைப்பட இயக்குநர் மகேந்திரன்.

**உண்மையைப் பதிவாக்கியிருக்கும் கதை**

திரைவடிவ அழகியலுக்கு அதிக முக்கியத்துவம்கொடுக்காதுகதைக்கருவை மையப்படுத்திப் படமாக்கியிருப்பது நன்று. ஆனாலும் திரைமொழியில் அதிக சிரத்தை எடுத்திருந்தால் இதன் சிறப்பு இன்னும் அதிகரித்திருக்கும். ஆங்கங்கே பல குறியீடுகள் மிக நச்சென்று கவிதைகளாகத்தெரிகின்றன. மீனாட்சியின் சிவப்புநிறப் புடவையை பசி, கோபம், வறுமை, வன்முறை, இழப்பு, மானம் எனப் பல இடங்களில் குறியீடாகக் காட்சிப்படுத்தியிருப்பது படத்தின் தரத்தை உயரத்துக்குக் கொண்டுசெல்கின்றது. அதேபோன்று உரலில் நெல்லுக்குத்தும் காட்சியையும்மனதின்பதகளிப்பையும்போர்க்குறியீடாகக்காட்டியிருப்பது அழகு. தனக்குக்கிடைத்தபாண்துண்டைப்பிள்ளைகளுக்காக சுற்றிவைப்பதும் அதோபோன்றே மகனும் தாய்க்காகப் பனிச்சம்பழத்தைஎடுத்துவைப்பதும்உணர்வின் உச்சம்.

கொக்குக்கு எறிந்த கல் குளத்தையும் சலசலக்க வைத்துவிடுவதைப்போல போர், போர் புரிபவர்களைமட்டுமன்றி குழந்தைகளையும் தனக்குள் இழுத்துச்சென்றுவிடுவதை உணர வைக்கிறது படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை, இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

தி. இராஜநாயகி

கல்யாண வரவேற்பில் கலந்து கொள்ள, காலை நெரிசலில் சிக்கிப்போகும் வேகத்தில் கண்ணில்பட்ட ஆட்டோவின் பின்புறத்திலும், மாநகராட்சிப் பலகைகளிலும் 'தமிழ்க்கொலை' வாசகங்கள் மண்டைக்குள் சூடேற்றின. நம் தாய்மொழியில் எழுதுவதில் கூட ஏன் இப்படி இத்தனை தவறுகள்? யோசித்தபடி கல்யாண வீட்டுக்குள் நுழைந்தோம்.

இன்னிசைக் கச்சேரியில் ஒருவர் "காதல் பிசாசே பருவாயில்லை" எனப் பாடிக்கொண்டிருந்தார். மறுபடியும் சூடு தலைக்கேறியது. அருகிலிருந்த நண்பரோ "இது எழுதியவர் தவறில்லை. பாடியவரின் தவறு. அதுவே பாடுபவர் அனைவருக்கும் வழிகாட்டியாயிற்று" என்றார். எங்கள் உரையாடலை நாங்கள் விவாதித்துக் கொண்டிருந்தபோது, எங்களைச் சுற்றியிருந்த கூட்டம் அது பாட்டுக்கு மணமக்களை வாழ்த்துவதும், சாப்பிடுவதும், அரட்டை அடிப்பதுமாயிருந்தது.

— — — — —

தூரத்தில் அமர்ந்திருந்த பிரபல இயக்குநரைப் பார்த்ததும், சிரித்தபடி அவரை நோக்கி நகர்ந்தோம். கூட்டத்திலிருந்து ஒரு பத்து வயதுச் சிறுமி அவசரமாக எங்களைத் தாண்டி மேடையை நோக்கி ஓடினாள். இயக்குநரின் அருகிலுள்ள நாற்காலியில் அமர்ந்தபடி நாம் பேச ஆரம்பிக்கையில் ஒட்டு மொத்த கூட்டமும் சிறுமியைப் பாரத்துக் கரகோசம் செய்தது. மேடையின் மேல் சிறுமி, தான் போட்டிருந்த பட்டுச் சட்டையினை மார்பு வரை ஏற்றி முடி போட்டுக் கொண்டு, பட்டுப்பாவாடையைத் தொப்புளுக்குக் கீழ் இறக்கிவிட்டபடி ஆட, அவள் அம்மாவும் அப்பாவும் அவளை உற்சாகப் படுத்தினர். பாடகரோ சிறுமியுடன் ஆடிக்கொண்டே "கல்யானந்தான் கட்டிக்கிட்டு ஓடிப்போலாமா..." எனப் பாடினார். சிறுமியின் அங்க அசைவுகளும் பாடலின் வரிகளும் ஆபாசமாய் இருந்தன. திரைப்பட இயக்குநர் நம்மிடம் "எனக்கே எங்க துறையைப்பத்தி ரொம்பக் கேவலமா இருக்கு. ஏன் இப்படி ஆபாசப் பாடல் வரிகள். அர்த்தம் தெரி யாமலே, ஆபாச அசைவுகள் என்பது புரியாமலே, அந்தச் சிறுமியின் ஆடல். இதற்கு நமது துறையினரே அடிப்படைக் காரணம் என்ற குற்றவுணர்ச்சி எனக்கு மிகையா கின்றது" என்றார் உண்மையான வருத்தத்துடன்.

வீடு திரும்பும் வரை சிறுமியின் ஆடலும், பாடல் வரிகளும் பெற்றோரின் உற்சாக மிகுதியும் மனதை உறுத்திக் கொண்டே இருந்தன. பாடலை எழுதிய சிநேகனுக்குப் பெண் குழந்தையோ, வீட்டில் வயதுக்கு வந்த சகோதரிகளோ இல்லைப் போலிருக்கின்றது. அதனால்தான் இத்தனை ஆபசம் இவரது பாடல்களில். இது யார் தவறு? இப்படித்தான் பாடல் வரிகள் இருக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தி இயக்குநர்கள் கேட்கிறார்களா? இப்படி எழுதினால்தான் நாம் நிற்க இயலும் என இவர்கள் இப்படி எழுதுகிறார்களா?

— — — — —

சமீபத்தில் வைரமுத்து தன்னுடைய பாடலுக்கான தேசிய விருது குறித்துப் பேசுகையில், "தேசிய விருது ஐந்துமுறை நான் வாங்கவில்லை. தமிழ் வாங்கியிருக்கிறது. எனக்குப் புலம்பெயர்தல் பற்றிய வலியை விளக்கிச் சொல்லச் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. நல்ல இசை அந்தப் பாடலின் வரிகளை உயர்த்திக் காட்டியது. ஆனால் பெரும்பாலும் தற்காலப் பாடல்கள் இரைச்சலான இசையுடனும், தெரியாத வரிகளுடனும் வருவதே வழக்கமாகி விட்டது. எங்களுக்கு நல்ல பாடல்களை எழுதும் சுதந்திரத்தைத் தாருங்கள். அது தமிழை வாழவைக்கும். ஆர்ப்பாட்டமான இசையில், முகம் சுழிக்க வைக்கும் பாடல்களை எழுதும் நிலைக்கு எங்களைத் தள்ளிவிடாதீர்கள்" என்று இயக்குநர்களுக்கும் தயாரிப்பாளர்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார். வைரமுத்துவின் வார்த்தைகளில் இருந்த நியாயம் முகத்திலறைந்து தமிழ்த் திரையுலகினை ஆபாசமாக்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரையும் கேட்பது போலிருந்தது.


இன்றைய திரையுலகம் இளம் பாடலாசிரியர்களால் நிரம்பிக் கிடக்கின்றது. அனைவருக்கும் வாய்ப்பு சமனாகவே கிடைக்கின்றது. பின் ஏனிப்படி சமூகப் பொறுப்புணர்வு இல்லாமல் பாடல் எழுதுகிறார்கள்.

'தத்தித் தாவுது மனசு' என்ற திரைக்கு வராத திரைப்படத்தின் முன்னோட்டம் சன் ரீ.வியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றது. பாடல் இப்படிப் போகின்றது "சின்ன வயசுல இலந்தப் பழம், பத்து வயசுல சின்ன எலுமிச்சம்பழம் பார்த்தேன், பதினைஞ்சு வயசில கொய்யாப்பழம், இப்போ இருபது வயசுல..." என அருவருப்புத் தரக்கூடிய வக்கிரக் கோணல் புத்தியுடன் கூடிய பாடலாய் பெண்களின் மார்புகளைப் பற்றிய வாலியின் ஆராய்ச்சி, மும்தாஜின் அருவருப்பான அசைவுகளுடன். சாகப்போகிற வயதில் வாலிக்குள் ஏன் இத்தனை வக்கிரம்? இப்படிப் பாடல்களை எழுதி இளைஞர்களுக்குள் வக்கிரத்தைத் தூண்டி விடுவதில் என்றும் வாலிக்கு நிகர் வாலிதான். இப்போது ஐந்து வயதுச் சிறுமி, பத்து வயதுச் சிறுமி வன்புணரப்படுகிறாள் என்று நிறையக் கேள்விப்படுகின்றோம். அப்படிப்பட்ட காமுகர்களுக்கும் வாலிக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை.

> பாடல்களில் இரட்டுற மொழிதல் என்பது நாட்டுப்புற சாயல் கொண்டவை. உயர்ந்த கற்பனைகளை அவ்விதம் படைக்கும்போது அதில் அதீதமான இரசனை கிட்டும். இப்போதைய திரைப்படப் பாடல்களில் ஆபாசமே இரட்டுற மொழிதலாகக் கையாளப்படுகின்றது.

# விரசத்தின் உச்சத்தில் தமிழ்த் திரைப்படப் பாடல்கள்

ஜி.விஜயபத்மா



இது குறித்து வளர்ந்துவரும் பாடலாசிரியர் யுகபாரதியிடம் கேட்டபோது "பாடல்களில் இரட்டுற மொழிதல் என்பது நாட்டுப்புறச் சாயல் கொண்டவை. உயர்ந்த கற்பனைகளை அவ்விதம் படைக்கும்போது அதில் அதீதமான இரசனை கிட்டும். இப்போதைய திரைப்படப் பாடல்களில் ஆபாசமே இரட்டுற மொழதலாகக் கையாளப்படுகின்றது. இது தவிர்க்கப்பட வேண்டும். மனிதன் மீது நேசமற்றவர்களால் தான் இதுபோன்ற பாடல்கள் புனையப்படுகின்றன. எந்த நியாயமும் எந்தச் சமாதானமும் இதற்குப் பொருந்தாது என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன்" என்றார். பெண் கவிஞர் தாமரையோ "நான் ஆபாசமான வரிகளை எழுதுவதில்லை என்ற முடிவைச் சொன்னபிறகுதான் பாடல் எழுதவே ஒத்துக் கொள்கிறேன்" என்கிறார்.

— — — — —

தாமரை எழுதிச் சமீபத்தில் வெளிவந்த 'காக்க காக்க' படத்தில் முதலிரவுப்பாடல் கூட மென்மையான அழகான வரிகளுடன் 'கலாபக் காதலை' சொல்லியதும், காமக் கொந்தளிப்போடு கதாநாயகனை நோக்கிப் பாடும் பாடலாய் அமைக்கப்பட்ட 'அழகிய அசுராவும், வசீகராவும்' விரசமில்லாமல், கவிதை வரிகளுடன், இரட்டுற மொழிதல் இல்லாமல், கிண்டலடிக்காமல் வசீகரிக்கத் தானே செய்தன. ஈரநிலம் படத்தில் தேன்மொழி எழுதிய 'கரிசக்காட்டு மயிலேயும்', இளம்பிறை 'தத்தித் தாவுது மனசில்' எழுதிய 'மின்னலாய் கண்முன்னேயும்' நல்ல வரிகளுடன் இருப்பது எல்லோராலும் இரசிக்கப்படுகிறதே. ஒரு பாடலின் உருவாக்கத்தில் முதலில் இயக்குநரால் காட்சியும், காட்சியின் தன்மையும் கதாநாயகன், கதாநாயகியின் குணங்கள், சூழல்கள், எதை நோக்கிய பாடலாய் வேண்டும் என்பதெல்லாம் விவரிக்கப்படுகின்றது. பின் அதற்கு எப்படி இசையமைக்கலாம் என இசையமைப்பாளர்கள் ஒரு இசையைக் கொடுக்க அந்த இசைக்கேற்ப பாடல் வரிகள் எழுதப்படுகின்றன. முன்பெல்லாம் இசையமைப்பாளர், கவிஞர், இயக்குநர் மூவரும் ஒன்றாக அமர்ந்து விவாதித்த பின் பாடல் உருப்பெறும்.

கண்ணதாசன் காலங்களில் பாடலின் வரிகள் திரைப்படப் பாத்திரத்தின் இயல்புகளை வெளிப்படுத்துவதாய் இருக்கும். இன்று பாடல்கள் திரைப்படத்தில் திணிக்கப்படு கின்றன. சப்தமும் இரைச்சலுமே பெரும்பாலான பாடல்களில் இடம்பெறுகின்றன. தப்பித் தவறி வந்துவிடும் வரிகளும் காதினுள் தேளாய்க் கொட்டுகின்றன.

— — — — —

ஒரு காட்சி, அது விரகதாபத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றுகூடச் சொல்லப்படலாம். ஆனால் காமத்தைக் காதலுடனும் சொல்லலாமே. குழந்தையின் கன்னத்தைக் குருதி வரக் கிள்ளி முத்தமிடுவதைப்போல ஏன் வெறியுடன் சொல்ல வேண்டும். ஏன் இப்படித் தமிழை அசிங்கப்படுத்துகிறீர்கள்? என்ற கேள்விக்குப் பாடலாசிரியர்கள் "அப்படிப்பட்ட சூழல் விவரிக்கப்பட்டது அதனால் எழுதினோம், இதைத்தான் இளைஞர்கள் விரும்புகிறார்கள்" என்று ஏகப்பட்ட சாக்குகள் சொல்லலாம். மொத்தத்தில் இந்தப் பாடலாசிரியர்கள், தன் வக்கிரத்தை இப்படிப்பட்ட ஆபாசப் பாடல்கள் எழுதுவதன் மூலம் உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்கள் என்பதே உண்மை.

வக்கிரம் தூண்டும் ஆபாசப் பாடல்கள் என்பது நம் சமுதாயத்துக்கு நீங்கள் செய்யும் துரோகமில்லையா? திரும்பத் திரும்ப குழந்தைகளாலும் குழந்தைகளாலும் பாடப்படக்கூடிய பாடலில் வக்ரமும், ஆபாசமும் இதை நீங்கள் ஒத்துக்கொள்கின்றீர்களா? இப்படிப்பட்ட பாடலை எழுதச் சொன்னால் மறுக்க இயலாத சூழ்நிலையாக இருந்தால் எழுதுவீர்களா?

"இப்படிப்பட்ட பாடல்கள் நிச்சயமாக எழுத மாட்டேன். அது எப்பேர்ப்பட்ட கட்டாயச் சூழலாக இருந்தாலும்கூட நான் நச்சுக் கலக்கும் வக்ரத்துக்குத் துணைபோக மாட்டேன். அப்படிப்பட்ட பாடலை நான் நிராகரித்து விடுவேன். கவிஞனின் இலக்கியத் தாக்கமும் தீராத ஆளுமையும் ஒரு சிறந்த இயக்குநரின் மேற்பார்வையில் நல்ல இரசனையுடன்கூடியகளைத்தர இயலும். அப்படிப்பட்ட பாடல்களிலேயே என் கவனமும்" என்று உறுதியான குரலில் பதிலளித்தார் யுகபாரதி.

வளரும் சமூகம், நம் குழந்தைகள் ஒரு ஆரோக்கியமான சூழலில் வளர வேண்டும். அவர்களுக்கு எதையும் கசக்கி முகரக் கற்றுக் கொடுக்கக் கூடாது. சமூக மாற்றங்களை நம் பாடல்கள் பிரதிபலிக்கலாம். பாடல்களில் ஆங்கிலக் கலப்பு இருக்கிறதே என்றால் அது இந்தக்கால இளைஞர்களின் சிந்தனையைப் பிரதிபலிப்பதாய் எடுத்துக் கொள்ளலாம். நமது இளைஞர்கள் காதலிக்கிறார்கள், நண்பர்களாயிருக்கின்றார்கள் சந்தோசப்படுவோம்.

இப்படிப்பட்ட திரைப்படப் பாடல்களின் மூலம் அவர்களை வில்லனாக்காதீர்கள். தரங்கெட்ட வரிகளுக்கு உயிரூட்டுவது தரமான இசைதான் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்து யாருக்கும் இருக்கப்போவதில்லை. ஒவ்வொரு இசையமைப்பாளருக்கும், இயக்குநருக்கும் இதில் சமூகப் பொறுப்பு இருக்கின்றது.

இனியாவது இதைத்தான் மக்கள் விரும்புகின்றார்கள் என்ற பொய்யை 'மாய மான்' போல் சித்திரிக்காமல் நல்ல பாடல்களைக் கொடுங்கள். தரங்கெட்ட பாடல்களைக் கொடுப்பதன் மூலம் நீங்கள் தரங்கெட்டவர்களாகாதீர்கள்.

(காற்றின் மொழி – நூல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருக்கூத்து 4

சாரா

வீதியில் பல ரகங்களில் வாகனங்கள் உலாவுவதும் அந்த வாகனங்களில் பற்பல ரகங்களில் மனிதர்கள் உலாவுவதுமே இன்றைய காலம். வாகனம் ஒன்றுக்குள் இணைந்து பயணித்துக் கொள்ளும் மனிதர்கள் தமக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் அசௌகரியங்களை ஒத்த செயலே - அதன் பிரதிபலிப்பே வீதிகளில் பயணிக்கின்ற வாகனங்கள் ஒவ்வொன்றிலும் தெரிகின்றது. அவை ஒன்றுடன் ஒன்று முட்டிமோதிக் கொள்ளும் முரண்போக்கு அவர்தம் மனங்களில் இருந்து முகிழ்ப்பவை என்பதைச் சுட்டுவதே இதற்கான மூலம்.



ஒருவரை ஒருவர் மதித்து, ஒருவருக்கு மற்றவர் உதவி, உடல் வலுவில் குறைந்தவர்கள், வயதில் மூத்தவர்கள், நோயாளிகள், என்றிருக்கும் இன்னும்பல மனிதாபிமானங்களையும் மதித்து ஒன்றித்துப் பயணிக்கத் தெரியாதவர்களுக்கும் வீதி ஒழுங்கறிந்து மற்றவர்களுக்கு இடையூறளிக்காமல் நேர்த்தியாகத் தத்தமது வாகனங்களைச் செலுத்திச் செல்லமுடியாதவர்களுக்கும் இடையே எந்தவொரு வேற்றுமைகளும் இல்லை என்பதே இதன் வெளிப்படை. இதற்கு மனிதம் மதிக்கப்படவேண்டும் எனும் கடப்பாடு அவர்தம் மனங்களில் உறுதியாயிருத்தல் வேண்டும். பாரபட்சம் என்பது அதில் அறவே அற்றிருக்கவும் வேண்டும்.





மனிதர்களுக்கு இயல்பாகவே இருக்க வேண்டிய மனிதாபிமானம் என்பது இல்லாதிருக்கும் சர்ந்தர்ப்பங்கள் இணங்காணப்பட்டதாலேயே அவற்றில் சில பின்நாட்களில் அறிவுறுத்தல்கள் ஆகின. பயணிகளை ஏற்றியிறக்கும் பஸ் ஒன்றுக்குள் ஓட்டுநரின் இருக்கைக்குப் பின்பிருந்து, வரிசையாக மதகுருமாருக்கு, கர்ப்பிணித்தாய்மாருக்கு எனத் தொடர்ச்சியாக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டமையை இதற்கு ஆதாரமாக்கலாம். ஆனால் இவற்றைவிட ஏராளம் அறிவுத்தல்களை இன்னும் மனிதர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியிருப்பது தான் கவலையளிக்கின்றது. அவர்களுக்குச் சுயமாக உய்த்துணர்ந்து கொள்ளும் திறன் இன்னும் இல்லாமலிருக்கின்றது.

இருக்கைகளைப் பூரணப்படுத்திவிட்ட மனிதர்களுடன் பயணித்துக்கொண்டிருக்கும் ஒரு உள்ளூர் பஸ்சில் இடைவழியில் சில கிறிஸ்தவக் கன்னியாஸ்திரிகள் ஏறிக்கொள்கின்றனர். அவர்களின் உள்ளத் தூய்மையை அந்த வெள்ளாடையும் உணர்த்தி நின்றது. இதுவரை இருக்கையில் அமர்ந்திருந்த பலதரப்பட்டவர்களுமாக எழுந்து அந்தக் கன்னியாஸ்திரிகள் அமரத் தமது ஆசனங்களைக் கொடுத்தனர். கன்னியாஸ்திரிகள் அனைவரும் அமர்ந்து கொண்டனர். இப்போது சிறிது தூரம் பயணித்ததும் அந்த பஸ்சில் தம்பதிகளாக நன்றாக வயது முதிர்ந்த இரண்டு முதியவர்கள் ஏறினர். தள்ளாடிக் கொண்டிருக்கும் இருவரும் ஒருவரை ஒருவர் இயலுமானவரைக்கும் வலுவாகப் பற்றியிருந்தனர். இப்போது இருக்கையிலிருந்த கன்னியாஸ்திரிகளில் வயது குறைந்த இருவர் எழுந்து அந்த இணைகளுக்கு இருக்கை அளித்தாம் போர்த்தியிருக்கும் மதத்தையும் தாண்டி மனிதம் மதிக்கப்படவேண்டியது என்பதை அவர்களின் செய்கை உணர்த்தியதைப்போலவே கன்னியஸ்திரிகளுக்கு இடமளித்த சதாரண மனிதர்களின் மனிதமும் மற்றவர்களுக்குப் பெரிதாகப் பட்டது.

இன்றைய காலத்தில் இது அருமையும் அற்பமும்கூட. பணம் படைத்தவரைக் கண்டால் எழுந்து இடம் கொடுப்பதும், பதவி படைத்தவருக்கு மரியாதை அளித்து உடல் வலு குன்றியவரைப் புறமொதுக்குவதும், படித்த ஒருவருக்கு அதீதமளித்து அடிமட்டத் தொழிலாளி ஒருவர் அருகிலிருப்பதை அருவருப்பாகப் பார்ப்பது போன்ற சம்பவங்களை இத்தகைய பயணச் சர்ந்தர்ப்பங்களில் நிறையவே கண்டுவிட்ட எனக்கும் இன்று நடந்திருக்கும் இந்த இயல்பான மனிதம் புதுமையானதாகத் தானிருந்தது. இதற்கு மாறாக மலிந்துவிட்ட இழிவான மனித நடத்தைகளை அறிவுறுத்தல்கள் ஊடாக நேர்த்தி செய்ய முற்பட்டால், நிலைமை எப்படியிருக்கும்? பஸ்சில் அது பற்றிய வாக்கியங்கள் இல்லாத இடம் ஏதாவது மிச்சமிருக்குமா? அல்லது முழுதையும் அறிவுறுத்தல்கள் ஆக்க ஒரு பஸ் வண்டிதான் போதுமானதாக இருக்குமா? இவற்றுக்கெல்லாம் முன்பாக இன்றுவரை அறிவுறுத்தப்பட்டிருக்கின்ற அந்த ஒரு சில வாக்கியங்களை ஒரு சிலராவது பின்பற்றுகின்றனரா?

> மனிதர்களுக்கு இயல்பாகவே இருக்க வேண்டிய மனிதாபிமானம் என்பது இல்லாதிருக்கும் சர்ந்தர்ப்பங்கள் இணங்காணப் பட்டதாலேயே அவற்றில் சில பின்நாள்களில் அறிவுறுத்தல்கள் ஆகின. பயணிகளை ஏற்றியிறக்கும் பஸ் ஒன்றுக்குள் ஓட்டுநரின் இருக்கைக்குப் பின்பிருந்து வரிசையாக மதகுருமாருக்கு, கர்ப்பிணித்தாய்மாருக்கு எனத் தொடர்ச்சியாக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டமையை இதற்கு ஆதாரமாக்கலாம்.






உசிலமணி

## இந்தவார முகநூலில்...

கிழக்கு ஐரோப்பிய நாடான பெலரசுக்குக் கூட்டமைப்பு நாடாளுமன்ற ஒருத்தர் அண்மையில போய் வந்திருக்கிறார். அவர் தனியாகப் போய் வரேல்ல. கூட சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் மாரும் போயிருக்கினம். அந்தக் கூட்டமைப்பு எம்.பி. நாட்டுக்கு 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை வாங்கிக் கொடுக்கத்தான் போனவர் என்று பேஸ்புக் போராளிகள் கடந்த மாதம் முழங்கித் தள்ளியிருந்திச்சினம். இதைக் 'கப்' பென்று கவ்விப்பிடித்துவிட்ட 'அப்புக்காத்துத்' தம்பி ஒருவர், சைக்கிள் கட்சியின்ர மே தின மேடைப் பேச்சில வைச்சு வெளுத்து வாங்கியிருக்கிறார். அதுக்கு அந்தக் கூட்டமைப்பு ஆளும் பதிலடி கொடுத்திருக்கிறார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முடிஞ்ச கையோட பதிலடிக்குப் பதிலடி கொடுப்பன் என்று அதுக்கும் அப்புக்காத்துத் தம்பி சவால் விட்டிருக்கிறார். அறிக்கை விட்டவர் விட்டதுதான். நானும் அதுபற்றி ஒவ்வொரு நாளும் ஏதாவது எடுத்துவிடுவார் என்று பார்த்தால் அது முடிஞ்சு ஒரு கிழமையாகியும் அப்புக்காத்துத் தம்பி அதைப்பற்றி மூச்சுக் காட்டாமல் இருக்கிறார். அந்தக் கூட்டமைப்பு ஆள்ளின்ர பெட்டிப்பாம்பா அடங்கிற்றாரோ இல்லாட்டித் தொழில்ல 'பிசி' ஆகிட்டாரோ தெரியேல்ல. அப்புக்காத்துத் தம்பி பதிலடி குடுக்கப் பின்வாங்கி விட்டால பேஸ்புக் போராளிகளுக்கும் கொஞ்சம் வேலையில்லாமல் போச்சுது. இல்லாட்டி இந்தக் கிழமை அதை வைச்சே பேஸ்புக் போராளிகள் பெரும் பிரளயம் நடத்தியிருப்பாங்கள்.



அமைச்சரவை மாற்றம் கடந்த கிழமை நடந்திருக்குது. அதைப் பற்றிப் பேஸ்புக் போராளிகள் பெருமளவு அலட்டிக் கொள்ளயில்லை. ஆனாலும் ரவிக் கருணாநாயக்காவின் திறமையீனத்தைப் பற்றிக் கொஞ்சம் பெரிந்து தள்ளியிருந்தாங்கள். அவற்ற திறமைக் குறைவை இவங்கள் சொல்லித்தான் மற்றவைக்குத் தெரியவேணும் என்ட தேவையிருக்காததால அது பெரிய பூதாகாரம் ஆகாமல்தான் போச்சுது.

Like Comment Share

ரஜினியின்ர ரசிகர் சந்திப்பு, அரசியல் பிரவேசம் பேஸ்புக் போராளிகளையும், மீம்ஸ் போடுறவங்களையும் கொஞ்சம் உசார் பண்ணி விட்டிருக்குது. ரஜினியின்ர அரசியல் நுழைவு பற்றிக் கிளம்பியிருக்கின்ற பேச்சுக்கே, இப்படி ஏராளம் எதிர் விமர்சனங்கள் என்றால் அவர் அரசியலுக்கு வந்தால் இவங்கள் என்னதான் செய்வாங்களோ தெரியேல்ல. அந்தக் காலத்தில இருந்து இப்ப வரைக்கும் சொல்லுற மாதிரி, 'நான் அரசியலுக்கு வாறதை ஆண்டவன்தான் தீர்மானிக்கணும்' என்டதையே தொடர்ந்தும் ரஜினி கடைப்பிடிப்பாராக இருந்தால் இரண்டு தரப்புக்குள்ளயும் இழுபறி இருக்காதுபோலத்தான் கிடக்குது. எப்பிடியும் எங்கட [illegible]ம் பாருங்கோ.

எல்லாத்தையும்விடக் கொஞ்சம் பரபரப்பாக மாற்றுக் கருத்தே இல்லாமல் ஒரு விசயம் பேஸ்புக்கில பரவினது. யாழ்ப்பாணக் கம்பசில படிக்கிற சிங்கள மாணவர் ஒருவர், இறுதிப்போரில கொல்லப்பட்டவர்களுக்காக வருடா வருடம் கடைப்பிடிக்கப்படுகின்ற முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் தொடர்பாகப் பதிவெற்றியிருந்த பதிவுதான் தீயாகப் பரவியது. சிங்கள மாணவனான அவரால் சிங்களத்தில் போடப்பட்ட பதிவை எம்மவர்கள் தமிழில் மொழி பெயர்த்து தரவேற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையிலிருந்து...!

அனார்கலி

## இளைஞர்கள் கொதிப்பு

பொதுபலசேன போன்ற சில இனவாதக்குழுக்களின் முஸ்லிம்களுக்கெதிரான செயற்பாடுகள் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் பெரும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளன. பொறுமைக்கும் எல்லையுண்டு. அரசு இதற்கு முற்றுப் புள்ளிவைக்காவிட்டால் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒருமித்த, காத்திரமான முடிவு எடுக்கப்படும்.

இவ்வாறு எச்சரித்துள்ளார் பதில் சுகாதார அமைச்சர் எம்.பைஸால்காசிம். நிந்தவூரில் நடைபெற்ற இலக்கியநூல் வெளியீட்டு விழா ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தப் பகிரங்க எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இவருடைய இத்தகைய பேச்சை 'வாய்ச்சொல்லில் வீரரடி...' என்பதாக நாளை எவரும் விமர்சிக்க இடமளிக்காதிருந்தால் சரிதான்!




## நோன்பை வரவேற்போம்!

முஸ்லிம்களின் புனிதநோன்பு ஆரம்பமாகும் மாதம் இது. இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றான நோன்பைநோற்பதற்கு முஸ்லிம்கள் தயாராகிவிட்டனர். தென்கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் புனித நோன்பை வரவேற்கும் பெனர்கள், பதாகைகள் பரவலாகத் தொங்கவிடப்பட்டுள்ளன. "புனித ரமழானை வரவேற்போம்" எனக் கூறும் பெனர் ஒன்று சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாகவும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

## என் வழி... தனி... வழி

ஞானசாரதேரர் அத்துமீறி எனது அமைச்சுக்குள் நுழைந்து அடாவடி காட்ட முனைவரா னால், அமைச்சர் மனோகணேசன் போல் என்னால் நடக்கமுடியாது. என் கவனிப்பு அடாவடிக்கு ஏற்றதாக வேறு பாணியில் அமையும்.

இவ்வாறு, படையப்பாபடத்தில் ரஜினி கூறும் 'என் வழி... தனி வழி...' பாணியில் கூறியிருக்கிறார் முஸ்லிம் காங்கிரஸின் பதில் தலைவரும், பிரதிவிளையாட்டுத்துறை அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீஸ்.

அம்பாறை மாவட்டத்தில் மெஸ்றோ அமைப்பை ஆரம்பித்து, சமூகப் பிரச்சினைகளுக்காக உரத்துக் குரலெழுப்பி, ஆர்ப்பாட்டங்கள், எழுச்சிப் போராட்டங்கள்பலசெய்து, அதன் தொடர்ச்சியாக அரசியலுக்குள் புகுந்தவர் ஹரீஸ்! அவரிடமா ஞானசாரதேரரின் அடாவடி பலிப்பது? என்கிறார் அவரது ஆதரவாளர் ஒருவர்.

## தாதியர் தினம்

கல்முனைப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் பன்னாட்டுத் தாதியர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில், தாதிய உத்தியோகத்தர் எஸ்.ஜவால்தீன் தலைமையிலும் தாதியர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் திருமதி. சஹீலா இஸடீன், 'சமூகம் தாதிய உத்தியோகத்தர்களிடமிருந்து நிறைந்த சேவைகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது' எனவும் 'தாதியர்கள் பொறுப் புணர்ந்து செயற்பட வேண்டும்' எனவும் கூறினார்







## பாலப்பழப் பருவம் உச்சத்தில்...!

உடலுக்குச் சில ஊட்டங்களை வழங்கும் இனிப்பான பாலப்பழப் பருவம் தற்பொழுது கிழக்கிலும் களைகட்டியுள்ளது.

வருடம் ஒருமுறை வந்து சுவைதரும் பாலப்பழங்களை வாங்கிச் சுவைப்பதில் மக்கள் தனி ஆர்வம் காட்டிவருகின்றனர். இதனால் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், உகந்தை, பாணமை போன்ற பிரதேசங்களிலுள்ள காட்டுப்பகுதிகளில் கிடைக்கும் பாலப்பழங்களைக் கொள்வனவு செய்து வந்து விற்பனை செய்து வருமானம் தேடுவதிலும் ஒரு பகுதித் தொழிலாளர்கள் ஈடுபாடு காட்டுகின்றனர்.



## கை உயர்த்தாதீர்

கரையோர மாவட்டங்களைக் கணக்கிலேடுக்காமல் உருவாக்கப்படுகின்ற எத்தகைய அரசியலமைப்பு மாற்றத்துக்கும் ஆதரவாளித்து கிழக்குமாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும், நாடாளுமன்றத்தில் கை உயத்தக்கூடாது என முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம். ரி. ஹஸனலி வலியுறுத்தியுள்ளார். இந்தக்கூற்றை கிழக்குக்கு வெளியிலுள்ள முஸ்லிம்கள் பிரதேச வாதமாகக்கருதக் கூடாது எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



## மண்ணுக்குப் பெருமை!

சட்டத்துறையில் புலமைத்தேர்ச்சி பெற்று, அரசதலைவரால் அரசதலைவர் சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளிரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான சட்டமுதுமானி எம்.நிஸாம் காரியப்பரை பாராட்டிக் கௌரவிக்கும் பெருவிழா ஒன்று அவரது சொந்த மண்ணான கல்முனையில் நடைபெற்றது. 'மண்ணுக்குப் பெருமை சேர்த்த மகனுக்குச் சொந்த மண் வழங்கும் கௌரவம்' எனும் தலைப்பில், கல்முனை முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர், மருத்துவர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் தலைமையில் இந்தப் பெருவிழா நடைபெற்றது.

## நீக்கம் செய்யப்படவில்லை

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்றிருந்த வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்கள் எவையும் நீக்கம் செய்யப்படவில்லையென கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.அப்துல்நிஸாம் தெரிவித்துள்ளார். எந்தவொரு வருடாந்த இடமாற்றத்தையும் ஆளுநர் நீக்கம் செய்யவில்லை என்பதைக் கல்விப்பணிப்பாளராகிய தான் உத்தியோகபூர்வமாக அறிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இனி என்ன செய்வது? ஆசிரியர்கள் செய்துள்ள மேன்முறையீடுகளும் கைகொடுக்காவிட்டால், இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களின் பாடு திண்டாட்டம்தான்.

## என்னதான் சொல்கிறீர்கள்...?

அரசியல் ரீதியாக முஸ்லிம்களும் தமிழர்களும் ஒன்றித்துப் பயணிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது எனக் கருத்து வெளியிட்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், தமிழ் - முஸ்லிம்களிடையே ஒற்றுமை வலுப்பெறவேண்டுமென்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இக்கட்டான சூழ்நிலைகள் வந்தால், ஒன்றித்த பயண அவசியக்குரலும், ஒற்றுமைக்குரலும் எழுகின்றது. சரி... இவைகளுக்காக இவர்கள் இதுவரை மக்களிடையே முன்னெடுத்த நடவடிக்கைகள் தான் என்ன? என்ற குரலொன்றும் ஒலிக்கின்றது?

தமிழர்களும், முஸ்லிம்களும் அரசியலில் ஒரே பாதையில் பயணிக்க வேண்டுமெனக் கூறுவோர் அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கக் கூடாது எனக்கூறுகின்றார் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி. இந்தக் கூற்றை வாய்ச் சவாடலாக இல்லாமல் செயற்பாட்டு வடிவம் கொடுப்பதனால் சிலர் அரசை விட்டும் வெளியேற வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைதொடர்பில் தொடர்ந்தும் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிட்டிருக்கும் ஹஸனலி, முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆள்சேர்த்துக் கொடுக்கும் முகவராகத் தொழிற்படமுடியாது எனவும் கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை விரிவாக்கும் அருங்காட்சியகங்கள்

ஏ.ஜே .ஞானேந்திரன்

காலத்தால் அழிந்து விட்டனவற்றை நம்கண்முன்னே ஒரு காட்சியாக நிறுத்தி அந்தக் காலகட்டத்துக்கு நம்மை அழைத்துச் செல்வதில் அருங்காட்சியகங்கள் முன்னிற்கின்றன. ரய்ட் சகோதரர்கள் பாவித்த முதல் விமானத்தின் எஞ்சிய பாகங்களாக இருக்கட்டும் அல்லது கால வெள்ள ஓட்டத்தில் அழிந்து விட்ட டைனோசர்களின் எச்சங்களாக இருக்கட்டும் அல்லது இரண்டாம் உலகப் போரில் வெடிக்காத குண்டாக இருக்கட்டும் அல்லது எகிப்திய மம்மிகளாக இருக்கட்டும் நமக்கு சுவையாகப் பாடம் சொல்லித் தருபவைதான் இந்த அருங்காட்சியகங்கள்.

சரித்திரம் என்பது தரித்திரம் என்று இந்தப் பாடத்தை ஆண்டு வாரியாக , திகதி வாரியாக படிக்கத் திணறிய மாணவர்கள் சொல்லிக் கொள்வதுண்டு . இந்தச் சரித்திரத்தைக் கற்கும்போது அட இப்படி இப்படி எல்லாம் செய்தா மனிதர் நாம் இப்படி வந்தோம்...! என்ற வியப்பே மேலிடும் . ஒரு கண்டுபிடிப்பை நிகழ்த்தும்போது, ஒரு விஞ்ஞானி எவ்வளவு ஆனந்தம் அடைகிறார் என்பதைப் படம் பிடித்து காட்ட வரலாற்றில் ஒரு சுவாரசியமான சம்பவம் உண்டு.


சுமார் 2,200 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற சம்பவம், அது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றி எந்த நேரமும் சிந்தித் துக் கொண்டிருந்தார், அந்த விஞ்ஞானி.

அந்தச் சிந்தனையோடு ஒருமுறை குளித்துக் கொண்டிருந்தபோது, அவர் தேடிய விடை கிடைத்தது. ஆனந்த பெருக்கில் அவர் என்ன செய்தார் தெரியுமா? தான் ஆடையின்றி இருக்கிறார் என்பதையும் மறந்து, குளித்துக்கொண்டிருந்த அதே நிலையில் கிரேக்கத்து தெருக்களில், "யுரேக்கா யுரேக்கா" என்று மகிழ்ச்சியுடன் கூச்சலிட்டவாறு ஓடினார். 'யுரேக்கா' என்றால் கிரேக்க மொழியில் 'கண்டுபிடித்துவிட்டேன்' என்று பொருள்.

'ஞானம், மானத்தைவிட பெரியது' என்று எண்ணியபடி, அவ்வாறு ஓடிய அவர்தான் பொருள்களின் 'டென்ஸிட்டி', அதாவது 'அடர்த்தி' பற்றியும் நெம்புகோல் தத்துவத்தையும் அறிந்து சொன்ன கிரேக்க விஞ்ஞானி ,ஆர்க்கிமிடிஸ். கிரேக்கத்தின் சிசிலி என்ற பகுதியில் சிரகூஸ் நகரில் கி.பி 287 ம் ஆண்டு பிறந்தார், ஆர்க்கிமிடிஸ்..

இது சரித்திரம் . இப்படியானவர்களின் கண்டுபிடிப்புகளால்தான் இன்று உலகம் அசுர வேகத்தில் வளர்ந்து நிற்கின்றது . இந்த அருங்காட்சியகங்கள், ஒரு சரித்திரமாக இவர்களை, இவர்களின் முதன்மையான கண்டுபிடிப்புக்களை நம் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன . இது பழசு என்று நாம் ஒதுக்கி விட முடியுமா? பழையது ஒன்றில் இருந்துதானே புதியது முளைக்கின்றது .

அம்மா பழையவள் . அவள் பெற்றுக் கொடுக்கும் குழந்தை புதியது . அதற்காக அம்மாவை பழையவள் என்று ஒதுக்கி விட முடியுமா ? உலக நாடுகள் எங்கும் பல அருங்காட்சியகங்கள். இருக்கின்றன . 120 உலக நாடுகளில்க கிட்டத்தட்ட 30,000 அருங்காட்சியகங்கள் இருப்பதாகக் கணிப்பிடுகிறார்கள். இதில் முதல் ஐந்து வரையான தெரிவில் பின்வரும் அருங்காட்சியகங்கள். அடங்குகின்றன . முதல் இடத்தில் நிற்பது 'லோவ்ரே' என்னும் பெயரைக் கொண்ட பாரிஸ் நகர அருங்காட்சியகம். இங்கு வருடாவருடம் 8,500,000 பார்வையாளர்கள் வந்து போகும் அளவிற்கு. அளவில் பிரமாண்டமானதாயும் பல அரிய ஓவியங்களுடனும் உலகப் புகழ்பெற்ற ஒன்றாகத் திகழ்கின்றது . 'டா வின்சி கோட்' என்ற பெயரில்நாவலாகவும்திரைப்படமாகவும் வெளிவந்து உலகை உலுப்பிய கதையானது இந்த அருங்காட்சியகத்தை பின்புல மாகக் கொண்டது என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும் . மோனோ லிசா உட்பட பல உலகப்புகழ் கொண்ட ஓவியங்கள் இங்கிருப்பது இதன் தனிச்சிறப்பு. ஆதி காலத்திலிருந்து 21ம் நூற்றாண்டு காலத்திற்கு உட்பட்ட 38,000 பொருட்கள் இங்கு பார்வைக்கு விடப்பட்டுள்ளன.



இரண்டாவது இடத்தைப் பிடிப்பது அமெரிக்காவின், வாஷிங்டன் நகரிலுள்ள ஒரு அருங்காட்சியகம் விண்வெளிப் பயணங்கள் பற்றிய கதை சொல்லும் இந்த இடத்திற்கு 8,300,000 பார்வையாளர்கள் வந்து போகிறார்கள் . விமானப் பயணச் சரித்திரங்களில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இது ஒருபெரு விருந்து . சந்திரனில் எடுத்த கல்லும் இங்கேதான் இருக்கிறது. நீங்கள் தொட்டுப் பார்க்கவும் அனுமதிஉண்டு வருடம்ஒன்றிற்கு6,800,000 பார்வையாளர்களை சுண்டி இழுக்கும் தேசீய சரித்திர அருங்காட்சியகமும் வொஷிங்டன் நகரில்தான் இருக்கின்றது. இதற்கு மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டுள்ளது . 126மில்லியன் பொருட்களை பார்வைக்கு விட்டுள்ள இதன் பிரமாண்டம் உங்களுக்கு நன்றாகவே புரிந்திருக்கும்.



நான்காவது இடத்தில் நிற்பது இலண்டன் மாநகரில் உள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகம். இதை ஒன்றுக்கு நான்கு தடவைகள் நேரில் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததால் இதைப்பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம் . அந்த அளவுக்கு அறிவுக்குத் தீனி போடும் விடயங்கள் விரிகின்றன. பிரமிப்பில் ஆழ்த்துகின்றன . ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல என்பதுபோல் இந்த அருங்காட்சியகத்தை முழுமையாகப் பார்த்து ரசிக்க குறைந்த பட்சம் ஒரு மாத காலமாவது வேண்டும் . 5,842,138 பார்வையாளர்கள் வருடாவருடம் வந்து போகின்றார்கள் என்கின்றன கணிப்புகள் . எந்த நுழைவுக் கட்டணமும் இல்லாமல் இலவசமாகப் போய் வரலாம் என்பது இதன் தனிச்சிறப்பு. இதுமட்டுமல்ல இங்குள்ள அனைத்து அருங்காட்சியகங்களுக்கும் அனுமதி இலவசம் என்று அரசு ஓர் அற்புதமான சலுகையைத் தந்துள்ளது . உலகின் முதல் பொதுஜன அருங்காட்சியகமாக இந்த அருங்காட்சியகம் 1753 இல் ஆரம்பிக்கப்படுள்ளது. வருடத்திற்கு 5000என்றிருந்த பார்வையாளர்கள் தொகை இன்று பல மில்லியன்களைத் தொட்டு விட்டது . புதிது புதிதாகப் பலவற்றைச் சேர்க்கும் இவர்கள் பல கண்காட்சிகளை நடாத்துவதோடு பல ஆய்வுகளையும் நடாத்தி வருகின்றார்கள் . இங்கே சுமாராக 8 மில்லியன் பொருள்கள் வரையில் இருக்கின்றன . மனித சரித்திரம் , கலை, கலாசாரம் என்பவற்றை அடிப்படையாக வைத்தே இந்த அருங்காட்சியகம் எழுப்பப்பட்டுள்ளது .

ஐந்தாவதில் வருவது நியூயோர்க் நகரின் ஓவிய அருங்காட்சியகம். 5,216,988 வரையான பார்வையாளர்கள் வந்து போகிறார்கள். யாழ். மண்ணில்நல்லூரில் உள்ள தொல்லியல்சார் அருங்காட்சியகம் பல அறிவுள்ள விடயங்களை நமக்கு தருகின்றது. மிக அரிதான சேகரிப்புகளைக் கொண்ட இங்காவது நீங்கள் ஒரு தடவை சென்றுள்ளீர்களா? கல்விக்கு கரை ஏது ? நம் அறிவை வளர்க்கும் இந்த அருங்காட்சியகங்களை இனியும் நாம் அலட்சியப்படுத்தலாமா? இன்றே செல்வோம் நன்றே கற்போம்.

## எதுவும்



இதுவும் கடந்து போகும்
ஆனால்
எதுவும் மறந்துபோவதற்கில்லை

வட்டிழந்த பனைகள் சொல்லும்
எம் உயரத்தை....

மரித்த தாயின் கொங்கையில்
பால்தேடிய குழந்தை சொல்லும்
பசியின் அகோரத்தை....

வன்னிமண் சொல்லும்
தென்றல் காற்றின் பரிசத்தையும்
கந்தக காற்றின் உக்கிரத்தையும்...

மறவர்களின் செங்குருதி சொல்லும்
தமிழனின் திறன் வீரத்தை...

கல்லறைகள் சொல்லும்
சுதந்திரக்காற்றின் விலையை...

துரோகிகளின் கொக்கரிப்பு சொல்லும்
நாம் முதுகில் குற்றப்பட்டதை...

நீறுபூத்த நெருப்பாக
இன்னும்
எம்முள் சுதந்திர வேட்கை...
இதுவும் கடந்து போகும்
ஆனால்
எதுவும் மறந்துபோவதற்கில்லை...

சரோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லும் வழியின் தூரம்... IV

ப்ரியமதா பயஸ்

போர்ச்சூழலில் திருமணம், அகோரமான போரின் தருணத்தில் குழந்தை என்று பல நெருக்கடிகள் எம்மைத் தொடர்ந்தன மிக முக்கியமான காலகட்டங்கள் குண்டுச் சத்தங்களோடு கழிந்தாலும் அத்தனைக்கும் மத்தியில் வாழும் எமது உணர்வு எந்த நேரமும் விடுதலை வேட்கையையே மூர்க்கமாய்க் கொண்டிருந்தது.

**அவர்களின் காலத்தில் மாத்திரம் சாத்தியமானவை**

குப்பி விளக்கும், பதுங்குக்குழி வாழ்க்கையும் ஒருபோதும் சலித்ததில்லை. அத்தனைநெருக்கடிக்குள்ளும் நாம் மகிழ்ச்சியாகவே இருந்தோம் என்பது வெளிப்படை. ஒரு பிச்சைக்காரனைக் காணமுடியாது, பாலியல்சேட்டைகள் என்பதாய்த் துளியளவும் பயம் இல்லை. பெண்களின் தன்னம்பிக்கையான வாழ்வும் அங்கேயே மிளிர்ந்தது. ஒரே நேரத்தில் பல துறைகளுக்குள் பணியாற்றும் பக்குவத்தையும், தைரியத்தையும், ஆற்றலையும் அங்கேயே நானும் பெற்றிருந்தேன். ஒரே நேரத்தில் பரந்துபட்ட துறைகளில் பணியாற்றுவதென்பதும் அதற்கான சந்தர்ப்பங்கள் கிடைப்பதென்பதும் இலகுவான விடயம் அல்ல. அன்றைய காலகட்டத்தில் எனக்கு அத்தனை சந்தர்ப்பங்களும் கிடைத்தன.

அதன்பின்னரான காலப்பகுதியில் வங்கிக்குள் நான் பணியாற்றும்போதும் பரந்த ஊடகவெளி எனக்கான களத்தைத் தந்து கொண்டே இருந்தது. அந்தத் தன்னம்பிக்கையான வாழ்வை அங்கிருந்தே நான் பெற்றுக்கொண்டேன். இப்போது ஒரு இடத்தில் கூட எமது திறமையை சரியாக வெளிக்காட்டமுடியவில்லை. இதைக் கால மாற்றம் என்று நினைக்கின்றேன். இங்கே நான் குறிப்பிட வருவது, பல வாழ்வியல் நிலைமைகளுக்குள்ளும், மக்களின் ஒழுங்குகளுக்குள்ளும், பெண்கள் - ஆண்கள் என்ற பால்நிலைப் பாகுபாடற்ற சமமான வாழ்க்கைப் புரிதலை அங்கே புலிகள் விதைத்திருந்தனர். அது முளைத்து மரமாகிப் பரந்து விரிந்திருந்தது என்பதும் உண்மையே.

**அவசியத் தேவைகளின் தட்டுப்பாடு**

நல்ல நெறிப்படுத்தப்பட்ட சமூக விழுமியங்களுடன் எமது வாழ்க்கைப் பயணம் தொடர்ந்தது. அப்போது, மருந்துகள், உணவுப்பொருட்கள் என்பன தேவாமிர்தங்களை விடவும் பெறுமதியானவையாக இருந்தன. அரசு கடுமையான பொருளாதார, மருந்துத் தட்டுப்பாடுகளை வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் தலை விரித்தாடச் செய்திருந்தது.

உணவுகளை நிரப்பிக்கொண்ட பாரவூர்திகள் ஒவ்வொரு மாதமும் வன்னிக்குள் வரும் காலம் வசந்தகாலம் தான். வீதியில் நின்றுகொண்டவர்களாய் "முப்பது... நாற்பது..." என்று எண்ணிக் கொண்டு அவை போய் முடியும் வரையும் அந்தப் பாரவூர்திகளைப் பார்த்துக்கொண்டு இருப்போம். அப்படிப் பாரவூர்திகள் போகும்போது "இரண்டு மாமூடை இதில் விழாதோ..." என்று எனது நண்பர்கள் நகைச்சுவையாகவும் தேவையின் அவசியம் கருதியும் கூறிச் சிரித்தும் இருக்கின்றனர்.

உணவுக்கு முதலிடத்தில் மருத்துவத் தேவைக்கு நாம் எவ்வளவு அவதிப்பட்டோம் என்பதை இப்போது நினைக்கும் போதும் நெஞ்சம் கனத்துப்போகும்.

**என்னுடைய பிரசவ இழுபறி...**

21.11.2006 அன்று அதிகாலை இரண்டு மணி.

எனக்குப் பிரசவ வலி ஏற்பட்டது. அது கடும் மழைகாலம். அவசரத்துக்கு வாக



னம் என்று சொல்லிக்கொள்ள உழவு இயந்திரங்களைத்தவிர அங்கே எதுவும் இல்லை. அந்த அதிகாலை, இரண்டு மணிக்கு எனது கணவர் ஒரு முச்சக்கர வண்டியில் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கின்றார்.

வீதிகள் என்பதை நினைத்துப் பார்க்க முடியாது. குன்றும் குழியுமான பாதைகள். மழை வெள்ளம் அதில் நிறைந்து நிற்க அந்தப் பாதையூடான பயணம் என்பது எவ்வளவு சிரமானது என்பதை இப்போது நினைத்தாலும் அது ஏற்படுத்திவிட்ட வலியை என்னால் நன்றாக உணரமுடிகின்றது. ஆனால் அப்போது அதை நான் பெரிதுபடுத்தியிருக்கவில்லை. அந்தக்காலம் எந்தச் சிரமத்தையும் பொருட்படுத்தாத பொற்காலம்.

அதிகாலை ஐந்து மணி வரைப் பிரசவ வலி நீடித்திருந்தது. பின்னர் எனக்குரிய சிகிச்சை வசதிகள் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் போதாது என்பதால் உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பவேண்டும் என்று மருத்துவர்கள் முடிவெடுக்கின்றனர். கிளிநொச்சி மருத்துவமனைக்கு அதிவேகமாக அம்புலன்ஸ் வண்டி ஒன்றில் நான் கொண்டுசெல்லப் படுகின்றேன். அங்கிருக்கும் மருத்துவர்களும் கையை விரித்தனர். இங்கும் எனக்கான சிகிச்சை வசதிகள் இல்லை என்று. உடனடியாக நான் யாழ்ப்பாணத்துக்கோ அல்லது வவுனியாவுக்கோ அனுப்பப்பட வேண்டிய நிலை கட்டாயமானது. அப்போது யாழ்ப்பாணத்துக்கு அனுப்பமுடியாது.

**போட்டிபோட்ட தாதியர்கள்**

இங்கே தான் சில சுவாரஸ்யமான சம்பவங்களும் கூடவே நடக்கின்றன. அப்போது துணி வகைகள், உருளைக் கிழங்கு, ஒரு சில அத்தியாவசிய மருந்துப் பொருட்களை வன்னிக்குவெளியே நோயாளர்களுடன் அம்புலன்சில் போகும் தாதிகள் மற்றும் சாரதிகளாலேயும் தமது தேவைக்கு சொற் பமாகக் கொண்டுவர முடிந்தது. அதற்காக நோயாளர்களோடு நோயாளர் வண்டியில் வன்னியைவிட்டு வெளியே சென்றுவருவதற்குத்தாதிகள் முண்டியடிப்பர். (அத்தனை கொடுமையான பிரசவ வேதனையிலும் நான் இந்தச் சம்பவங்களை ரசித்துச் சிரித்தேன் ) இப்போது ஆபத்தான நோயாளி நான் என்பதால் சிறந்த மருத்துவத் தாதி ஒருவரே என்னோடு வரவேண்டியதாயிருந்தது. ஆனாலும் அங்கே அன்றைய நாள் கடமையில் சாதாரண தாதி ஒருவரே நின்றிருந்தார். ஆனால் வைத்தியர் என்னோடு செல்வதற்குப் பயிற்றப்பட்ட தாதி ஒருவரையே அனுப்பினார்.

அன்றையநாள் கடமையில் இருந்த தாதிக்கும் என்னோடு அனுப்பப்பட்ட தாதிக்கும் இதனால் கருத்து முரண்பாடும் வந்துவிட்டது. காரணம் - அங்கிருந்து வரும்போது வீட்டுக்குத் தேவையான ஒருசில பொருட்களைக் கொண்டு வரலாம் என்ற எண்ணம் மட்டுமே.

> குப்பி விளக்கும், பதுங்குக் குழி வாழ்க்கையும் ஒருபோதும் சலித்ததில்லை. அத்தனைநெருக்கடிக்குள்ளும் நாம் மகிழ்ச்சியாகவே இருந்தோம் என்பது வெளிப்படை. ஒரு பிச்சைக்காரனைக் காணமுடியாது, பாலியல் சேட்டைகள் என்பதாய்த் துளியளவும் பயம் இல்லை. பெண்களின் தன்னம்பிக்கையான வாழ்வும் அங்கேயே மிளிர்ந்தது.

**வன்னியிலிருந்து வவுனியாவுக்கு**

யாழ்ப்பாணம், வவுனியா என்றிருந்த இரண்டு தெரிவுகளில் என்னை வவுனியாவுக்கே கொண்டு செல்வதாகத் தீர்மானித்தனர். நான் வவுனியா மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றேன். குன்றும் குழியுமான பாதை வலிகளை இன்னும் கூட்டியது. சாவின்விளிம்பில்நிற்கும்எனக்கு அந்த நேரம் மருத்துவத் தேவைக்கு இத்தனை மைல்கள் தூரம் போகிறேனே என்ற சிந்தனை இருக்கவில்லை. ஆனால் இப்போது அதைச் சிந்திக்கும் போது அந்தப் போரியல் வாழ்வு இவ்வளவு சுமைகளைத் தாங்கவும் என்னைப் பயிற்றுவித்திருக்கின்றதே என்பதைநினைக்கும்போது பெருமையாக உள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் பிரசவக் கடமைகளை முடித்துக் கொண்டு சிகிச்சைகளையும் பெற்றுவிட்டு ஒரு வாரத்துக்குப் பின்னர் வன்னிக்குத் திரும்பும் நிலைமை தென்பட்டது.

**எனக்குள் ஏற்பட்ட சுதந்திரத் தாகம்**

என்னைப் பராமரிக்க வந்திருந்த தாதியர்களைப்போலவே நானும் எனக்குத் தேவையான சில உணவுப்பொருள்களையும் பிறந்த சிசுவுக்குத் தேவையான மருந்துப்பொருட்கள் சிலவற்றையும் வாங்கிக் கொண்டேன். ஓமந்தை சோதனைச்சாவடியில் அம்புலன்ஸ் வண்டி சோதனையிடப்படுகின்றது. எனது பைக்குள் ஒரு கிலோ உருளைக்கிழங்கும், குழந்தைக்கான சில பால்மாப் பைக்கற்றுக்களும் இருந்தன. அத்தோடு உடனடிக்காயங்களுக்கு போடும் 'சொப்ரமகசீன்' என்ற களிம்பு மருந்துப் பெட்டிகளும் இருந்தன. அப்போது அந்த மருந்துப் பசைக்கு வன்னியில் கடுமையான தட்டுப்பாடு நிலவியது. உடனடிக்காயங்களுக்கு அந்தக் களிம்பு அருமருந்து. குண்டுச் சிதறல்களின் சிராய்ப்புகளுக்கும் காயங்களை விரைவில் ஆற்றுவதற்கும் அந்தக் களிம்பு மருந்தை அதிகம் பயன்படுத்துகின்றனர் என்ற காரணத்துக்காக அந்த மருந்தை வன்னிக்குள் அனுமதிப்பதற்கு அரசு முற்றாகத் தடை விதித்திருந்தது. காலத்தின் தேவை கருதியும் அந்த மருந்தின் அவசியம் கருதியும் மூன்று டியூப் மருந்துகளை நான் வாங்கியிருந்தேன். அந்த மருந்து டியூப் ஒன்றையும், ஒரு கிலோ உருளைக் கிழங்கையும், ஒரு பால்மாப் பையையும் தவிர என்னுடைய ஏனைய பொருட்கள் அனைத்தையும் இராணுவம் பறிமுதல் செய்கின்றது.

பிறந்து ஒரு வாரமேயான குழந்தையைக் கையில் வைத்திருக்கும் எனது நிலையை உணர்ந்தும் அதன் பசி தீர்க்கும் உணவான பால்மாப் பைகளையும் இராணுவம் பறிமுதல் செய்தது. எமக்கான சுதந்திர வேட்கை அவசியமானதே எனும் உறுதிப்பாடு என்னை அறியாமலேயே ஒருவாரச் சிசுவைக் கையிலேந்திக் கொண்டிருக்கும் தாய்மை நிலையிலும் எனக்குள் ஆழமாக வேரோடிக் கொண்டது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

சி. கதிர்காமநாதன்

# ‘சிறிலங்கா’ப் பழக்கம்

வேலை முடிந்து வீடு திரும்பும்போது வீடு அமளிப்பட்டுக் கொண்டு இருந்தது. சற்றுச் சிரத்தையுடன் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்கள். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் எல்லாம் எனது மனைவியின் தலைமையில் பிள்ளைகளோடு ஆகிக் கொண்டிருந்தன. தோளில் தொங்கிய பையை மேசையின் மேல் வைத்து விட்டு மனைவி - பிள்ளைகளைப் பார்த்தேன்.

“என்னப்பா... உமக்குச் சும்மா இருக்கேலாதே? லீவு விட்டாக் காணும் கையும், காலும் சும்மா இருக்காது. ஒரு சாமன் சக்கட்டையும் ஒரே இடத்தில வைச்சிருக்க விடமாட்டீர் “

“உதுதான் உங்களுக்குத் தெரியும். உப்பிடி ஒரே இடத்தில வைச்சிருந்தா... தூசுகள் பிடிச்சு எல்லாம் குப்பையாய்ப் போயிரும்... இருந்தாப்போல ஆட்களாரும் வீட்டுக்கு வந்தால்...வீடு கிடக்கிற கோலத்தைப் பார்த்து என்ன நினைப்பினம் தெரியுமோ?"

நான் பதில் கூறவில்லை. அவள் சொன்னது சரியாகத்தான் பட்டது.

வெளிநாட்டுக் காரரும் ஊருக்கு வரத் தொடங்கீட்டினம்...சிவம் மச்சானின்ர மூத்தவன் பிரபுவும் குடும்பத்தோட வந்து நிற்கிறான். அவன் வீட்டுக்கு வந்தாலும் வருவான். உண்மைதான் புலம்பெயர் தமிழர்கள் எத்தனையோபேர் புலம்பெயராத தமிழர்களைப் பார்க்க வருவார்கள். எனவே நாங்கள் அவ்வாறு வரும் உறவுகளை வரவேற்கத் தயாராக இருக்கவேண்டும்.

●●●

மூன்று நாட்கள் கடந்தாயின.

மாலை ஏழு மணிக்கு வீட்டு வாசலில் வாகனமென்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அத்தோடு மனைவியின் பெயர் சொல்லி அழைக்கும் குரலும் கேட்டது.

கடமையில் இருந்த நாங்கள் அவசர அவசரமாக வெளியே வந்தோம்.

“அட... வாரும் பிரபு...

வாங்கோ பிள்ளை....

செல்லங்கள் வாங்கோடா

எப்படி இருக்கிறியள்...?"

“நல்லாய் இருக்கிறம்"

“அண்ணை நீங்களும் அப்ப பார்த்த மாதிரியே இருக்கிறியள்"

“இங்க வாற ஆக்கள் எல்லாரும் அப்பிடித்தான் சொல்லீனம். எல்லாம் என்ர மனிசி தாற அளவுச் சாப்பாடு தான் காரணம்"

“இது மூத்த மகன் டிலக்சன். இது தங்கச்சி விதுசாளினி"

எல்லோரும் இருக்கையில் அமர்ந்து கொண்டோம். பிரபுவின் மனைவி சின்னப் பெண்ணாக இருந்தார். உடுப்பு முறைகள் மேற்கத்தேயப் பாணியில் இருந்தன. வாயிலிருந்து ஆங்கிலம் இலகுவாக வெளிவந்தது. அண்ணனும் தங்கையும் ஒருவரை ஒருவர் சீண்டிக் கொண்டு சத்தம் போட்டபடி வீட்டுக்குள் ஓடித் திரிந்தார்கள். அண்ணண் தங்கையைப் பார்த்து ஏதோ நக்கலாகச் சொல்ல அதைக் கேட்ட அவள், சத்தம் போட்டுக் கத்தியபடி தாயிடம் சொன்னாள்.

“மம்மி... மம்மி..."எனச் சிணுங்கியபடியே இருந்தாள். நாங்கள் அவர்களின் விளையாட்டை, அண்ணண் - தங்கை உறவை இரசித்தபடி இருந்தோம்.

●●●

வழமைபோல் வெளியிலிருந்து வருகிறவர்கள் கேட்கும் கேள்விகளைத்தான் இவர்களும் கேட்டார்கள்.

“எப்பிடி அண்ணை வேலை போகுது...? ஒரே வெக்கையாய்க் கிடக்கு. ஊரில பெரிதாய் மாற்றமில்லை" நாங்களும் அதேபோலதான் அவர்களிடம் கேட்டோம்.

“கனடா நாட்டுப் பிரதமர் புத்தாண்டுச் செய்தியாக எங்களுக்கு என்ன சொல்லி விட்டவர், கனடாத் தமிழ் மக்கள் எப்ப வந்து ஊரில இருக்கப் போகினமாம்?" என்று எனக்கு மேலும் கேள்விகள் கேட்கும் எண்ணங்கள் வந்தாலும் நான் கேட்கவில்லை. காரணம் வடக்கு முதல்வர் மாதிரி ஆர்வம் காரணமாக ஏதாவது சொல்லிச் சிக்கலில் மாட்டிக்கொள்ள நான் விரும்பவில்லை.

ஊரில் உள்ள உறவுகள் வீட்டுக்கு வந்தால், ரீ, தேநீர், கோப்பி கேட்காமலேயே கொடுக்கலாம். இங்கே கேட்டுத்தான் கொடுக்க வேணும். கேட்டோம், கேட்டதைக் கொடுத்தோம்.

எவ்வளவு கதைத்தாலும் இடையிடையே எல்லோரும் மௌனமாகி இருந்தனர். அடுத்து என்ன கதைப்பது என்பது இரு பகுதிக்கும் தெரியவில்லை. விருந்தினர்களின் பிள்ளைகள் இப்போதும் சண்டை பிடித்தபடிதான் இருந்தார்கள். அப்படிச் சண்டை பிடித்தபடி ஓடித்திரிவது அவர்களுக்கு ஆனந்தமாக இருக்கின்றது போல் தெரிகின்றது. கட்டியிருந்த கால்கள் சுதந்திரம் பெற்றதுபோன்ற நிலைமை...

●●●

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

சகோதரர்களின் குறும்புகள் அதிகரித்தன. மம்மியோ எகிப்திய மம்மிபோல் உயிர் அற்று இருந்துவிடவில்லை. ஆங்கிலமும் தமிழும் கலந்து பொரிந்து தள்ளினாள்.

“உந்தச் சிறிலங்கன் பழக்கத்தை இங்கேயே விட்டிட்டு வந்திட வேணும், அங்க வரைக்கும் கொண்டந்து விடாதயுங்கோ..."

எல்லோரும் அமைதி...

ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். எனக்கு இதற்கு நல்ல பதில் சொல்ல வேண்டும்போல் இருந்தது.

எது சிறிலங்கன் பழக்கம்...?

எது வெளிநாட்டுப் பழக்கம்...?

நிலைமையைப் புரிந்துகொண்ட பிரபு மகனை மடியில் இருத்தி சமாதானப்படுத்த முயன்றார். அவர் பார்வை இப்போது என் பக்கம் திரும்பியது.

“இப்பவும் கதைகள் எழுதிறியள் தானே... அண்ணை?"

நான் தலையாட்டினேன்.

“கீ இஸ் அ றைற்றர்" அவர் மகனுக்குச் சொன்னார்.

அவன் என்னை விநோதமாகப் பார்த்தான். பின்னர் அவன் தந்தையின் காதில் ஏதோ கிசுகிசுத்தான்.

நான் “என்னவாம்...?" என்று கேட்டேன்.

“நான் உங்களை றைற்றர் என்று சொன்னவுடன் அவன் கேட்கிறான் உவர் என்ர பேரை எழுதுவாரோ? என்று"

எனது பிள்ளைகள் இதைக் கேட்டவுடனேயே தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அறைக்குள் போய் விட்டார்கள்.

றைற்றர் என்றால் பெயர் எழுதத் தெரிஞ்சிருக்க வேணும் எனக்கு இது தெரியாமல் போட்டுதே!!!

●●●

எனக்கும் வாய் சும்மா இருக்கவில்லை.

சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கலண்டரில் காட்சியளித்த கணபதியைக் காட்டி மகனிடம் கேட்டேன்.

“இவரைத் தெரியுமா?"

மகன் படத்தைப் பார்த்தான். நிறையவே யோசித்தான். பின்னர் விடை சொன்னான்.


“பிக் எலிபன்ற்"

“தெய்வமே... எங்கட பிள்ளையாரை பிக் எலிபன்ற்

ஆக்கி விட்டானே...!"

“அண்ணை என்ர பிள்ளைக்குப் பிள்ளையாரைத் தெரியும். படத்தில இருக்கிறது பெரிய பிள்ளையாரேல்லோ. அதுதான் உப்பிடிச் சொல்லிப்போட்டான்" சமாளித்துக் கொண்டார் பிரபு.

நல்லவேளை முருகனும், சிவபெருமானும் பக்கத்தில் இருக்கவில்லை. தப்பித்துக் கொண்டார்கள்.



சகோதரர்களின் குறும்புகள் அதிகரித்தன. மம்மியோ எகிப்திய மம்மிபோல் உயிர் அற்று இருந்துவிடவில்லை. ஆங்கிலமும் தமிழும் கலந்து பொரிந்து தள்ளினாள். உந்தச் சிறிலங்கன் பழக்கத்தை இங்கேயே விட்டிட்டு வந்திட வேணும், அங்க வரைக்கும் கொண்டந்து விடாதயுங்கோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



15 நகைச்சுவைத் தொடர்

# ஓவசி...

மிருசுவில் தழிழ்தாசன்

ஓவசி இப்போதெல்லாம் சோம்பேறியாக இருக்காது கடின உழைப்புக்களிலே கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டான். ஏன் சவுந்தரி மட்டும் என்னவாம்! ஆடம்பர உணவுகளிலோ, கண்டகண்ட அலங்கார மோகங்களிலோ நாட்டமின்றி ஒரு பொறுப்பான குடும்பத்தலைவி யாகி விட்டாள். பிறரைப்போல் தாங்களும் மதிப்புடன் வசதியாக வாழவேண்டுமெனும் ஊக்கமும் உத்வேகமும் கொண்டவர்களாக இருவரும் மாறியிருந்தனர். எல்லாம் புத்திரசிகாமணி சித்திரனாரின் பிறந்தபலனோ என்னவோ!

– – – – – –

சித்திரனுக்கும் ஒரு வயது பூர்த்தியாகி விட்டது. ஆனால் அவருக்கு ஒருவயது தான் என்பதைக் கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்தாலும் யாருமே நம்ப மாட்டார்கள். கடவுளே! யாருடைய கண்களும் பட்டுவிடக்கூடாது. அப்படியொரு அசாதாரண வளர்த்தி! சாதாரணமாக ஒரு வயதுக்குழந்தைகள் மெல்ல மெல்லக் காலடிகள் வைத்துத் தத்தக்கப் பித்தக்கவென நடப்பதே வழக்கம். ஆனால் சித்திரனார் கை, கால்களை வீசியேறிந்து நடப்பதைப் பார்த்தால் ஓவசிக்கும் சவுந்தரிக்கும் அளவற்ற மகிழ்ச்சி.

– – – – – –

ஓவசி இப்போது சில நாள்களாகக் கிணறு வெட்டும் வேலைக்குப் போகின்றான். பரமநாதன், தாமோதரி, சிவசம்பு எனும் சகதொழிலாளிகளின் தாராள மனங்களால் வழமையைவிட ஏராளமாக அவனால் சம்பாதிக்க முடிகின்றது. வலிமை மிக்க காளையைப் போலிருந்தவன், இப்போது வயக்கெட்ட மாடுபோல் ஆகி விட்டான். அத்தனை கடினமான வேலைகளையெல்லாம் மனமுவந்து செய்துவந்தான். உழைப்பின் மீதும் குடும்பத்தின் மேலும் ஏற்பட்டுவிட்ட ஒரு அதீதமான கரிசனையே இதற்குக் காரணமென்று கூறிவிடலாம்.

– – – – – –

அன்றும் கிணற்று வேலைக்குப்போன ஓவசி வீடு திரும்ப இரவு ஒன்பது மணிக்கு மேலாகி விட்டது. வழமையாக ஏழு ஏழரைக்குள் வீடு திரும்பும் ஓவசி அன்று மட்டும் சற்றுத் தாமதித்து விட்டான். அந்தக் கிணற்றிலே தண்ணீரைக் காண்பதற்கு எப்படியும் இன்னும் இரண்டு நாள்களாவது பிடிக்கும் என்றுதான் கிணற்றுச் சொந்தக்காரன் கிட்டினபிள்ளைக் கிளாக்கர் எண்ணியிருந்தார்.
ஆனால் ஓவசியினதும் அவனுடைய நண்பர்களதும் வஞ்சனையற்ற உழைப்பாலும் விடா முயற்சியாலும் அந்த இரண்டு நாள்களுக்கு முன்பே தண்ணீரைக் காட்டி விட்டார்கள். விடுவாரா கிட்டின பிள்ளை! தண்ணீரைக் கண்ட புழுகில் வேலைகாரர்களுக்கு நன்றாகத் 'தண்ணி' வாங்கிக் கொடுத்திருந்தார். அலுத்துப் போன உடல்களுக்குச் சாராயம் நிவாரணி யாகப்பட்டது. அதை குடித்துக் குடித்து... ஓவசிக்குக் கொஞ்சம் ஓவர் தான். நீண்ட நாள்களுக்குப் பின்பு ஓசியில் கிடைத்ததைஎவன்தான்விடப்போகின்றான். நன்றாகக் குடித்தபடியால் வீட்டுக்குப் போவதற்குத் தாமதம் ஆனால் இதையெல்லாம் சவுந்தரிக்குச் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? 'வேலை முடியத் தாமதமாகி விட்டது' இவ்வாறு சொன்னால்போதும் அதை மிஞ்சி ஒன்றும் நீட்டி முடக்கி ப் பேசி வீண் வம்புகளை விலைக்கு வாங்கிக் கொள்ளக் கூடாது. மெல்லக் குளித்து, இருப்பதை வாயில் போட்டுக் கொண்டு படுக்க வேண்டியதுதான்.

– – – –

வருவார்... வருவார் என்று வாசலில் நின்றாளோ! இல்லை வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டுப் படுத்தாளோ! யாரறிவார்! எப்படியோ சவுந்தரி தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தாள். உறங்கட்டும்! உறங்கட்டும் அவளை எழுப்பப் போனால் சித்திர புத்திரனாரும் தூக்கம் கலைந்து துள்ளி எழுந்துவிடுவார். அவர் எழுந்துவிட்டால் அதோ கதிதான். அழுகையை அடக்கமுடியாது. அழத்தொடங்கினால் ஊர்ச்சனங்களுக்குப் பாதிராத்தியிலேயே திருப்பள்ளியெழுச்சி பாடிவிடுவார் என்னும் பயத்தில் அமைதி காத்தான் ஓவசி. அந்த அளவு கடந்த போதையிலும் கிணற்றடிக்குப்போய் குளிக்கத் தொடங்கினான். கிணறு இரண்டு, மூன்றாகத்தெரிந்தது.

– – – – – –

நிதானமாக எப்படியோ குளிப்பை முடித்துவிட்டான். குளித்தாயிற்று. இனிச் சாப்பிட்டு விட்டு மெல்லத் தூங்கவேண்டியது தான். அட! அரிசிமாப்பிட்டுக்கு அருமையானதொரு சொதி! உண்மையில் சவுந்தரியின் சமையற்பாகம் அவனை வியக்கவைத்தது. ஏலவே குழைத்து வைத்திருந்த பிட்டைச் சுவைத்து ருசித்துச் சாப்பிட்டுவிட்டு வெறுந்தரையிலே பொத்தென்று வீழ்ந்து படுத்தான் ஓவசி.

– – – – – –

'என்னப்பா! இண்டைக்கு நேரத்துக்கு எழும்பிக் கச்சேரிக்குப்போக வேணுமெண்டெல்லே நேற்றுச் சொன்னீங்கள். இப்படி நித்திரை கொள்ளுறியளே! எழும்புங்கோவன்'
தட்டி எழுப்பினாள் சவுந்தரி. நேற்றைய சாராயம் விடிந்தும் வேலைசெய்து கொண்டுதானிருந்தது. கண்களைத் திறக்கமுடியவில்லை. இருந்தும் முதுகில் அடித்துத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தாள் சவுந்தரி. அவளின் இம்சையைப் பொறுக்க முடியாது ஒருவாறு எழும்பி விட்டான் ஓவசி. தேநீர் தயாரிக்க அடுப்படிக்குள் நுழைந்த சவுந்தரி போன வேகத்தில் திரும்பி வந்தாள்.

> என்னப்பா! நீங்கள் இராத்திரிச்சாப்பிடாமலோ படுத்தனிங்கள்...?' கேட்டாள் சவுந்தரி 'ஏன்! புட்டும் சொதியும் வயிறு முட்டச் சாப்பிட்டுத்தானே படுத்தனான்' 'என்னப்பா! புட்டும் சொதியுமோ...? இராத்திரி நான் புட்டு அவிக்கவேயில்லையே...?'

"என்னப்பா! நீங்கள் இராத்திரிச்சாப்பிடாமலோ படுத்தனிங்கள்...?" கேட்டாள் சவுந்தரி "ஏன்! புட்டும் சொதியும் வயிறு முட்டச் சாப்பிட்டுத்தானே படுத்தனான்"
"என்னப்பா! புட்டும் சொதியுமோ...? இராத்திரி நான் புட்டு அவிக்கவேயில்லையே...?"
"என்ன! புட்டவிக்கயில்லயோ...? அப்ப ஆரு புட்டவிச்சது...?" ஓவசி திகைப்புடன் கேட்டான். 'இராத்திரி ரொட்டி தானே சுட்டனான். இஞ்சை உங்களுக்குக் கோப்பையிலை போட்டு வச்ச ரொட்டியும் சம்பலும் அப்பிடியே கிடக்குது' சவுந்தரி சான்றுப் பொருளைக் காட்டி வாதித்தாள். ஓவசிக்கு ஒன்றுமே புரியவில்லை. இஞ்சி தின்ற குரங்கு போலப் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தான். அவள் சொல்வதும் உண்மை போலவே பட்டது. அவள் எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்.

– – – – – –

"வாறன்! இருங்கோ!"
சவுந்தரிக்கு ஒரு சந்தேகப்பொறி தட்டியது. விடுவிடென்று குசினிக்குள் நுழைந்தவளின் சந்தேகம் இப்போது தீர்ந்து விட்டது. "பாழ்பட்ட மனிசா! இராத்திரி நீ திண்டது புட்டில்லையப்பா. புண்ணாக்கு.
ஆட்டுக்குட்டிக்கு வைச்ச புண்ணாக்குக் கரைசலிலை அது குடிச்ச மிச்சத்தை அப்பிடியே வச்சிட்டுப்படுத்திட்டன். வெறியிலை வந்து அந்தப் புண்ணாக்கு முழுதையுமள்ளி விழுங்கியிருக்கிறாயே... புண்ணாக்கு மனிசா...!" பொரிந்து தள்ளினாள் சுவுந்தரி. பேச வார்த்தைகளின்றி மௌனம் சாதித்தான் ஓவசி. வேறென்ன தான் செய்ய முடியும். வெட்கம் அவனைப் பிடுங்கித் தின்றது.



# சேர்ந்தே சிரிப்போம்

செ.செல்வராசா

அந்த மனநல வைத்தியசாலையின் தலைமை வைத்திய அதிகாரி கேட்டுக்கொண்டதன் பேரில், அந்த மனநோயாளர்கள் மூன்றுபேரும் சுகமடைந்து விட்டார்களா? என்பதைக் கண்டறியும் சோதனைக்குக் கூட்டிச் செல்லப் பட்டார்கள். மனநோய் சுகமானால், வைத்தியப் பராமரிப்பிலிருந்து விடைபெற்று அவர்கள் வீட்டுக்குப் போகலாம், இல்லையென்றால் அவர்களை மேலும் பல வருடங்கள் அங்கு தடுத்துவைத்து நோய் குணமாகும்வரை வைத்தியம் செய்வர். தண்ணீரில்லாத ஒரு நீச்சல் தடாகத்துக்கு அந்த மூன்றுபேரும் கூட்டிவரப்பட்டனர். தடாகத்தின் அருகே உயரமாக அமைக்கப்பட்டுள்ள அந்தக் குதிக்கும் பலகையில் ஒருவர் பின் ஒருவராகக் குதிப்பதற்கு ஆயத்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டனர். முதலாமவரைக் குதிக்கும்படி கூறியதும் அவர் அந்தத் தண்ணியில்லாத தடாகத்துக்குள் குதித்துத் தனது இரண்டு கைகளையும் முறித்துக் கொண்டார்.
இரண்டாமவரைக் குதிக்கச் சொன்னதும் அவரும் குதித்துத் தனது இரண்டு கால்களையும் முறித்துக் கொண்டார்.
மூன்றாமவரைக் குதிக்கச் சொன்னதும் அதனுள் குதிக்க அவர் மறுத்துவிட்டார்.
வைத்தியர்களுக்குச் மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. தமது சிகிச்சை வெற்றியளித்துவிட்டது என்று ஒரே ஆரவாரம்.
சிறிது நேரத்தில் அந்த மூன்றாமவரை அழைத்து "ஏன் குதிக்கவில்லை?" என்று கேட்டனர். அதற்கு அவர் "எனக்கு நீந்தத் தெரியாது அதனால்தான் குதிக்கவில்லை" என்று அமைதியாகப் பதிலளித்தார். இந்தப் பகிடிக்கு விழுந்து விழுந்து சிரிக்கக்கூடாது. இது நமது நாட்டு 'ஜோக்' அல்ல வெளிநாட்டு 'ஜோக்' நாகரீகமாகச் சிரிக்க வேண்டும்.

எனது நண்பர் ஒருவர் நீண்ட காலங்களுக்குப்பின்னர் என்னைச் சந்தித்து உரையாடியிருந்தார். இப்போது தன்னை எல்லோரும் 'போ... வா...' என்றே அழைப்பார்கள் என்றார். அப்படி அழைக்கும்போது தனக்கு மகிழ்ச்சியாகவே இருக்கும் என்றார்.
தன்னைவிட வயது முதிர்ந்த வர்களாயினும் சரி, வயது குறைந்தவர்களா யினும் சரி தன்னை அனைவரும் அப்படிப் 'போ... வா...' என்று மரியாதைக் குறைவாக அழைப்பதையே தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.
சரி அவரது பெயர் என்ன தெரியுமா? செல்வராசா. அதிலுள்ள ராசாவை விட்டு விட்டு அவரை அனைவரும் 'செல்வா' என்று அழைப்பதாலேயே தன்னைப் 'போ... வா...' என்று அனைவரும் அழைப்பதாக இவர் குறிப்பிடுகின்றார்.
காரணம் என்ன தெரியுமா? செல்... என்றால் போ... என்று அர்த்தம். வா ... என்பது வா என அழைப்பது. ஆகவே செல்வா என்றால் போ – வா என்றுதானே அர்த்தம்...? அவர் கூறுவதும் இதைத்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இணை(ள)ய வாசிகளை நல்வழிப்படுத்தும் சினிமா

தனது கணினிக்கு முன்பாக அமர்ந்திருக்கும் அந்த இளைஞன் ஆடை எதையும்அணிந்திருக்கவில்லை! மறுமுனையில் அவனோடு அரட்டையடிக்க இருக்கும் பெண்ணும் தன்னைப்போன்றே திரையில் தோன்றவிருப்பதை அவன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றான்.
அதிரவைக்கும் இத்தகைய ஆரம்பமே 'லென்ஸ்' படத்தின் தீவிரத் தன்மையை உணர்த்திவிடுகின்றது. சில காட்சிகளிலேயே சட்டெனத் திருப்பங்கள் ஏற்பட அடுத்த 20நிமிடங்களுக்குள்ளேயே விறு விறுப்புப் பெற்றுப் பரபரக்க வைக்கின்றது படம்.

**கதைப் பார்வை**
இளமையும் அழகும் கொண்ட தனது மனைவியை அலட்சியப் படுத்தியவராய், இணையத்தில் (சமூக வலைத்தளங்களில்) பெண்களுடன் அந்தரங்கங்களைப் பரிமாறி அவற்றைத் தனது கணினித் திரையில் கண்டு பாலியல்வேட்கை தணிக்கின்றார் அரவிந்த் (ஜெயபிரகாஷ் ராதாகிருஷ்ணன்). ஒருநாள் அதேபோன்றதொரு அனுபவிப்புக்காகக் காத்திருக்கும்போது, புதியதொரு பெண்ணின் தொடர்பு கிடைக்கின்றது. அவளுடனான அரட்டையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும்போதுதான் அது தனக்கு வைக்கப்பட்ட பொறி என்பது அரவிந்துக்குப் புரிகின்றது. அந்தப் பொறி என்ன? இணைய வக்கிரங்களின் விபரீதப் பரிமாணங்கள் என்னென்ன? என்பதை விறு விறுப்பான திரைக் கதையின் மூலம் சொல்கின்றார் இயக்குநரும் நடிகருமான ஜெயபிரகாஷ் ராதகிருஷ்ணன்.
பாலியல் வேட்கையுடன் அலையும் அரவிந்தைப் பொறிவைத்து இழுக்கும் யோகன் (ஆனந்தசாமி) தனது அடுத்தடுத்த நகர்வுகள் மூலம் அதிரவைக்கின்றார். அரவிந்தின் நண்பன் காவல் துறையை நாட, அரவிந்துக்கும் யோகனுக்கும் என்ன தொடர்பு என்பது திரையில் விரிகின்றது. அரவிந்தைப் போன்றவர்கள் தாங்கள் செய்யும் செயல்களால் ஏற்படப்போகும் முழு விபரீதங்களையும் உணரும் வகையில் திரைக்கதையின் போக்கு உள்ளது.
தனிநபர்களின் அந்தரங்கங்களைப் படம் எடுத்து, அவற்றை இணையத்தில் பதிவேற்றி அற்ப சுகம் அடையும் கும்பலின் யதார்த்த முகத்தையும் இயக்குநர் அம்பலப்படுத்துகின்றார். "அற்ப விடயம், எமக்குத் தேவையற்றது" என்றெல்லாம் ஒதுக்கிவிட முடியாத அளவுக்கிருக்கின்ற இவற்றின் பயங்கரத்தைப் புரியவைக்கின்றார்.
அடுத்தவரின் அந்தரங்கத்தை ஆவலுடன் பார்க்கும், பரப்பும், மனிதர்கள் தங்களுக்கோ, தங்களைச் சரர்ந்தவர்களுக்கோ அப்படி ஒன்று நடந்தால் எப்படிக் குறித்த விடயத்தைக் கையாளுகின்றார்கள் என்பதையும் காட்சிப் படுத்தியிருக்கும் விதம் அபாரம். இவை இதுபோன்ற மனிதர்களின் மனச்சாட்சியைச் சிறிதேனும் யோசிக்க வைக்கும் வகையில் உள்ளன. இன்னைறய நவீன தொழில் நுட்பம் என்பது பலமுனைகளில் வளர்ந்திருக்கின்றது.
அத்துடன் அந்த முனைகள் அனைத்துமே அனைத்துப் பக்கங்களையும் கூர்மையாகக் கொண்ட கத்திகளே. யாரும் அவற்றுக்கு இலக்காகலாம் என்பதையும் படம் காட்டுகிறது.

**மிக மிக அவதானம்...!**
ஆபாசப் படங்களை எடுப்பது, பதிவேற்றம் செய்வது, அடையாளம்தெரியாதநபர்களுடன் அந்தரங்கமாக(வீடியோக்கள் மூலம்) உறவாடுவது என்பவற்றைப் பின்னணியாக வைத்து, இவ்வளவு துல்லியமான தகவல்களுடன் வெளியாகியிருக்கும்முதல் தமிழ் திரைப்படம் இதுவாகத்தான் இருக்கும் (தமிழ், மலையாளம், ஆங்கிலம் மூன்றுமொழிகளிலும் எடுக்கப்பட்ட படம்).
சிறிது தவறினாலும் பாலியல் படமாகக் கருதப்படக்கூடிய அபயத்தைத் தந்துவிடும் கருவைக் கொண்டு, அதை விறுவிறுப்புடன் திரையாக்கியிருப்பது உண்மையிலேயே ஒரு சவாலான காரியம். காட்சிகள் அனைத்தும் பாலுணர்வைத் தூண்டிவிடாமல்; விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே இருக்கின்றன.

**பாத்திர வார்ப்புக்கள்**
பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை ஏஞ்சல் எனும் பாத்திரத்தின் மூலம் அழுத்தமாகச் சித்தி ரித்துவிடுகிறார் இயக்குநர்.
இணையத்தில் தன்னுடைய அந்தரங்கங்கள் பதிவேற்றப்பட்டிருப்பதையும் பலரும் அதை இரசித்துப் பார்ப்பதையும் அறிந்த பெண், 'தினமும் ஆயிரம்பேர் தன்னை வன்புணரும் வேதனைக்கு ஆளாவதாகக்' குறிப்பிடுவது அடுத்தவரின் அந்தரங்கத்தை ஆவலுடன் பார்ப்பவர்களதும் பதிவெற்றுபவர்களதும் மனசாட்சியை உலுக்கக் கூடியது. இது போன்ற கணினித் திரை அந்தரங்கங்கள் ஊடாக அற்ப சுகம் தேடும் தனது கணவன் குறித்த மனைவியின் உணர்வு எவ்வாறாக இருக்கும் என்பதையும் இயக்குநர் அரவிந்தின் மனைவியூடாக நுட்பமாகக் காட்சிப்படுத்துகின்றார்.
அரவிந்தாக நடித்திருக்கும் ஜெயப்பிரகாஷ், அவரைப் பொறிவைத்துப் பிடிப்பவராக வரும் ஆனந்த்சாமி இருவரும் தேவையான நடிப்பை வழங்கியிருக்கின்றார்கள். ஏஞ்சலாக வரும் அஸ்வதி லால் அவமானத் தின் வேதனையைத் தத்ரூபமாக வெளிப்படுத்துகின்றார்.

**படத்தில் சில பிசிறுகள்**
படத்தில் சில குறைகளும் இருக்கின்றன. மூன்று மொழிகளில் வெளியான இந்தப் படத்தில் வசனங்களும் உதட்டசைவுகளும் பொருந்தவில்லை என்பதை மன்னித்துவிடலாம். ஆனால் இன்னுமிருக்கும் ஏனைய குறைகளை அப்படித் தள்ளிவிட முடியாது.
பழிவாங்குவதில் மிகவும் தீவிரம்கொள்ளும் ஏஞ்சலின் கணவன், அதைச் செயல்படுத்துவது தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதுபோல இருக்கிறது.
தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்பது அவரைப் பொறுத்தவரை சரியான முடிவாக இருக்கலாம். ஆனால், அது எப்படி அரவிந்துக்கான தண்டனையாக இருக்க முடியும்? தன்னுடைய மனைவியை இழிவுபடுத்தியவனைத் தண்டிக்க அவனுடைய மனைவியைப் பகடைக்காயாகப் பயன்படுத்துவது எந்த வகையில் நியாயம்?

**இசை, ஒளிப்பதிவு, காட்சியமைப்பு**
ஜி.வி.பிரகாஷ் குமாரின் இசை படத்தில் கதை மாந்தர்கள் கொண்டுள்ள உணர்வுகளுக்கு உறுதி சேர்க்கின்றது. எந்த இடத்திலும் தளர்ந்துவிடாமல் அதேசமயம் பார்வையாளர்களிடத்தில் தேவையான உணர்ச்சிகளை ஏற்படுத்தும் வகையில் நுட்பமாகச் செயல்பட்டிருக்கிறார் இசையமைப்பாளர். எஸ்.ஆர். கதிரின் ஒளிப்பதிவும் திரைக்கதைக்கு ஏற்ற வகையில் இருக்கின்றது.
பெரும்பாலான காட்சிகள் அரை இருட்டில் நடந்தாலும் அவை தெளிவாக மனதில் பதியும் வகையில் படம்பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற படங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பெரும் பங்காற்றக்கூடியவை. இதற்காக லென்சை நாம் பாராட்டியே ஆகவேண்டும்.




# இணையதளம் இன்னும் தேற வேண்டும்

அந்தரங்கவிடயங்களை இணை யத்தளங்களில் பதிவெற்றிக் கொள்வதால் ஏற்படும் பிரச்சினைகளை முன்வைக்கும் 'லென்ஸ்' ஐப்போலவே, கிட்டத்தட்ட அதே மாதிரியான கதையைக்கொண்டஒருபடம். ஆனால், படமாக்கியதில் லென்சுடன் ஒப்பிடுகையில் மலையையும் மடுவையும் போன்றது.

**கதைப் பார்வை**
சமூக வலைத்தளங்களில் 'லைக்' (விருப்பு), 'ஷேயார்'(பகிர்வு) ஆகியவற்றை அதிகப்படுத்தும் அவாவுடன் பதிவேற்றப்படும் தகவல்களால் எதிர்பாராதவிதமாகப் பலர் பாதிக்கப்படுகின்றார்கள், குடும்பங்கள் அழிகின்றன என்பதைச் சொல்ல முனைந்திருக்கின்றது படம். சைபர் க்ரைம் பிரிவில் பணியாற்றுகிறார்கள் ஸ்வேதா மேனனும் ஈரோ[illegible] மகேசும். ஒரு இணையத்தளத்தில், முதியவர் ஒரு[illegible] கொல்லப்படும் காட்சி நேரலையாக ஒளிபரப்பாகின்ற[illegible] அதனைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகரி[illegible]ன்றது. இந்தக் கொலையைச் செய்தது யார் எனப் பொ[illegible]சார் விசாரிக்கும் போது, ஊடகவியலாளர் ஒருவரும் இ[illegible]பாணியில் கொல்லப்படுகிறார்.
அதையும் பொலிசாரால் கண்டுபிடிக்க முடியாமலிருக்க பதவி இடைநீக்கம் செய்யப்படும் மகேசும் இவ்வாறே கொல்லப்படுகிறார். பின்னர் நாயகனான கணேஷ் வெங்கட்ரைக் கொண்டு நகர்த்தப்படுகின்றது குற்றத்தைக் கண்டுபிடிக்கும் கதை.

**பாத்திரப் படைப்பு**
படம் முழுவதையும் ஆக்கிரமிக்கும் ஸ்வேதா மேனன், பல தருணங்களில் என்ன செய்வதென்றே தெரியாமல் நின்றுகொண்டிருக்கிறார். கொலைக்காட்சியிலிருந்து சினி[illegible] பரவாயில்லை என்றாலும் நகைச்சுவை என்ற பெயரில் அவர் பேசும் வசனங்கள் சலிக்கின்றன.
இந்தப் படத்தில் என்ன நடிப்பை வெளிப்படுத்த முடியுமோ அதைச் செய்திருக்கிறார் ஹீரோவான கணேஷ் வெங்கட்ராம். படம் முடியும் நேரத்தில் வில்லியாக அறிமுகமாகும் சுகன்யா, படம் முடியும்வரை தொடர்ந்து பேசிக்கொண்டேயிருக்கிறார்.

**முற்றிலும் பிசிறுகள்**
ஒரு இணையத்தளத்தில் கொலை நேரடியாக ஒளிபரப்பாகும்போது, அந்த இணையத்தளத்தைப் பார்க்க முடியாமல் செய்வது இலகுவான வேலை. அதைவிடுத்து, ஊடகங்கள் மூலமாக அந்த இணையத்தளத்தைப் பார்க்க வேண்டாமென அறிவிக்கிறார்கள்.
உடனே எல்லோரும் அதைப் பார்க்கிறார்கள். கொலை நடக்கும் இடத்தைக் கண்டுபிடித்த பிறகும் யார் அதைச் செய்தார்கள் என்று கண்டுபிடிக்காமல் அடுத்த வேலையைப் பார்க்கப் போய்விடுகிறது பொலிஸ். இப்படியாக எல்லா அம்சங்களிலும் பலவீனமாக இருக்கின்றது இந்த இணையத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீண் விரயம் எதற்கு?

ஜோதா

அன்றைக்கு நான் காலை எட்டு மணிக்கெல்லாம் அலுவலகத்துக்குச் சென்றுவிட்டேன். எனது சக ஊழியர்களின் வருகைக்கு இன்னமும் முப்பது நிமிடங்கள் இருந்தன. வழமைபோலவே நான் அலுவலகத்துக்குச் செல்வதற்கு முன்னரே அது நன்கு சுத்தம் செய்யப்பட்டுத் துப்புரவாக்கப்பட்டிருக்கும். இத்தனைக்கும் அந்தப் பணியைச் செவ்வனே செய்யும் சோமு தான் காரணம். அலுவலகத்துக்கு அண்மையாகவே அவனுடைய வீடும் இருப்பதால் நேரத்துக்கே வந்து தனது வேலைகளை அவன் செய்து விடுவான். நாங்கள் அலுவலகத்தை அடையும் போது அலுவலகம் ஜொலித்துக் கொண்டிருக்கும்.


நான் வழமையைவிடச் சற்று முன்பாகவே அலுவலகத்துக்கு வந்துவிட்டதால், சோமுவின் அன்றைய துப்புரவுப் பணியைப் பார்வையிட முடிந்தது. எனது தலையும் விறைத்தது!

அலுவலகத்தின் ஒரு முனையிலிருந்து எனது பகுதிவரைத் தும்புத்தடியால் தரையைக் கூட்டிச் சுத்தம் செய்தவாறு வந்துகொண்டிருந்தான் சோமு. அவன் கூட்டிக் குவித்து அள்ளப்போகும் குப்பைக்குள் பலபொருள்கள் பரவிக்கிடந்தன. குண்டுசிகள், வெள்ளைக் கடதாசிகள், 'பயில் கிளிப்புகள்', நூல்கள், காபன் பேப்பர்கள், கடித உறைகள் என்பவற்றையே அவன் கூட்டிக் குவித்திருந்தான். அவையனைத்தும் குப்பைத் தொட்டிக்குள் போவதற்கு ஆயத்தத்தில் இருக்கின்றன.

"சோமு... இதுக்குள்ள நிறையச் சாமனுகள் போகுது போல"

"போகட்டும் ஐயா... அரசாங்கத்தின்ர சாமான் தானே... தங்கட தங்கட வீட்டுச் சாமான் என்றால் இப்பிடிக் கீழ போட்டுட்டுப் போவினமோ...? ஒவ்வொருத்தற்ற மேசைகளுக்குக் கீழயும் இதுகள் எறிஞ்சு கிடக்கு... எத்தின தரம் சொல்லிப்போட்டன். அவங்களுக்கு இதில அக்கறை இல்லை. இதால எனக்குத்தான் வேலைகூட"

அரசாங்கத்தால சும்மா கிடைக்கிற பொருட்கள் தானே என்ற ஏளனிப்பு எனது சக ஊழியர்களுக்கு. அவை அனைத்தும் அரசுக்கு எப்படிக் கிடைக்கின்றன...? மக்களின் வரிப் பணம் தானே...!



மக்களுடைய உழைப்பு இதுபோன்ற அரச அலுவலகங்களில் வீணடிக்கப்படுவது ஒருபுறமிருக்க மக்களின் வளங்களை மக்களே வீணடிக்கும் போக்கும் இங்கேதான் நிலவுகின்றது.

அதே நாள் நேரத்துக்கே வேலைக்குத் தயாரான நான் கண்ட அந்தச் சம்பவமே எனக்கு இதையும் புரியவைத்தது.



'சோ...' வெனப் பெரும் இரைச்சல். அது காற்றும் அல்ல மழையும் அல்ல. எனது தொருவிலிருக்கும் குழாய் நீர் (குடி தண்ணீர்) பெரும் சத்தத்துடன் பீறிட்டுப் பாய்ந்து கொண்டிருக்கின்றது. கவனிப்பார் யாருமில்லை. அதைத் திறந்து விட்டவர்...? அவராகத்தான் இருக்க முடியும்!

தனது இரண்டு கைகளிலும் கொள்கலன்களில் தண்ணீர் எடுத்துத் தனது வீட்டுக்குள் செல்கின்றார் அயல் வீட்டுக்காரர். சிறிது நேரத்தில் அவர் இன்னொரு கொள்கலனுடன் அங்கு வந்து சேர்ந்தார். அது வரைக்கும் நீர் வீதி வழியே ஓடிக் கொண்டிருக்கின்றது.

ஆனால்இவரைவிடவும்இங்கேயிருந்து நாலைந்து வீடு தள்ளியிருக்கின்ற இளைஞன் ஒருவரும் தனது மோட்டார் சைக்கிளைக் கொண்டு வந்து இதிலே கழுவிச் செல்வதை எனது தந்தையார் கண்டு கடிந்துகொண்டதாக முன்பொருமுறை எனக்குச் சொல்லியிருக்கின்றார். மக்களுக்கும்கூட நீர், மின்சாரம் போன்ற அரச விநியோகங்களை வீண் விரயம் செய்பவர்களாகவும் ஊதாசீனப்படுத்துபவர்களாகவுமே இருக்கின்றார்கள்.

அவர்கள் தாங்களுடை சம்பாத்தியத்தைத் தாங்களே விரயம் செய்யும்போது அரசு வழங்குவதாக இவர்கள் கருதும் இத்தகையவற்றை எப்படிக் கையாள முனைவர்? என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா? எம்மவர்கள் பலர் தமது நாகரீகப் போக்கு, அந்தஸ்து, தராதரம் என்ற மாயத்தோற்றத்துக்குள் நின்றுகொண்டு தமது வளங்களைத் தாமே வீணடிப்பதுவும் இங்கே தான் நிகழ்கின்றது.

அதற்கும் என்னிடம் ஒரு உதாரணம் - அனுபவம் உண்டு.





அன்று அலுவலகம் லீவு நாள். உறவினர் ஒருவரின் திருமண வைபவமும் அன்றைக்கு என்பதும் நினைவுக்கு வந்தது. அதற்குச் செல்ல நான் ஆயத்தமானேன். திருமண வைபவம் அந்தப் பெரிய மண்டபத்தில் கோலாகலம் பூண்டிருந்தது.

வரவேற்புப் பகுதியைத் தாண்டியவுடன் நண்பர்கள் சிலரும் தெரிந்தவர்களும் ஒட்டிக்கொண்டார்கள். ஒவ்வொருவருடைய கைகளுக்கும் தாகம் தீர்ப்பதற்காகச் 'சோடாக்கள்' தரப்பட்டன. அந்தப் பகுதியெங்குமுள்ள மேசைகளில் சோடாப் போத்தல்கள் பலவும் பரவிக் கிடந்தன. ஆள்கள் எவரும் இல்லாத மேசைகளில் இருந்த போத்தல்களுக்குள் அரைவாசிவரைக்கும் சோடாக்கள் இன்னமும் மீதமிருக்கின்றன. குடித்தது பாதி, குடிக்காதது பாதியாக அவை இருப்பதைப் பார்த்த பின்வந்த வசதி படைத்தவர்களும் அதையே பின்பற்றி ஒரு நாகரிகமாகத் தாமும் சிறிதளவைக் குடித்து மீதியைப் போத்தலுடனேயே வைத்துவிட்டு அது பற்றிச் சிந்திக்காமல் ஆற அமர்ந்து பேசி, வேறிடம் எழுந்து சென்றார்கள்!

சென்ற தாகத்தில் எனக்குத்தந்த அனைத்தையும் குடித்து முடித்த நான் அங்கு, நீண்டகாலங்களின் பின்னர் காண்டிருந்த உறவினர்களுடன் சற்றே உரையாடிக் கொண்டேன். சில நாழிகைகள் கழித்து மணமக்களைச் சந்தித்து வாழ்த்திவிட்டு வந்தேன். விருந்து பரிமாறப்படும் பகுதிக்குச் சென்று விருந்துண்டு வீடு செல்லாம் என்று அந்தப்பகுதிக்கும் சென்றேன். ஆச்சரியமுற்றேன்...! எவ்வளவு அநியாயங்கள்!

எத்தனை எத்தனை ஆயிரம் பிஞ்சுக் குழந்தைகள், ஏழைகள் ஒரு நேர உணவின்றி உயிரை விடுகின்றனர். ஆனால் இங்கே பார்த்தால்... அவரவர் நாகரிகமாக உணவுண்டு முடித்திருக்கிறார்கள். அதை உணர்த்துவதாய் கோப்பைகளுக்குள் மிஞ்சிய பெரும் தொகை உணவுகளுடன் அதன் 'லஞ்சீற்கள்' மூடப்பட்டிருந்தன. அதற்குள் சிலவற்றில் வாழைப்பழமும் வடையும்கூட இருக்கின்றது. அவரவருக்கு அவை ஒவ்வாதாம்...!

உணவுக்காக வேட்டையாடித் திரிந்த மனிதன் இன்றைக்கு தனது அந்தஸ்து, நாகரீகம், தான் உருவாக்கிவிட்ட இன்னும் பல புதுப் புது நளினங்களை நாடி இப்படியெல்லாம் தனது உயிர் காக்கும், உடல் வளர்க்கும் உணவை வீணடிக்கின்றானே...! அத்தனை கோபங்களும் ஆற்றாமைகளும் எனக்குள் உருண்டு, புரளவும் ஒருவாறாக வயிராற உண்டு முடித்தேன். கை கழுவுவதற்குப்போன இடத்தில் விறைத்தது தலை. ஒரு சோத்துக் குவியல்...!

பொதுமகன்கள் தமக்கு மேல்மிச்சமாக இருக்கின்ற எஞ்சிய உணவுகளை அந்தக் குறிக்கப்பட்ட பகுதிக்குள் கொண்டு சென்று வைத்து விடுவார்களாம்! அந்த உணவுகள் உண்பதற்கு ஏற்றவையாக வுள்ளனவா? என்று பார்ப்பதற்குச் சில ஊழியர்கள் அங்கு நியமிக்கப்பட்டுள்ளார்களாம்! உணவின்றித் தவிப்பவர்கள், வறியவர்கள் அந்த இடத்துக்கு வந்து அதை எடுத்து உண்பார்களாம்! அதுவும் தமக்கெற்ற அளவு உண்டு மீதியை அங்கேயே மீண்டும் பத்திரப்படுத்துவார்களாம்! பின்னரும் தேவைப்படுவோர் வந்து உண்பார்களாம்! இவை அனைத்தும் சமூக நலன் விரும்பிகள் மற்றும் அதற்கென அங்குநியமிக்கப்பட்டிருக்கின்றஊழியர்களால்நேர்த்தி செய்யப்பட்டுத் தொடர்ந்தும் முன்னேடுக்கப்படுகின்றதாம். தூரதேசத்திலுள்ள எனது முகநூல் நண்பரொருவர் தனது நாட்டில் இப்படி ஒரு நடைமுறை இருப்பதாகப் பதிவிட்டிருந்தது இங்குள்ளவர்களின் இத்தகைய செயலைக் கண்டதும் எனது மனதுக்குள் பொறி தட்டியது.

> மக்களுக்கும்கூட நீர், மின்சாரம் போன்ற அரச விநியோ கங்களை வீண் விரயம் செய்பவர்களாகவும் ஊதாசீனப்படுத்துபவர்களாக்வுமே இருக்கின்றார்கள்.
> அவர்கள் தாங்களுடை சம்பாத்தியத்தைத் தாங்களே விரயம் செய்யும்போது அரசு வழங்குவதாக இவர்கள் கருதும் இத்தகையவற்றை எப்படிக் கையாள முனைவர்? என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா? எம்மவர்கள் பலர் தமது நாகரீகப் போக்கு, அந்தஸ்து, தராதரம் என்ற மாயத்தோற்றத்துக்குள் நின்றுகொண்டு தமதுவளத்தைத்தாமே வீணடிப்பதுவும் இங்கே தான் நிகழ்கின்றது.

> உணவுக்காக வேட்டையாடித் திரிந்த மனிதன் இன்றைக்கு தனது அந்தஸ்து, நாகரீகம், தான் உருவாக்கிவிட்ட இன்னும் பல புதுப் புது நளினங்களை நாடி இப்படியெல்லாம் தனது உயிர் காக்கும், உடல் வளர்க்கும் உணவை வீணடிக்கின்றானே...!
> எத்தனை எத்தனை ஆயிரம் பிஞ்சுக் குழந்தைகள், ஏழைகள் ஒரு நேர உணவின்றி உயிரை விடுகின்ற னர். ஆனால் இங்கே பார்த்தால்... அவரவர் நாகரிகமாக உணவுண்டு முடித்திருக்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவகுகன் பிருத்வி,
தரம் – 2A
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.



சு.சஜீவ்ராஜ்,
தரம் – 2
சென்.பெனடிக்ற் றோ.க.த.க.வித்தியாலயம்




# உயிர் நட்பு

சமாதானபுரத்தில் தேவதா வசித்து வருகிறாள். அவளுக்கு இனியா என்று ஒரு நண்பி இருக்கிறாள். இருவரும் ஒரே வகுப்பில்தான் படிக்கின்றனர். தேவதைகளுக்குரிய குணங்கள் நிரம்பப்பெற்றவள் தேவதா. ஆனால், இனியாவோ பெயருக்கு எதிர்மாறானவள். எந்த நேரமும் அடுத்தவர்களைக் கேலி செய்து பேசுவதும், காயப்படுத்துவதும் அவள் பொழுதுபோக்காக இருந்தது. இதிலும், தேவதாவை அவள் அதிகம் காயப்படுத்தினாள். துன்புறுத்தினாள். அவள் தன்னைத் துன்புறுத்துவதை எண்ணித் தேவதா வருந்தவில்லை. மாறாக, எப்படியாவது அவளை மாற்றிவிட வேண்டும் என்று தினமும் போராடிக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்தாள். ஆனால், இனியாவோ நன்றி மறந்தவளாகவும் துரோக குணம் நிறைந்தவளாகவும் இருந்தாள்.

இந்த நிலையில், வீதியில் இடம்பெற்ற ஒரு விபத்துக் காட்சியைக் கண்ணுற்ற இனியா அதிர்ச்சியால் பேச்சிழந்தாள். மருத்துவ சிகிச்சை பெற்றும் பயனளிக்கவில்லை. எந்த நேரமும் வாயாடியாகவே பாடசாலையில் இருக்கும் இனியா மௌனித்தாள். அவளுக்கு இந்தத் தண்டனை வேண்டும் என்று சக நண்பிகள், நண்பர்கள் கூறினர். அதற்கு தேவதாவோ, "எனதருமை நண்பர்களே! நீங்கள் இனியா மீது கொண்டிருக்கும் புரிதல் தவறானது. அவளுக்கு இந்தத் தண்டனை வேண்டும் என்று சபிப்பது கேடானது. ஒருவர் தீமை செய்தாலும், பதிலுக்கு நாம் நன்மையே செய்தாக வேண்டும். இனியா இப்போது மிகவும் துன்பப்படுகிறான். அவளை ஆறுதல்ப்படுத்த வேண்டியது நமது கடமை. அனைவரும் என்னுடன் வாருங்கள்" என்று அவர்களைப் பாடசாலை வளாகத்திலுள்ள ஆலயத்துக்கு அழைத்துச் சென்றாள். அங்கே அனைவரும் இனியாவுக்காகப் பிரார்த்தனை செய்தனர். தேவதா இன்னும் ஒருபடி அதிகம் சென்று, கடவுளிடம் இனியாவுக்காக மன்றாடினாள்.

"கடவுளே! எங்கள் அருமை நண்பி இனியாவுக்குப் பேசும் ஆற்றலைக் கொடு. அவள் செய்த பாவங்களை மன்னித்துவிடு. அவள் மறுபடியும் பேசவேண்டும்" என அனைவரும் ஏகோபித்த குரலில் மன்றாடினர். உண்மையான பிரார்த்த னைக்கு இறைவன் நிச்சயம் செவிசாய்ப்பான். அதிலும், குழந்தைகளின் பிரார்த்தனைக்கு அவன் கட்டாயம் செவிசாய்ப்பான். பிள்ளைகளின் இந்தப் பிரார்த்தனையைக் கண்ட வகுப்பாசிரியர் அகமகிழ்ந்தார்.



இந்தச்சமயம், வகுப்பறையில் தனிமையில் இருந்து அழுதுகொண்டிருந்த இனியா, அந்தப் பயங்கர வீதி விபத்தைப் மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தி மனதில் நினைத்துப்பார்த்தாள். அவளையும் அறியாமல், "அம்மா..." என்று அலறினாள். அவளது அலறல் சத்தம் கேட்டு மாணவர்கள் ஓடிச் சென்றனர். தேவதா உள்ளிட்ட நண்பர்களும் பிரார்த்தனை முடித்து வகுப்புக்குச் சென்றனர். அங்கே இனியா வகுப்பாசிரியரிடம் பேசிக்கொண்டிருந்த காட்சியைக் கண்டு, இறைவனுக்கு நன்றி கூறினர்.

"இதோ பார் இனியா, உனது நண்பர்களின் பிரார்த்தனைதான் உனக்கு மறுபடியும் பேசும் ஆற்றலைக் கொடுத்தது. இந்தப் பிரார்த்தனைக்கு வழிகாட்டியது தேவதாதான். இனிமேல், எந்தத் தீய எண்ணங்களுமின்றி சக மாணவர்களை உன் சகோதரர்கள் போல நீ நேசிக்கப் பழகவேண்டும்" என்று வகுப்பாசிரியர் அவளுக்கு அறிவுரை கூறினார். தன்னுடைய தவறுகள் அனைத்தையும் இனியா உணர்ந்து கொண்டு, தேவதாவைக் கட்டியணைத்துத் தனது அன்பைப் பரிமாறிக் கொண்டான்.

**உண்மையான நட்பு, உயிருடன் கலந்தது. சுயநலம் அற்றது...**

– டி.அதிசயா

# பாட்டுக்கொரு புலவன் பாரதி



"பாட்டுக்கொரு புலவன் பாரதி" என அனைவராலும் பாராட்டப்பட்ட பாரதியார், சின்னச்சாமி ஐயர் – இலக்குமி அம்மாள் தம்பதியினருக்கு 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி தமிழ் நாட்டின் எட்டயபுரத்தில் பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன் என்றாலும், சுப்பையா என்றே அழைக்கப்பட்டார். 1887ஆம் ஆண்டு இலக்குமி அம்மாள் இவ் உலக வாழ்வை நீத்தார். அதனால் பாரதியார் அவரது பாட்டியான பகீரதி அம்மாளின் அரவணைப்புடன் வளர்ந்தார். தனது 11ஆவது வயதில் பள்ளியில் படித்து வரும்பொழுதே கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். 1897 ஆம் ஆண்டு செல்லம்மாளை திருமணம் செய்து கொண்டார். 1898 ஆம் ஆண்டு தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தால் வறுமை நிலையை அடைந்தார். இதனை எட்டயபுரம் மன்னருக்குத் தெரிவித்து பொருளுதவி வழங்குமாறு கடிதத்தில் கேட்டுக்கொண்டார். பின்னர் எட்டயபுரம் அரண்மனையில் அவருக்குப் பணி கிடைத்தது. சில காலத்திலேயே அந்தப்பணியை விடுத்து காசிக்குச் சென்றார். 1898 முதல் 1902 வரையான காலப் பகுதியில் அங்கு தங்கியிருந்தார். பின்னர் எட்டயபுரத்தின் மன்னரால் அழைத்து வரப்பட்டு அரண்மனை ஒன்றில் வாழ்ந்தார். ஏழு ஆண்டுகள் பாட்டெழுதாமல் இருந்தபின்னர் 1904 ஆம் ஆண்டு மதுரையில் பாரதி எழுதிய பாடல் 'விவேகபானு' இதழில் வெளியானது. வாழ்நாள் முழுதும் பல்வேறு காலகட்டங்களில் இதழாசிரியராகவும் மதுரையில் சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணியாற்றினார்.

பாரதியார் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சமஸ்கிருதம், வங்காளம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். பிறமொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கவும் செய்தார். இவர் தமிழ்க் கவிதையிலும் உரைநடையிலும் சிறப்பான புலமை கொண்டு நவீன தமிழ்க் கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ், தமிழர் நலன் மற்றும் பெண் விடுதலை குறித்துக் கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். எட்டப்ப நாயக்க மன்னர் இவருடைய கவித்திறனைப் பாராட்டி 'பாரதி' என்ற பட்டம் வழங்கினார். பாரதியாரின் நூல்கள் தமிழ்நாடு மாநில அரசால் 1949 ஆம் ஆண்டில் நாட்டுடமை ஆக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடமையாக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்.

1921 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்றபோது, எதிர்பாராதவிதமாக அந்தக் கோவில் யானையால் தூக்கி எறியப்பட்டதால் பலத்த காயமுற்று நோய்வாய்ப்பட்டார். பின்னர் 1921 செப்ரெம்பர் 11ஆம் திகதி தனது 39 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

*ந.கவிப்பிரியா, வட்டு. இந்துக் கல்லூரி.*




## சிந்தனைக்கு

பிரச்சினை என்ற ஒன்று உருவாகும் போதே, அதற்கான தீர்வும் பிறந்து விடுகிறது

## உங்களுக்குத் தெரியுமா?

1. ஐந்தாம் குரவர் என்று போற்றப்படுபவர் ஆறுமுகநாவலர் ஆவார்.
2. தங்கத் தாத்தா என்று அழைக்கப்படுபவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆவார்.
3. தமிழ் மூதாட்டி என்று அழைக்கப்படுபவர் ஔவையார் ஆவார்.
4. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்று அழைக்கப்படுபவர் ஆண்டாள் ஆவார்.

*- த.டிலக்சன்*



## யானைப் பாட்டு

*யானை வந்தது
காட்டு யானை வந்தது
தும்பிக்கையை
ஆட்டிக்கொண்டு
யானை வந்தது...*

*யானை வந்தது
காட்டு யானை வந்தது
கரும்பை எல்லாம்
முறித்துக்கொண்டு
யானை வந்தது...*

*யானை வந்தது
காட்டு யானை வந்தது
வழியை எல்லாம்
மறித்துக்கொண்டு
யானை வந்தது...*

*யானை வந்தது
காட்டு யானை வந்தது
பாப்பா பாட்டு
பாடிக்கொண்டு
யானை வந்தது....*

*டி.அதிசயா*




உயர்ந்த மலைப் பகுதிகளிலும், பாலைவனங்கள் மற்றும் அடர்ந்த காடுகளிலும் நத்தைகள் காணப்படும். இவை தமது தலைப்பகுதியில் ஒன்று அல்லது இரண்டு சோடி உணர்கொம்புகளைக் கொண்டிருக்கின்றன. இந்தக் கொம்புகள் தேவையான போது வெளியே நீட்டவும், உள்ளே இழுக்கவும் ஏற்றவகையில் உள்ளன. நத்தையின் உடலுக்குள் எலும்புகள் கிடையாது. உடம்பின் பெரும் பகுதி தசையால் ஆனது. ஆபத்துக்காலங்களில் இவை தமது உடற்பகுதியை முதுகில் காணப்படும் வளமையான ஓட்டினுள் இழுத்துக்கொள்கின்றன.


நத்தைகள் தமது வயிற்றுப் பகுதியில் காணப்படும் தசையின் உதவி கொண்டு மெதுவாக ஊர்ந்து செல்கின்றன. இவை தமது வாழ்நாளில் பெரும் பகுதியை உணவு தேடுவதிலேயே கழிக்கின்றன. வாசனை மூலம் தமக்கான உணவுகள் இருக்கும் இடத்தை முகர்ந்து அறிந்து கொள்கின்றன.

*ர.டுசாந்தன், அராலி வள்ளியம்மை ஞா.வி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.சிவபாலன்

# விரைந்து தகவல் பெற 'விக்கிபீடியா'






'விக்கிபீடியா' மேலும் பல செயற்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அவற்றில் 'விக்கி' அகராதியில் செற்களுக்கான கருத்துக்களும், விக்கிமேற்கோளில் அறிஞர்களின் கருத்துகளைக் கொண்ட மேற்கோள்களும், விக்கிசெய்தியில் சமகாலச் செய்திகளும், விக்கிநூல்களில் அரியநூல்களும் வெளியிடப்படக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் பல செயற்றிட்டங்களும் இதில் உள்ளன.

இணையத்தளத்தில் தேடுதல் நடத்தித் தகவல்பெற முயல்வோர் பெரும்பாலும் 'விக்கிபீடியா' எனும் இணையத்தளத்தைச் சந்தித்திருப்பார்கள். உலகமக்கள் பயன்படுத்தும் இணையத்தளங்களின் வரிசையில் தற்போது ஐந்தாம் இடத்தைத் தனதாக்கியிருக்கின்ற இந்த 'விக்கிபீடியா' முற்றுமுழுதாக இலவசமாகத் தகவல்களை வழங்கும் ஒரு இணையத்தளமாகும். அதேவேளை இது ஒரு இணையக் கலைக்களஞ்சியமுமாகும்.

### கட்டற்ற கலைக் களஞ்சியம்

விக்கிபீடியாவை 'கட்டற்ற கலைக்களஞ்சியம்' எனவும் அழைப்பர். 'கட்டற்ற' என்பது காப்புரிமைச் சிக்கல்கள் இல்லாமல் இதன் உள்ளடக்கங்களை கட்டுப்பாடில்லாமல் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைக் குறிக்கின்றது. அத்துடன் ஏராளமான உள்ளடக்கங்களைத் தன்னுள் 'விக்கிபீடியா' வைத்திருக்கின்றது என்பதையும் இந்தக் 'கட்டற்ற' எனும் பதம் மூலம் அது உணர்த்தி நிற்கின்றது. தற்போது நாம் அச்சிடப்பட்ட கலைக்களஞ்சியங்களை உதாரணமாக என்சிக்லோபீடியா ப்றிரன்னிகா போன்ற கலைக்களஞ்சியத் தொகுப்புக்களை நூலகங்களிலே பார்க்கின்றோம், பயன்படுத்துகின்றோம். ஆனால் இவற்றைத் தயாரிக்க, அச்சிட எடுக்கும் காலம், செலவுகள் மிக மிக அதிகமாக இருப்பதால் இவற்றைக் கொள்வனவு செய்வது இலகுவானதல்ல. எனவே இவற்றைத் தேடி நாம் நூலகங்களுக்கே செல்லவேண்டியிருக்கும். அவையும் அச்சிடப்பட்ட காலப்பகுதியில் பெறப்படும் தகவல்களை மட்டுமே உள்ளடக்கியிருக்கும். அவற்றிலுள்ள தகவல்களை இற்றைப்படுத்துவதென்றால் மறுமுறை அச்சிடும்போது மட்டுமே சாத்தியமானதாக இருக்கும்.

முக்கிய கலைக்களஞ்சியத் தொகுப்பான 'என்சிக்லோ பீடியா ப்றீரன்னிகா' அதற்கான செலவு அதிகரித்துள்ள நிலையில் புதிய வெளியீடுகளை வெளியிடுவதைக் கைவிட்டுள்ளது.



### விக்கிபீடியாவின் புதிய, சிறந்த வசதிகள்

மேற்குறிப்பிட்ட இணையத்தளங்களுக்கெல்லாம் மாற்றீடாக அல்லது அவற்றிலிருக்கும் குறைகளை மேப்படுத்தியதாக உடனுக்குடன் கட்டுரைகளை வெளிடவோ, இற்றைப்படுத்தவோ, அல்லது பிழைகளைத் திருத்தி அமைக்கவோ கூடிய வகையில் அமைக்கப்பட்டதுதான் இந்த இணைய கலைக்களஞ்சியமான விக்கிபீடியா. இந்தக் கலைக்களஞ்சியமானது அனைவரும் கட்டுரைகளை வெளியிடக்கூடியவகையில், அனைவரும் தகவல்களைத் திருத்தக் கூடிய வகையில், கலந்துரையாடல்கள் மூலம் திருத்தமான தகவல்களை வெளியிடக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருப்பது அதன் முக்கிய சிறப்பம்சமாகும். அத்துடன் உலகிலுள்ள எந்த மொழியிலும் கலைக்களஞ்சியங்களை உருவாக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருப்பதும் மற்றொரு சிறப்பம்சமாகும். அதாவது தற்போது உலகிலுள்ள 296மொழிகளில் இந்தக் கலைக்களஞ்சியம் தொகுக்கப்பட்ட நிலையில் மேலும் பல மொழிகளில் இந்தக் கலைக் களஞ்சியத்துக்குள் புகுத்தப்பட இருக்கின்றன.

### விக்கிபீடியாவின் வாழ்க்கை

விக்கிபீடியா இணைய கலைக்களஞ்சியத்தின் வரலாறு 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜிம்மி வேல்ஸ், லாரி சாங்கர் என்போர் ஆரம்பித்த ஆங்கில மூல இலவச இணையத்தளமான 'நூப்பீடியா' எனும் இணைய கலைக்களஞ்சியத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. ஆரம்பத்தில் இதில் துறைசார்ந்த நிபுணர்கள் எழுதுகின்ற கட்டுரைகள் மட்டுமே வெளியிடப்பட்டன.

அத்துடன் ஆரம்பித்து மூன்றரை ஆண்டுகளுக்குப் பின்னரும் இது 24கட்டுரைகளையும் 74முற்றுப் பெறாத ஆக்கங்களையும் மட்டுமே கொண்டிருந்தது. அனைவரும் தமது ஆக்கங்களை விக்கிபீடியாவுக்கு எழுதலாம் என்ற கொள்கையுடன் 2001 ஜனவரி 15 இல் விக்கிபீடியா அதற்கான தொழில்நுட்ப சாத்தியத்தையும் ஏற்படுத்திக் கொண்டதன் பின்னர் அதன் வளர்ச்சி மிகவேகமானதாக இருந்தது. ஹவாய் மொழியில் 'விக்கி விக்கி' என்றால் 'விரைவாக' என்று கருத்து. இதிலிருந்து 'விக்கி'யையும் 'நூப்பீடியா' என்பதிலிருந்து 'பீடியா'வையும் இணைத்துப் பெறப்பட்ட விக்கிபீடியா பின்னர் பெயருக்கு ஏற்ப இன்னும் விரைவான வளர்ச்சியைக் கண்டது.

ஆரம்பத்தில் ஆங்கில மொழியில் மட்டும் இருந்த விக்கிபீடியாவானது ஓராண்டுக்குள் 16ஆயிரம் கட்டுரைகளைக் கொண்ட இணையத்தளமாகியது. மூன்றரை ஆண்டுகளில் நூப்பீடியா வெறும் 74 கட்டுரைகளை மட்டும் கொண்டிருக்கையில் விக்கிபீடியாவோ 5 இலட்சத்து 80ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகளைக் கொண்டு பரந்த விடயங்களைக்கொண்ட இணையக் கலைக்களஞ்சியமாகியது. இலாப நோக்கற்ற தொண்டு நிறுவனமாக அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட 'விக்கி மீடியா பவுண்டேசன்' விக்கிபீடியாவையும் அதனுடன் இணைந்த சகோதர அமைப்புகளையும் நடத்திவருகின்றது. இதற்குப் பெரும்பாலும் தனிமனிதர்களே நிதி உதவிகளை வழங்கி வருகின்றனர். இந்த இணையத்தளமானது. விளம்பரங்களை அனுமதிப்பதில்லை. எந்தவித வணிகச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதில்லை. ஆயிரக்கணக்கான தன்னார்வலர்களின் உழைப்பையும் தனியார்களின் நன்கொடைகளையும் பயன்படுத்தி, பெருமளவான பல்வேறு மொழி அறிவைத் திரட்டி, தேவைப்படுவோருக்கு இலவசமாக வழங்குகின்றது. ஒரேயொரு தரவுமையத்தை மட்டும் கொண்டுள்ள விக்கிமீடியா சுமார் 300 சேவையகங்களைக் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

### தமிழ் விக்கிபீடியா

கடந்த 16வருட கால வளர்ச்சியில் விக்கிபீடியாவானது 296மொழிகளில் நாலரைக் கோடி கட்டுரைகளையும் இரண்டரை இலட்சம் படிமங்களையும்(படங்கள், ஆவணங்கள் போன்றன) கெண்டுள்ளது. ஆறுகோடியே 80இலட்சம் பதிவுசெய்யப்பட்ட பயனாளர்கள் இதற்கு உள்ளனர். ஆங்கில மொழிமூலமான ஆக்கங்கள் மட்டும் 54 இலட்சத்துக்கு மேல் உள்ளன. இதன் மூலம் ஆங்கிலமாழி விக்கிபீடியாவில் முதலிடத்தை வகிக்கின்றது. விக்மீடியாவின் இந்த வளத்தைப் பயன்படுத்தி 'தமிழ்விக்கிபீடியா' 2003ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடங்கப்பட்டது. தற்போதுள்ள புள்ளிவிபரங்களின்படி தமிழ் மொழி மூலமான கட்டுரைகளின் எண்ணிக்கை ஒருலட்சத்தைத் தாண்டி தமிழ் விக்கிபீடியா 59ஆவது இடத்தில் இருக்கின்றது. இவை சுமார் 3இலட்சம் இணையப் பக்கங்கள் வரை உள்ளன. ஒரு இலட்சத்து 14ஆயிரம்பேர் பயனாளர்களாக இருக்கின்றனர். நாளொன்றுக்கு ஒரு இலட்சத்து 24ஆயிரம் பக்கங்கள் பார்வையிடப்படுகின்றன. இதில் 1600க்கு மேற்பட்டோர் 10க்கு மேற்பட்ட கட்டுரைகளைத் தொகுத்திருக்கின்றனர். இவர்கள் 'விக்கிப்பீடியர்' என அழைக்கப்படுகின்றனர்.

### பல் பரிமாணத்தில் புதிய செயற்திட்டங்கள்

'விக்கிபீடியா' மேலும் பல செயற்திட்டங்களைச்செயற்படுத்திவருகின்றது. அவற்றில் 'விக்கி' அகராதியில் செற்களுக்கான கருத்துக்களும், விக்கிமேற்கோளில் அறிஞர்களின் கருத்துகளைக் கொண்ட மேற்கோள்களும், விக்கிசெய்தியில் சமகாலச் செய்திகளும், விக்கிநூல்களில் அரியநூல்களும் வெளியிடப்படக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் பல செயற்திட்டங்களும் இதில் உள்ளன. இதில் ஆர்வமுள்ள எவரும் பங்களிப்புச் செய்யமுடியும் என்பதுடன் பல்வேறு மொழிகளில் ஆற்றலுள்ளோர் அந்தந்த மொழிகளிலுள்ள கட்டுரைகளை மொழியாக்கம் செய்து வெளியிடவும் முடியும்.

அனைவரும் கட்டுரைகளை எழுதமுடியுமாயினும் அதிலுள்ள தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த, அதிலுள்ள தகவல்களில் தவறுகள் இருப்பின் அவற்றை உரையாடல்கள் மூலம் திருத்தம் செய்யவும், உடனுக்குடன் இற்றைப்படுத்தவும் முடியும். ஒவ்வொருமுறையும் செய்யப்படும் திருத்தங்களையும் இற்றைப்படுத்தல்களையும் பார்வையிடக்கூடியவகையில் இதன் பக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ன.

அறிவார்ந்தத் தேடுதல்களுக்கும் அறிவுபூர்வமான சிந்தனைகளையும் தகவல்களையும் வெளியிடக்கூடிய வகையிலும் இந்தத் தளம் வடிவமைக்கப்பட்டிருப்பதும் சிறந்ததோர் ஆவணக் காப்பகமாக இருப்பதும் விக்கிபீடியாவை இன்னும் வளரச் செய்யும் என்பதைக் கட்டியம் கூறிவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுப் பதவிக்கு இரண்டு கோடி...!





மைத்திரி அணியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாக மகிந்தவுக்கு ஆதரவாகச் செயற்படும் தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் மாகாண அமைச்சர்கள் ஆகியோரின் பதவிகள் பறிக்கப்பட்டு அவற்றுக்கு மைத்திரியின் விசுவாசிகள் நியமிக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

மாத்தளை மாவட்டத் தம்புள்ள தேர்தல் தொகுதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராகச் செயற்பட்ட ஜனக பண்டார தென்னகோன் அந்தப் பதவியில் இருந்து மைத்திரியால் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனக பண்டாரவின் மகன் மத்திய மாகாண அமைச்சுப் பதவியைத் துறந்தார். மைத்திரி அணியினர் முயற்சியால் ஜனக பண்டாரவின் சகோதரரின் மகனையே வெற்றிடமான அந்த அமைச்சுப் பதவிக்கு நியமித்தனர். இதைத் தொடர்ந்து வட மத்திய மாகாண சபையிலும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

மே தின நிகழ்வை அடுத்து வட மத்திய மாகாண சுகாதார அமைச்சராக இருந்த மகிந்தவின் விசுவாசியான கே.எச்.நந்தசேனவை மைத்திரி அந்தப் பதவியில் இருந்து நீக்கினார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எஸ்.எம்.சந்திரசேன தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார். தொடர்ந்து எஸ்.எம்.சந்திரசேனவை முதலமைச்சராக நியமிக்குமாறு கோரி மகிந்த உறுப்பினர்கள் 17பேர் கையெழுத்திட்டு ஆளுநரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர். அந்த மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் இந்த 17பேரில் ஒருவரான சுசில் குணரட்ண மறுநாள் மைத்திரி பக்கம் பல்டி அடித்துவிட்டார். பல்டியடித்த அவருக்கு எஸ்.எம்.சந்திரசேன வகித்த அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. மேலும் அடுத்தடுத்து இரண்டு பேர் மைத்திரி பக்கம் தாவி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டனர். இவர்களை வளைத்துப் போடுவதற்கு மைத்திரி தரப்பு எவ்வாறான பேரம் பேச்சுக்களை நடத்தியது என்று தெரியுமா...?

முதலைமைச்சர் பதவியைக் கைப்பற்றுதல் என்ற முடிவை அந்த 17பேரும் எடுத்ததும் அவர்கள் மகிந்தவைச் சந்தித்து அவர்களின் நிலைப்பாட்டைக் கூறினர். அந்தச் சந்திப்பில் 16 பேரே கலந்துகொண்டனர். மைத்திரியிடம் மத்திய அரசின் அதிகாரம் இருக்கும்போது இது சாத்தியமற்றது என்று மகிந்த அவர்களிடம் விளக்கிக் கூறினார். அப்போது அவர்களுள் இருவர் "சேர்...மைத்திரி பக்கம் மாறினால் அமைச்சுப் பதவியும் இரண்டு கோடி ரூபா பணமும் தருவதாக மைத்திரி தரப்பு எங்களிடம் கூறியுள்ளது.நாங்கள் போகமாட்டோம்"என்றனர். இடையில் 17ஆவது நபர் உள்ளே நுழைந்தார். ஏன் தாமதம் என்று வினவப்பட்டது. மைத்திரி பக்கம் பல்டியடித்தால் இரண்டு கோடி ரூபா பணமும் அமைச்சுப் பதவியும் தருவதாக மைத்திரியின் ஆட்கள் தன்னை கூப்பிட்டுப் பேசியதாகவும் அதனால்தான் தாமதம் என்றும் கூறினார். இதைக் கேட்ட மகிந்த சற்று ஆடியேதான் போனார்.

எம்.ஐ.முபாறக்

## வாட்டி வதைக்கப்பட்டார் ஜோன் சேனவிரட்ண

மகிந்த அணியைச் சேர்ந்த ரஞ்ஜித் சொய்சாவின் தந்தை அண்மையில் காலமாகினார். அவரது உடல் இரத்தினபுரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது பலதரப்பட்ட அமைச்சர்களும் சென்று அஞ்சலி செலுத்தினர். அவ்வாறு அஞ்சலி செலுத்தச் சென்றவர்களுள் அமைச்சர். ஜோன் சேனவிரட்ணவும் ஒருவர். அங்கு அவர் மகிந்த அணியினரிடம் சிக்கிச் சின்னாபின்னமாகித் திரும்பியதுதான் இங்கு சுவாரசியம். அங்கு அவரைச் சுற்றி வளைத்த கெஹலிய ரம்புக்வெல, பவித்ரா மற்றும் ஜோன்ஸன் உள்ளிட்டவர்கள் இவரைக் கிண்டல் செய்து வறுத்து எடுத்துவிட்டார்களாம்.

"வட மத்திய மாகாண சபையில் அமைச்சர்களை நியமிப்பதற்கு அதிக பணம் செலவாகியதாம் என்ன...?" என்று கெஹலிய கேட்டதும் பதில் எதுவும் கூறாமல் சிரித்துக்கொண்டே நின்றாராம் சேனவிரட்ண. மகிந்த அணியில் இருந்து மைத்திரி பக்கம் பல்டியடித்தவர்களுக்கு கோடிக்கணக்கில் பணம் கொடுத்ததைத்தான் கெஹலிய இவ்வாறு கேட்டார்.

"அங்குஇருந்தது போதும். இங்கே வாங்களேன்" என்றாராம் பவித்ரா. தனிமையில் சிக்கிக்கொண்ட சேனவிரட்ணவை நீண்ட நேரம் சுற்றி வளைத்து வாட்டி வதைக்கத் தொடங்கிய அவர்களின் கிண்டலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சேனவிரட்ண ஒருவாறு அங்கிருந்து நழுவி விட்டாராம்.




## ஜீ.எஸ்.பி. பிளஸ், இதற்காகத்தானாம்

ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை இந்த மாதம் 19ஆம் திகதி இலங்கைக்குக் கிடைத்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் விதித்த 27 நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்தச் சலுகை வழங்கப்பட்டதாம். ஆனால், அரசியல் பின்னணிகள் பலவும் இதில் உள்ளதுஎன்பதுதான் உண்மை. சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கடற்படைப் புலனாய்வு அதிகாரி ஒருவருக்கு பிணை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அந்த அதிகாரிக்கு நெருக்கமானவர்கள் சிலர் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவரைச் சந்தித்து உரையாடினர்.

அந்த அமைச்சரோ அவருக்குப் பிணை சாத்தியமற்றது என்றும் அதற்குக் கூறிய காரணமும் அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியதாம். எமக்கு இப்போது வரிச் சலுகை கிடைத்திருப்பதே அந்த அதிகாரியை உள்ளே போட்டதால்தான் என்று அமைச்சர் கூறினாராம்.



## கடுப்போடு இருக்கும் அமைச்சர்

கடந்த வருடங்களில் அமைச்சர்கள் செயற்பட்ட விதத்தில் அதிருப்தியடைந்த மைத்திரி அமைச்சரவையில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டார். இரண்டு வருடங்களாகச் சிக்கலை ஏற்படுத்திய – சர்ச்சையைக் கிளப்பிய அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் அமைச்சுக்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முடிவெடுத்தார்.

அந்த வகையில், ஜனாதிபதி அதிகம் கவனம் செலுத்தியது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும், அதிக பணம் சுற்றித் திரியும் அந்த அமைச்சின்மீதுதான்.

அரச திறைசேரி காலியாகி இருக்கும் இந்த நிலையில், அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரி மூல வருமானத்தைத் தனது சகாக்களின் வர்த்தக மேம்பாட்டுக்காக ஊழல் புரிந்தார் என்பன உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் அவர்மீது உண்டு. இவரைத் தொடர்ந்தும் அந்தப் பதவியில் வைத்திருந்தால் ஒரு கட்டத்துக்கு மேல் அரசு அவரிடம் கடன் வாங்கும் நிலை ஏற்படலாம் என்பதை உணர்ந்த மைத்திரி, ரணிலை அழைத்து விடயத்தை விளக்கினார். அந்த அமைச்சர் ரணிலின் விசுவாசி என்றாலும்கூட இந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு உதவுவது தனது ஆட்சிக்கு ஆபத்தாக அமைந்துவிடும் என்று ரணில் கருதினார். மத்திய வங்கி விவகாரத்தில் ஏற்கனவே தனது பெயர் நாறிப் போயுள்ளதால் மீண்டும் அப்படி ஒரு நிலை ஏற்பாடுவதை ரணில் விரும்பவில்லை. இதனால் இந்த விடயத்தில் ஜனாதிபதியின் விருப்பத்துக்கு அவரும் வழிவிட்டார்.

உடனே அவரது அமைச்சு இன்னொருவரிடம் கொடுக்கப்பட்டு அந்த ,ன்னொருவரின் அமைச்சு இந்த அமைச்சருக்கு வழங்கப்பட்டது.

இதனால் அமைச்சர் கடும் அதிருப்தியுடனும் தன்னை மைத்திரியிடம் போட்டுக் கொடுத்தவர்கள் மீது கடுப்போடும் இருக்கின்றாராம்.

## அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா!



## கைபேசி விற்பனையில் கைதிகள்

கடந்த ஆட்சியில் ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் வீதிகள் என பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மகிந்த, சீன அரசின் ஊடாக மேற்கொண்டு வந்ததை நாம் அறிவோம்.

அந்தப் பணிகளில் சீன நாட்டுத் தொழிலார்களே அதிகம் ஈடுபடுத்தப்பட்டனர். இலங்கைத் தொழிலாளர்கள் சொற்ப எண்ணிக்கையிலானோரே வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

சீன அரசோ செலவைக் குறைப்பதற்காக ஒரு தந்திரோபாய நடவடிக்கையை மேற்கொண்டது. அந்த அடிப்படையில் சீன நாட்டுக் கைதிகளையே சம்பளமின்றி இந்தப் பணியில் ஈடுபடுத்தியது. இதனால் பல கைதிகள் தப்பிச் சென்றுவிட்டனராம். இப்போது அந்தக் கைதிகள் சிங்களக் கிராமங்களில் கைபேசிகளை விற்றுத் திரிகிறார்களாம். கிராமப்புற மக்களுக்கு அவர்கள் கைதிகள் என்று தெரியாததால் அவர்களை வர்த்தகர்கள் என்று எண்ணிக்கொண்டு அந்த மக்கள் அவர்களுடன் கொடுக்கல். வாங்கல்களில் ஈடுபட்டு வருகின்றார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



III

# இலங்கையில் 2000வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள்

பேராசிரியர் சி. பத்மநாதன்

வேள்என்றபதவி பெற்றவர்கள் எல்லோரையும் நாகர் என்றே தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. வேள்புலங்களில் பல வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தன. கந்தரோடை, இவன்கட்டுவ முதலான இடங்களில் அகழ்வாய்வுகளின்போது உரோமபுரி, இந்தியா போன்ற தேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட காசுகள், மட்கலன்கள், மதுச்சாடிகள் போன்றன கிடைத்துள்ளன. அவற்றுள் பல வண்ண மெருகூட்டி அழகு செய்யப்பட்டவை. நாகர்குல வேளிரில் பலர் செப்பு நாணயங்களை வெளியிட்டனர். கந்தரோடை, கற்பிட்டி, பூநகரி முதலான இடங்களில் நாக மன்னர் வெளியிட்ட நாணயங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் 'வேள்ணாகன் பொலம்' என்று எழுதப்பட்டிருக்கும். பொலம் என்பது பொன் அது ஆகுபெயராகி நாணயத்தைக் குறித்தது. உரோமச் சக்கரவர்த்திகள், சாதவாகனப் பேரரசர், பாண்டியர், சேர மன்னர் ஆகியோரின் நாணய வடிவங்களை முன்மாதிரியாகக் கொண்டு ஈழத்து நாகர் காசுகளை வெளியிட்டனர்.

### ஆதி இரும்புக்காலத்தில் தமிழ்பேசியிருந்த மக்கள்

அரண்மனை, கோயில், கிணறு, குளம் முதலியவற்றை நாகர்குல வேளிர் அமைத்தனர். இலங்கையில் காணப்படும் கிணறுகளில் மிகவும் பழமையானவை நாகரால் அமைக்கப்பட்டவை. வன்னி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகியவற்றில் அத்தகைய கிணறுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. அவை ஒடுக்கமானவை, எனினும் ஆழமானவை. நிலப்பாங்கிற்கு ஏற்றவாறு சிலவிடங்களிலே சுடுமண் வளையங்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்குவதன் மூலமாகவும் வேறு சிலவிடங்களில் அறுத்த கற்களை அடுக்குவதன் மூலமும் கிணறுகளைக் கட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள கிணற்றுக் கட்டுகள் சிலவற்றிலே தமிழ்ப் பிராமி எழுத்துகளின் அடையாளங்கள் தெரிகின்றன. இலங்கையில் ஏரிகள், குளங்கள், என்பவற்றை நாகரே முதன் முதலாக அமைத்தனர் என்பது தெளிவாகின்றது. அண்மைக் காலத்தில் அடையாளம் காணப்பட்ட தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளின் மூலம் மேல்வரும் விடயங்கள் தெளிவாகின்றன.

யாழ்ப்பாணத்தில் நாகரே முதன் முதலாகக் குடியிருப்புகளை ஏற்படுத்தினார்கள். இலங்கையின் ஏனைய பகுதிகளில் அவர்கள் ஆதியான மக்களான குறுணிக் கற்காலப் பண்பாட்டு மக்களோடு கலப்புற்றனர். அவர்களின் வருகையோடு கற்காலம் முடிவுற்றது. நாகர் தமிழ் மொழியைப் பேசினார்கள்.

அவர்கள் ஆதி இரும்புக் காலப் பண்பாட்டினை இலங்கையில் அறிமுகஞ் செய்தனர்.

அவர்களின் கல்வெட்டுகள் காணப்படும் இடங்களில் அப்பண்பாட்டிற்குரிய கரும் - செம் மட்பாண்டங்களும் வேறு பல தொல்லியல் சின்னங்களும் காணப்படுகின்றன. ஈமத்தாழிகளிலும் ஈமத் தலங்களிலுள்ள கல்லறைகளிலும் நடுகற்களிலும் நாகரின் பெயர்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளதால் ஆதி இரும்புக்கால மக்கள் தமிழ் மொழி பேசியவர்கள் என்பதும் அந்தக்கால மக்கள் கி.மு.800ஆம் ஆண்டளவில் இலங்கையிலே பரவியபோது அவர்கள் மூலம் தமிழ்மொழியும் பரவியது என்பதும் இப்பொழுது தெளிவாகின்றன. இது பிராகிருதம் பரவுவதற்கு மிக முற்பட்ட காலமாகும். ஆதி இரும்பு (பெருங்கற்கால)க் காலப் பண்பாட்டுத் தலங்களை அகழ்வாய்வு செய்தவர்கள் அங்கு வாழ்ந்த மக்களின் மொழி பற்றி எதனையும் குறிப்பிடவில்லை. பன்னாட்டு நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு விற்பன்னர்களும் அவர்களில் அடங்குவர். தமிழ்ப் பிராமி வரிவடிவங்களை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

எழுத்துப் பொறித்த கலவோடுகள், சுடுமண் பாவைகள், உடையாத முழுமையான கலன்கள் முதலானவற்றிலே தமிழ்ச் சொற்களையும் தமிழ்ப் பிராமி வடிவங்களையும் கண்டுள்ளோம். இவன் கட்டுவவில் நடைபெற்ற அகழ்வாய்வுகளிற் கிடைத்த தொல்பொருட் சின்னங்கள் சிலவற்றை சிகிரியா அருங்காட்சியகத்தில் வைத்துள்ளனர். அவற்றையும் அவற்றின் ஒளிப்படங்களையும் சென்ற வருடம் ஆராய்ந்த பின்பே ஆதி இரும்புக் காலப்பண்பாட்டு மக்கள் நாகர் என்பதையும், அப்பண்பாட்டு மக்கள் தமிழ் மொழி பேசியவர்கள் என்பதையும் எம்மால் அறிந்துகொள்ள முடிந்தது.

### தமிழ்மொழியின் தொன்மை

இன்று கிடைக்கின்ற பண்பாட்டுச் சின்னங்களைப் பொறுத்த வரையில் இலங்கையில் கிடைக்கும் சான்றுகள் மூலமாகவே தமிழ்மொழியின் தொன்மையை உறுதிசெய்ய முடிகின்றது. அது 3000 வருடங்களுக்கு முன்னரே உற்பத்தியாகிவிட்டது. நாகர், தமிழ்மொழி, ஆதி இரும்புக் காலப் பண்பாடு ஆகியன பின்னமாகிவிட்டன. இலங்கையிலே பரவுவதற்கு முன்பே அவை பின்னமாகி விட்டன. அவற்றுள் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாத அளவில் அவை சங்கமமாகிவிட்டன. முக்கியமான மற்றுமொரு விடயம் உண்டு. அது இலங்கைத் தமிழரின் வரலாறு பற்றியது. கி.மு. 250- கி.பி.300 ஆகிய காலப்பகுதியில் தமிழ் மொழியின் ஆதிக்கம் மேலோங்கிய ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்பும் சமுதாயமும் உருவாகிவிட்டன. அது வட, கிழக்கு மாகாணங்களையும், புத்தள மாவட்டத்தின் கரையோரப் பகுதியையும் உள்ளடக்கிய பிரதேசம்.

அங்கு குறுணிக் கற்கால மக்களின் மொழி ஒழிந்துவிட்டது. சமூக, பண்பாட்டு மாற்றங்களின் விளைவாக நாகர் ஆதிக்கம் பெற்ற வேள்புலங்களும் தமிழ் மொழி பேசும் சமுதாயமும் உருவாகிவிட்டன. இந்தப் பிராந்தியத்திலே தான் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் மிகுந்து காணப்படுகின்றன.

> யாழ்ப்பாணத்தில் நாகரே முதன் முதலாகக் குடியிருப்புகளை ஏற்படுத்தினார்கள். இலங்கையின் ஏனைய பகுதிகளில் அவர்கள் ஆதியான மக்களான குறுணிக் கற்காலப் பண்பாட்டு மக்களோடு கலப்புற்றனர். அவர்களின் வருகையோடு கற்காலம் முடிவுற் றது. நாகர் தமிழ் மொழியைப் பேசினார்கள். அவர்கள் ஆதி இரும்புக் காலப் பண்பாட்டினை இலங்கையில் அறிமுகஞ் செய்தனர்.

### அருணாவின் சாதனைகள்

வட மாகாணத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு. தீவுபற்று என்பன தவிர்ந்த பகுதி வன்னி என்று சொல்லப்படும். அது விசாலமான நிலப்பரப்பு. மன்னார்ப் பகுதியும் அதில் அடங்கும். ஆதிகாலத்தில் மாந்தை பிரபலமான துறைமுக நகரமாக விளங்கியதால் அங்கு சில தடவைகள் அகழ்வாய்வுகள் நடைபெற்றன. அவற்றில் வெளிநாட்டு ஆய்வாளர்களும் பங்கு கொண்டனர். அவற்றை அடிப்படையாகக் கொண்டு மாந்தை பற்றி ஒரு பெருநூலை John Carswell வெளியிட்டுள்ளார்.

மாந்தையில் எவ்வகையான மக்கள் வாழ்ந்தனர்? அவர்கள் என்ன மொழி பேசினார்கள்? அவர்களுக்கும் ஆதிகாலம் முதலாக வாழ்ந்துவரும் (தமிழ் மொழி பேசும்) மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் யாவை? என்னும் விடயங்கள் பற்றித் தாம் அக்கறை கொள்ளவில்லை என்று அவர் கூறுவது அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகும். மேலும் கலவோடுகளைப் பொறுத்தவரையில் அவை முறைப்படி பேணப்படவில்லை என்றும் சில தடவைகளில் அவற்றைப் பொறுப்பேற்றிருந்தவர்கள் சில வகைகளை மட்டுமே தெரிவு செய்துவிட்டு ஏனையவற்றைக் கழித்துவிட்டனர் என்றும் சொல்வது மற்றுமொரு வியப்பிற்குரிய விடயமாகும். உலகப் பிரசித்திபெற்ற ஆய்வாளர்களின் மேற்பார்வையில் நிகழும் பணிகளிலும் விபரீதங்கள் சில சமயங்களில் ஏற்படக்கூடும் என்ற ஐயுறவுகள் தவிர்க்க முடியாதவை. வன்னி மாவட்டங்களில் ஆதிவரலாற்றுக் காலப் பண்பாட்டுச் சின்னங்கள் மிகப் பெருந்தொகையிற் காணப்படுகின்றன. மட்டக்களப்பு தேசத்திற் கிடைப்பனவற்றைக் காட்டிலும் அவை கூடுதலானவை. அருணா செல்லத்துரையின் முயற்சிகளால் இப்பொழுது. அவற்றைப் பற்றி அறிய முடிகின்றது. அவர் தான் புதிதாகக் கண்டறிந்தவை பற்றி பத்திரிகையில் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கட்டுரையாக இரண்டு வருட காலமாக வெளியிட்டுள்ளார். அந்தக் கட்டுரைகளோடு கட்டட அழிபாடுகளான தூண்கள், அறுத்த கற்கள், செங்கட்டிகள், கலவோடுகள், கூரை ஓடுகளின் துண்டாங்கள் போன்றவற்றின் ஒளிப்படங்களும் வெளியிடப்பட்டன.

அவற்றுள் பலவற்றிலே தமிழ் பிராமி எழுத்துகள் தெரிந்தன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு அருணா கண்டறிந்த தொல்பொருட் சின்னங்களின் கால வரையறையினை உய்த்துணர முடிந்தது. அது கி.மு 250 - கி.பி. 300 வரையான காலம், இலங்கையில் ஆதி இரும்புக் காலத்தின் இறுதியான கட்டம். அது தமிழ்மொழிபேசும் சமுதாயம் உருவாகி, குறுநில அரசுகளை ஏற்படுத்தியிருந்தக் காலம். அவற்றின் மூலம் புதிதாக கண்டுப்பிடிக்கப்பட்ட தொல்பொருட்களின் பெறுமானங்கள் வரலாற்று ஆதாரங்கள் என்ற வகையில் எத்தகையது என்பது எளிதிற் புலனாகும். அவற்றை இயன்ற அளவில் எடுத்து பாதுகாப்பான இடத்தில் வைப்பது அவசியமாகும். மிக அவசரமான தேவையுமாகும். வன்னியின் வடப்பகுதியில் விசாலமான அருங்காட்சியகம் அமைப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

(தொடரும்)


(கோப்புப்படம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ரவிக்கு ஒரு பகிரங்க மடல்!

அன்புள்ள புதிய அயலுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநயக்கவுக்கு எனது அன்பான வணக்கங்களும் வாழ்த்துக்களும். கடைசியாக 2012ஆம் ஆண்டு, ஐக்கிய தேசியக் கட்சி, யாழ்ப்பாணத்தில் நடத்திய மே தினக் கூட்டத்துக்கு வந்திருந்த உங்களை நேருக்கு நேர் கண்டதாக ஞாபகம். பின்னர் நடந்த அரசியல் மாற்றங்கள் உங்களை நிதி அமைச்சராக்கி, இரண்டு பாதீட்டு உரைகளை நாடாளுமன்றில் நடத்தவும் வழிகோலியிருந்தன. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் பொது எதிரணி கொண்டு வந்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் தப்பிப் பிழைத்திருந்தீர்கள்.



**உங்களுக்கு ஏன் இந்தப் பதவி மாற்றம்...?**

சொற்ப காலமாகப் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட அமைச்சரவையின் சங்கீதக் கதிரை கடந்த வாரம் நடந்தபோது நிகழ்ந்த மாற்றத்தில் நீங்கள் பேசுபொருளாயிருக்கிறீர்கள். காரணம், நிதி அமைச்சராக இருந்த உங்களைத் தூக்கி அயலுறவுத்துறை அமைச்சருக்குரிய இருக்கையில் உட்கார வைத்திருக்கிறார்கள். வெளிவிவகாரங்களைக் கையாண்டு வந்த மங்களவுக்கு ஊடகத்துடன் சேர்த்து நிதி விவகாரமும் கையளிக்கப்பட்டிருக்கின்றது. மற்றைய அமைச்சு மாற்றங்களைவிட உங்களுடைய இந்தப் பதவிப் பரிமாற்றம், ஆச்சரியத்துடனும் புதுமையுடனும், அரசியல் அவதானிகளால் கேள்விக்குறியுடனும் நோக்கப்பட்டிருக்கின்றது. அதிலும் அயலுறவுத்துறை உங்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருக்கின்றது என்பதைவிடவும் நிதி விவ காரம் உங்களிடமிருந்து பிடுங்கப்பட்டிருக்கின்றது என்பதே பிரபல்யமான கதையாகவும் பார்க்கப்படுகின்றது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் இந்த ஆண்டுக்கான சிறந்த நிதி அமைச்சராக 'லண்டன் த பாங்கர்' சஞ்சிகை தெரிவு செய்திருந்த உங்களை, இந்த நாட்டு அரசு நீங்கள் அதற்கு 'லாய்க்கு' இல்லை என்று முடிவெடுத்து அந்தப் பதவியிலிருந்து நீக்கியிருக்கின்றது. ஆனால் அதற்குப் பின்னால் நிறையவே அரசியல் பின்புலங்கள் இருக்கும் என்பது தளராத நம்பிக்கை.

**இது அரசதலைவர் அடித்த ஆப்பாக இருக்குமோ...!**

நல்லாட்சி அரசுக்கு நிதி விவ காரத்தில் கண்டம் இருக்கின்றது என்பது கசப்பான உண்மைதான். அந்த உண்மை, அர்ஜுனா மகேந்திரன் விவகாரத்தில் தோலுரிக்கப்பட்டிருந்தது. அதனுடைய ஒரு தொடர்ச்சியாகவே உங்களுடைய பதவி மாற்றமும் அமைந்திருக்குமோ...! என்பதே எனக்கு இருக்கும் சந்தேகம். இது தவிர, சென்ற ஆண்டில் பெறுமதி சேர் வரியை 15 சதவீதமாக உயர்த்த முயற்சித்தபோது அரசதலைவர் தரப்பில் இருந்து அதற்கு மறைமுக விசனம் தெரிவிக்கப்பட்டிருந்ததும் எனக்குச் சற்று உறுத்தலாகத் தானிருக்கின்றது.

அரசதலைவர் தன்னுடைய மாவட்டத்தில் நடந்த நிகழ்வொன்றில் இது தொடர்பான தனது மனப்பாரத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வரிச்சுமை அதிகரிப்புக்குத் தான் இடம் தரப்போவதில்லை என்பதே அவரது நிலைப்பாடாகவிருந்தது. இப்படியான வரி அறவீட்டு விவகாரங்களில் நீங்கள் உங்கள் சூரத்தனத்தைப் பல தடவைகள் காண்பித்திருந்தீர்கள்.

> **நல்லாட்சி அரசுக்கு நிதி விவகாரத்தில் கண்டம் இருக்கின்றது என்பது கசப்பான உண்மைதான். அந்த உண்மை. அர்ஜுனா மகேந்திரன் விவகாரத்தில் தோலுரிக்கப் பட்டிருந்தது. அதனுடைய ஒரு தொடர்ச்சியாகவே இதுவும் உங்களுடைய பதவி நீக்கமும் அமைந்திருக்குமோ...? என்பதே எனக்கு இருக்கும் சந்தேகம்.**

நோயாளர்களுக்கான தனியார் மருத்துவசேவை வரி, கார்பன் வரி, மூலதன ஆதாய வரி, சுற்றுலா அபிவிருத்தித் தீர்வை மற்றும் இணையச் சேவைக்கான தொடர்பாடல் தீர்வை என்றெல்லாம் வரிகளை நீங்கள் அடுக்கிக்கொண்டுபோக அரசதலைவர் உங்களுக்கு ஆப்படித்திருக்கிறார். அரசுக்கு வருமானம் ஈட்டித் தருவதில் அதிக ஈடுபாடு காட்டியது இறுதியில் உங்களுக்கே வினையாக முடிவடைந்து விட்டது. வெளிநாட்டில் சிறந்த விருது பெற்ற நிதியமைச்சரான உங்களை வெளியேற்றியதற்காக ஒன்றிணைந்த எதிரணி உட்பட்ட தரப்புக்கள் கொக்கரித்திருந்தாலும் உள்ளுக்குள் இப்படி ஒரு விவகாரம் இருப்பது சிலருக் குத்தான் உறைத்திருக்கின்றது. அத்தோடு, சுதந்திரக்கட்சியினர் தரப்பாலும் உங்களை மாற்றக்கோரி அழுத்தம் வழங்கப்பட்டு வந்ததாம். புற அழுத்தங்களுக்கு உட்பட்டு நடைபெற்றிருக்கும் மாற்றம், சிலகாலங்களுக்கு முன்பு ரணிலுக்ும் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் இருந்த பனிப்போர் போன்ற நிலையை ஐ.தே.க.வினுள் தோற்றுவித்துவிடுமோ? என்னும் பயம் எனக்குள் இருக்கின்றது.

உங்கள் பதவிநீக்கம் பற்றி அறிந்த மகிந்த உங்களுடைய மறு பதவியேற்புக்கு முன்னதாகவே உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது. தனது ஆட்சிக்காலத்தில் நிதி அமைச்சர் பதவிக்கு யாரையும் நியமிக்காமல் அந்த அமைச்சைத் தனது கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தவர் அவர் என்பது மக்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம் தானே. அதிர்ஷ்டலாபச் சீட்டுக் குலுக்கலில் ஆறுதல் பரிசு வழங்குவதுபோல மேலும் சில - முன்பு வெளிவிவகார அமைச்சின் ஆளுகைக்குள் வராத நிறுவனங்களான தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை, மகாபொல புலமைப்பரிசில் மற்றும் சிறிலங்கன் விமானசேவை போன்றவற்றை உங்களுடைய கட்டுப்பாட்டில்விட நீங்கள் கோரியுள்ளதாகவும் அது இணங்கப்பட்டிருக்கிறதாகவும் அறிந்தேன்.

**நிதியை விடுத்து எப்படி நீதியைக் கையாளப் போகின்றீர்களோ...**

தொழில்முறைவழி வந்த கணக்காளரான உங்களை அது சார்ந்த துறையிலிருந்து நீக்கி அயலுறவுத்துறைக்கு நியமித்திருக்கும் வேடிக்கைக்குப் பின்னால் கிடைத்திருக்கும் இருக்கையின் தீவிரத்தன்மை கட்டாயம் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்றும் எமக்குத் தெரியாமலில்லை. இங்கே தான் உங்களுடைய தாய்நாடான இலங்கையின் மதிப்பைப் பன்னாட்டளவில் தக்கவைப்பது மற்றும் முன்னேற்றுவது தொடர்பான தலையிடிகள் பலவும் உங்களுக்குக் காத்திருக்கின்றன. உங்களுக்கு முன்னர் பழக்கமான உலக வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் போன்;ற நிறுவனங்களின் தொடர்பாடலுக்கு அப்பால் ஐ.நா. சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற நிறுவகங்களைச் சமாளிக்கவும் முந்தைய அரசு ஏற்படுத்தி, இந்த அரசு இழுத்தடித்துக் கொண்டிருக்கும் அநீதிச் செயல்களுக்கு முகம் கொடுத்துச் செவ்வனே அவற்றை இன்னமும் இழுத்தடித்துச் செதப்பிவிடவேண்டிய சீரிய தேவை உங்களுக்குள் எழுந்துள்ளது. அந்தப் பெரிய சுமையை இப்போது உங்கள் தோள்களில் தான் இறக்கியிருக்கின்றார்கள்.

மனித உரிமை விவகாரங்கள், பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களில் மேற்குலகில் உங்கள் நாட்டுக்குள் அவ்வளவு நல்ல பெயர் கிடையாதென்பது தங்களுக்கு தெரியாததல்ல. குற்றங்கள் பலவற்றையும் இழைத்துவிட்டுத் தண்டிக்கப்படாமல் காலம் கடத்தும் தந்திரங்களையும் ஆணைக்குழுக்களை அமைக்கும் உபாயங்களை முன்னிறுத்தித் தற்காலிகத் தடுப்புக்களைப் பிரயோகிப்பதை செய்து வந்தாலும் கற்றுக்கொண்ட பாடங்களைச் சரியாக கருத்தில் கொள்ளாத தன்மை இன்னமும் காணப்படுகிறது. உங்களுடைய காலத்தில் இவையெல்லாம் எவ்வாறு இருக்கப்போகின்றனவோ என்று காத்திருந்துதான் நாம் பார்க்க வேண்டும்.

**இதிலும் உங்களுக்கு விருது கிடைக்கலாம்...**

பன்னாட்டு அரங்குகளில் இலங்கை தலையாட்டியவை, வாக்குறுதி அளித்த விடயங்கள், நடைமுறைப்படுத்தப்படாதவை தொடர்பில் உங்கள் நிலைப்பாடுகள் தான் என்னவாக இருக்குமோ? புலம்பெயர் இலங்கையர் சமூகத்தை நல்லிணக்கப் பொறிமுறையின் பங்குதாரர்களாகக் கருத்தில் கொண்டு அவர்களுடைய முதலீடுகளை நாட்டுக்கு வரவழைக்கப் பொருத்தமான திட்டங்கள் உங்கள் கைவசம் இருக்கின்றனவா? அல்லது இலங்கை அரசியல்வாதிகள் போகும் இடமெல்லாம் கொடி பிடித்துப் போராட்டம் நடத்தும் குழுமமாகவே அவர்களை கண்டு கொள்ளப்போகிறீர்களா? அல்லது இதிலும் ஒரு விருது எடுத்துத்தான் விடுகிறீர்களோ தெரியவில்லை?

இலங்கை வரலாற்றில், இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில், அவ்வப்போது எட்டப்படும் தீர்மானங்களில், அயலுறவுத்துறை அமைச்சரின் வகிபாகம் கவனத்துக்குரியது. சில சந்தர்ப்பங்களில் மற்றைய நாடுகளின் அயலுறவுத்துறை அமைச்சர்களின் தலையீடுகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. தற்போது உங்கள் வகிபாகத்தை நோக்குவதற்காக மேடையின் திரைச்சீலை விலக்கப்பட்டிருக்கின்றது. மங்களவுக்கு அடுத்தபடியாக நல்லாட்சி அரசின் சார்பாக பன்னாட்டுச் சமூகத்தைச் சமாதானப்படுத்தப் புறப்பட்டிருக்கும் உங்களுக்கு மீண்டும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுதல்களும். உங்கள் வெளியூர்ப் பயணங்கள் சௌகரியமாக அமையட்டும். இந்திய - சீன சமாந்தர உறவுகள் உங்கள் காலத்திலும் சுமூகமாகத் தொடரட்டும்.

...ரியுடன்,

ஸ... ஸ்வாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மக்களைப் புலனாய்வாளர்களாக்கும் அரசியல்

சந்திரசேககர ஆசாத்





அண்மையில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் எனக் கூறும்படியும் அப்படிக் கூறினால் உடனடியாக அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கோரிக்கை விடுத்தார். அதேவேளை காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் அமைப்பது தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, சில திருத்தங்கள் செய்ய வேண்டியிருப்பதால் அதில் தான் இன்னும் கையெழுத்திடவில்லை எனவும் விரைவில் திருத்தங்களை மேற்கொண்டு அதை நடைமுறைப் படுத்தப்போவதாகவும் அதே சந்திப்பில் அவரே தெரிவித்திருந்தார்.

### மக்களுக்கு அதிகாரங்கள் அளிக்கப்படுமா...?

காணாமல் ஆக்கப்பட்டவர்களை அவர்களின் உறவுகள் தான் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டுமானால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான செயலகம் எதற்காக...? உண்மையிலிருந்து வெகு தொலைவில் அரசு பயணிக்கும்போது அவரின் கருத்துக்கள் ஒன்றுடன் ஒன்று முரண்படுவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களே காணாமல்போனோர் எங்கு வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதைத் தேடிக் கண்டு பிடிப்பதென்றால் அவர்களுக்கு உயர்மட்டப் புலனாய்வாளர்களுக்கு வழங்கப்படும் அதிகாரமும் வசதிகளும் வழங்கப்படுமா? எந்த நேரமும் எந்தப் படைமுகாமுக்கும் சென்று விசாரணை நடத்த முடியுமா? நாலாம் மாடி, பூசா முகாம் போன்ற விசாரணை முகாம்களில் சென்று தடுத்து வைக்கப்பட்டோரை விசாரிக்க முடியுமா? வட்டுவாகலில் பேராளிகளை உறவினரிலிருந்து கையேற்ற படை அதிகாரிகளை உறவுகளால் விசாரிக்க முடியுமா? இதில் எவற்றைச் செய்ய முடியும்...? இப்படி எதுவுமே செய்ய முடியாது. இப்படியெல்லாம் விசாரணை செய்யக் கூடிய அதிகாரிகளே, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக முடிவு கூறாமல் இருக்கும்போது எவ்வித அதிகாரமும் இல்லாத பொதுமக்களால் அது எப்படிச் சாத்தியமாக முடியும்?

### ஆணைக்குழுக்கள் அனைத்தும் என்னதான் செய்தன...?

உண்மையிலே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை நேர்மையான முறையில் விசாரணை செய்தாலேயே கண்டு பிடிக்க முடியும். நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம தலைமையிலான காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆணைக்குழு போன்றவற்றுக்கு காணமல் ஆக்கப்பட்டோரின் ஏராளம் உறவினர்கள் தாங்கள் எங்கு வைத்து, எப்போது படையினரிடம் தங்கள் உறவுகளை ஒப்படைத்தனர் என்பதைத் தெளிவாகவே சொல்லியிருந்தனர். அன்று, அந்த இடத்தில் உறவுகளைப்பொறுப்பேற்ற அதிகாரிகளை இராணுவப் பதிவேடுகள் மூலம் சுலபமாக அறிய முடியும். அந்த அதிகாரிகள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு பதில் சொல்லியேயாக வேண்டும். குறித்த விசாரணைப் பொயிமுறைகள் ஏன் அப்படியான வழிமுறைகளில் விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை? அப்படி ஆரம்பிக்கப்பட்டிருந்தால் இந்த விவகாரம் எப்போதோ தீர்க்கப்பட்டிருக்கும். குற்றவாளிகளும் இனம் காணப்பட்டிருப்பர். இது நல்லாட்சி தான் எனத் தமிழ் மக்களும் பன்னாடும் ஏற்றுக் கொள்ளும் நிலையும் ஏற்பட்டிருக்கும்.

### மன்னருக்குச் சளைக்காத மந்திரி.

இந்த விவகாரத்தில் ஆட்சியாளர்களின் நடவடிக்கையோ நேர் எதிர்த்திசையில் குற்றவாளிகளைக் காப்பாற்றும் வகையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதமர்கூட அரசதலைவருக்கு எவ்விதத்திலும் குறைவுபடாத வகையில் தனது கருத்துகளை வெளியிட்டு வருவதை நாமறிவோம்.

அவர் ஒருமுறை, காணாமல் ஆக்கப்பட்டோர் என்று எவரும் இல்லையெனவும், அவர்கள் போரில் இறந்திருக்கலாம் அல்லது வெளிநாடுகளுக்கு ஓடியிருக்கலாம் எனவும் கூறியிருந்தார். போரில் இறந்தவர்களை அவர்களின்



உறவினர்கள் படையினரிடம் ஒப்படைக்க முடியுமா? அல்லது படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களைப் படையினர் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தனரா? என்பதற்கு அவர் இதுவரை விளக்கம் எதுவும் தரவில்லை. ஆனால் இதே வார்த்தைகள் முன்னைய ஆட்சியின்போது முன்னைய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவால் அடிக்கடி சொல்லப்படுபவை என்பதையும் மறந்துவிடக் கூடாது.

### இழுத்தடிப்புக்கு இன்னுமொரு குழுவா

மேற்குறித்த சந்திப்பில் அரசதலைவர் குறிப்பிட்ட இன்னுமொரு விடயம் இது. அதாவது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஆராய ஒரு குழுவை அமைக்கப் போகிறாராம். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம தலைமையிலான காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அரசதலைவர் ஆணைக்குழு என்பவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில் புதிதாக இழுத்தடிப்புக்கு இன்னுமொரு வழியை அவர் தேடுகின்றார். இதை கேலிக்குரிய ஏமாற்று வேலை என்பதை எவரால் தான் புரிந்து கொள்ள முடியாது?

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கிலும் கிழக்கிலும் பல்வேறு பகுதிகளிலும் நடத்தும் போராட்டங்கள் என்பது 100நாள்களை அண்மித்துக் கொண்டிருக்கின்றன. இதுவரை அரசு தரப்பிலிருந்து நம்பிக்கையளிக்கும் வார்த்தை ஒன்றுகூட வெளிவரவில்லை. பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்களின் கண்டனங்களைக் கூட எவரும் பொருட்படுத்தவில்லை. தமிழ் அரசியல் தலைமைகளும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான எந்த ஒரு நடவடிக்கையையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

### உள்ளவர்களை முதலில் விடுவியுங்கள்

காணாமல் போனவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதைக் கண்டு பிடித்துக் கூறினால் அவர்களை விடுவிக்கத் தயாரென முழங்கிய அரசதலைவரால் போதிய குற்றச்சாட்டுக்களின்றியும் ஆணித்தரமான சாட்சிகளின்றியும், சித்திரவதைகள் மூலம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்களின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளையாவது விடுவிக்கமுடிகின்றதா? அவர்களைத் தேடிக்கண்டு பிடிக்கப் பொதுமக்கள் புலனாய்வாளர்களாக மாறவேண்டியதில்லை அவர்கள் இங்குள்ள சிறைகளில் தான் இருக்கின்றனர்.

பன்னாட்டு மனித உரிமைகள் சட்டங்களுக்கு விரோதமாகவுள்ள இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் அடிப்படையிலேயே அரசியல்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதை நீக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் அதை நீக்கி அதைவிட மோசமான சட்டத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இப்படித் தடுத்து வைத்திருப்பவர்களையே வெளியே விடத் தயாரற்ற அரசு, காணாமல் ஆக்கப்பட்டோர் கண்டுபிடிக்கப்பட்டால் மட்டும் விட்டு வைக்குமா? அவர்கைளைச் சிறையடைக்க இன்னும் ஒரு சட்டம் கொண்டு வர மாட்டார்களா?

### படைத்தரப்பே குற்றவாளிகள்

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, காணாமல் ஆக்கப்பட்டோர் என எவருமில்லை. எந்த இரகசியத் தடுப்பு முகாம்களும் நாட்டில் இல்லை எனத் தெரிவித்திருந்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் திருமலை கடற்படை பயிற்சி முகாமில் ஒரு இரகசியச் சித்திரவதை முகாம் இயங்கி வந்ததாகப் பகிரங்கமாக நாடாளுமன்றில் தெரிவித்தார். ஐ.நா பிரதிநிதிகள் அந்த இடத்துக்குச் சென்று ஆய்வுகள் நடத்தியமையால் அங்கு ஒரு நிலக்கீழ் அறையில் சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்ட விடயம் அம்பலமானது.

அதையடுத்து கொழும்பில் கடத்தப்பட்டுக் காணாமல் போகச் செய்யப்பட்ட 9 பேர் கொழும்பிலுள்ள கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் திருமலைக்குக் கொண்டு செல்லப்பட்டது தெரியவந்தது.

அந்த கடத்தல், கொலை தொடர்பாகக் கடற்படை அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். விசாரணையின்போது இந்தச் கடத்தல் விவகாரம் கடற்படைத்தளபதிக்கும் தெரியும் எனஅறியப்பட்டது.

இதைப்போன்றே காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திலும் படையினர் சம்பந்தப்பட்டிருப்பதால் அரச தரப்பு அதை நடவடிக்கைக்கு உட்படுத்த மறுக்கின்றது எனக் கருத வேண்டியுள்ளது. எந்தக் காரணம் கொண்டு படையினரையோ, பொலிஸாரையோ குற்றவாளிக் கூண்டில் ஏற்றப் போவதில்லையென அரசதலைவர் கூறிவருவதை அலட்சியப்படுத்திவிட முடியாது. அவ்வாறானவர் பொது மக்களுக்கும் புலனாய்வுப் பிரிவினருக்குமுள்ள வேறுபாட்டைப் பொருட்படுத்தாமல் எழுந்தமானமாகக் கருத்துக்களை வெளியிடுவதில் வியப்பு எதுவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** திட்டமிட்டபடி புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப்பணம் வசூலாகும்.

**இடபம்:** உறவினரால் உதவி உண்டு. தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் உண்டாகும். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபா ரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியா ளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். தெய்வ வழிபாடு மனம் அமைதி பெற உதவும்.

**கடகம்:** திட்டமிட்ட பணி நிறைவேற விடா முயற்சி தேவைப்படும். தொழிலில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிலுவைப்பணியை விரைந்து முடிப்பர். மாமன், மைத்துனர் உதவிகரமாக நடந்து கொள்வர்.

**சிங்கம்:** சமூகத்தில் உங்கள் மீதான மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தின் பரிசு, பாராட்டு கிடைக்கப் பெறுவர்.

**கன்னி:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தாமதமான பணியை உற்சாகமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும். வீட்டுத் தேவை தாராள பணச்செலவில் நிறைவேறும்.

**துலாம்:** நண்பரால் சிரமத்துக்கு ஆளாக நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் நிலுவைப் பணியை விரைந்து முடிப்பர். வீடு, வாகன வகையில் செலவு ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**தனுசு:** புதிய முயற்சி வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணியில் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மகரம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழிலில் உருவாகும் இடையூறை உடனடியாகச் சரி செய்வது நல்லது. லாபம் சுமார். பணியாளர்களுக்கு சலுகை கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

**கும்பம்:** பணிகளைத் திட்டமிட்டபடி நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். லாபம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் சுபச்செலவு செய்வீர்கள்.

**மீனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில் லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர். உடல்நலம் பெற மருத்துவச் சிகிச்சை தேவைப்படும்.

# சங்கமித்ராவில் சுந்தர்.சி நம்பிக்கை




தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் பிரம்மாண்ட பொருள் செலவில் தயாரிக்கும் படம் 'சங்கமித்ரா'. இப்படத்தை சுந்தர்.சி இயக்கவிருக்கிறார். ஜெயம் ரவி, ஆர்யா, ஸ்ருதிஹாசன் உள்ளிட்டோர் நடிக்க விருக்கின்றனர். ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கவிருக்கிறார்.

இப்படத்தை பிரான்ஸில் நடைபெற்ற கேன்ஸ் திரைப்பட விழாவில் அறிமுகப் படுத்தியுள்ளனர். இப்படத்தின் முதல் பக்கப் போஸ்டர்கள் திரைப்பட விழா நடைபெறும் அரங்கில் திரையிடப்பட்டது. இதற்காகப் படக்குழுவினர் அனைவரும் கேன்ஸ் திரைப்பட விழாவில் கலந்து கொண்டனர். இந்நிலையில், சங்கமித்ரா குறித்து முதன்முறையாக சுந்தர். சி மனம் திறந்து பேசியுள்ளார். அவர் கூறும் போது, 'சங்கமித்ரா' மிகப் பிரம்மாண்டமான பொழுதுபோக்குப் படமாக இருக்கும். கடந்த 10 ஆண்டுகளாக அதற்கான யோசனை என்னிடம் இருந்தது. சரியான பட்ஜெட் மற்றும் தொழில்நுட்பத்துக்காகக் காத்திருந்தேன். இப்போதும் நேரம் கைகூடிவிட்டது. 'பாகுபலி' தென்னிந்தியச் சினிமாவில் தேசிய அளவில் பேச வைத்தது. 'சங்கமித்ரா' பன்னாட்டளவில் பேசவைக்கும் படமாக உருவாக்க வேண்டும் என்பதே எங்களது குறிக்கோள். அதனால்தான் இப்படத்தை நாங்கள் கேன்ஸ் திரைப்பட விழாவில் தொடங்கினோம். இது முழுக்க முழுக்க இந்தியப் படமாக இருக்கும். இந்தியாவின் வரலாறு, காலாசாரம், வளங்களை உலகத்தின் பார்வைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். என்னுடைய இயக்குநர் வாழ்க்கையில் இந்த படம் முக்கிய இடத்தை வகிக்கும் என்றார்.

ஜாலி மேன் @sarva

பிடியளவு சோறு தான் பானையில்
இருந்தாலும் பிள்ளை வயிறு பசி
பொறுக்காது என்பவளே
உன் வயிறுக்கு பசிக்காதா அம்மா...!



மகன்: எனக்கு பேஸ் புக்கில
15 பேக் ஐடி இருக்கு
அப்பா: சோ வாட்..?



மகன்: நீங்க சண்டேக்கு
பார்ட்டிக்கு கூப்பிட்ட, ராணி ங்கிர பேக் ஐடி
என்னோடது தான்...

வாழ்க்கையில கத்துக்கனும்னு
நினைச்சா மிக்ஸியப் பார்த்து கூட
கத்துக்கலாம்...



யப்பா என்ன அழகா
முடிக்கிட்டு வேலை பார்க்குது...

கணவர்: செல்லம் சப்பாத்தி சூப்பரா
செஞ்சிருக்கடி
மனைவி: ....
கணவன்: நல்லாருக்குன்னு தானே
சொல்றேன் அப்புற என் முறைக்கிற...




# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 3 | 2 | | 1 |
| | 9 | | | 2 | | | | |
| | 7 | | 4 | 5 | | | | |
| | 4 | | | | | 5 | | 7 |
| | | 8 | 5 | | 6 | 9 | | |
| 6 | | 9 | | | | | 8 | |
| | | | | 6 | 5 | | 1 | |
| | | | | 4 | | | 2 | |
| 5 | | 3 | 1 | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பாவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சோர்விலிருந்து விடுபட சில வழிகள்



**சோர்வு**

தற்போது சோர்வு என்ற ஒன்று பலரையும் தொற்றி, எதையும் நிம்மதியாக செய்யவிடாமல் தடுக்கிறது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. சோர்வு அதிகம் இருப்பதால், உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள், விருந்தினர்கள் போன்றவர்களுடன் சந்தோஷமாக நேரத்தை கழிக்க விடாமல் செய்வதோடு, அலுவலகத்தில் கூட எளிதான வேலையை விரைவில் செய்து முடிக்காமல் செய்து, வாழும் வாழ்க்கையையே மோசமாக்கிவிடும்.

எனவே சோர்வு எதனால் ஏற்படுகிறது, அதிலிருந்து விடுபடுவது எப்படி என தெரிந்து சோர்வில் இருந்து விடுபட்டு, உடலின் ஆற்றலை அதிகரித்து சந்தோஷமாக வாழுங்கள்.

**சோர்வுக்கான காரணங்கள்**

வேலை, பயணம், நிலையான வாழ்க்கை, வயது போன்றவற்றுடன், ஒருசில ஆரோக்கிய பிரச்சினைகளான நீரிழிவு, இதய நோய், தைராய்டு, ஆர்த்ரிடிஸ் போன்றவைகளும் எப்போதும் சோர்வுடன் இருப்பதற்கான காரணங்களாகும்.

**செய்ய வேண்டியவை**

**உடற்பயிற்சி**

தினமும் காலையில் எழுந்ததும், ஏதேனும் ஓர் உடற்பயிற்சியை செய்து வந்தால், நாள் முழுவதும் சோர்வின்றி சுறுசுறுப்புடன் செயற்படலாம். இலகுவான சில பயிற்சிகளை அன்றாடம் மேற்கொண்டு வாருங்கள். இதனால் நிச்சயம் நல்ல மாற்றத்தை நீங்களே உணர்வீர்கள்.

**தண்ணீர்**

கார் எப்படி பெற்றோல் இருந்தால் தான் இயங்குமோ, அதேபோல் தான் உடலுக்கு தண்ணீர் போதிய அளவில் இருந்தால் தான் சீராக இயங்கும். உடலில் நீர் சரியான அளவில் இல்லாவிட்டால், உடலியக்கம் குறைந்து, மிகுந்த சோர்வை உண்டாக்கி, கவனச்சிதறலை அதிகரித்துவிடும். எனவே அவ்வப்போது தண்ணீரைக் குடித்து வாருங்கள். இதனால் எப்போதும் சுறுசுறுப்புடன் செயற்பட முடியும்.

**தூக்கம்**

தூக்கமின்மை சோர்வை உண்டாக்குவதோடு, ஆரோக்கியமும் பாதிக்கப்படும். எனவே தினமும் சரியான அளவு தூக்கத்தை மேற்கொள்வதோடு, ஒரே நேரத்தில் தூங்கி எழும் பழக்கத்தைக் கொள்ளுங்கள். இதனால் நாள் முழுவதும் உடலின் ஆற்றல் சீராக இருக்கும்.

**அதிகப்படியான எடை**

உடல் எடை அளவுக்கு அதிகமாக இருந்தால், உடலில் ஆற்றல் குறைவாகவே இருக்கும். எனவே உடல் எடையைக் குறைக்க, சரியான உணவுக் கட்டுப்பாட்டு மற்றும் உடற்பயிற்சியை மேற்கொண்டு வாருங்கள்.

**அடிக்கடி சாப்பிடவும்**

கொஞ்சம் கொஞ்சமாக பலமுறை சாப்பிடவும் மற்றும் சிறு இடைவெளியில் ஏதேனும் ஆரோக்கியமான உணவுப் பொருளை சாப்பிட்டவாறு இருக்கவும். இப்படி சாப்பிடுவதால், உடலில் குருதி சீனியின் அளவு சீராக இருக்கும்.

அதுமட்டுமின்றி காலை உணவை தவறாமல் சாப்பிட வேண்டும். ஒரு நாளில் காலை உணவு தான் மிகவும் முக்கிய மானது. காலை உணவை தவறாமல் உட்கொண்டு வந்தாலே நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் செயற்பட முடியும்.

## நாளை

**வைகாசி-15**
திங்கட்கிழமை -29.05.2017
திதி: சதுர்த்தி பி.ப. 04.54
நட்சத்திரம்: புனர்பூசம் மா.06.57
சுபநேரம்:11.52-01.22 வரை
ராகுகாலம்:
07.22-08.52 வரை
சதுர்த்தி விரதம்

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 1000 | 500 |
| நண்டு | 400 | 300 | 600 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 | 800 |
| பாரை | 600 | 600 | 700 | 800 |
| சுறா | 500 | – | 800 | – |
| சீலா | 400 | 600 | 800 | 500 |
| விளை | 500 | 300 | 600 | 600 |
| முரல் | 400 | 400 | 450 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 500 |
| ஓரா | 350 | 400 | 500 | – |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 150 | 400 | 300 |
| சூடை | 200 | 120 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 200 | 350 | – |
| திருக்கை | 350 | 200 | 400 | – |
| மதனம் | 200 | 150 | 300 | – |
| கொய் | 100 | 30 | 80 | 100 |
| பாலை | 300 | 200 | 600 | 500 |
| வாழை | 200 | – | 400 | – |

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்



| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 100 |
| கத்தரி | 140 | 120 | 120 | 140 |
| கரட் | 200 | 240 | 180 | 180-320 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 130 | 120 | 80 | 120 |
| பாகல் | 180 | 280 | 160 | 200 |
| கருணைக்கிழங்கு | 100 | | | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 200 | 300 | 250 | 240 |
| பூசணி | 50 | 60 | 50 | 80 |
| தக்காளி | 120 | 140 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 |
| கீரை | 20 | 50 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 50 | 40 | 20 |
| பச்சை மிளகாய் | 200 | 280 | 260 | 200 |
| புடோல் | 120 | 80 | 100 | 100 |
| கோவா | 140 | 160 | 200 | 180 |
| வெண்டி | 120 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 160 | 240 | 180 |
| லீக்ஸ் | 120 | 80 | 200 | 100 |
| தேங்காய் | 70 | 65 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 180 | | 160 | 140 |
| இராசவள்ளி | 200 | | 280 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 140 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




■ கந்தபேரின்பம்
தீவான்

கலர் கலராய்ச் சட்டை காந்திபோடாச் சட்டை!
கட்டையிலே போகும் இந்தக் கட்டை எனும் சட்டை!
காமராசர் என்னும் பெரியார் போட்ட கலர்ச் சட்டை!
காலமெல்லாம் உயிர்கள் போட்டுக் கழட்டும் சட்டை!

காக்கிச் சட்டை போட்டால் இந்தக் கட்டை ஒரு 'ஆமி'
காவிச்சட்டை போட்டுவிட்டால் அதுவே ஒரு 'சாமி'
கறுப்புச் சட்டை போட்டால் அதுவே 'அப்புக்காத்து'
'கோர்ட்டில்' அவர் பேசும் முழுதும் பம்மாத்து

ஏமாற்றித் திரிவோனுக்கு 'எத்தன்' என்ற சட்டை!
ஏமாந்து போய்விட்டாலோ 'ஏமாளி' என்ற சட்டை!
அம்மா, அப்பா, அண்ணா, தம்பி, மாமன், மச்சான் எல்லாம்
அடுக்கடுக்காய் மனித உயிர் போட்டுக் கழட்டும் சட்டை

பல நிறத்தில் சட்டை பளபளக்கும் சட்டை!
பழசாகிப் போனால் எடுத்தெரிக்கும் சட்டை!
உயிருக்கொரு சட்டை உடலென்ற கட்டை
உயிர்பிரிந்து போனபின்னே உருகி எரியும் ச(க)ட்டை!

ஆண்டி என்றும், அரசன் என்னும் அகதி, பணக்காரன் என்றும்
பித்தன் என்றும் எத்தன் என்றும் பெருவியாதிக்காரன் என்றும்
எத்தனையோ சட்டை உயிருக்கு ஈசன் போட்டசட்டை
'கட்டையிலே போவான்' என்று பாட்டி சொன்ன சட்டை

நாளுக்கு நாள் மாறிப்போகும் நல்ல கலர்ச்சட்டை!
நறிப் போகும் உடலும் உயிருக்கொரு சட்டை!
போடும் வேசத்துக் கேற்ப மாறிப் போகும் சட்டை!
'பொட்'டென்றுயிர் போனால் இந்தச் சட்டை வெறும் கட்டை

""மனிதம்" என்ற சட்டைபோட்டால் அதற்குப் பெயர் மனிதன்
மாறிச்சட்டை போட்டு விட்டால் அதற்குப் பெயர் மிருகம்
பறவை, மிருகம், மனிதன் என்று பலநிறத்தில் சட்டை!
படுத்துவிட்டாலோ இந்தச் சட்டை வெறும் கட்டை!

## சொற்சிலம்பம் போட்டி இல: 473

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | | | | ■ |
| 7 | 8 | | | ■ | | ■ | 9 |
| 10 | | | ■ | 11 | | | |
| ■ | | ■ | 12 | | | ■ | |
| 13 | | | | | ■ | 14 | |
| 15 | | ■ | | ■ | 16 | | |
| | ■ | 17 | | | | | |

**அனுப்புபவர் பெயர்:..................................................**
**முழுமையான தபால் விலாசம்: .................................**
**..................................................................**
**கையொப்பம்:..........................................................**

### இடமிருந்து வலம்

1. ஒரு பாடலின் இறுதியை அடுத்த பாடலின் முதலாகக் கொண்டு தொடங்கும் பிரபந்தம்
4. வாசலில் அமைவது
6. இராமனும், பஞ்ச பாண்டவர்களும் சென்றனர் இதற்கு
7. இதைக் கவரி என்றும் கூறுவர்
10. நடுப்பகுதி
11. சொற் களஞ்சியம்
12. உலோகக் கருவிகளைக் கூர் தீட்டுவது இதனால்
13. வம்சா வழியில் தனித்துவ உரித்தாளர்
14. தோழர்
15. படி
16. எல்லா
17. தைரியமான, உறுதியுடைய நெஞ்சு

### மேலிருந்து கீழ்

1. பயப்படாத தன்மை
2. விலங்கினம் அல்லாத உயிரினம்
3. நாள்
4. ஒரு நோய்
5. தமது
8. நினைவு தப்புதல்
9. கடந்த காலம் நிகழ்காலம் தாண்டி இனி வருவது
11. நாட்டைப் பரிபாலிப்பது
12. கிடைப்பதற்கு அருமையானவை
13. செல்லுதல்
14. மாறி, மாறி வரும் யோகம் இது
16 இரகசியமாக வகுக்கும் திட்டம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 471 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்
(1) சமுத்திரம் (6)தாடை (7) கைம் (8)சோலை (9) தர்ப்பை (10)தவி (11)வேல் (12)பனை (14)ஓசை (16)விநாயகர் (19)வீதி (20)கல்வி (21) விரல் (22)நாம் (23)தைமாதம்

### மேலிருந்து கீழ்
(1)சதா (2)முடைதல் (3) திகைப்பு (4)ரம்பை (5)தலைவி (8)சோதனை (11)வேள்வி (12)பசை (13)கயல்(14)ஓர் (15)மதில் (17)நாகம் (18)கவிதை (19)வீரம் (21)வித
சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 471 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
சொ.குணசிங்கம்,
இல. 96, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு.

**2 ஆம் பரிசு**
ஜெ.காயத்திரி,
இல.57, 2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா.

**3 ஆம் பரிசு**
மா.அபிசையா,
செங்குந்தர் வீதி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

**4 ஆம் பரிசு**
அ.அலோசியஸ்,
இல.13, அண்ணாநகர் பிரதான வீதி,
வவுனியா.

**5 ஆம் பரிசு**
கவிதா விசாகன்,
அரசடி ஒழுங்கை,
ஆத்தியடி, பருத்தித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

விஜிதன் பிருத்திகா,
6ஆம் வட்டாரம்,
குமுளமுனை, முள்ளியவளை.

திருமதி வி.நாவேந்தன்,
இல.46/3, அம்மன் வீதி,
கந்தர்மடம்.

ச.கணபதிப்பிள்ளை,
கிந்துசிட்டி, புலோலி தெற்கு,
புலோலி.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.473 பூர்த்தி
செய்யப்பட்ட கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(07.06.2017 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.473இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 11.06.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 471 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தவாரம் உங்களுக்கு எப்படி?

**28.05.2017 தொடக்கம் 03.06.2017 வரை**

## மேடம்

கேது, சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும். செயல்களில் நேர்மை நிறைந்திருக்கும். சகோதரர்களுடன் கருத்து வேறுபாடு உருவாகலாம். பூர்வீகச் சொத்தில் விழிப்புடன் இருப்பது அவசியம். புத்திரரின் பேச்சு, செயலில் குழப்பம் ஏற்படலாம். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் நம்பிக்கை அளிக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி உடனுக்குடன் சரி செய்யவும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டங்களைத் தவறாமல் பின்பற்றவும். பெண்கள், உறவினர்களின் அன்பை பெறுவர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## இடபம்

சுக்கிரன், குரு, சந்திரன் நற்பலன் தருவர். பொது நிகழ்ச்சிகளில் விருப்பமுடன் பங்கேற்பீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவும். புத்திரர் படிப்பில் முன்னேறுவர். ஆன்மிகத்திலும் ஆர்வமுடன் ஈடுபடுவர். ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து, விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். வீட்டுச் செலவு அதிகரிக்கும். மனைவியின் கருத்து குடும்பத்தில் ஒற்றுமையை வளர்க்கும். தொழில், வியாபாரத்தில் ஓரளவு வளர்ச்சி ஏற்படும். பணியா ளர்கள் கால அவகாசத்தில் பணி இலக்கை நிறை வேற்றுவர். பெண்கள் பிறர் விடயம் சார்ந்து கருத்து சொல்ல வேண்டாம். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

## மிதுனம்

புதன், ராகு, சனீஸ்வரர் அதிகளவு நன்மை தருவர். சமூகத்தில் இருக்கும் நற்பெயரைப் பாதுகாப்பீர்கள். உடன்பிறந்தவர் அன்பு பாராட்டுவர். குடும்ப செலவுக்கான பணவரவு தாராளமாகக் கிடைக்கும். புத்திரர் பிடிவாத குணத்துடன் செயற்படுவர். வழக்கு விவகாரத்தில் நல்ல தீர்வு கிடைக்கும். மனைவியின் உடல் நலத்திற்கு சிகிச்சை தேவைப்படும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற நவீன மாற்றம் செய்வீர்கள். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் கடமையை உணர்ந்து பணிபுரிவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள், நண்பரின் உதவியால் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## கடகம்

சூரியன், செவ்வாய், சுக்கிரன், புதன் அனுகூல அமர்வில் உள்ளனர். புதிய உத்தியுடன் பணிகளைத் தொடங்குவீர்கள். அன்றாட வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். புத்திரர் உங்கள் வழிகாட்டுதல்களை அன்புடன் ஏற்றுக் கொள்வர். உறவினர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும். நோய் தொந்தரவு குறையும். மனைவியின் செயலைப் பாராட்டி மகிழ்வீர்கள். அரசு சார்ந்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பண வரவும் கூடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், கணவரின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வர். மாணவர்கள் படிப்புடன், கலைகளிலும் ஈடுபாடு கொள்வர்.

## சிங்கம்

குரு, சூரியன், சுக்கிரனால் அதிக நன்மை உண்டாகும். எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க கடனுதவி கிடைக்கும். புத்திரர் பெருந்தன்மையுடன் செயற்படுவர். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மனைவி உங்கள் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரம் செழித்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர். வெளியூர்ப் பயணம் மூலம் நன்மை காண்பீர்கள். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் தேவை.

## கன்னி

புதன், சனீஸ்வரர், கேது அளப்பரிய நன்மை வழங்குவர். திட்டமிட்ட பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். சமூகத்தில் பெயரும், புகழும் தேடி வரும். வாகனத்தின் பயன்பாடு இடை நிலையோடு இருக்கும். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். வழக்கு, விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் செயல் குழப்பம் தரலாம். தொழிலில் பங்குதாரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு மூலம் அதிக வருமானம் காண்பர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

## துலாம்

ராகு, சந்திரன் நற்பலன் தருவர். முன்யோசனையுடன் செயற்படுவது அவசியம். குடும்பத்தில் பணத்தேவை அதிகரிக்கும். வாகனப் பயணங்களை அளவுடன் மேற்கொள்வீர்கள். புத்திரர் பிடிவாத குணத்துடன் செயற்படுவர். அவர்களை கண்டிப்பதில் நிதானம் தேவை. உடல்நிலை சீராக இருக்கும். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். மனைவியிடம், உறவினர் குடும்ப விவகாரம் பற்றி பேச வேண்டாம். தொழிலில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணியிடச் சூழ்நிலையை உணர்ந்து பணி புரியவும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் முயற்சியுடன் படித்தால் முன்னேறலாம்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரன், புதன் ஆதாய பலன்களை தருவர். பேச்சில் உண்மையும், செயலில் நேர்மையும் நிறைந்திருக்கும். உறவினர்கள் விரும்பி சொந்தம் பாராட்டுவர். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். புத்திரர் நற்செயலில் ஈடுபட்டு பெருமை தேடித் தருவர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவியின் செயல்பாடு ஒற்றுமைக்கு வழி வகுக்கும். வெளியூர் பயணம் மூலம் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்களுக்கு, தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## தனுசு

சூரியன், செவ்வாய், கேது, சுக்கிரன் அளப்பரிய நன்மை தருவர். மனதில் உற்சாகமும், செயலில் புத்துணர்வும் உண்டாகும். குடும்பத்தில் சுபநிகழ்வு பற்றிய பேச்சு நடக்கும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். புத்திரரின் தேவையை தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள். எதிரியால் உருவான கஸ்டங்கள் மறையும். உறவினர்களின் அன்பு கண்டு மனம் நெகிழ்வீர்கள். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழி வகுக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் விவாதம் செய்ய வேண்டாம். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்களுக்குப் படிப்பில் விடாமுயற்சி தேவை.

## மகரம்

குரு, சுக்கிரன், புதன், சனீஸ்வரர் அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பர்கள் உங்கள் ஆலோசனையை கேட்டுப் பெறுவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். எதிரிகள் சொந்தச் சிரமங்களால் இடம் மாறுவர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி வழி உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள். லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள், நிர்வாகத்திடம் நன்மதிப்புப் பெறுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது.

## கும்பம்

சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். மனதில் தயக்கம் ஏற்பட்டு மறையும். பணிகளை நிறைவேற்ற விடாமுயற்சி தேவைப்படும். வாகனப் பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். புத்திரரின் பிடிவாத குணத்தை திருத்துவதில் மென்மையான அணுகுமுறை தேவை. அவமதித்துப் பேசுபவரிடம் இருந்து விலகவும். சொத்தில் பராமரிப்புச் செலவு கூடும். ஒவ்வாத உணவு களைத் தவிர்ப்பது நல்லது. மனைவி குடும்பநலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரித்தாலும் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்கள், பிறருக் [illegible] கூடாது.

## மீனம்

பெரும்பான்மைக் கிரகங்கள் வியத்தகு நற்பலன் தரு[illegible]. உங்கள் பேச்சு, செயல்களில் வசீகரம் நிறை[illegible]ந்திருக்கும். உறவினர்களின் தேவையறிந்து [illegible]தவுவீர்கள். குடும்பத்திற்கான தேவை அனைத்து[illegible] நிறைவேறும். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு [illegible]டும். புத்திரர், பெற்றோர் சொல்லைக் கேட்டு நடப்பர். இஷ்[illegible] தெய்வ அருளால் துன்பம் விலகும். மனைவியின் அன்பு[illegible] பாசமும் கிடைக்கப் பெறுவீர்கள். அரசு வகையில் எதிர்பா[illegible]பு நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனையில் [illegible]ிய சாதனை உருவாகும். லாபம் சீராக இருக்[illegible] பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி [illegible]டைக்கும். மாணவர்கள் திட்டமிட்[illegible] படித்து, கல்வியில் வளர்ச்சி காண[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காற்றையும் மழையையும் கற்றுக்கொள்ள வேண்டும்


ஜெ.நிஷா

நாட்டின் பல பாகங்களையும் இயற்கை இடர்கள் பலவும் தற்போது ஆக்கிரமித்து விட்டிருக்கின்றன. தென்பகுதியைச் சேர்ந்த 8மாவட்டங்கள் வரையில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற கனமழை. அதனால் ஏற்பட்டிருக்கின்ற வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற இயற்கை இடர்களுக்கு முகம் கொடுத்திருக்கின்றன. இவற்றால் ஏராளம் உயிரிழப்புக்களும் உடமை இழப்புக்களும் ஏற்பட்டிருக்கின்றன. இத்தகைய இயற்கை இடர்களைக் கட்டுப்படுத்துவது என்பது மனிதர்களுக்கு எவ்வாறு சாத்தியமற்ற ஒன்றாக இருக்கின்றதோ அதைப்போலவே அந்த இடர்களால் ஏற்படுகின்ற இழப்புக்களைத் தவிர்ப்பது என்பதும் சாத்தியமற்றதாகத்தான் இருக்கின்றது. ஆனால் இத்தகைய இடர்கள் நமக்கு ஏற்படுத்தும் இழப்புக்களைக் குறைத்துக் கொள்ள அவற்றிலிருந்து இயன்றவரைக்கும் எம்மைத் தற்காத்துக்கொள்ளவும் எம்மால் முடியும். இத்தகைய இடர்களில் இருந்தே அவற்றையெல்லாம் நாம் கற்றுக்கொள்ளவும், அவை தரும் அனுபவங்களில் இருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள வும் நாம் பழகிக் கொள்ளவும் வேண்டும்.

### மலைநாட்டு மக்களுக்கு மழை ஏற்படும்போது...

நாட்டின் ஏனைய பாகங்களை விடவும் மழை மற்றும் மண்சரிவுகளால் அதிகம் பாதிக்கப்படுபவை மலைநாட்டுப் பிரதேசங்களே. அங்கு அடிக்கடி நிகழ்ந்து விடும் இத்தகைய இடர்களுக்கு முகம் கொடுப்பது எவ்வாறு என்பதை அங்குள்ள மக்கள் இப்போது ஓரளவுக்காவது







புரிந்து வைத்திருப்பர். பெருமளவில் மழை பெய்ய ஆரம்பித்து விட்டதைக் கண்டறிந்தவுடனேயே வெள்ளப்பெருக்கும் படிப்படியாக மண்சரிவும் ஏற்படும் என்பது அவர்களுக்குப் பாடமாகியிருக்க வேண்டும். தமக்குப் பாதுகாப்பளிக்கும் பகுதிகள் எவை என்பதையும் முற்கூட்டியே அவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இத்தகைய இயல்பான அறிவையும், தமக்கு ஏற்பட்டிருந்த முன் அனுபவங்களையும் கொண்டு தம்மையும் தாம் சார்ந்தவர்களையும் இயலுமானவரைக்கும் இடர்கள் ஏற்படுத்தும் பாதிப்புக்களில் இருந்து இவர்களால் பாதுகாத்துக்கொள்ள முடியும். எது எவ்வாறிருப்பினும் இயற்கை எனும் மிகப் பெரிய பிரமாண்டத்தின் கீழ் மனிதன் மிகச் சிறியவனே. திடீரெனவிபத்தைப்போல இயற்கை தன்னைத்தாக்குமிடத்தே அவனால் ஏதும் செய்ய இயலாது என்பதுவும் உண்மைதான். ஆனாலும் அனுபவத்தைப் படிப்பினையாகக் கொண்டு அதன் மூலம் தன்னை ஓரளவாவது காத்துக்கொள்ளும் ஒரு வழியாவது மனிதனுக்கு இப்போது உண்டு.

### காவு கொள்ளும் காற்றும் வெயிலும்...!

மலை நாட்டினருக்குத்தான் மழையும் மண்சரிவும் என்றில்லாமல் அதைச்சூழ்ந்திருக்கும் தென்பகுதி மாவட்டத்தினரையும் அது தாக்கியிருக்கின்றது. ஏனைய வடக்கு - கிழக்கு - மேற்கு மாவட்டங்களையும் சில காலங்களில் மழையும் வெள்ளப்பெருக்கும் என இத்தகைய இடர் எட்டிப் பார்த்துத்தான் செல்கின்றது. மழை அதனால் ஏற்படுகின்ற வெள்ளம், மணிசரிவு போலவே கடும் வெயில், கடும் காற்றுப் போன்றனவும் தம்மால் இயன்ற பாதிப்புக்களை ஏற்படுத்திச் செல்கின்றன. காற்றின் வேகம் அதிகமாகக் காணப்படும் என்ற தகவல் அது ஏற்படுவதற்கு முன்பாகவே பத்திரிகைகள் மூலமாகத் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனாலும் அவதானமின்றி கடும் காற்றுக்கு மத்தியில் பயணித்துக் கொண்டிருந்த முதியவர் ஒருவர் தனது மேட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்து பாரவூர்தியின் சக்கரங்களுக்குள் நசிபட்டுச் சாவடைந்திருக்கின்றார். இவரை ஒத்த வயதினர் மாத்திரமின்றி பலத்த காற்றை எதிர்கொள்ளும் அனைவருமே அவதானமாக இருக்க வேண்டும். வீதிகளில் பயணிப்பதில் மாத்திரமின்றி வீடு, சுற்றாடலிலும் அவதானம் தேவை. உயரமான மரங்களின் கிளைகளை வெட்டி அகற்றி விடுதலும், வாழ்விடங்களுக்கு அருகிலிருந்தால் அவற்றை அடியோடு தறித்து விடுதலும் பாதுகாப்பானது. அத்துடன் கரையோரங்கள் சார்ந்திருப்பவர்கள் கடலிலிருந்தும் குளங்கள், நீர் நிலைகளின் அருகாமையில் இருப்போர் இடர்கள் தோற்றம்பெறும் தருணங்களில் அவற்றின் நீர் நிலவரங்களை அவதானித்துத் தம்மைத் தற்காத்துக் கொள்ள எப்போதுமே முன் ஆயத்தங்களுடன் இருக்கவேண்டும்.

### மனித உதவிகள்

இயற்கை இடரை இல்லாமல் செய்வதோ, கட்டுப்படுத்துவது என்பதோ இயலாத காரியம். ஆகையால் அவற்றிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வதானால் இத்தகைய இடர்கள் ஏற்படுவதை முற்கூட்டியே அறியும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்புத் தேடுவதும் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்வது சிறந்தது. அதை நடைமுறைப்படுத்தத் தாமதிக்கும் பட்சத்திலும் திடீரென இடர்கள் ஏற்படும்பட்சத்திலும் எமது முன்னைய அனுபவங்களையும் இழப்புக்களைத் தவித்துக் கொள்ளக் கையாளவேண்டிய அவசர வேலைகளையும் பயன்படுத்தி நம்மை நாமே காத்துக்கொள்ள வேண்டும். இதையும் தாண்டி உயிர், உடமை இழப்புக்களைச் சந்தித்தால் அந்த உறவுகளுக்குத் தேவையானது மனிதாபிமான பொருள் மற்றும் உள ஆற்றுகை உதவிகளே. ஆனாலும் இனிவரும் காலங்களில் குறிப்பிட்டவர்கள் மாத்திரமின்றி, மனிதர்கள் அனைவரும் இத்தகைய இயற்கை இடர்களைக் கற்றுக் கொண்டு அதற்கேற்ப வாழவும் பழகிக் கொள்ள வேண்டும். காரணம் மனிதர்கள் கனமாகவே இயற்கையைச் சிதைத்து விட்டார்கள்.

## 'சோ'வென மாரி பொழியுது!

காற்றடிக்குது கடல் கனைக்குது
கீற்று மின்னல் வெட்டியடிக்குது
ஆற்று வெள்ளம் கரைபுரண்டோடுது
தூறல் மாறி, மழை 'சோ' வெனப் பெய்யுது.

அண்டம் நடுங்க இடி இடிக்குது
ஆகாய கங்கையோ நீராகக் கொட்டுது
மலை பிளக்குது மண்சரியுது
மாரி மழையோ 'சோ'வெனப் பெய்யுது

பேய் கொண்ட புயல் வீசியடிக்குது
பேரலை எழுந்து விண்ணை இடிக்குது
'கூ' வெனக் காற்று கூரையைப் பிய்க்குது
'சோ' வென மாரி மழை பொழியுது

ஏரிகள் தகர்ந்து நீரலை பாயுது
எங்ஙணும் வெள்ளக் காடாயிருக்குது
[illegible]
[illegible]



மக்கள் கூட்டம் மறுகித்தவிக்குது
மரம், செடி, கொடி எல்லாம் நடுங்குது
'மண்டூகம் களனியிற் சங்கீதம் பாடுது'
மாரி மழையோ 'சோ'வெனப் பெய்யுது

காவலூர்க் கவிஞன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைக்கடலில் சட்டவிரோத மீன்பிடி

## ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூர் மீனவர்கள் பாதிப்பு



முல்லைத்தீவு,மே 28
முல்லைத்தீவுக் கடற்பரப்பில், சட்ட விரோத மீன்பிடி அதிகரித்துள்ளதால் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்க் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மீன்பிடி தொடர்பாக அரச தலைவர் தொடக்கம், அனைவருக்கும் அறிவித்துள்ளோம். இதுவரை எந்த வொருநடவடிக்கையும், முன்னெடுக்கப் படவில்லை.

கடலில் வெளிச்சம் போட்டு மீன் பிடிக்கக் கூடாது என்பது சட்டம். எனினும் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இரவு நேரங்களில் திருவிழா போன்று சட்டவிரோத மீன்பிடி இடம்பெற்று வருகின்றது. அதனைத் தடுப்பதற்கு அதிகாரிகள் தவறியுள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதற்குத் தவறும் பட்சத்தில், தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும். எனவே முல்லைத்தீவு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். என்றார். (ஐ-21)

# சிவநகர் முதியவர்கள் ஆன்மிகச் சுற்றுலா



கிளிநொச்சி , மே 28
கிளிநொச்சி சிவநகர் பிரிவில் உள்ள முதியவர்கள் ஆன்மிகச் சுற்றுலாவுக்காக மன்னார் மாவட்டத்தில் உள்ள திருக்கேதீச்சரம் மற்றும் மடுத்திருத்தலம் ஆகியவற்றுக்குக் கடந்த வாரம் அழைத்துச் செல்லப்பட்டனர். கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் கரைச்சி பிரதேசத்தைச் சேர்ந்த சிவநகர் கிராம முதியோர்களே ஆன்மிகச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# கைதடியில் பாதீனியத்தை அழிக்க ஒத்துழைப்பு வழங்குமாறு பணிப்பு

தென்மராட்சி, மே 28
தென்மராட்சி கைதடிப் பிரதேசத்தில் காணப்படும் பாதீனியத்தை அழிப்பதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பிரதேச செயலர் திருமதி தே.பாபு, பிரதேச மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்மராட்சி, கைதடிப் பிரதேசத்தில் பெருமளவில் பாதீனியம் காணப்படுகிறது. கைதடிப் பிரதேசத்தில் மட்டும் காணப்படும் பாதீனியத்தைத் தற்போது அழிக்காவிடின், பிரதேசம் முழுவதும் அதுபரவக்கூடிய அபாய நிலை காணப்படுகிறது. அதனால் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, பிரதேச செயலகத்தால் பாதீனிய அழிப்புக்கென நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதி மக்கள், பொது அமைப்புகள் தாமாக முன்வந்து, முற்கூட்டியே சுற்றாடல் தின காலப்பகுதியில் பாதீனியத்தை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கைதடி மேற்கில் காணப்பட்ட பாதீனியச் செடிகள் தற்போது கைதடிப் பிரதேசம் முழுவதும் பரவி வளர்ந்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்த அனைத்து மக்களும் பொது அமைப்புகளும் ஒன்றிணைந்து சுற்றாடல் வாரத்தில் பாதீனியத்தை முற்றாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-9)

# மாணவர்களை ஏற்றாது செல்லும் பேருந்துகள்

## கால்நடையாகப் பாடசாலை செல்லும் அவலம்

கிளிநொச்சி,மே 28
ஓமந்தைப்பகுதிப் பாடசாலை மாணவர்களை, சேவையில் ஈடுபடும் பேருந்துகள் ஏற்றாது செல்வதால், மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் கால்நடையாகப் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது என்று பெற்றோர்கள் வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனிடம் முறையிட்டனர்.

ஓமந்தைப் பொலிஸாரின் ஒழுங்கமைப்பில், சிவில் பாதுகாப்புக் குழுவினருக்கும், பொலிஸாருக்கும் இடையில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஓமந்தை மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

"எமது பிள்ளைகள் பாடசாலைக்கு நேரத்துக்குச் செல்வதை விரும்புகின்றனர். ஆனால் பேருந்துக்காக நீண்ட நேரம் ஓமந்தை வீதிகளில் காத்திருக்கின்றனர். பேருந்துகள் குறித்த நேரத்துக்கு சேவையில் ஈடுபடுவதில்லை. சேவையில் ஈடுபடும் பேருந்துகளும் போட்டிபோட்டு ஓடுகின்றபோது, மாணவர்களை ஏற்றாது செல்கின்றன. மாணவர்கள் மிகுந்த ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் சம்பவங்கள் தொடர்கின்றன. இல்லையேல் மிக நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உட்படுகின்றனர். பாடசாலைகளுக்குக் குறித்த நேரத்துக்குச் செல்ல முடியாத காரணத்தால் தண்டனைக்கு உட்படுத்தப் படுகின்றனர். காலம் தாமதித்து மாணவர்கள் பாடசாலை செல்வதால், அதிபர்கள் பாடசாலைக்கு பெற்றோரை அழைத்து விளக்கம் கேட்கின்றனர். இதனால் குறித்த தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சேவைப் பேருந்துகளைச் செலுத்தும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பெற்றோர்கள் தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்ததாவது,

" இவ்விடயம் குறித்து மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தெரிவிக்க இருக்கின்றேன். பொதுவாக சிவில் பாதுகாப்பு குழுக்களை நாம் அமைத்ததன் நோக்கம், மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகும். அந்தவகையில் இந்தப்பிரச்சினை உரிய தரப்பினரிடம் தெரியப்படுத்தப்படும். இங்கு தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்து அரச தலைவர் மட்டத்தில் கதைப்பதற்கும் எமக்கு உரிமை உள்ளது." என்றார். (ஐ-40-2)

BAJAJ MOTORCYCLES

## விற்பனை முகவர்கள் தேவை

இலங்கையின் பிரசித்தி பெற்ற முன்னணி மோட்டார் கம்பனியாக திகழ்ந்து வரும் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட் ஸ்தாபனத்தின் பஜாஜ் வர்த்தக நாமத்தைக்கொண்ட மோட்டார் சைக்கிள்களை **பருத்தித்துறை, வேலணை, சங்கானை, மானிப்பாய், நெடுங்கேணி, செட்டிகுளம், வெலிஓயா, முல்லைத்தீவு, முழங்காவில், அடம்பன், முள்ளியவளை, விசுவமடு, ஒட்டுசுட்டான், நானாட்டான், மருதனார் மடம்** ஆகிய பிரதேசங்களில் விற்பனை செய்திட விற்பனை முகவர்கள் தேவை.

**தேவையான தகைமைகள்**

மேல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அல்லது அதற்கு அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்கான உகந்த இடவசதிகளைக் கொண்ட விற்பனை நிலையம் அமையப்பெற்றிருத்தல் வேண்டும்.

**மேலதிக தகைமைகள்**

- வங்கி உத்தரவாதம் ஒன்றை சமர்ப்பிக்கும் வசதி.
- மோட்டார் சைக்கிள் விற்பனைத்துறையில் தேர்ந்த அறிவு.

ஆர்வம் உள்ளவர்கள், உங்களது முழு விபரங்களும் உள்ளடங்கிய விண்ணப்பப்படிவமொன்றை தபால் உறையிலிட்டு, தபால் உறையின் இடப்பக்க மேல்பகுதி மூலையில் "பஜாஜ் மோட்டார் சைக்கிள் விற்பனை முகவர்கள்" என குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் கீழ் காணப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு
077 367 5 505 (ஃபேர்னேன்டோ)

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம்: PB270
இல. 61, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

# ஆலய வசந்த மண்டபத்துக்கு அடிக்கல்



வவுனியா,மே 28
வவுனியா முருகனூர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வசந்த மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் சிறி சிதம்பர லக்ஷ்மி திவாகரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வன்னி மாவட்ட சிறிலங்கா சுதந்திரப்பட்டதாரிகள் சங்க இணைப்பாளரும், வன்னி மாவட்டப் பட்டதாரிகள் சங்கத் தலைவருமான ம. ஆனந்தராஜா, முன்னாள் நகர பிதா சந்திரகுலசிங்கம், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வ. பிரதீபன், சிதம்பரபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஆலய பரிபாலன சபையினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-21)

## ஜெனரேற்றர் விற்பனைக்கு

இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட 4 Stroke Coper Winding ஜெனரேற்றர் 2.8 KVA விற்பனைக்குண்டு.




மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு

தொடர்புகளுக்கு - 0776061062
071 2929660
076 9027628

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் தொடர் இன்று ஆரம்பம்



பன்னாட்டு அந்தஸ்துபெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான பிரான்ஸ் தொடர் இன்று ஆரம்பமாகிறது. வழக்கம்போல ஆண்கள்பிரிவில்நடால்மீதுபெரும்எதிர்பார்ப்புஉள்ளது. பெண்கள் பிரிவில்முகுருசா, கெர்பர், செரபோவாஆகியோர்மீதுபெரும்எதிர்பார்ப்புநிலவுகிறது. பிரான்ஸ்தொடரில்நடால்இதுவரை 9 தடவைகள்கிண்ணம்வென்றுள்ளார். 10ஆவது கிண்ணத்தைஅவர்கைப்பற்றுவாராஎன்பதுதொடர்பில்எதிர்பார்ப்புக்கள்குவிந்துள்ளன. அண்மையில் நடைபெற்ற உரோம் தொடரிலும் முன்னதாக முடிவடைந்த சில தொடர்களிலும் வெற்றிபெற்று கிண்ணம் வெல்லத் தகுதியானவராக நடால் தன்னைத் தக்கவைத்துள்ளார். நடப்புச்சம்பியனானான ஜோகோவிக், பன்னாட்டுத்தரப்படுத்தலில் முதல்நிலை வீரரான முர்ரே ஆகியோர் மீதும் கவனமுள்ளது. முர்ரே காயமடைந்து உடல்தகுதியை இழந்துள்ளார் என்றும்சிலதகவல்கள்வெளியாகியுள்ளன. பெண்கள் பிரிவில் நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் முகுருசா களமிறங்குகிறார். இதனால் அவர்மீதுஎதிர்பார்ப்புஉள்ளது. அவரைவிடபன்னாட்டுத்தரப்படுத்தலில்முன்னிலையில் உள்ளவரான கெர்பர், தடையில் இருந்து மீண்டுவந்து சிறந்த ஆட்டத்தைவெளிப்படுத்திக்கொண்டிருக்கும்செரபோவாஆகியோரும் சாதிக்க வாய்ப்புள்ளது. செரபோவா தரப்படுத்தலில் 200ஆவது இடத்துக்கு அப்பால் உள்ளார். இந்தத் தொடரில் ஓரளவு சாதித்தால்அவர்தரப்படுத்தலில்முன்னேற்றம் காண்பார்.

பிரகாஸ்



# ரூனியின் நீக்கம் எத்தகையது?

இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியென்றால் நினைவுகளில் உடனே வந்துசெல்பவர் ரூனி. அந்தஅணியின்தலைவராகவும் நட்சத்திர வீரராகவும் பல முறை தோல்விகளில் இருந்து அணியைக் காப்பாற்றிய ரூனி, தற்போது அணியில்இருந்துநீக்கப்பட்டுள்ளார்.

ரஷ்யாவில் 2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரின் தகுதியாட்டங்கள்தற்போதுநடைபெற்றுவருகின்றன. இங்கிலாந்து அணி அடுத்த மாதம் ஸ்கொட்லாந்தைஎதிர்கொள்ளவுள்ளது. இந்தஆட்டத்துக்கான அணியில் ரூனிக்கு இடம்கொடுக்கப்படவில்லை. பிரான்ஸுடன் நடைபெறவுள்ள நட்பு ரீதியிலான ஆட்டமொன்றிலும் ரூனிக்கு இடம் கிடைக்கவில்லை.

இங்கிலாந்துஅணிக்காக58கோல்களைப்பதிவு செய்து அந்த அணியின் கால்பந்து வரலாற்றில் அதிக கோல்களைப் பதிவுசெய்தவர். இங்கிலாந்து அணியின்தலைவர், அதிகப்படியான ரசிகர்களைக் கொண்டவீரர்என்ற ஆகச்சிறந்த அடைவுகளை வைத்திருந்த ரூனி, அண்மைக்காலமாக தடுமாறிவந்தார் என்பதில்இரண்டாவதுகருத்துக்குஇடமில்லை. ஆனால் அவர்நீக்கப்பட்டமையானதுஎவரும்எதிர்பாராமுடிவே. அதிலும்அவரின்நீக்கத்துக்குஎவ்விதகாரணமும்தெரிவிக்கப்படாதமையானது ரூனிக்கு உரிய மரியாதையை இங்கிலாந்து கால்பந்தாட்ட சம்மேளனம் வழங்கவில்லைஎன்றேஎண்ணத்தோன்றுகிறது. ஒரு ஜாம்பவானைஉரியமுறையில்கையாளஇங்கிலாந்து தவறியுள்ளது என்பது மட்டும் நிதர்சனம்.

# சிக்கலில் ரொனால்டோ



ரியல்மட்ரிட் அணியின்நட்சத்திரவீரரும்போர்த்துக்கல் கால்பந்தாட்ட அணியின் தலைவருமான கிறிஸ்ரியானோ ரொனால்டோ 9 மில்லியன்டொலர்அளவில்வரிஏய்ப்புசெய்துள்ளார்என்றுகுற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கிறிஸ்ரியானோ ரொனால்டோ 2011ஆம் ஆண்டில் இருந்து 2013ஆம் ஆண்டு வரை தனது ஒளிப்படத்தை விளம்பரத்துக்கு பயன்படுத்துவதற்கான உரிமம் குறித்து சரியான தகவலை தெரிவிக்கவில்லை என்று ஸ்பெயின் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதனடிப்படையில் இந்த விவகாரம் வெளி வந்துள்ளது. ஒருவேளை வருமான வரித்துறையினர் விசாரணை நடத்தி, ரொனால்டோ மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒரு வருடத்திற்கு நான்கு மாதம் என 12 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வாய்ப்புள்ளது. ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரும் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரருமான மெஸ்ஸி, வரி ஏய்ப்பு செய்தமைஉறுதிப்படுத்தப்பட்டதைஅடுத்துஅவருக்கு22மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஸ்பெய்ன் சட்டத்தின்படி 2 ஆண்டுகளுக்கும் குறைவான காலப்பகுதிசிறைத்தண்டனைவிதிக்கப்பட்டஒருவர்தனதுதண்டனைக் காலத்தை சிறைக்கு வெளியில் நன்நடத்தை அடிப்படையில் செலவிட முடியும் என்பதால் மெஸ்ஸி சிறைத்தண்டனையில் இருந்து தப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முத்துஐயன்கட்டு வலதுகரை தினேஸ் முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முத்துஐயன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய அதிபர், முத்து விநாயகர்புரம் கிராம சேவையாளர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். விளையாட்டில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஐ7)













தெல்லிப்பழை சித்தியம்புளியடி கலைச்செல்வி சனசமூக நிலையம் நடத்திய கலைச்செல்வி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கலைச்செல்வி நூல் நிலையத்தின் அருகாமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கலைச்செல்வி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.அனுசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராகப் புளொட் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக சோ.சுகிர்தன் (முன்னாள் தவிசாளர், வலி வடக்கு பிரதேசசபை), நா.கணேசன் (தலைவர், பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை) ஆகியோரும், கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16.05.1962

மறைவு
10.06.2016

## அமரர் திருமதி புவனேஸ்வரி லோகநாதன்

(சிரேஷ்ட விரிவுரையாளர், உயிரியல் விஞ்ஞானத்துறை,
பிரயோக விஞ்ஞானபீடம், வவுனியா வளாகம், யாழ்பல்கலைக்கழகம்)

விண்ணில் ஓர் சூரியன் போல் எம்
குல விளக்காய் ஒளிர்ந்தாயே!
மண்ணிலே நீ இல்லை என்ற செய்தி – இன்று
பொய்யாகிப் போகாதோ?
விண்ணளவு உயர்ந்தாலும் – எமக்கெல்லாம்
தாய் உள்ளம் கொண்டவராய்
உனக்கென அளவுகளின்றி மாறுவாய்.
எல்லா உறவாகவும் மாறி
தேவைகளறிந்து சேவைகள் செய்தாய்
கடமைகள் எல்லாம் எமக்கெனச்செய்தாய்
எட்ட நினைக்கும் எம் இலட்சியங்களுக்கெல்லாம் ஏணியாய் நின்றாய்
தூய உன்கண்ணொளி சூரியன் சேர
பூதங்கள் ஐந்திலும் உன்பொன்னுடல் சேர – உன்
புண்ணிய ஆத்மா இறைவனைச்சேர
பிரார்த்திக்கிறோம்..

நினைவுகளுடன்
[illegible]



கைதடிப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திரு விழாக் காட்சிகள். (ஐ)



தென்மராட்சிப் பிரதேசத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிப்பொருள்களை வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் பிரதேச செயலகத்தில்வைத்துகடந்த 24 ஆம் திகதி வழங்கி வைத்தார். இதில் 12 பேருக்கு தையல் இயந்திரங்களும், மூவருக்குத் தொழில் உபகரணங்களும், ஒருவருக்கு வாழ்வாதார உதவிப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் விளையாட்டு விழா ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் யு. அசோக் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறைத் தீவகம் வடக்குப் பிரதேச செயலர் திருமதி.அன்ரன் யோகநாயகம், யாழ்.ஊர்காவற்றுறைப்புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்பணி மு. ஜேம்ஸ் சிங்கராஜர்,யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஐ.தவேந்திரன், யாழ் மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி.வினோதினி ஸ்ரீமேனன்,யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் சு. காமராஜ், தேசிய சேவைகள் துறை, தேசிய இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் விஜிதரன்,தீவக இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் நு. லக்ஸ்மன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)





கச்சாய் அ.த.க.பாடசாலையின் 2 ஆவது மாணவர் நாடாளுமன்ற பதவியேற்பும் கன்னி அமர்வும் கடந்த வாரம் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றன.
பாடசாலை அதிபர் குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ்.மாவட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி சுதர்ஜினி சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சி.நாகராசாவும் கலந்து கொண்டனர். (ஐ,9)



யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் தொழிற்பயிற்சி நிலையத் திறப்பு விழா யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு தொழிற்பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்தார். (ஐ)




ஏழாலையைச் சேர்ந்த சின்னையா சிவதாசனின் 32ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் ஊடாக யாழ்.கொழும்புத்துறையில் அமைந்துள்ள புனித.ஜோசப் முதியோர் இல்ல முதியோர்களுக்கான அசைவ மதிய உணவும், சுகாதாரப்பொருள்களும் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், தமிழ்த்தேசிய இளைஞர் கழகத்தின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சி.அகீபன், காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஆசிரியர் ப.தர்சானந், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர், மானிப்பாய் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ஜோன் ஜிப்றிக்கோ கொடையாளரின் உறவினரும் கிராம சேவகருமான அ.அகிலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT






# பறவை இனங்கள்..! சிறகசைவின் தனித்துவங்கள்

உலகில் ஏறத்தாழ 18 அயிரம் பறவை இனங்கள் இருப்பதான தகவல் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. இதுவரை காலமும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்று கருதப்பட்டு வந்த பல பறவைகள் தனி இனங்களைச் சார்ந்தவை என்பது மேற்படி ஆய்வுச் செயற்பாடுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒரே தோற்றமுடைய பல பறவைகள் குறித்த இனத்தின் உட்பிரிவைச் சேர்ந்தவை என்று கருதப்பட்டுவந்த நிலையிலே தற்போது அவையுட தனி இனங்களைச் சேர்ந்தவை என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி உலகில் ஏறத்தாழ 18 ஆயிரம் பறவை இனங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், தனி இனங்களையும் ஒரு இனத்தின் உட்பிரிவுகளையும் எவ்வாறு தரம் பிரித்து அறிய வேண்டும், அந்தந்த இனங்களைப் பாதுகாக்க எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் புதிய ஆய்வு முறைகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பறவைகளின் உருவம், சிறகுகளின் நிறம் ஆகியவற்றைப் பகுப்பாய்ந்து கொள்வதில் மாற்று வழிமுறைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதான தகவல்கள் புதிய ஆய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவைதவிர அனைத்துப் பறவை இனங்களையும் பெருக்கமடையச் செய்யும் வகையில் இயற்கைச் சூழலைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடுகள் தொடர்பிலும் கருத்துரைக்கப் பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# போரின் பின்னர் புனரமைக்கப்பட்ட ஒட்டகப்புலம் அமலோற்பவ மாதா ஆலயம் யாழ்ப்பாண ஆயரை வரவேற்கிறது

## மண்ணின் இரண்டாவது குருமணியை வரவேற்க விழாக்கோலம் பூணுகிறது

கடந்த வாரம் யாழ். மறைமாவட்டத்தின் பிரசித்தி பெற்ற மரியன்னையின் யாத்திரைத்தலமான பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் யாத்திரைத்தலத்தில் போர்த்துக்கல் நாட்டுப் பற்றிமா அன்னையின் காட்சிகளின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் ஆயர் தலைமையில் நடைபெற்றமை தொடர்பிலான விவரங்களைத் தெரிந்து கொண்டோம். பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் யாத்திரைத்தல நிறுவுநர் கென்றி ஜெலான் அ.ம.தி அடிகளார் இந்தப் பற்றிமா கிரிகையை தோற்றுவிக்க பண்டத்தரிப்புப் பகுதியில் போர்த்துக்கேயரால் நடப்பட்ட இராச முருக்கு மரத்தடியில் என்ன செய்தார் என்பது தொடர்பிலும், போர்த்துக்கேயரால் நடப்பட்டு இன்றும் பாதுகாக்கப்படும் இராச முருக்கு மரம் பற்றியும் தொடர்புடைய விடயங்களை அடுத்த வாரம் நோக்குவோம். சற்றுப் பொறுத்திருங்கள்.

**ஒட்டகப்புலம் அமலோற்பவ மாதா ஆலயப்பங்கு போரின் பின்னர் புனரமைக்கப்பட்டு யாழ் ஆயரை வரவேற்கிறது**

1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த ஒட்டகப்புலம் அமலோற்ப மாதா ஆலயப் பங்கு, போரின் பின்னர் வேகமாக புனரமைக்கப்பட்டுஎதிர் வரும் 31ஆம் திகதியன்று யாழ். ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை வரவேற்று அவர் தலைமையில் திருநாள் கொண்டாடவுள்ளது. அது பற்றியே இவ்வாக்கம் விவரிக்கிறது.

**ஒட்டகப்புலம் அமலோற்பவ மாதா திருவிழா பற்றி பங்குத்தந்தை சீ.ஜீ. ஜெயக்குமார் அடிகளார்**

இந்தத்திருவிழா பற்றிப் பங்குத்தந்தை சீ.ஜீ. ஜெயக்குமார் அடிகளார் கருத்துத் தெரிவிக்கும் போது "யாழ். ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை முதற் தடவையாக இங்கு வருகின்றமையால் தவில் நாதஸ்வர இசையுடன் அவரை வரவேற்கவுள்ளோம். ஆலய திருத்த வேலைகள் செய்யப்பட்டுள்ளன. முகப்பு வேலை செய்யப்பட்டு புதிய கதவு அமைக்கப் பட்டுள்ளது. புதிய முகப்பு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத் திருவிழாவுக்கும், குருப்பட்ட விழாவுக்கு மென ஏறக்குறைய 25 குடும்பங்கள் வெளிநாடுகளில் இருந்து வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது" என்றார். மேலும் இடம் பெயர்ந்து இலங்கையின் பல பாகங்களிலும் வாழும் ஒட்டகப்புல பங்கு மக்கள் மற்றும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் ஒட்டகப்புல பங்கு மக்கள் என அன்னையின் பக்தர்கள் பலர் நீண்ட காலத்தின் பின்னர் இங்கே ஒன்று கூடவுள்ளனர்.

**80 ஆண்டுகளின் பின்னர் இரண்டாவது குருவாக மண்ணின் மைந்தர்**

ஒட்டகப்புலம் அமலோற்பவ மாதா ஆலய பங்கு மக்கள் இந்த நிகழ்வை மகிழ்ந்து கொண்டாட இன்னுமொரு காரணமும் உண்டு. 80 ஆண்டுகளின் பின்னர் மண்ணின் மைந்தர் ஒருவர் பங்கின் இரண்டாவதுகுருவாகதிருநிலைப்படுத்தப்படவுள்ளார். ஒட்டகப்புலம் அமலோற்பவ மாதா ஆலயப் பங்கு மகனும், தற்போது யாழ். தூய திருமுழுக்கு யோவான் ஆலயப் பங்கை வசிப்பிடமாகத் கொண்டவருமான அ.அன்றோ டெனிசியஸ் அவர்கள் யாழ். ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் யாழ். மரியன்னைப் பேராலயத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதியன்று குருவாக திருநிலைப்படுத்த ப்படவுள்ளார். புதிய குரவர் அ.அன்றோ டெனிசியஸ் அடிகளார் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு ஒட்டகப்புலம் அமலோற்பவ மாதா ஆலயத்தில் தமது முதற் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார். இவர் காலஞ்சென்ற யோண் பிலிப் அலோசியஸ் மற்றும் திருமதி மேரி றோஸ் லங்காவதி தம்பதியினரின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாக்கத்திற்கான தகவல்கள் ஏ.ஆர். சந்திரகுமார் என்பவர் இங்கிலாந்தில் இருந்து அனுப்பிய ஆக்கத்தில் இருந்து பெறப்பட்டது. இங்கு தரப்படும் தகவல்கள் பெரும்பாலும் வாய்வழிப்பாரம்பரிய தகவல்களாகவே உள்ளன. இவை உறுதிப்படுத்தப்பட்ட சரித்திர ஆதாரச் சான்றுகளைக் கொண்டிருக்கவில்லை. இவ்வாக்கத்தைப் படித்து மேலதிக சரித்திர ஆதார விடயங்களைத் தெரிந்திருப்போர் வெளிப்படுத்தினால் அவை வரவேற்கப்படும்.




**ஒட்டகப்புலத்துக்கு வளம் சேர்க்கும் செம்மண்ணும் ஆழக்கிணறும்**

வலிகாமம் வடக்கில் வசாவிளானுக்கு கிழக்குப் பகுதியில் ஒட்டகப்புலம் என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. பலாலி விமான நிலையத்தில் இருந்து கிட்டத்தட்ட 3 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஒட்டகப்புலம் கிராமத்தை சங்கானை வீதி ஊடறுத்துக் செல்கின்றது. இவ்வீதி மேற்கே வசாவிளானையும், கிழக்கே அச்சுவேலியையும் இணைத்துச் செல்கிறது. தற்போதும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற ஒட்டகப்புல கிராமம், மக்கள் எவருமற்ற இராணுவப் பிரசன்னம் உள்ள கிராமமாகவே காட்சியளிக்கின்றது. வளமான செம்மண்ணும் , ஆழக்கிணற்று நீரும் ஒருங்கே அமைந்து பச்சைப்பசேல் என்று காட்சி தந்த எழில் கொஞ்சும் கிராமமே ஒட்டகப்புலம் கிராமம் ஆகும். தேவாலயம், பாடசாலை, வாசிகசாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சேமக்காலை, முறிவு நோவு வைத்தியசாலை, என்பவற்றின் மத்தியில் குடியிருப்புக்கள் மற்றும் விவசாய நிலங்கள் என அழகுற அமைந்திருந்த ஒட்டகப்புல கிராமம் இன்று அனைத்தையும் பறிகொடுத்து பொலிவிழந்து சோகமாக நிற்கிறது. இராணுவம் சிறிது சிறிதாக விலகிய பகுதிகளை மீளக் கட்டி எழுப்பவும், வாழ்வாதாரங்களைத் தேடவும், மீளவாழத் தொடங்கவும் முயன்று கொண்டிருக்கிறது.

**ஒட்டகப்புலம் என்ற பெயரின் வாய்வழிப் பாரம்பரியம்**

ஒட்டகப்புலம் என்ற பெயர் எவ்வாறு அமைந்தது என்பதற்கான காரணத்தை வரையறுத்து உறுதியாகக் கூறமுடியாது போனாலும், ஊர் மக்களால் வாய்மொழியாக வழங்கி வரும் காரணங்களை இங்கு குறிப்பிட முடியும். வாய்மொழியாக வழங்கி வருவதால் அவற்றை வெறும் கதைகள் என்று ஒதுக்கி விடவும் முடியாது. ஏனெனில் அவை ஏற்றுக்கொள்ளக் கூடியனவாகவும் உள்ளன.

அமலோற்பவ மாதா ஆலயம் அமைந்துள்ள காணியின் பெயரை ஒட்டகப்புல வளவு என்பதில் இருந்தே மூதாதையர் கிராமத்தின் பெயராகவே ஒட்டகப்புலம் என வெளிப்படுத்திக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. ஒட்டகப்புலம் முறிவு நோவு வைத்தியத்துக்கு பெயர் போனது [illegible] புலம் என ஒட்டகப்புலம் என்ற பெயர் உருவானது எனவும் கூறப்பட்டு வருகின்றது. புலமாகக் காணப்பட்ட இடத்தில் வியாபாரிகள் கொட்டகைகள் அமைத்து பொருள்களை சேமித்து வைத்த பின்னர், காங்கேசன் துறை மயிலிட்டி ஊடாகப் பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச் சென்றார்கள் என கூறப்படுகிறது. இவ்வாறு கொட்டகைகள் அமைக்கப்பட்டபடியால் "கொட்டகைப்புலம்" எனவும் பெயர் பெற்றதாகவும் பின் அது மருவி ஒட்டகப்புலம் என பெயர் பெற்றதாகவும் குறிப்பிடப்படு கின்றது.

**ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா சொரூபக்கதை**

ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலய தேவ தாயின் திருச்சொரூபம் 16ஆம் நூற்றாண்டிற்குரியது எனத் தெரிய வருகிறது. ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலயத் தேவதாயின் திருச்சொரூபம் பற்றிய உறுதிப்படுத்தப்படாத கதை ஒன்றும் உண்டு.

சில்லாலையில் உள்ள ஒரு வயலை உழவன் ஒருவன் உழுது கொண்டு இருக்கும் போது ஒரு அசரீரிக் குரல் கேட்டது. உழவன் அந்தச் சத்தத்தைப் பொருட்படுத்தாமல் மீண்டும் உழத் தொடங்கியபோது கலப்பையின் கொழு மரப்பெட்டியொன்றில் மாட்டிக் கொண்டது. உழவன் ஒரு புதையல் கிடைத்து விட்டதாக எண்ணிப் பெட்டியை கவனமாகப் பிரித்துப் பார்த்த போது பெட்டியினுள் இரண்டு தேவ தாயின் சொரூபங்களை கண்டு பயந்து போய் ஓடிச் சென்று அந்தச் செய்தியை சில்லாலை பங்குக் குருவிடம் கூறினார். குருவானவரும் சில்லாலைப் பங்கு மக்களும் வயலுக்குச் சென்று பெட்டியில் இருந்த இரண்டு தேவதாயின் சொரூபங்களையும் மீட்டு சில்லாலை ஆலயத்தில் வைத்தனர்.

வடமூலை உத்தரிய மாதா ஆலயப் பங்குடன் இணைந்திருந்த ஒட்டகப்புல மக்கள் அங்கிருந்து பிரிந்து வந்து ஒட்டகப்புல வளவில் ஒரு சிறு கொட்டகை அமைந்து செபம் செய்து வந்தனர். அந்தக் காலப்பகுதியில் ஒன்பது ஆலயத்துக்கு ஒரு குருவானவர் நியமிக்கப் பட்டிருந்தார். ஆலயத்தில் ஒரு வருடத்துக்கு ஒரு முறை தான் திருப்பலி நடக்கும். மற்றைய ஆலயங்களுக்கு மக்கள் மாட்டு வண்டிகளிலும், நடைபயணமாகவும் செல்வார்கள். மாதாவின் சொரூபம் கண்டெடுக்கப்பட்ட செய்தியைக் கேள்வியுற்று குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் சென்று வழிபட்டு வந்தனர். அத்துடன் தங்கள் ஆலயத்துக்கு மாதாவைத் தரும்படி பல ஆலயப் பங்கு மக்களும் கேட்டனர். ஒட்டகப்புல ஊர்ப் பெரியவர்களும் கால் நடையாகச் சில்லாலை சென்று தேவதாயின் சொரூபம் தம்மிடம் இல்லை என்றும் தமக்கு ஒரு சொரூபத்தை தரும்படியும் கேட்டு வந்தனர். இந்த நிலையிலே அப்போதைய சில்லாலைப் பங்குச் தந்தை தேவதாயின் சொரூபத்துக்கு விண்ணப்பித்த ஊர்கள் அனைத்தையும் எழுதி சீட்டிழுப்பின் மூலம் சொரூபம் வழங்கப்படும் என அறிவித்தார். குருவானவர் தகவலை அறிவித்த அன்றிரவே ஒட்டகப்புல மரியன்னை கனவில் குருவானவருக்குத் தோன்றி தன்னை ஒட்டகப்புல மக்களுக்கு கொடுக்கும்படியும் மற்றைய சொரூபத்தை சில்லாலையில் வைக்கும் படியும் கூறியுள்ளார்.

மாதா கிடைத்த செய்தியறிந்து ஒட்டகப்புலத்தில் வாழ்ந்த 17 குடும்பங்களும் மாட்டுவண்டிகளில் சில்லாலை சென்று சில்லாலையிலிருந்து மாட்டுவண்டியில் ஊர்வலமாக அன்னையை ஒட்டகப்புலம் நோக்கிக் கொண்டு வந்தனர். தாம் ஏற்கனவே அமைத்த கொட்டகையில் மரியன்னையை வைத்து வழிபட்டும் வந்தனர். மார்கழி எட்டாம் நாள் திருவிழா கொண்டாட பங்குத்தந்தை தீர்மானித்தார். முதல் திருவிழா வெகு சிறப்பாக நடந்தேறியது. அயலூர் மக்களும் திருவிழாவில் கலந்து கொள்வதால் கொட்டகை போதாது என உணர்ந்த ஊர் மக்கள் பெரிய கொட்டகை அமைத்து பனை ஓலையால் வேய்ந்தனர். ஆலயத்தை பெண்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மாட்டுச் சாணியால் மெழுகினர்.

**1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் ஊர்மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்தனர்**

1990ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் ஊர்மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து செல்ல வேண்டி நேரிட்டது. உள்நாட்டுப் போர் உச்சம் அடைந்த போது இலங்கை விமானப்படையினர் குண்டு வீசி ஆலயத்தை அழிக்க முற்பட்டபோதும் மாதா ஆலய முகப்பில் தோன்றி குண்டுவீசச் சென்ற விமானிக்குக் காட்சியளித்தார். ஒரு வயோதிபப் பெண் மட்டுமே நடமாடுவதால் என்னால் அங்கு குண்டு வீச முடியாது என விமானி மீண்டும் பலாலிக்குத் திரும்பிவிட்டார். 2002 ஆம் ஆண்டு சமாதான காலப்பகுதியில் அன்னைக்கு வழிபாடு செய்ய இராணுவத்தினர் அனுமதி வழங்கினர். 2010 ஆம் ஆண்டு ஆலயம் புனரமைக்கப்பட்டு வழிபாடுகள் ஒவ்வொரு மாதமும் இடம்பெற வழியேற்பட்டது. தற்போது மீண்டும் ஊர்மக்களின் பங்களிப்புடன் புனரமைப்புப் பணிகள் அனைத்தும் நிறைவெய்தி ஆலயப் பெருவிழாவையும், முதற்பலி விழாவையும் கொண்டாடவுள்ளது.



ஒட்டகப்புலம் அமலோற்பவ அன்னை ஒட்டகப்புலம் கிராமத்தை யும், அப்பிரதேசத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பிரதேசங்களையும் விடுவித்து அனைவரும் மகிழ்வுடன் அங்கு மீளக்குடியமர்ந்து வாழ வழி வகுக்க தேவதாயிடம் வரம் வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தி வாய்ந்த...

மேற்பட்ட மோட்டார்க் குண்டுகள், 8 பரா ரக குண்டுகள், 21 கைக்குண்டுகள் உள்ளிட்ட ஏராளமான வெடிபொருள்கள் மீட்கப்பட்டன.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த காங்கேசன்துறைப் பிரதேசத்தின் ஒரு தொகுதி காணிகள் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் அந்தக் காணிகளை உரிமையாளர்கள் துப்புரவு செய்து வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வலி. வடக்கு தையிட்டிப் பகுதி ஜே/247 கிராம அலுவலர் பிரிவிலுள்ள தனியார் காணியின் கிணற்றுப் பகுதியில் இருந்து ஏராளமான வெடிபொருள்கள் மீட்கப்படுகின்றன.

இந்த நிலையில் நேற்றைய தினமும் குறித்த கிணற்றில் இருந்து 60க்கும் மேற்பட்ட மோட்டார்க் குண்டுகள், 8 பரா ரக குண்டுகள், 21 கைக்குண்டுகள் என ஏராளமான வெடிபொருள்கள் மீட்கப்படுள்ளன. அந்தப் பகுதியில் மீள்குடியமரும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி காணி உரிமையாளர் கிணற்றை துப்புரவு செய்யும்போது சந்தேகத்துக்கு இடமான நிலையில் சில வெடிபொருள்கள் காணப்படுவதை அவதானித்தார். இது தொடர்பில் பொலிஸாருக்கு அவர் தகவல் வழங்கியுள்ளார். அதனைத் தொடர்ந்து அங்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர்.

நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப் படையினர் ஊடாக இந்த வெடிபொருள்களை மீட்கும் பணிகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். கிணற்றுடன் அவற்றை செயலிழக்க வைப்பதற்கு பொலிஸாரால் மல்லாகம் நீதிவான் மன்றில் அனுமதி கோரப்பட்டது. எனினும் நீதிமன்ற அனுமதி நேற்று வரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ8)


## வீசா ஆலோசனை

☞ உங்கள் வீசா நிராகரிக்கப்பட்டுள்ளதா ?

☞ ஆவணங்கள் அனைத்தும் கையளிக்கப்பட்டும் வீசா பெறுவதில் தாமதமா ?

**கவலை வேண்டாம் !**

அனைத்துவிதமான வீசா பிரச்சினைகளுக்கும் குறுகிய காலத்தில் குறைந்த செலவுடன் எம்மால் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்.

**4 வருடகால மக்களின் மனதினை வென்ற ஒரு நிறுவனம்.**

**WINSTAR VISA CONSULTANTS**

இல 106, தபாற்பெட்டி சந்தி, திருநெல்வேலி.

021 300 4641 www.winstarjaffna.com




வன்னிப் பெருநிலம் மல்லாவி - யோகபுரம்

**அருள்மிகு**

**ஸ்ரீ யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயம்**

**மண்டலாபிஷேகப் பூர்த்தி**

**நவோத்திர சகஸ்ர (1009) சங்காபிஷேகமும்**

**பூந்தண்டிகை திருவீதி உலாவும்**

**30.05.2017**

**சிவனடியார்களே !**

அருள்மிகு மல்லாவி யோகபுரம் ஸ்ரீ யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேப் பெருவிழா இனிதே நிறைவெய்தி தொடர்ந்து 24 தினங்கள் காலை. மாலை என 48 கால மண்டலாபிஷேகத்தின் பூர்த்தி விழா 30.05.2017 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து விஷேட யாகபூஜை. சங்குப்பூஜை. திரவ்ய அபிஷேகம். சிவபிரீத்திய ஹோமம் நடைபெற்று முற்பகல் 11.00 மணிக்கு சங்காபிஷேகம் ஸ்ரீ யோகபுரநாதருக்கு நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு விஷேட தீபாராதனைப் பூஜை நடைபெற்று பிற்பகல் 01.00 மணிக்கு மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும்.

மாலை 05.00 மணிக்கு மூலஸ்தான பூஜை ஆரம்பமாகி 06.00 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெற்று திருவூஞ்சல் விழாவுடன் வசந்த மண்டப பூஜை வழிபாடுகள் நடைபெற்று பூந்தண்டிகையில் விநாயகர், சிவன், பார்வதி திருவீதியுலா சிறப்பாக நடைபெறும். அடியார் யாவரும் காலக்கிரமத்துடன் ஆசார சீலர்களாக அபிஷேகத்துக்குரிய பால், தயிர், இளநீர், பூ, பூமாலை என்பவற்றினை கொண்டு வந்து கொடுத்து பூஜைகளில் பங்குபற்றி எம்பெருமானின் திருவருட்கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு : ஆலய தினப் பூஜை, மாதாந்தப்பூஜை, விஷேட பூஜைகள் செய்ய விரும்புபவர்கள் ஆலய பரிபாலன சபையின் 021 228 5600 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

*" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "*

**ஆலய பரிபாலன சபையினர்.**

சுபம் **021 228 5600**


## வடக்கு மாகாண சிறிய நடுத்தர வணிக நிறுவனங்களுக்கான தகவல் தொழில்நுட்ப கண்காட்சியும் செயலமர்வும்

NCIT The Gateway to Northern ICT · CCIY · ICTA ideas actioned

ICTA யின் சிறிய நடுத்தர தொழிற் துறையில் இலத்திரனியல் பயன்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் வடக்கு தகவல் தொழில்நுட்ப சம்மேளனம்(NCIT) ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் ஆதரவுடன் ICTA இன் பங்களிப்பில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது.

- ❖ நீங்கள் ஒரு வணிக முயற்சியாளரா?
- ❖ நீங்கள் ஒரு உற்பத்தியாளரா?
- ❖ புதிதாக ஒரு வணிக முயற்சியினை ஆரம்பிக்க உள்ளீர்களா?
- ❖ உங்கள் வியாபாரத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த ஆர்வமாக உள்ளீர்களா?
- ❖ ஏனைய வணிக நிறுவனங்களுடன் போட்டி போடுவதில் சவால்களை எதிர் கொள்கின்றீர்களா?
- ❖ உங்கள் வியாபாரத்தில் புதிய தொழில்நுட்பங்களினை புகுத்த விரும்புகின்றீர்களா?
- ❖ வளர்ந்து வரும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் மிகுந்த சந்தையில் உங்கள் உற்பத்திகளையும் சேவைகளையும் சந்தைப்படுத்த முயற்சிக்கின்றீர்களா?
- ❖ வாடிக்கையார்களினை அதிகரிப்பதில் சவால்களினை எதிர்கொள்கின்றீர்களா?
- ❖ நிறுவனத்தை முகாமை செய்வதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றீர்களா?

இவற்றில் எந்தக்கேள்விக்காவது **"ஆம்"** என்ற பதில் இருக்குமாயின் நீங்கள் வருகின்ற மே 31ம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரையான காலப்பகுதியில் **யாழ் வலம்புரி விடுதிக்கு** வருகை தாருங்கள்.

கண்காட்சியில் முன்னணி தகவல் தொழில் நுட்ப சேவைகள், தீர்வுகளை வழங்கும் நிறுவனங்களின் தீர்வுகளையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

தொழில்நுட்ப, வணிக மேம்பாட்டு வல்லுனர்களின் செயலமர்வுகளில் பங்கெடுத்து உங்கள் சந்தேகங்களுக்கு விடைபெற்றுக்கொள்ளுங்கள்

*அனுமதி இலவசம் (முன்பதிவு அவசியம்)*


மேலதிக விவரங்களுக்கு

**021 2226609/ 0777 563144**

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்

(C/29040)(10)


## மரணஅறிவித்தல்



### திருமதி சிவனேஸ்வரி மகானந்தன்

காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் 139, மூன்றாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவனேஸ்வரி மகானந்தன் 26.05.2017 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மகானந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்க ளான சண்முகம் வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற அழகேந்திரன் (முன்னாள் கிராம அபிவிருத்தி அலுவலர் பிரதேச செயலகம், காரைநகர்), பிரேமச்சந்திரன் (ரூபா வர்த்தக நிலையம் யாழ்ப்பாணம்), சாந்தினி, ஜெயந்தி, சிவானந்தன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயதேவி, குசலகுமாரி, காலஞ்சென்ற சுந்தரேசன், அமுதராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவலிங்கம், பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வஜினி, பிறேமினி, துஸ்யந்தன் (NITA,கிளி நொச்சி), துஸ்யந்தி, காலஞ்சென்ற வர்ணா, ரதிவதனி (ஆசிரியர்), ஜெயஅமுதன்(ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), மாதுரி, நீலினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மற்றும் கவிந்திகா, மக்சன், மதீசன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்போதைய வசிப்பிடத்தில் நாளை (29.05.2017) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**139, 3ஆம் குறுக்குதெரு, யாழ்ப்பாணம்.**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## விஷேட விலைக்கழிவு

| | |
|---|---|
| **முதல்தர பனர் பிரதியாக்கம்** | - 30.00 |
| **ஒரு பக்க விளம்பரப்பலகை** | - 150.00 |
| **ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை** | - 400.00 |
| **கதவுகளுக்கான கொத்து வேலை** | -10000.00 |

**Mug print - 300.00**

**3D LED SIGN BOARD-50 வீத விலைக்கழிவில்**

**கிறிஸ்ரல் பிறேம் (10x15)-1200.00**

**உங்கள் வீட்டு மங்கல நிகழ்வுகளுக்கான வீடியோ மற்றும் அல்பங்களையும் குறைந்த விலையில் பெறமுடியும்**

**மூர்த்தி டிஜிற்றல்**

**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**077 224 7428**

(C/29042)(10)


## வடக்கு...

மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் வடக்கில் காலநிலை மாற்றங்கள் ஏதும் ஏற்படுமா என்று கேட்டபோதே யாழ்.மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காற்றின் வேகம் அதிகரித்துள்ளது. இது மேலும் அதிகரிக்கலாம். காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் குறிப்பாகக் கடற்பகுதியில் காற்று மணிக்கு சுமார் 80 கிலோமீற்றர் வேகத்தில் வீசும். தரைப்பகுதியில் காற்று மணிக்கு 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசும். கடலுக்குச் செல்லும் மீனவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்." என்று அவர் தெரிவித்தார். (ற-12)

## அமைச்சர் ரவிக்கு...

கருணாநாயக்கவுக்கு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து முதன்முதலில் நேரில் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அத்துடன். இரு நாட்டு உறவுகள் தொடர்பிலும் அவர் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் பேச்சு நடத்தினார்.

கடந்த திங்கட்கிழமை புதிய அயலுறவு அமைச்சராக ரவி நியமிக்கப்பட்டார். எனினும் கடந்த வியாழக்கிழமையே அவர் தனது கடமைகளை அயலுறவு அமைச்சில் பொறுப்பேற்றிருந்தார்.

அவரை இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து மலர்க் கொத்துக் கொடுத்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அத்துடன், இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாக ரவி கருணாநாயக்கவுடன், இந்தியத் தூதுவர் பேச்சுக்களை நடத்தினார்.

புதிய அயலுறவு அமைச்சருக்கு முதன் முதலில் இந்தியத் தூதுவரே வாழ்த்துத் தெரிவித்து, அவருடன் முறைப்படியான பேச்சுக்களையும் நடத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## குடாநாட்டிலிருந்து...

யாழ்ப்பாணம், மே 28

தென்னிலங்கையில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாண மக்களிடமிருந்து உதவிப் பொருள்களைச் சேகரித்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் குடாநாடு முழுவதும் இன்று முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் கருணாகரன் தெரிவித்ததாவது:

தென்பகுதியில் பெய்த கடும் மழையால் 14 மாவட்டங்களைச் சேர்ந்த பல இலட்சம் மக்கள் செய்வதறியாது தவிக்கின்றனர். இந்த மக்களின் துன்பதுயர நிலைகளுக்கு வடக்கில் இருந்து தென்பகுதிக்கு 'உதவியில் உதவி' எனும் தொனிப் பொருளில் உதவ யாழ்ப்பாண மாவட்ட மக்கள் முன்வரவேண்டும். நல்லெண்ண உதவிக்கு எமது உறவுகள் உடுபுடைவைகள் (பெற்சீற், துவாய், சாரம், சேலை) சுகாதார பொதிகள் (சோப், பனடோல் பால்மா வகைகள்) உலர் உணவு பொருள்கள் (மீன்ரின், சீனி, பிஸ்கட், உணவுப் பொருள்கள் (உலர்) மற்றும் தண்ணீர் போத்தல் உட்பட தங்களாலான உதவிகளை மனமுவந்து வழங்குங்கள்.

இடர் பாதித்த மக்களுக்கான லொறி பவனி நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் உள்ள சந்நிதி முருகன் கடையில் ஆரம்பித்து யாழ்ப்பாண நகர் முழுவதும் சுற்றி வரும்.

இதனைத் தொடர்ந்து திருநெல்வேலி, கோண்டாவில், மருதனார்மடம், சுன்னாகம், மானிப்பாய் ஊடாக யாழ் வந்து சேரும். மேற்படி லொறி மூலமான உதவிப் பொருள் சேகரிப்புத் திட்டத்துக்கு யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண அனுமதியை வழங்கியுள்ளார். எனவே யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் அனைத்து மக்களும் இந்த உதவி திட்டத் துக்கு உங்கள் கரங்கள மூலம் உதவுங்கள் என்றார்.

மேற்படி உதவி வழங்கல் தொடர்பான மேலதிக விவரங்களுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கருணாகரனின் தொலைபேசியூடாக(0777496998, 0772018275) விவரங்களை பெற்றுக் கொள்ளலாம். 20 பேர் கொண்ட தொண்டர் அணி இந்த உதவி பொருள்கள் பெறும் பணியில் செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ. சைக்கிள்கள்...

பாகங்கள் உள்ளிட்ட பல வெடிபொருள்களும் நேற்று மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறைப் பகுதியின் குரு வீதிப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியில் உள்ள கிணற்றில் இருந்து கடந்த வாரம் 2 மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் கிணற்றில் இருந்து அள்ளப்பட்ட மண்ணுக்குள் இருந்து துப்பாக்கி ரவைகள் மற்றும் துப்பாக்கிகளின் பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கிணற்றிலிருந்து அள்ளப்பட்ட மண்ணுக்குள் பெருமளவான துப்பாக்கி ரவைகள், இயந்திரத் துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் தோட்டாப் பட்டிகள், துப்பாக்கித் தோட்டாக்கள் அடங்கிய பெட்டிகள், துப்பாக்கிகளின் பாகங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காணிப் பகுதியில் உள்ள கிணற்றை கடந்த வாரம் அதன் உரிமையாளர்கள் துப்புரவு செய்தார். அதன்போது கிணற்றுக்குள் இருந்து 2 மோட்டார் சைக்கிள்களும், மோட்டார் சைக்கிளின் உதிரிப்பாகங்களும் காணப்பட்டன. அவை மீட்கப்பட்டன. இது தொடர்பில் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவத்தை அறிந்த இராணுவத்தினர் அங்கு விரைந்து மோட்டார் சைக்கிள்களின் இலக்கத் தகடுகளை பிடுங்கி எடுத்துச் சென்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான நிலமை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் கிணறு துப்புரவின் போது அள்ளப்பட்ட மண் கிழறி ஆராயப்பட்டது. அதிலிருந்தே ஆயுதங்களின் பாகங்கள் மீட்கப்பட்டன. இராணுவத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து நாளாந்தம் ஆயுதங்களும்,வெடிபொருள்களும் மீட்கப்பட்டுக் கொண்டிருப்பதால் அந்தப் பிரதேச மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். (வ-21-8 -26)

## பௌத்த...

செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ள இடர் குறித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் தற்போது அதர்ம ஆட்சி நிலவுகின்றது. அதனால்தான் இவ்வாறான இடர்கள் இடம் பெறுகின்றன. போலி தெய்வங்களிடம் குறைகளை கூறாமல், இடர் நேரக்கூடாது என உண்மைத் தெய்வமான புத்த பெருமானை பிரார்த்தனை செய்ய வேண்டும்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி, மக்கள் என்ற வகையில் சகலரும் மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். எனது பிரச்சினை தற்போதை தருணத்தில் முக்கியமில்லை. எனவே எதிர்ப்புச் செயற்பாடுளை விடுத்துவிட்டு தற்போதைய நிலமைக்கு உரிய செயற்பாடு எதுவோ? அதனையே செய்ய வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் புத்த பெருமானை வேண்டிக்கொள்ள வேண்டும். அதனைவிடுத்து போலியாக உருவாக்கப்பட்ட மற்றைய தெய்வங்களை வணங்கி அவர்களிடத்தில் குறைகளைக் கூறுவதில் அர்த்தமில்லை. அதனால் திருட்டுத் தெய்வங்கள் இல்லாமல் இந்த நாட்டைப் பாதுகாத்த புத்த மதத்தின் தெய்வங்களிடத்தில் விளக்கேற்றி உங்களின் கவலையைக் கூறுங்கள்.

பௌத்த பூமியைப் பாதுகாத்துத் தர வேண்டுங்கள். இயற்கை இடர்களினாலும் வேறு செயற்பாடுகளினாலும் மாற்றம் பெறுகின்ற பூமியை மீட்டுத் தர வேண்டும் என்று வேண்டுங்கள். அதேபோல் புத்தபெருமானின் போதனைகளை கேட்காமலும் அவருக்கு மதிப்பளிக்காமலும் எமது நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள்தான் இவ்வாறான இயற்கை இடர்கள் நேருவதற்கு காரணமாகும்.

இதற்கு முன்பு இவ்வாறான இடர் ஏற்பட்டதில்லை. திடீரென இடர்கள் நேருகின்றன. இது குறித்து புத்த பெருமானும் போதித்துள்ளார். ஆட்சியாளர்கள் புத்த மதத்தைப்பின்பற்றாமல் இருந்தால் இவ்வாறான செயற்பாடுகளை எதிர்கொள்ள நேரிடும் . அதனால் இன்று நாட்டில் உள்ள அதர்ம ஆட்சியே இடருக்குக் காரணம் என்றுள்ளது. (வ-10)

## உதவ...

கொழும்பு, மே 28

தென்னிலங்கையில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரச அனுப்பி வைக்கப்பட்ட உதவிப்பொருள்களுடான கப்பலொன்று நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. அதில் சிறப்பு மருத்துவக் குழுவினரும் வந்தடைந்தனர்.

உதவிப் பொருள்களுடன் மேலும் 2 கப்பல்கள் இன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் என்று இந்திய அரசு அறிவித்தது.

இலங்கையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக மக்களுக்கு உதவி வழங்க முன்வருமாறு இலங்கை அரசு கேட்டுக்கொண்டதையடுத்து உடனடியாக இந்திய அரசு உதவிப் பொருள்களை அனுப்பிவைத்தது. அந்த உதவிப் பொருள்களுடன் கப்பல் கொழும்பு துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது. (வ-10)

## அமைச்சர்...

அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அலைபேசியில் மிரட்டல் விடுத்தால் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் அச்சுறுத்தல் விடுத்ததாகத் தெரிவிக்கப்படும் காணொலிப் பதிவு இணையங்களில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி குருநாகலில் இடம் பெற்ற பதற்ற நிலையைத் தொடர்ந்து சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்க ஞானசார தேரரை அலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார். அவர்கள் இருவருக்கும் இடையே இடம்பெற்ற உரையாடல் காணொலிப்பதிவு தற்போது இணையத்தளங்களில் பரவி வருகின்றது.

இதன்போது அமைச்சரிடம் அதிகாரப்போக்குடன் உரையாடிய ஞானசார தேரர், தன்னை கைது செய்ய பொலிஸாரை அனுப்பியது யார்? என்று கடுமையான தொனியுடன் கேட்கின்றார். அதற்கு பதில் அளித்த அமைச்சர், "என்னை மிரட்டும் பாணியுடன் பேச வேண்டாம். தேரராக நடந்துகொள்ளுங்கள்" என்று கேட்டுக்கொள்கின்றார்.

அதனைத் தொடர்ந்து தேரர் "நாம் நாட்டில் நடைபெறும் முறைகேடுகளையே அடையாளப்படுத்தினோம். அதற்காகப் பொலிஸாரை ஏவுவதா? அதற்கான அனுமதியை உங்களுக்கு யார் கொடுத்தது" என்று வினவுகின்றார்.

அதற்கு அமைச்சர் பதில் அளிக்கையில் "நாட்டில் பாரம்பரியம் அழிக்கப்படுகின்றது என்றால், அவ்வாறான இடத்தை அடையாளப்படுத்தவேண்டும். அதுதொடர்பில் பொலிஸார் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும். கைது உத்தரவு குறித்து எனக்கு தெரியாது. இந்த விடயம் தொடர்பில் நான் மிகுந்த வேதனை அடைகின்றேன்" என்று பதிலளித்தார்.

அதனைத் தொடர்ந்து ஞானசாரர் அமைச்சருடனான அழைப்பைத் துண்டித்து விட்டு, கூட்டு அரசைத் திட்டுவது காணொலியில் பதிவாகி உள்ளது.

அமைச்சருடன் அலைபேசியில் உரையாடியதன் பின்னரே ஞானசார தேரர் தலைமறைவாகி உள்ளார் என்று கூறப்படுகின்றது.

ஞானசார தேரர் விவகாரம் தற்போது ஒருவித பதற்ற சூழலை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

"கடந்த 20ஆம் திகதி குடிபோதையில் வந்த பொலிஸார் குருநாகல் நகரில் வைத்து ஞானசார தேரர் மீது தாக்குதல் நடத்த முயற்சி செய்தனர். பொலிஸாருக்கு இந்த அதிகாரத்தை கொடுத்தவர் யார் ?என்பதன் உண்மைத் தன்மை கண்டறியப்பட வேண்டும். இப்போதைய ஆட்சியாளர்களின் திட்டமே இது" என்று சிங்கல ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல் கந்தே சுதந்த தேரர் குற்றஞ்சாட்டினார். (வ-4)

## சின்னக்கடை...

ளும் மோதுண்டதால் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம், நாவாந்துறையைச் சேர்ந்த எஸ்.ஏ.சர்யூன் (வயது- 34) என்ற குடும்பத் தலைவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

"சின்னக்கடை பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவர் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகினார். விபத்தில் படுகாயமடைந்த அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார்" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-8)

## மீட்புப்...

கொழும்பு, மே 28

தென்னிலங்கையில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர மீட்பு மற்றும் மருத்துவ உதவிப் பணிகளில் இந்தியக் கடற்படையினர் நேற்று ஈடுபட்டனர். அவர்கள் இலங்கைக் கடற்படையுடன் இணைந்து மீட்புப் பணிகளை முன்னெடுத்தனர்.

14 மாவட்டங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் மீட்பு மற்றும் உதவிப் பணிகளில் ஈடுபடுவதற்காக இந்தியக் கடற்படைக் குழுக்கள் இலங்கைக்கு நேற்று வந்திருந்தன. அந்தக் குழக்கள் காமினி வகை மிதவைப் படகுகளுடன் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட களுத்துறை மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அங்கு மீட்புப் பணிகளில் இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து இந்திய கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் இந்திய கடற்படை மருத்துவக் குழுக்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவ முகாம்களை நடத்த ஆரம்பித்துள்ளன. (வ-4)

## பொருத்து...

கலை, திட்டமிடல், சட்டம், சமூக ஒருங்கிணைப்பு, மற்றும் திட்ட மேலாண்மை ஆகியவற்றில் வல்லுநர்களைக் கொண்ட குழு நேற்றுமுன்தினம் கூடி முடிவை அறிவித்தது. இது தொடர்பில் அந்தக் குழுவால் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு 6 ஆயிரம் பொருத்து வீடுகளை நிர்மாணிப்பதற்காக அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. அதனுடன் வருடாந்தம் 10 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் கல் வீடுகளை உருவாக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி 6ஆயிரம் பொருத்து வீடுகளை நிர்மாணிக்க பல்தேசிய உலோக கம்பனியான ஆர்சிலோ மிற்றலுக்கே வழங்குவதாகத் தெரியவருகிறது. இந்த விடயம் பல்வேறு பிரச்சினைக்குரிய கேள்விகளை எழுப்புகின்றது. ஆர்சிலோ மிற்றலின் பொருத்து வீடுகளின் பல சிக்கல்கள் மற்றும் பொருத்தமற்ற தன்மை பற்றி தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆனாலும் போரால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அரசு ஏன் இந்த வீடுகளை மீண்டும் வலியுறுத்துகிறது என்பது புரியவில்லை.

ஒவ்வொரு வீட்டுக்கும் 1.5 மில்லியன் (இறக்குமதி வரிகள், வேறு வரிகள் இல்லாமல்) செலவாகும் என்று அமைச்சரவை முடிவு குறிப்பிடுகின்றது. கடந்த ஆண்டு 8 லட்சம் முதல் 9 லட்சம் செலவில் வடக்கு கிழக்கில் 550 சதுர அடி கல் வீட்டுத் திட்டம் மீள் குடியேற்ற அமைச்சினாலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ள போது, மிதமிஞ்சிய செலவினங்களுக்கு அரசு ஏன் இணங்குகின்றது என்று புரியவில்லை.

6 ஆயிரம் ஆர்சிலோ மிற்றல் வீடுகள் எவ்வாறு என்ன விதிமுறைகளின் கீழ் நிதியளிக்கப்பட போகின்றது? வெளிநாட்டுக் கடனைப் பெற்றே ஆர்சிலோ மிற்றல் தன் திட்டத்தை ஆரம்பத்தில் முதலீடு செய்யப் போவதாக இருந்தது. தற்போது நாட்டின் பொருளாதார சூழ்நிலையில் வெளிநாட்டுக் கடன் நிலமை மற்றும் மாற்று விகிதத்தில் தேய்மானம் நிலவும் கேள்விகோரல் செய்யப் படவில்லை?

6ஆயிரம் வீடுகளை கேள்வி கோரல் அழைப்பு இல்லாமல் ஆர்சிலோ மிற்றலை பரிந்துரை செய்ய அமைச்சரவை எவ்வாறு முடிவு செய்தது? ஆரம்பக் கேள்வி கோரப்பட்ட போது, திட்டத்தின் அளவு (5 ஆண்டுகளில் 65 ஆயிரம் வீடுகள் கட்ட வேண்டும் ) காரணமாக பல உள்நாட்டு கட்டுமான நிறுவனங்கள் பெறத்தகுதி பெற்றிருக்கவில்லை. இந்த 6ஆயிரம் வீடுகள் ஏன் மீண்டும் கேள்வி கோரல் செய்யப்படவில்லை?

இறக்குமதி தொடர்பான வரிகளும், ஏனைய வரிகளும் சேர்க்கப்பட்டால் ஆர்சிலோ மிற்றல் வீடுகளின் செலவு கணிசமாக அதிகரிக்கும். அரசு ஆர்சிலோ மிற்றலுக்கு வரிகளை நீக்கி மானியம் வழங்குகிறதா? கல் வீடுகளுக்கு சிமெந்து இறக்குமதி செய்வதற்கும் அரசு அவ்வாறே செய்தால் செலவுகள் மேலும் குறைவடைய வாய்ப்பு உள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் போரால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான தனது நோக்கத்தை இலங்கையின் அரசு அறிவித்து 2 வருடங்கள் கழிந்துவிட்டன. இந்தத் திட்டம் இன்னமும் ஆரம்பிக்கப்படாதது வருந்தத் தக்கது. இந்த தாமதத்துக்கான முக்கிய காரணம் 2016 இன் ஆரம்பத்தில் மீள்குடியேற்ற அமைச்சு 65ஆயிரம் பொருத்து வீடுகளுக் கான முழுத் திட்டத்தையும் பன்னாட்டு உலோக கம்பனி ஆர்சிலோ மிற்றலுக்கு இறக்குமதி செய்ய முற்பட்ட கெடுதியான வழிவகை ஆகும்.

இந்த முடிவின் மோசமான நிதி, பொருளாதார, தொழில்நுட்ப சமூக மற்றும் கலாசார அம்சங்களைப் பற்றி கவலை தெரிவித்து வல்லுநர்கள், அரச ஊழியர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் உட்பட குறிப்பிடத்தக்க விமர்சனங்களும் எதிர்ப்புக் குரல்களும் எழுப்பியதை அடுத்து மீளாய்வும் திருத்தியமைப்புக்களும் செய்யப்பட்டன.

ஆர்சிலோ மிற்றலின் 6ஆயிரம் பொருத்து வீடுகளை நிர்மாணிப்பதற்கான முடிவை உடனடியாக மீளாய்வு செய்யவேண்டும். வடக்கிலும், கிழக்கிலும் வருடத்துக்கு 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் கல் வீடுகள் கட்டுவதை ஆரம்பிக்க அவசியமான நிதிவளங்களை ஒதுக்கி வெளிப்படையான மற்றும் தேசிய பொருளாதார நலனைக் கருத்தில் கொண்ட கொள்முதல் செயல்முறைக்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீட்டுத் திட்டங்கள் சமூக அணி திரட்டல் மற்றும் பங்கேற்பு உள்ளதாயும் உள்ளூர் மற்றும் தேசிய பொருளாதார நலன்களை அதிகப்படுத்துவதாயும் மேலும் முந்தைய வீட்டுத் திட்டங்களில் உண்டான கடன் பிரச்சினைகளைத் தவிர்ப்பதாகவும் உருவாக்கப்பட வேண்டும் என்றுள்ளது. (வ-4- 10)

## சுற்றறிக்கை...

வெள்ள இடரில் உயிரிழந்தவர்களுக்கான இழப்பீடு வர்களுக்கான இழப்பீடுவழங்குதல், இடம்பெயர்ந்து மற்றும் அன்றாட தொழில்களை இழந்துள்ளவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான பொறிமுறை குறித்து தொடர்புடைய நிறுவனங்களுடன் அடுத்தவாரம் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கான 3 நாள் உத்தியோக பூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று நாடு திரும்பினார். சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை தொடர்பில் அவர் அறிந்து கொண்டார். அதன் பின்னர் இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தும் நோக்கில் களுத்துறை மாவட்ட செயலகத்தில் நேற்றுமுற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலில் அரச தலைவர் பங்கேற்றார்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் அரச தலைவர் ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

திடீர் இடர் நிலமையால் சேதமடைந்த வீடுகளை அரசினால் நிர்மாணிப்பதற்கு உரிய நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும். நாட்டில் அவ்வப்போது ஏற்படும் இடர் நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கு தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் புதிய நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானமொன்றை மேற்கொள்ளவுள்ளேன்.

பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்களைப் பாதுகாத்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, குடிதண்ணீர், மருத்துவ உதவிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும். இடருக்குள்ளான பிரதேசங்ளைச் சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இதில் முக்கிய பொறுப்பு உள்ளது.உதவிகளை வழங்குவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் இடர் முகாமைத்துவ அமைச்சினூடாக குறித்த நிறுவனங்க ளுக்கு வழங்கப்பட்டுள்ளன. உயிர்களை மீட்பதற்குத் தேவையான படகுகள், குறித்த இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு கட்டணமின்றி அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்த முடியும் என்று அரச தலைவர் தெரிவித்தார் என்றுள்ளது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானமுருகன் அபார வெற்றி

யாழ்ப்பாணம், மே 28
யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்ட மொன்றில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் 3:1 என்ற கோல் கணக்கில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இந்தியா – நியூசிலாந்து இன்று பலப்பரீட்சை

மினி உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான பயிற்சி ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்தியா - நியூசிலாந்து அணிகள் இன்று நடைபெறும் பயிற்சி ஆட்டத்தில் மோதவுள்ளன. (ம)






# சிவகுமரன் கழக அணிகள் கரப்பந்தாட்டத்தில் வாகை

யாழ்ப்பாணம், மே 28
வரணி மதியொளி விளையாட்டுக் கழகம் இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் இரு பிரிவிலும் உடுப்பிட்டி சிவகுமரன் அணிகள் கிண்ணம் வென்றன.
மதியொளி விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் அண்மையில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன. 4 வீரர்கள் பங்குபற்றும் முறையில் நடத்தப்பட்ட தொடரின் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் உபயகதிர்காமம் யு.கே. விளையாட்டுக் கழகமும் மோதின. 15:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சிவகுமரன் வி.கழகம் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
6 வீரர்கள் பங்குபற்றும் விதத்தில் நடைபெற்ற கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 22:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் சிவகுமரன் அணி சம்பியனாகியது.
நிலையத் தலைவர் எஸ்.சுதாகர் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் வடமாகாண போக்குவரத்துத்துறை அமைச்சர் ப.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான அ.பரஞ்சோதி, வே.சிவயோகன் மற்றும் க.தர்மலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-23-108)

## ஆஸியிடம் இலங்கை தோல்வி

மினி உலகக்கிண்ணத் தொடருக்கான பயிற்சி ஆட்டத்தில் நேற்று முன்தினம் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது இலங்கை.
நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 7 இலக்குகளை இழந்து 318 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக மத்தியூஸ் 95 ஓட்டங்களையும், குணரத்ன ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும், டிக்வெல்ல 41 ஓட்டங்களையும் சேர்த்தனர்.
பந்துவீச்சில் ஹென்றிக்ஸ் 3 இலக்குகளையும், ஹசில்வூட், பற்றின்சன், கம்மின்ஸ், ஹெட் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தனர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 2 பந்துகள் மீதமிருக்க 8 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. பின்ஞ் 137 ஓட்டங்களையும், ஹெட் ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களையும் சேர்த்தனர். (ம)






## சொல்லியடிக்குமா ஆஸி?

மினி உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. "இந்தத் தொடரில் நாங்கள்தான் சம்பியனாவோம்" என்று அழுத்தம் திருத்தமாக சொல்லியுள்ள ஒரே அணியாக ஆஸ்திரேலியா உள்ளது.
இங்கிலாந்து ஆடுகங்களில் அதிகளவான ஆட்டங்களில் விளையாடிப் பழக்கப்பட்ட வெளிநாட்டு அணியாக ஆஸ்திரேலியா உள்ளது. சகல துறைகளிலும் ஆஸ்திரேலிய அணி மிகப்பலமாக உள்ளதால் சிமித் சொன்னது நிறைவேற அதிக வாய்ப்புக்கள் இருக்கவே செய்கிறது.
துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை சிமித், வோர்ணர், பின்ஞ் முன்வரிசையைப் பலப்படுத்துவார்கள். கம்மின்ஸ், ஹென்றிக்ஸ், ஸ்ராக் வேகப்பந்துடன் சகலதுறைகளிலும் சிறப்பாகச் செயற்படக்கூடியவர்கள். இங்கிலாந்து ஆடுகளங்களில் இத்தகையவர்களே தேவை என்ற காரணத்தால் ஆஸ்திரேலியாவைப் பொறுத்த வரை இவர்கள் மும்மூர்த்திகளாக இருப்பார்கள். ஆடுகளம் சுழலுக்குச் சாதகமாக மாறினால் இருக்கவே இருக்கிறார் மக்ஸ்வெல்.
ஆஸ்திரேலிய அணி விவரம்,
சிமித் (தலைவர்), வோர்ணர், கம்மின்ஸ், ஹஸ்டிங்ஸ், ஹெட், லின், பற்றின்சன், ஸ்ரொய்னிஸ், சாம்பா, பின்ஞ், ஹசில்வூட், ஹென்றிக்ஸ், மக்ஸ்வெல், ஸ்ராக், வேட்.

## நாயன்மார்கட்டு பாரதியின் இறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், மே 28
நாயன்மார்க்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்களும் பரிசளிப்பு நிகழ்வும் பாரதியின் மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.
'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாயன்மார்க்கட்டு பாரதி விளையாட்டுக் கழகமும் 'ஏ' பிரிவு அணிக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
கழகத் தலைவர் ப.குமாரதீபன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக வடமாகாண ஆளுநரின் ஒருங்கிணைப்பாளர் க.கருணாகரன் கலந்துகொள்கிறார். (ம-23-108)

# பெண்கள் பிரிவு 5,000 மீற்றர் ஓட்டம் மன்னார் மாவட்டம் வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், மே 28
வடமாகாண தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எம்.மேரி ஜென்சி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. பெண்கள் பிரிவு 5 ஆயிரம் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எம்.மேரி ஜென்சி 21 நிமிடங்கள், 17 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப் பதக்கத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.விதுசா 21 நிமிடங்கள் 31 செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும் வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எம்.சிவதாட்சாயினி 22 நிமிடங்கள் 57 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-23)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணம் தொடர்பில் பதிவாகிய முறைப்பாட்டால் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் பிற்போடப்பட்டது

## வடமாகாண பாடசாலைகளின் பெண்கள் துடுப்பாட்டத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 28

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயது பெண்கள் பிரிவு துடுப்பாட்டத் தொடரின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் வீராங்கனைகளின் ஆவணங்கள் தொடர்பில் பதிவான முறைப்பாட்டை அடுத்து பிற்போடப்பட்டது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயது பெண்கள் பிரிவு மூன்றாம் இடத்துக்கான ஆட்டம், இறுதியாட்டம் என்பன யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்தது. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதவிருந்தது.

நெல்லியடி மத்திய கல்லூரியின் ஒரு வீராங்கனை பாடசாலையை விட்டு விலகிய பின்னரும் ஆட்டத்தின் பங்குபற்றுகிறார் என்று வவுனியாபுதுக்குளம்மகாவித்தியாலய அணியின் சார்பில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதையடுத்து இந்த ஆட்டம் பிற்போடப் பட்டது.

இது தொடர்பில் வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, சம்பவம் தொடர்பாக உடனடியாக தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் பாடசாலைக்குநேரில்சென்றுஎதிர்வரும் புதன்கிழமைக்குள் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இதனால் இந்த ஆட்டம் பிற்போடப்பட்டுள்ளது. முறைப்பாடு சரி என்றால் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணிக்கு வெற்றி வழங்கப்படும், முறைப்பாடு தவறென்றால் இந்த ஆட்டம் பிறிதொரு நாளில் நடைபெறும்" என்று தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் கிருஸ்ணகுமாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "இது தொடர்பில் விசாரணை நடைபெறவுள்ளதால் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை. இருப்பினும் குறிப்பிட்ட மாணவி கல்லூரியில் தொடர்ந்தும் கற்று வருகிறார்" என்றார். (ம-422)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 28

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் வி.கழகமும் மோதவுள்ளன. (ம-108)

## கயிறிழுத்தல் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், மே 28

வடமாகாணவிளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் இருபாலாருக்குமான கயிறிழுத்தல் தொடரின் இறுதிப்போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. மலை 5 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோ[illegible]ுள்ளது. ஆண்களுக்கான இறுதிப்போட்டி[illegible] மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா[illegible]ாவட்ட அணி மோதவுள்ளது. (ம-23)

## மீண்டும் களத்தில் கிவித்தோவா

கடந்த வருட இறுதிப் பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கான செக்குடியரசின் ரென்னிஸ் வீராங்கனை பெட்ரா கிவித்தோவா, காயத்தில் இருந்து மீண்டு இன்று ஆரம்பமாகும்பிரான்ஸ்தொடரில் மீண்டும் களமிறங்குகிறார்.

கடந்த டிசெம்பர் மாதம் கிவித்தோவா, கையில் கத்திக்குத்துக்கு இலக்கானார். நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடரான ஆஸ்திரேலியத் தொடரில் அவர் களமிறங்கவில்லை. விம்பிள்டன் தொடரிலேயே தனது பங்குபற்றலை அவர் உறுதிப்படுத்தியிருந்தார். எனினும் காயத்தில் இருந்து மீண்டுள்ளதால் பிரான்ஸ் தொடரில் அவர் களமிறங்குகிறார். பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடருக்கு நேரடித்தகுதிபெறும் தரநிலையை அவர் கடந்திருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணத்தால் அவர் விலகியிருந்தார் என்பதால் தகுதிச் சுற்றில் விளையாடாமல் முக்கிய சுற்றில் விளையாடக்கூடிய வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (ம)





வடமாகாணத் தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. ஒலிம்பிக் தீபத்தை, பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளுதூக்கலில் வெண்கல பதக்கத்தைச் சுவீகரித்த வி.ஆசிகா மற்றும் மெய்வல்லுநர் வீரர் குமார ஆகியோர் ஏற்றி வைத்தனர். (ம-422)

# 10,000 மீற்றர் ஓட்டத்தில் வவுனியாவுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், மே 28

வடமாகாண தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா மாவட்டத்தைப் பிரதி நிதித்துவம் செய்த எஸ்.கிந்துயன் தங்கப்பதக்கம் வென்றார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கிந்துயன் 35 நிமிடங்கள், 30 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப்பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.நிர்மல் வெள்ளிப் பதக்கத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.குமுதன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-23)

## முப்பாய்ச்சல் போட்டியில் யாழ்ப்பாணம் பதக்க வேட்டை

யாழ்ப்பாணம், மே 28

வடமாகாண தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு முப்பாய்ச்சலில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அத்தனை பதக்கங்களும் கிடைத்தன. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த என்.நிதுஜன் 13.45 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப்பதக்கத்தையம், என்.கோகுலன் 13.40 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், என்.டினோசன் 13.40 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-23)

## ஆரணிக்கு மற்றொரு தங்கம்

யாழ்ப்பாணம், மே 28

வடமாகாண தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு நீளம் பாய்தலில் யாழ்ப்பாண மாவட்ட வீராங்கனை ஆரணி தங்கப்பதக்கம் வென்றார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது.

பெண்கள் பிரிவு நீளம் பாய்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தை பிரதி நிதித்துவம் செய்த எஸ்.ஆரணி 5.23 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், வி.சாத்வீகா 5.08 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜே.அபிசா 4.90 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23-422)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி அனுராதா சுரபாஸ்கரன்

படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அனுராதா சுரபாஸ்கரன் 25.05.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவத்திரு நவரத்தினம் ஐயா - மனோன்மணி அம்மா (தர்மகர்த்தா ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் தேவஸ்தானம்) தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா வல்லிபுரம் - கமலா தேவி தம்பதிகளின் அன்பு மருமகளும், சுரபாஸ்கரன் (துர்க்கா ஸ்ரோர்ஸ், ப. ம. கு. திட்டம்) அவர்களின் அன்பு மனைவியும் , பிரணவன் (யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்), மிதுஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், முகுந்தன் குருக்கள் (ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தானம்), பிரதீபன் (ஆஸ்திரேலியா), டினேஸ் (ஆஸ்திரேலியா), ஜெயதுர்க்கா, ஸ்ரீநந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் , ஆர்த்திகன், ஸ்ரீநிதன், அபிசயா, கானுஜன் ஆகியோரின் அன்பு அத்தையும், லோஜிதா, சிவதர்சினி, பத்மசீலன், விஜயகுமாரன் ஆகியோரின் மைத்துனியும், சுகாயினியின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக படித்த மகளிர் குடியேற்றத்திட்ட இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"துர்க்காபுரம்"**
**படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்,**
**மிருசுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## INFORMATION TECHNOLOGY PARK

*Jaffna, Srilanka*
*Under the purview of the*
*Ministry of Telecommunication & Digital Infrastrucature*

MPCS Building
127, K.K.S. Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

**MAY BATCH**
- *Dip.in Microsoft Office*
- *Dip.in Desktop publishing*
- *Dip.in information Technology*
- *Dip.in Computer Programming*

**Online Course**
- *Dip.in PC Application & Office Managment*

**Languages**
- *VB.net*
- *PHP*
- *C Sharp*
- *Java*

**Workshops**
- *Internet & e-mail*
- *Webpage Designing & Development*

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புகள் ஆரம்பம் - 23.06.2017
வார இறுதி நாள் வகுப்புகள் ஆரம்பம் - 24.06.2017

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*
Executive Officer -

## மகேலவுக்கு அழைப்பு

இந்தியாவில் நடைபெற்று முடிந்த பத்தாவது ஐ.பி.எல். தொடரில் இலங்கை அணியின் முன்னாள் வீரரான மகேல, மும்பை இந்தியன்ஸ் அணிக்கு தலைமை பயிற்சியாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவரின் பயிற்சியில் கீழ் மும்பை அணி கிண்ணம் வென்றது. இதையடுத்து பங்களாதேஷின் குல்னா டைட்டன்ஸ் அணி நிர்வாகம் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்பைஏற்க மகேலவுக்கு அழைப்பு விடுத்துள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் இந்தத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்த ஒப்பந்தத்துக்கு மகேலவும் சம்மதித்துள்ளார் என்று சில ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. அவ்வாறு ஒப்பந்தமானால் இந்த ஒப்பந்தம் இரு வருட ஒப்பந்தமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 1st ACCOUNTING SOLUTIONS

**CAREER OPPORTUNITIES**
at a British Accounting BPO
Supervisor,
Finance Executive &
Accounts Executive

Qualifications
- Degree holder in Accounting or Finance or HNDA or Part qualified in ACCA, CA Sri Lanka & CIMA.
- Fluent knowledge in Microsoft office package and Accounting software (Sage, Xero, quick book and etc.).
- Three years' experience in relevant field is considered as added advantage.
- Fresh graduates are also encouraged to apply.

An attractive and negotiable remuneration package is on offer to the selected candidate.
Fluency in English is preferred.

Please forward your CV to:
cv@1staccountingsolutions.com
on or before 15th June 2017.

(10)

www.1staccountingsolutions.com

## வாடகைக்கு

யாழ். நகரில் பெண்களுக்கான சகல வசதிகளுடன் கூடிய விடுதி அறைகள் மாத வாடகைக்கு உண்டு.
**தொடர்பு-077 0417705**

## வேலையாள்கள் தேவை

மிருசுவிலில் இயங்கும் தும்புத் தொழிற்சாலைக்கு வேலையாள்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். பெண்களுக்கும் உகந்த வேலை.
**077 220 8455**

## விற்பனைக்குண்டு

இறக்குமதி செய்யப்பட்ட, மறுசீரமைக்கப்பட்ட அச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு.
SORKZ, SORDZ & CORM CYLINDER (SQUIRE BUTTON), SORM GRAY, KORD GRAY, KORA BLACK.
ஆங்கிலத்தில்/சிங்களத்தில் தொடர்பு கொள்ளவும்.
**071 854 6118**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வயது (40 -55) வருடங்கள். முன் அனுபவம் தேவை. வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய வேண்டும். மூன்றுவேளை உணவு, தங்குமிட வசதி, சம்பளம் நீதியாக வழங்கப்படும்.
**077 788 5175, 077 908 4950**

## ஓட்டுமடத்தில் காணி விற்பனைக்குண்டு


ஓட்டுமடம், மானிப்பாய் பிரதான வீதிக்கு அண்மையில் யாழ்நகருக்கு மிகவும் அண்மையில் உள்ள 2 - 3/4 பரப்பு காணி (சுற்றுமதில், கிணற்றுடன்) உடன் விற்பனைக்கு உண்டு
**CALL : 0776 071 781**

## கடை விற்பனைக்கு

ஐயர் கடை, கொழும்புத்துறை, இந்து மகாவித்தியாலயம் முன்பாக உள்ள கடைக்கட்டடம் விற்பனைக்குண்டு. புறோக்கர் (தரகர்) தேவையில்லை.
**077 618 4407**

## தோட்ட வேலையாள்கள் தேவை

வவுனியாவில் தங்கியிருந்து தோட்ட வேலை செய்யக்கூடிய தோட்ட வேலை தெரிந்த வேலையாள்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (சிறிய குடும்பம் விரும்பத்தக்கது)
தொடர்பு
077 8375 832



# உயர்வகை பல் வைத்திய சேவைக்கு...

## For Quality, Professional Dental Care

INTERNATIONAL DENTAL CARE
IDC

**INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD.**

**Jaffna Branch:**
No:84, Stanly Road, (Near Ariyakulam Junction)
Jaffna. Srilanka.
Tel: 021 222 0833, 021 492 3353

**Colombo Branch:**
No:67, W.A.Silva Mw, Wellawatta,
Colombo-06, Srilanka.
**Tel: 011 250 7070, 011 438 0803**

**Vavuniya Branch:** Raaj Medical Lab,
No:10, Bazaar Street,
Vavuniya, Srilanka.
**Tel: 024 222 1577, 024 492 5527**

**Web: www.internationaldentalsrilanka.com Email: internationaldentalcare@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வெளிக்கள நிலையப் பரீட்சை ஜூன் 9ல் ஆரம்பம்

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டமனாறு வெளிக்கள நிலையம் இவ்வாண்டின் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தவணைப் பரீட்சையை நடத்தவுள்ளது.

குறித்த தவணைப் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

பரீட்சை குறித்த மேலதிக விவரங்களை சம்பந்தப்பட்ட மாணவர்கள் தத்தமது பாடசாலைகளைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# குருதிக் கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 28

திக்கம் மக்களின் குருதிக் கொடை நிகழ்வும், மருத்துவ முகாமும் 1988 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தியாக தீபகங்கள் நூலின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் திக்கம் மத்திய சனசமூக நிலைய தலைவர் க.திருவரங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது என திக்கம் சன சமூக நிலையத்தினர் தெரிவித்தனர்.

1987 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29,30,31 ஆம் திகதிகளில் இடம்பெற்ற வன்செயல்களால் காவு கொள்ளப்பட்ட ஊர் மக்களின் 30ஆம் ஆண்டு நினைவு நிகழ்வை முன்னிட்டு இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது என்று அவர்கள் தெரிவித்தனர். (ற-10)

# கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம் மே 28

யாழ்ப்பாணம் வண்ணை கில்னர் ஒழுங்கை ஸ்ரீ மஹாமாரி தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஸ்ட மஹா கும்பாபிசேகம் நாளை திங்கட்கிழமை 6 மணிக்கு பூஜைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் மண்டலாபிசேகம் நடைபெறும் என ஆலய திருப்பணிச் சபை தெரிவித்தது. (ற-ரி)

அனைத்து I Phone களும் Unlock செய்ய
T.P. 0777519440

**தேவை**

மேசன், ரைலர்ஸ் கொன்ரக்ரர்ஸ்
பம்பலப்பிட்டி வேலை தளத்திற்கு தேவை.
விவரங்களுக்கு
077 9616 232

**வாடகைத்தாய் தேவை**

30 வயதிற்கு குறைவான பெண் ஒருவர் IVF மூலம் செய்வதற்கு வாடகைத்தாயாகத் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும். கண்டிப்பாக இரகசியம் பேணப் படும். நேரடித்தொடர்பு மாத்திரம் - 077 637 5294

**விற்பனைக்கு உண்டு**

16" இத்தாலிதச்சுபட்டடை மற்றும்வேட்டிக்கல் மற்றும் வளைவு வெட்டும் மெசின் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு
0750494681

**மணமகள் தேவை**

யாழ். கௌரவ கிறிஸ்தவ (NRC) குடும் பத்தைச் சேர்ந்த UK PR உடைய 1980 இல் பிறந்த மணமகனுக்கு படித்த அழகான மண மகள் தேவை.
(உள்நாடு அல்லது வெளிநாடு விரும்பதக்கது.)
தொடர்பு - 072 525 3217

**மணமகள் தேவை**


யாழ். இந்து வேளாளர் குலத்தைச்
சேர்ந்த 1981 (பூரம்) பிறந்த செவ்வாய்
குற்றமுடைய மணமகனுக்கு
மணமகள் தேவை.
தொடர்பு - 077 255 2934

**காணி விற்பனைக்கு /குத்தகைக்கு**

மானிப்பாய் உடுவில் வீதியில்
(முகாந்திரம் அவெனியு) பத்து பரப்பு
காணி முழுமையாகவோ அல்லது
பகுதியாகவோ
(1.11பரப்பு,1.11பரப்பு,1.1பரப்பு,4.85பரப்பு)
விற்பனைக்கு/ குத்தகைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு. 0774217556**

## மரண அறிவித்தல்கள்

### கந்தப்பு விக்கினேஸ்வரன்



கரவெட்டியைப் பிறப்பிட மாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு விக்கினேஸ்வரன் நேற்று (27.05.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான கனகரத் தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ் சென்ற றமேஸ், சுபாசினி (ஆஸ்திரேலியா), சுதர்சினி (ஆசிரியர், யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகநந்தா (ஆஸ்திரேலியா), சிவஸ்ரீ (அபிவிருத்தி உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் வைஷ்ணவி, நித்திலன், பவித்திரன், ஸ்ரீராம், பூர்விக்ஹா ஆகியோரின் அன்புப் பேரனும் வீரபாகு, பார்வதி, கணேசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகம்மா, சுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவயோகம், குணவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று நாளை (29.05.2017) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**26/8 (18/8), வளாகவீதி,**
**திருநெல்வேலி.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**0213218371**

### திருமதி சரஸ்வதி தேவராசா



கொக்குவில் மேற்கு, நீதிராசா வீதி, (புதுவீதி) யைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தேவராசா நேற்று (27.05.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ச. தேவராசா (ஓய்வு பெற்ற மின்னியலாளர், இலங்கை மின்சார சபை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராஜா - பவளம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னாச்சி தம்பதியரின் அன்புமருமகளும் புஸ்பலீலா (கனடா), ராஜ்குமார் (சுவிஸ்), கிருசாந்தி (ஜேர்மனி), ரோகினி (ஜேர்மனி), ஏகநாதன் (சுவிஸ்), இந்துமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீதிராசா வீதி (புதுவீதி),**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

தகவல்:
**ச. தேவராசா (கணவர்)**
**021 222 5499**



### திருமதி வள்ளிப்பிள்ளை வினாசித்தம்பி

சாவகச்சேரி சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும் கெருடாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை வினாசித்தம்பி நேற்று (27.05.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பியின் அன்பு மனைவியும், செட்டி, ராசாத்தி, ஈசன் காலஞ்சென்றவர்களான ராசன், இந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும், பாறுப்பிள்ளை காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, வாரித்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும் குனேஸ்வரி, பாக்கியலட்சுமி, நாகறஞ்சினி, வவா ஆகியோரின் அன்பு மாமியும், ராஜினி, ரஜனி, ரஜீவன், ரமேஸ், விசியன், வினோ, வனோ, அனோ, உஷா ரவிந்து, வசந்து, கரன், துஷா, டனு, தரணி காலஞ்சென்றவர்களான கஜன் (யாழ்.பல்கலைக்கழக மாணவன்) ரதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சோகேஸ்வரன் (ஈசன் குடும்பம்)**
**சாவகச்சேரி.** **0776464170**

(C/291)(10)

**VACANCIES**

பிரபல கல்லூரியின் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கிளைகளுக்கு

1. ENGLISH TEACHER
2. IELTS TEACHER
3. ACCOUNTS CLERK

விரும்பும் கிளையினை குறிப்பிட்டு email மூலம் விண்ணப்பிக்கவும்

Tel : 0777-596148

BRITISH COLLEGE OF EDUCATION
email.- britishcollegekandy@gmail

**பணிநிலை வேண்டுகை**

Davidson - 501
இயந்திர இயக்குநர் (ஆண்)
Machine Minder

புத்தகம் கட்டுநர் (ஆண்/பெண்)
Binder

உதவிக்கணக்காளர் (பெண்)
Accounts Clerk
(Quick Books Data Entry Operator)

முன்னனுபவமுள்ளவர்கள் மட்டும்

29, 30, 31 .05.2017 ஆம் திகதிகளில்
காலை 9.00 மணி முதல் 01.00 மணி வரை
நேர்முகத்தேர்வு நடைபெறும்.

விண்ணப்பிக்க விரும்புவோர்
நேரில் வரவும்

கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

இல. 681, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

T.P : +94 21 222 2717/ 8
+94 21 222 2737

## அந்தியேட்டி அழைப்பு



பிறப்பு 02.07.1945 இறப்பு 27.04.2017

கடந்த (27.04.2017) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர்**
**கமலாதேவி இராசசிங்கம்**

அவர்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11 மணியளவில் தியாகி அறக்கொடை மண்டபத்தில் (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**128, அம்பலவாணர் வீதி,**
**அத்தியடி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
**17.02.1947**

**மறைவு**
**31.05.2014**



**அமரர் கமலாதேவி**
**பரராஜசிங்கம்**

வளர்த்தெடுத்து அறிவூட்டி ஆளாக்கி வைத்து விட்டு
அவசரமாய் ஏன் அம்மா அவணி விட்டு சென்றீர்கள்
ஆண்டுகள் மூன்றென்ன ஆயிரம் தான்
கடந்தாலும் ஆறாது எம் இதயம்.

**21/5, வைமன் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**ப. ரூபேந்திரன் (மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதி பெறாது நாவற்குழியில் விகாரை அமைப்பு

## வட மாகாண சபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், மே 28

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில் நாவற்குழியில் அனுமதி பெறப்படாது விகாரை அமைப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா பிரேரணை ஒன்றை முன்வைத்தார். வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நாவற்குழி விகாரை தொடர்பில் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

"நாவற்குழிப் பகுதியில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் கடந்த 14 ஆம் திகதி நடப்பட்டதாக ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாக இருந்தது. அவ்வாறான கட்டடமொன்றை நிர்மணிப்பதற்கான கட்டட வரைபட அனுமதி, உள்ளூராட்சி சபையிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.(நகர அபிவிருத்தி அதிகார சபையால் பிரகடனப் படுத்தப்பட்ட பிரதேசங்கள் தவிர்ந்த)இவ்விகாரை அமைக்கப்படவிருக்கும் பகுதி நகர அபிவிருத்தி சபையின் பிரகனப்படுத்தப்பட்ட பகுதிக்குள் அமையாததால், உள்ளூராட்சி சபையின் முன்னனுமதி பெற்றே அவ்வாறான கட்டடத்தை அமைக்க முடியும். அவ்வாறாக சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதி பெறப்படவில்லையென அறிகின்றேன். வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையிலும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையிலும் இவ்வாறான கட்டடங்கள் உள்ளூராட்சி சபைகளின் விதிமுறைக்கு அமைய அனுமதி பெறப்படுவதை உறுதி செய்ய வேண்டும்" என்று தவராசா தனது பிரேரணையை முன்மொழிந்தார். இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என்று அவைத்தலைவர் தெரிவித்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தர்மபால செனவிரட்ன தெரிவித்ததாவது, மனிதர்களாக பிறந்த எமக்கு, நாம் இறந்த பின்னர் எம்மை அடக்கம் செய்யப்படும் ஆறு அடி நிலம் கூட எம்முடன் வரப்போவதில்லை. அவ்வாறிருக்கும் போது, வாழும் போது ஏன் எமக்குள் இவ்வளவு பிரிவினைச் சண்டைகள். இந்த நாட்டில் இருக்கின்ற எல்லா மதங்களும் சமம். தென்னிலங்கையில் இருக்கின்ற அனைத்து விகாரைகளிலும் பிள்ளையார், காளி போன்ற தெய்வங்கள் இருக்கின்றன. அவர்கள் அங்கு ஒற்றுமையாக இருக்கும்போது நாங்கள் சண்டை பிடிக்கின் றோம். என்றார். (ஜ-8)

# வைகாசி பெருவிழா

கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் நாற்பத்திரண்டாவது ஆண்டு வைகாசிப் பெருவிழா நாளை 29ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் அடுத்தமாதம் 8ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற் சவமும் இடம்பெறவுள்ளது. 5ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.4 மணிக்கு புதிய நவகோண சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவும் இடம்பெறவுள்ளது என்று ஆலயபரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ற)

## கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன வருடாந்த விளையாட்டு விழா - 2017

SRI LANKA Youth

இடம் - கலைமதி விளையாட்டரங்கு, புத்தூர் மேற்கு
காலம் - 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - பி.ப. 2.00 மணி


**தலைவர் :** திரு. P. மதுலதாஸ்
**பிரதம விருந்தினர் :** கௌரவ திரு. ஈ.சரவணபவன் (பாராளுமன்ற உறுப்பினர்)
**சிறப்பு விருந்தினர் :** திரு. I. தவேந்திரன் (உதவிப்பணிப்பாளர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ்ப்பாணம்)
திரு. க. கதிர்காமநாதன் (கலைமதி சனசமூக நிலைய போஷகர்)
**கௌரவ விருந்தினர் :**
திரு. சி. சண்முகவடிவேல் (மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, யாழ்ப்பாணம்)

சிறப்பு நிகழ்ச்சிகள்:
* உதைப்பந்து இறுதிச்சுற்று (கலைமதி இளைஞர் கழகம் VS அச்செழு இளைஞர் கழகம்)
* சிநேகபூர்வ கயிறு இழுத்தல் (நீர்வேலி மேற்கு இளைஞர் கழகம் VS அச்செழு இளைஞர் கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை - உதயன்

## மரண அறிவித்தல்



### கந்தையா நடராஜா (பாபு நடராஜ்)

விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் பெரிய மணல், வலந்தளையை வதிவிடமாகவும் உயரப்புலம் பிள்ளையார் கோயில், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராஜா நேற்று (27.05.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் (சின்னக்குஞ்சர்) செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகமலரின் அன்புக் கணவரும் சுரேந்திரன், சுதாகரன், சுபாகரன் (ரஞ்சன்), சுயேந்தன் (அலெக்ஸ்), துஷ்யந்தன் (பாபு), காலஞ்சென்ற சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2017) திங்கட்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**80/7, உயரப்புலம்,**
**பிள்ளையார் கோயில்,**
**ஆனைக்கோட்டை.**

தகவல்: **பிள்ளைகள்**
**0773058872,**
**0779799706**

## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் கமலேஸ்வரன் (T.S)



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் கமலேஸ்வரன் (T.S) நேற்று 27.05.2017 அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் சிவஞானவதி தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் மனோரஞ்சினியின் அன்புக் கணவரும் கஜேந்திரன் (ராஜா திரையரங்கு), தர்மினி (கனடா), கருணதீபன் (MNM FASHION), உமைப்பிரியா, தாரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மயூரன் (கனடா), கோகுலன் (பூநகரி பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனும் நிதுஜன், மோகனசாமி ஆகியோரின் அன்புப் பேரனும் பாஸ்கரன், கமலேஸ்வரி, பாஸ்பலதா, பிரபாகரன், காலஞ்சென்ற கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அன்னாரின் மைத்துனர் சிவபாலன் (கண்ணன்) இன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி,**
**உரும்பிராய வடக்கு.**

தகவல்:
**குடும்பத்தினர். 077 447 3822**

## மரண அறிவித்தல்



மலர்வு 09.07.1934 | உதிர்வு 27.05.2017

### திருமதி சறோஜினி சக்திவேல்

தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினி சக்திவேல் (இளைப்பாறிய ஆசிரியை) நேற்று (27.05.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் இராசநாயகி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும் வேலழகன் (பிரான்ஸ்), நந்தினி (ஜேர்மனி), மதியழகன் (லண்டன்), சுகந்தினி ஆகியோரின் பிரியமான தாயாரும் காலஞ்சென்ற சக்தியின் அன்பு மனைவியும் புஸ்பராணி, திலகராஜா, மனோகரி, உதயசீலன் ஆகியோரின் அன்பு மாமியும் தமிழாழினி, ஈழவேந்தினி, குயிலினி, நிலானி, சஹானா, கார்த்திகா, ராகவி ஆகியோரின் பாசமிகு பாட்டியும் கமலோயினி, மீனலோயினி, விமலலோயினி, ஹரிச்சந்திரா, ஜெயச்சந்திரன், பத்மலோஜினி, ஞானச்சந்திரன், பாலச்சந்திரன், ராமச்சந்திரன், யோகச்சந்திரா, பிறேமச்சந்திரா, சிலௌஜினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜயரட்ண மலர்ச்சாலையில் (28.05/29.05) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (29.05.2017) திங்கட்கிழமை ஈமக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு பொறளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெறுமதி மிக்க JCB இயந்திரம் எம்மிடம் உண்டு.
• JCB 3CX - 2012/2007/2005 2004/2002(P21)
• JCB 3CX - 1998/1997 (P12)
யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கீழ்காணும் இயந்திரங்கள் உண்டு.
• EXCAVATOR EX 120-2, EX 120-1
• KOMATSU PC 120-3
• KOMATSU PC 60
• MITSUBISHI MM45B
033 - 2234473 / 077 - 2440022
D.Ads





Development Fortune
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 43
சீட்டிழுப்பு திகதி 27.05.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 27 47 51 61 | சுப்பர் இலக்கம் 03 | அதிர்ஷ்ட மாதம் நவம்பர்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 11, 802, 130/= | அடுத்த சுப்பர் ஜக்பொட் 2, 223, 095/= | அடுத்த ஜக்பொட் 1, 736, 100/=
01.06.2017 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

SUPER BALL சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 655
சீட்டிழுப்பு திகதி 27.05.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 38 52 65 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.46, 631,400/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
ஊதா நிற டிக்கட்டுக்கள் 29.05.2017 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2882 திகதி: 27.05.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து 06 11 32 63 P
போனஸ் இல. 08
திங்கட்கிழமை ஜக்பொட் ரூ.63, 207, 287/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919
நீல நிற டிக்கட்டுக்கள் 2017.05.29 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNOPS

## United Nations Office for Project Services (UNOPS)
## ITB for Sale of UNOPS Surplus Items

UNOPS is calling for tenders for the sale of Surplus Items in Vavuniya and Mannar through the following two ITBs. Sealed bids for the ITBs are invited from interested parties.

**ITB No: LKOH/B5505/2017/ITB-002**
**Location: Vavuniya**

Items comprising of Office Tables, Chairs, Filing Cupboard, Wooden Book Shelf, Computer Chairs, Plastic Chairs, Steel Single Bed, Sofa , Iron Safe, White Board, Bicycle etc.

Items can be viewed at No. 77, Kovil Road, Kurumankadu, Vavuniya

**ITB No: LKOH/B5505/2017/ITB-003**
**Location: Mannar**

Items comprising of Moveable Storage Unit, Scaffolding Frames, Scrap Items, Vibrating Rollers, Office Tables, Chairs, Filing Cupboard, Wooden Book Shelf, Computer Chairs, Plastic Chairs, Steel Single Bed, Iron Safe, Refrigerator, Poker cables etc.

Items can be view at 3rd Lane , Thalvupadu Road, Kulanthai Jesupuram, Mannar

**Open for viewing from 29th May to 2nd June 2017 from 9.00 am to 4.00 pm at both locations**

- Hard Copies of the tender documents can be collected from the UNOPS offices at the above addresses, or Digital Copies of the tender documents can be obtained by sending an email to manjulaj@unops.org or by clicking "View Documents" at the following **link: https://www.unops.org/english/Opportunities/suppliers/Pages/Business-opportunities.aspx**
- BID's should be submitted in accordance with the ITB instruction, on or before **4.00 pm on 07th June 2017** as specified in Tender documents.
- The decision of the United Nations Office for Project Services (UNOPS) will be final.

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா ?**

*எடை கூட வேண்டுமா ? *ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா ? *கணச்சூடா ? *பலகீனமா ?
*மார்பு கூட்ட வேண்டுமா ? *உடல் குறைபாடுகளா ?

**விலை 5500/= - 9000/=**

**100 % பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் உங்கள் அழகிய தோற்றத்திற்கு**

பதிவு இல : 16168 **077 3149 386** **221, நாவலர் றோட், யாழ்.**

# மணமகள் தேவை

**யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உயர் தொழில் புரியும் செவ்வாய்க்குற்றமற்ற மகம் நட்சத்திர மணமகனுக்கு 1992 இற்கு முன் பிறந்த அழகிய படித்த மணமகள் தேவை.**

**தொடர்பு - 077 248 9441**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பேராதெனிய பல்கலைக்கழகத்தில் 25.05.2017 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் B.Sc in Civil Engineeringபட்டத்தைப் பெற்றமைக்கு

**செல்வி வேணுஜா சோமசுந்தரஐயர்**

அவர்களை வாழ்த்தி மென்மேலும் பட்டங்களை பெற்று உயரிய பதவி வகிக்க வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**அன்புடனும் ஆசியுடனும் வாழ்த்தும்:**
**பகீரதன் அத்தான், சுதா அக்கா, உதித், யாஷனா**

**வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்**

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

**இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 142 | நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations ICDL bcs abe SQA

**இரண்டு மாத காலப் பயிற்சி 02 Months**

**காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.**

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

20, June, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

**வார இறுதி வகுப்புகள் 04 Months**

**காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்**

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**IELTS சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை**

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**KIDS' Class Grade 1-10**

**சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்**

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**British Way® English Academy**

**Contact (Jaffna Branch) : 021 300 55 55**

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

**No.15, Kannathiddy, Jaffna.** (In front of the Shivan Kovil)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்கள்



**MAJESTIC CINEPLEX**
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம
10.30 / 1.30 / 4.30 / 7.30 வெள்ளி/சனி 9.30 PM



சில்வர் / ப்ரொன்ஸ்
10.30 / 2.30 / 6.30 வெள்ளி/சனி 10.30 PM
விசாரணை ☎ 021- 2227712
Find us on facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## Personal classes

O/L- Science, Maths, A/L- Biology, Physics. English Medium, Tamil Medium வகுப்புக்கள் கடந்தகால வினாக்களுடன் விரிவாக கற்பிக்கப்படும்.
**076 802 2269**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், சூரியன், செவ்வாயுள்ள 87இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
**077 965 8060, 077 991 0800**

## For sale Heidelberg KORD

Hedelberg Kord Black
long Box
Chinese Automatic
Cutter (36")
Ryobi 480K
**Contact: 077 366 9203**

## VACANCIES

வவுனியாவில் அமைந்துள்ள BIS சர்வதேச பாடசாலைக்கு
1. Montessori teacher
2. Primary teacher
3. English teachers

Email மூலம் விண்ணப்பிக்கவும்
BRITISH INTERNATIONAL SCHOOL
email : bcejaffnabranch@gmail.com

## வேலைவாய்ப்பு

கைதடி வடக்கிலுள்ள Medical Clinical வேலை செய்வதற்கு பெண்கள் தேவை.
**தொடர்பு: 077 837 8597**

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதி, இருபாலைச்சந்தியிலிருந்து 500m தூரமளவில் 15 பரப்புகாணிவிற்பனைக்குஉண்டு.
**தொடர்பு 0767023565**

## வேலை வாய்ப்பு

கொத்மலே பாலுற்பத்தி பால் தொழிற்சாலையில் பணிபுரிவதற்கு தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் ஆண் / பெண் பணியாளர்கள் தேவை.

- நாளாந்த சம்பளம் ரூ.1000
- 18 – 45 வயது வரை
- இலவச தங்குமிட வசதி
- இலவச உணவு
- இலவச சீருடை

நேர்முகப் பரீட்சை தொடர்பாக விண்ணப்பம் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றுடன் 2017 மே 22 முதல் 26 வரையிலான தினங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 1.00 வரை கீழுள்ள முகவரிக்கு வாருங்கள்.

கொத்மலே பாலுற்பத்தி பால் தொழிற்சாலை,
பாந்துராகொட, கம்பஹா.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
யசித: 0773 103 417 / சேனக: 0777 794 896

## காணி விற்பனை

**இல. 25/27, கண்டி வீதி, சாவகச்சேரியில் பழைய பொலிஸ் நிலையத்துக்கு அருகில் 10.5 பரப்பு கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.**
தொடர்பு - 076 9300 123
Viber No - 00905 2527 232

## வேலை வாய்ப்பு

கனேடிய IT நிறுவனத்தின் வெள்ளவத்தை கொழும்பு கிளையில் பணியாற்றுவதற்கு Accounting executive, Sales assistant வெற்றிடங்கள் உள்ளன வேலை நேரம் திங்கள் - வெள்ளி பி.ப. 1 -பி.ப. 10 தங்குமிடம், போக்குவரத்து ஏற்பாடு செய்யப்படும். இருபாலாரும் arokifm@gmail.com
077 259 7276, 011 7221 950

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம். நல்லூர் கோயிலிற்கு 3 நிமிடம் வாகன தூரத்தில் 90 பேர்ச்சில் அமைந்துள்ள இரு வீடுகளும், கராச்சும் கொண்ட காணியொன்று உடனடியாக விற்பனைக்குண்டு. வியாபாரஸ்தலமாகவும் பாவனைப்படுத்தலாம்.
விலாசம் 235/2. பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். 077 672 4477. 077 237 9347

## வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில் சுண்டிக்குளியில் 4 அறைகளும் இரண்டு பெரிய Double Hall. மேல் மாடியில் பெரிய Hall. 4 கார்கள் விடக்கூடிய தரிப்பிட வசதியும் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
**076 602 3324**

## SHANTHIHAM
Association for Health & Counselling

# உள சமூகப் பயிற்றுவிப்பாளருக்கான செயற்றிட்டம்
# பதவி வெற்றிடம் - 10

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு (ONUR) . மாவட்ட செயலகங்கள் (வடமாகாணம்) மற்றும் சாந்திகம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து வடமாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளசமூக சேவைகளை வழங்க இருக்கின்றன. அதன் ஒரு அம்சமாக உள சமூகத்துறையில் பயிற்சியாளர்களை உருவாக்கி அவர்களூடாக வடக்கு மாவட்டங்களில் பணியாற்றும் அரச. அரசசார்பற்ற மற்றும் கிராமமட்ட பொது அமைப்பினரைப் பயிற்றுவிப்பதையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளசமூக ஆதரவினை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு இவ்விண்ணப்பம் கோரப்படுகின்றது.

இத்திட்டத்துக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் இரண்டு மாதகாலப் பயிற்சியைத் தொடர்ந்து தத்தமது பிரதேசங்களில் பணியாற்றத் தொடங்குவார்கள்.

**திட்டக் காலப்பகுதி :** 1 வருடம் (தேவையின் அடிப்படையில் இத்திட்டம் நீடிக்கப்படலாம்)

### தகைமைகள்

- விஞ்ஞானம். உளவியல். சமூகவியல். மானுடவியல். மெய்யியல் மற்றும் சமூகசேவை ஆகிய துறைகளில் பட்டம் பெற்றிருத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது கல்வி நிறுவனம் ஒன்றில் மேற்படி துறையில் டிப்ளோமாவுடன் குறைந்தது 5 வருடங்களாவது வேலை செய்த அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
- கணினி அறிவு முக்கியமானது.
- ஆங்கிலத்தில் திறமையுள்ளவர்களாக இருப்பது அவசியமானது.
- சமூக சேவை மனப்பான்மையும். சிறந்த தொடர்பாடல் திறனும் ஏனையவர்களைக் கற்பிப்பதில் சுய ஆர்வமும் விருப்பமும் கொண்டவராக இருத்தல்.

மேற்படி பதவி நிலைக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் தத்தமது மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் பயிற்சி வழங்குவதிலும் களப்பணியில் ஈடுபடுவதற்குமுரிய உடல். உளத்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் மோட்டார் சைக்கிளும் அதற்கான சாரதி அனுமதிப்பத்திரமும் கொண்டிருத்தல் வேண்டத்தக்கது.

மேற்படி தகைமை உள்ளவர்கள் தங்களைப் பற்றிய தகவல் பெறக்கூடிய. உறவினரல்லாத மூவரின் பெயர். விவரங்களை (தொலைபேசி இல.) குறிப்பிட்டுத் தங்களுடைய சுயவிவரக் கோவையைப் பின்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு :- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

- இத்திட்டத்துக்கு விண்ணப்பிக்கப் பெண்களும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் அதிகம் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**விண்ணப்ப முடிவுதிகதி :- 05.06.2017, திங்கட்கிழமை**

---

**அனுப்ப வேண்டிய முகவரி:-**
**திரு.தெ.விஜயசங்கர்,**
**இணைப்பாளர் - வடமாகாணம்,**
**தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம்,**
**சாந்திகம்,**
**இல.15, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல :- 021 300 4904, 021 222 3338**
**மின்னஞ்சல் முகவரி :-** onur.shanthiham@gmail.com

# CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L


**Swiss, France**
**செல்ல வழிகாட்டல்**

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம். 05 . 03 . 1955



மறைவு 07 . 06 . 2016

## அமரர் மாணிக்கம் மாசிலாமணி

எங்கள் அன்புக்குரிய அப்பாவே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஒருவருடம் ஆகிவிட்டது. எங்களுடன் வாழ்ந்த வாழ்க்கை, கூறிய அறிவுரைகள் எங்களுக்காக செய்த தியாகங்கள், பட்டகஷ்டங்கள் எல்லாம் எம் கண்முன் நிழலாய் தோன்றுகின்றது. கோடி கொடுத்தாலும். உங்களைப்போல் செல்வம் என்றும் கிடைக்காது. எங்கள் உயிர் உள்ள வரை. உங்களை மறக்கமுடியாது. இறைவன் திருப்பாதத்தில் இருந்துகொண்டு எங்களை ஆசீர்வதித்து வழிநடத்துங்கள். என்றும் உங்கள் விருப்பப்படியே நாங்கள் வாழ்வோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**சுபா இல்லம்**
**[illegible]சிலையடி,**
**கரணவாய் ,கரவெட்டி.**

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org